
ஆண்டறிக்கை - 2022



Road Development Authority

මාර්ග සංවර්ධන අධිකාරිය

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

முன்னோக்கி

இந்த ஆண்டறிக்கை – வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2022 பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் அறிவுறுத்தல்களுக்கு இனங்க தயாரிக்கப்பட்டது

இந்த அறிக்கை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்பாடு மற்றும் நிதிச் செயற்பாடுகளைக் காட்டுகிறது

உள்ளடக்கம்

1. நிறுவன சுயவிபரம் *1*
1.1 பெருநிறுவன தகவல் 2
தலைவர் மதிப்பாய்வுரை 3
பணிப்பாளரின் அறிக்கை 5
பணிப்பாளர் சபை விபரம் 9
1.2 கூட்டாட்சி அரசின் அறிக்கை 11
1.3 இடர் மதிப்பீடு மற்றும் தணிப்பதற்கான தந்திரோபாயங்கள் 14
1.4 கணக்காய்வு குழுவின் அறிக்கை 18
1.5 நிறுவன முகாமை 21
1.6 கண்ணோட்ட பணி 23
தொழிற்பாட்டு பிரிவுகள் 27
செயற்திட்ட முகாமைத்துவ அலகுகள் 30
மாகாண அமைப்பு 33
வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்கள் 34
2. நிதி மற்றும் செயல்பாட்டு செயல்திறன் *35*
2.1 செயல்பாட்டு பிரிவுகளின் செயல்திறன் 35
2.1.1வீதிப்பராமரிப்பு 36
2.1.2GOSL நிதிகளின் கீழ் வீதி முன்னேற்றம் மற்றும் அகலப்படுத்தல் 37
2.1.3உள்ளூர் நிதிகளின் கீழ் பாலங்களை புனரமைத்தல் 39
2.1.4வீதி மற்றும் பாலங்களின் வடிவமைப்பு 51
2.1.5 வீதி மற்றும் பாலங்கள் பணிகளில் தரக்கட்டுப்பாடு 69
2.1.6வீதி மற்றும் பால பணிகள் தர உறுதி மற்றும் முன்னேற்ற கண்காணிப்பு 76
2.1.7 உள்கட்டமைப்பு, வீதி பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து முகாமை 77
2.1.8காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியமர்த்தல் 79
2.1.9சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துதல் 84
2.1.10 திட்டமிடல் 92
2.1.11 கடுகதிப்பாதை முகாமைத்துவம் 107
2.1.12 சொத்து முகாமைத்துவம் மற்றும் வருமான சேகரிப்பு 110
2.1.13 இயந்திர சேவைகள் 114
2.1.14 மனிதவலு அபிவிருத்தி 117
2.1.15 சட்ட சேவை 120
2.1.16 பெறுகை முகாமைத்துவ சேவைகள் 121
2.1.17 ஆளணி முகாமைத்துவம் 127
2.1.18 நிதி முகாமைத்துவம் 131
2.1.19 உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளின் செயல்திறன் 133
2.2 உள்நாட்டு நிதியிடப்பட்ட செற்றிட்டங்களின் செயலாற்றுகை 135
2.2.1 ருவான்புர கடுகதிப்பாதை 135
2.2.2பேஸ்லைன் வீதியின் தெற்கு விரிவுபடுத்தலின் நிர்மாணம் (கட்டம் III) 137
2.2.3 பாணந்துறை வரையிலான கரையோர வீதியின் விரிவுபடுத்தல் 138
2.2.4உள்நாட்டு வங்கிகளின் நிதியீட்டம் மற்றும் கிராமிய வீதிகள் செயற்றிட்டம் கீழ் பிரதான வீதி மற்றும் கடுகதிப்பாதைக்கு அணுகக்கூடிய பதிலீட்டு வீதிகளின் அபிவிருத்தி (LBFP & RRP) ..139
2.2.5கம்பெனித்தெருவில் உள்ள உத்தரானந்த மாவத்தை நீதிபதி அக்பர் மாவத்தை மற்றும் பாலதக்ச மாவத்தை இனை இனைத்தல் மற்றும் கொழும்பு இரத்தினபுரி – வெல்லவாய – மட்டக்களப்பு (A004) வீதிகளில் மேம்பாலங்களின் நிர்மானம். 143
2.3 வெளிநாட்டினால் நிதியிடப்பட்ட செயற்திட்டங்களின் செயலாற்றுகை 146
2.3.1 மத்திய கடுகதிப்பாதை 148
2.3.2 துறைமுக அணுகுகை மேலுயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம் 164
2.3.3புதிய களணி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையிலான மேலுயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை 170
2.3.4விஷேட செயற்திட்ட முகாமைத்துவம் 176
2.3.5இதர வெளிநாட்டு உதவி செயற்றிட்டம் 180
2.3.6போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம். 190
2.3.7தெற்கு வீதி இணைப்பு செயற்றிட்டம் 198
2.3.8சீனாவின் எக்சிம் வங்கியினால் (ஹுனான் கிளை) நிதியிடப்பட்ட செயற்றிட்டம் 202

2.3.9பதுள்ளை செங்கலடி வீதி முன்னேற்ற செயற்றிட்டம்.....204
2.3.10 களனி கங்கைக்கு மேலாக புதிய பாலம் நிர்மாணித்தல்.....207
2.3.11 ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சி (i-வீதி செயற்திட்டம்).....211
2.3.12 கண்டி சுரங்கவழி கட்டுமான செயற்திட்டம்.....225
2.3.13 உள்ளடக்கிய இணைப்பு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டம்.....228
2.3.14 கண்டி பல்மாதிரி போக்குவரத்து முனைய அபிவிருத்தி செயற்திட்டம்.....233
3. முகாமைத்துவ தீர்மானம் மற்றும் பகுப்பாய்வு.....234
முகாமைத்துவ விவாதம் மற்றும் பகுப்பாய்வு.....234
4. பெருநிறுவன சமூகப் பொறுப்பு மற்றும் நிலைபேறானதன்மை.....237
5. நிதி நிலை அறிக்கை.....
5.1 கணக்கு ஆய்வுசெய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை 2022.....
5.2 முந்தைய 10 ஆண்டுகளில் நிதி சிறப்பம்சங்கள்.....

சுருக்கங்கள்


AADT	வருடாந்த சராசரி தினசரிபோக்குவரத்து
ADB	ஆசிய அபிவிருத்தி வங்கி
ADG	மேலதிகப் பணிப்பாளர் நாயகம்
ADT	சராசரி தினசரி போக்குவரத்து
AO&M	சொத்து இயக்கம் மற்றும் பராமரிப்பு
BH	ஆம்துழைக் கிணறு
BIQ	அடிப்படைத் தகவல் வினாத்தொடர்
BIV	பால ஆய்வு வாகனம்
BMS	பால முகாமைத்துவ முறை
Bn	பில்லியன்
BOQ	அளவுச் சிட்டை
CACPC	அமைச்சரவை அனுமதித்த ஆலோசனைப் பெறுகை குழு
CE	பிரதான பொறியியலாளர்
CEA	மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை
CEP	மத்திய கடுகதிப்பாதை செயற்திட்டம்
CEB	இலங்கை மின்சார சபை
CP	ஒப்பந்த பொதி
DAB	பினக்கு தீர்ப்பு சபை
DCP	உருளையின் சக்தி ஊடறுப்பு
DF	உள்ளூர் நிதிகள்
DG	பணிப்பாளர் நாயகம்
DNP	குறை குறிப்பு காலம்
Dwg	வரைபடங்கள்
EDCF	பொருளாதார அபிவிருத்தி ஒருங்கிணைப்பு நிதி
EE	நிறைவேற்றுப் பொறியியலாளர்
EOM&M	கடுகதிப் பாதை இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம்:
EOT	நேர நீடிப்பு (கால நீடிப்பு)
EP	கிழக்கு மாகாணம்.
EPF	ஊழியர் சேமலாப நிதி
ES	பொறியியல் சேவை
ESDD	சுற்றுச்சூழல் மற்றும் சமூக அபிவிருத்தி பிரிவு
ESEP	தெற்கு கடுகதிப்பாதை செயற்திட்ட விஸ்த்தரிப்பு
ETF	ஊழியர் நம்பிக்கை நிதி
Exp	கடுகதிப்பாதை
FAG	வெளிநாட்டு உதவி நன்கொடைகள்
FAL	வெளிநாட்டு உதவிக் கடன்கள்
FARDF	உள்ளூர் நிதிகளுடன் தொடர்புபட்ட வெளிநாட்டு நிதிகள்
FWD	பார இடை திசை மாற்று
GIC	அரசாங்க தகவல் மத்திய நிலையம்
GIS	புவியியல் தகவல் முறைமை
GOSL	இலங்கை அரசாங்கம்.
GPS	பொதுவான வானொலி சேவை
HA	கிடைமட்ட சீரமைப்பு
HDD	நெடுஞ்சாலை வடிவமைப்பு பிரிவு
HDM – 4	நெடுஞ்சாலை அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் - 4
HIMS	நெடுஞ்சாலை தகவல் முகாமைத்துவ முறைமை
IC	இடைமாறல்
ICTAD	கட்டுமான பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்
IEE	ஆரம்ப சுற்றுச் சூழல் மதிப்பாய்வு
IIHS	சர்வதேச சுகாதார விஞ்ஞான நிறுவனம்
IML	தொழில்துறை தரங்க அனுமதி
IRI	சர்வதேச கடினத்தன்மை குறியீடு
JICA	ஜப்பானிய சர்வதேச கூட்டுத்தாபனமுகவரி
KFAED	அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதி
km	கிலோ மீட்டர்
LAIS	காணிச் சுவீகரிப்பு தகவல் முறைமை
LBFP	உள்ளூர் வங்கி நிதியிட்ட செயற்திட்டம்
LD	திரவமாக்கப்பட்ட சேதங்கள்
LED	இருமுனை மிளிரும் வெளிச்சம்
LOA	சம்மத கடிதம்
MCC	கையேட்டு வகைப்பாட்டு எண்ணிக்கை
MFAP	நானாவித வெளிநாட்டு உதவி செயற்திட்டம்
MFNSV	பலதரப்பட்ட நடவடிக்கை வலைப்பின்னல் ஆய்வு வாகனம்
MIS	முகாமைத்துவ தகவல் முறைமை
MM	பராமரிப்பு முகாமைத்துவம்
Mn	மில்லியன்
MOU	புரிந்துணர்வு ஒப்பந்தம்
MPC	அமைச்சரவை பெறுகைக் குழு
MW	மாவத்தை
NAITA	தேசிய தொழிற் பயிற்சி மற்றும் தொழில்துறை பயிற்சி அதிகாரசபை
NCP	வடமத்திய மாகாணம்
NP	வட மாகாணம்
NPD	தேசிய திட்டமிடல் திணைக்களம்
NWP	வடமேல் மாகாணம்
NWS & DB	தேசிய நீர் விநியோகம் மற்றும் வடிகாலமைப்பு சபை
OFID	பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் நிறுவனம்
OPEC	பயணிகள் ஊர்திப் பிரிவு
PCU	செயற்திட்டப் பணிப்பாளர்
PD	செயற்திட்ட செயற்படுத்தல் திட்டம்
PIP	சொத்து முகாமைத்துவம் மற்றும் வருமானம்
PM&R	செயற்திட்ட முகாமைத்துவ அலகு
PMU	பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் நிறுவனம்
R&D	ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி
RBCD	கிராமிய வீதி கட்டுமானப்பிரிவு

RDA	வீதி அபிவிருத்தி அதிகாரசபை
RFAL	வெளிநாட்டு உதவிக் கடன்கள் மீள் செலுத்துவது
RIS	வீதி தகவல் முறைமை
ROW	சரியான வழி
RP	மீளக்குடியமர்த்தல் திட்டம்.
RPPF	வீதி செயற்திட்ட ஆயத்த வசதி
Rs.	இலங்கை ரூபாய்
SCAPC	அமைச்சர் நியமித்த பெறுகைக்குழு
SCARC	அமைச்சர் நியமித்த மீள்பார்வைக் குழு
SFD	அபிவிருத்திக்கான சவூதி நிதி
SGT	மென்தரை சிகிச்சை
SI	இடைமாறல் முறைமை
SLLR & DC	இலங்கையின் காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம்.
SLRAMS	இலங்கை வீதி சொத்து முகாமைத்துவ முறை
SOR	ஆட்சேர்ப்பு முறை.
SP	தென் மாகாணம்
SPMU	விஷேட செயற்திட்ட முகாமைத்துவ அலகு
SRCP	தெற்கு வீதி இணைப்புச் செயற்திட்டம்
STDP	தெற்கு போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம்.
TLS	போக்குவரத்து சமிக்ஞை முறைமை
TOR	குறிப்பிட்ட முறைகள்
UDA	நகர அபிவிருத்தி அதிகாரசபை
UOM	மொறட்டுவை பல்கலைக்கழகம்
UP	ஊவா மாகாணம்.
VA	செங்குத்து சீரமைப்பு
VAT	பெறுமதி சேர்க்கப்பட்ட வரி
VOC	வாகனம் இயக்கும் செலவு
WB	உலக வங்கி
WLAN	வயர் இணைப்பற்ற உள்ளக பிரதேச வலைப்பின்னல்
WP	மேல் மாகாணம்
WPP	மேல் மாகாண செயற்திட்ட அலுவலகம்

`

அத்தியாயம் 1

1. நிறுவன சுயவிபரம்



1.1 பெருநிறுவன தகவல்

தலைவர்

திரு. சமிந்த பி. அதுலுவகே

நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

திரு. பி எம் சி கே பஸ்நாயக்க

திரு டி.எம்.சமண்சிறி திசாநாயக்க
(ஜூலை 2022 இல் ராஜினாமா செய்தார்)

திரு. ஷம்ராஸ் யெஹியா
(ஜூலை 2022 இல் ராஜினாமா செய்தார்)

திரு. டபிள்யூ.டபிள்யூ.ஏ.பஸ்நாயக்க
(ஜூலை 2022 இல் ராஜினாமா செய்தார்)

திரு.ஆ.ஆ.று.மனம்பேரி
(05.07.2022 முதல்)

திரு. ஆர்.எம்.எஸ்.கே.ரத்நாயக்க
(05.07.2022 முதல்)

திரு. வி.கே.சோக்ஸி
(05.07.2022 முதல்)

திரு. ரஞ்சித் ஜி. ஷரூபசிங்க
(05.07.2022 முதல்)

திரு எஸ்.ஜி.எல்.ரீ.மாலகா.
(47.08.2022 முதல்)

முன்னால் உத்தியேகபூர்வ உறுப்பினர்கள்

திரு. என்.பிகே.ரணவீர
(76.07.2020 முதல்)
பணிப்பாளர் நாயகம்.
நகர அபிவிருத்தி அதிகாரசபை

திர.எம்.ஆர்.ஜி.ஏ.பி. முத்துகுடா.
(25.01.2022 முதல் 02.03.2022 வரை),
மேலதிக பணிப்பாளர்
நிதி அமைச்சின்.
முகாமைத்துவ கணக்காய்வு தினைக்களம்

திருமதி.எம்.கே.டீ.என்.மாதம்பே
(02.03.2022 முதல்)
மேலதிக பணிப்பாளர் நாயகம்,
திதி அமைச்சின்
முகாமைத்துவ சேவைகள் தினைக்களம்

திரு. டபிள்யூ.எச்.கே.டீ.பி. ரத்நாயக்க
(24.06.2020 முதல்)
நெடுஞ்சாலை அமைச்சின்.
திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பணிப்பாளர்.
நெடுஞ்சாலை அமைச்சகம்

திரு.திவின விஜேதுங்க.
(25.12.2020 முதல்)
பொது முகாமையாளர்
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை

திரு. பி.டி.எம். ஜெயசிங்க
(01.07.2020 முதல்)
பணிப்பாளர் நாயகம்
மத்திய சுற்றாடல் அதிகாரசபை

திரு. ம.பி விக்கிரமசிங்க
(04.01.2020 முதல்)
மேலதிக செயலாளர்.
மரின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு

திருமதி ஈ.ஏ.ஆர்.ரேணுகர
(78.01.2020 முதல்)
மேலதிக செயலாளர்.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு

திரு. கே.பி.பி.வி. சில்வா
(05.03.2020 முதல்)
செயலாளர்
போக்குவரத்து சேவைகள் நிர்வாக அமைச்சு

தலைவர் மதிப்பாய்வுரை



பணிப்பாளர் சபையின் சார்பாக வீ.அ.அ யின் 2022. ஆம் ஆண்டின் டிசம்பர் 31 வரையிலான தொழிற்பாடுகள் மற்றும் கணக்காய்வின் நிதியியல் கூற்று ஆகியவற்றின் நிலைமை பற்றிய வருடாந்த அறிக்கையினை முன்வைப்பதில் பேருவகை அடைகின்றேன.

சபையானது கூட்டாட்சி செயன்முறையை மிக நுணுக்கமாக வரையறுத்தும் அவற்றின் செயன்முறையை மிகப்பரந்துபட்டதும் பொறுப்புடைமை கூடியதும் ஆகும். அத்துடன் பங்குதாரர்களின் மதிப்பினை ஒழுங்கான முறையில் தக்கவைத்துக்கொள்வதற்காக கூட்டாட்சியின் உயர் தர நிலைகள் பேணப்படுவதை நாம் உறுதி செய்கிறோம். இந் நிறுவனமானது சுயாதீனமான உள்ளக கணக்காய்வு பிரிவினை கொண்டுள்ளதோடு அது இடரினை அடிப்படையாக கொண்ட கணக்கீட்டு முறையினை கையாளுகின்றது. சபையின் உப குளுக்களானவை வருடத்தில் வழமையான அடிப்படையில் ஒன்றுகூடுவதோடு சபைக்கு கட்டுப்பாட்டு சூழல் ஆகியன உண்மையாகவும் வினைத்திறனாகவும் முகாமைத்துவத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்றும் இசைவுறுதியினையும் இக் குழுக்கள் வழங்குகின்றன.

இவ் வருடத்தில் நாம் ஆறு பணியாளர்களை வரவேற்றுள்ளோம் சபையின் அங்கத்தவர்களாக இருந்து தமது காலப்பிரிவின் போது சிறப்பாக பங்காற்றி பின்பு இராஜினாமா செய்த நால்வரது சேவைகளையும் பாராட்டுகிறேன்.

ஒரு நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் அடுத்து வரும் பொருளாதார வளர்ச்சி ஆகியன அந்நாட்டின் போக்குவரத்து கீழ்க்கட்டமைப்புடன் வலுவான தொடர்பு ஒன்றினைக் கொண்டுள்ளது. மேலும் எந் நாட்டினதும் போக்குவரத்து முறையின் மட்டம் மற்றும் தரம் ஆகியன அந்நாட்டின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியின் வலுவான முக்கியத்துவத்தினை காட்டும் குறிக்காட்டி ஆகும். இலங்கையில் வீதிப்போக்குவரத்தானது போக்குவரத்து முறைமைகளில் மேலோங்கியதாக காணப்படுவதோடு இது உள்நாட்டு, தேசிய மற்றும் பிராந்திய அபிவிருத்தித் திட்டமிடலின் போது ஒவ்வொரு படிநிலையின் போதும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

சபையானது ஊக்கம் தளராது இயங்குவதோடு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தந்திரோபாய விவகாரங்கள் அனைத்தின் போதும் வினைத்திறனான முறையில் பங்களிப்பினை ஆற்றியது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்ட 2021-2030 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய வீதி பெருந்திட்டம் (NRMP) எனும் திட்டத்திற்கு முறையான அணுகளுடன் சபையானது 2022 ஆம் ஆண்டு அனுமதி வழங்கியது. இத்திட்டமானது தீர்மானம் மேற்கொள்பவர்களுக்கு நிலையான நுட்பங்களை நடவடிக்கைகளை முன்னெடுக்க மற்றும் இதன் தகவல்கள் செயற்றிட்டங்களை தீர்மாணனிக்க மற்றும் முன்னுரிமைப்படுத்த பயன்படுத்தலாம்.

SOR இனால் புதுப்பிக்கப்பட்ட அனுமதியின் போதிய தன்மை இல்லாததன் காரணமாக 2005 ஆம் ஆண்டு முதல் சபையின் பணிப்பாளர்களால் SOR தீர்மானங்கள் அனுமதிக்கப்பட்டு அதனடிப்படையிலேயே அனைத்து விதமான ஆட்சேர்ப்பு, ஊழியர்களின் பதவி உயர்வு ஆகியன முன்னெடுக்கப்படுகின்றன. அவசர வேலைத் தேவைப்பாடுகளை கருத்திற்கொண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களமானது 2019 ஆம் ஆண்டில் SOR ஒரு பகுதியாக பணிப்பாளர்கள் தொகுதி (24 எண்ணிக்கை) மற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகங்கள் (5 எண்ணிக்கை) ஆகியோருக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இவ் வருட மீளாய்வின் போது சபையினால் புதிய SOR அனுமதிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டதோடு இது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கும் அனுமதிக்காக அனுப்பப்பட்டது. மீள்பார்வைக்கான நிதியியல் வருடமானது பொருளாதார நெருக்கடி மற்றும் அதன் விளைவாகன அதிகரித்த பணவீக்கம் ஆகியவற்றினால் வகைப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக செயற்றிட்ட வளர்ச்சிகளில் தாமதம் செலவீன அதிகரிப்பு மற்றும் ஒப்பந்த விலகல்கள் ஏற்பட்டன. பொருளாதார நெருக்கடியின் காரணத்தினால் திரைசேரியில் இருந்து கிடைக்கப்பபெற்ற முற்பணம் வரையறுக்கப்பட்டதோடு ஒப்பந்தக்காரர்களுக்கான கொடுப்பனவுகளும் தாமதிக்கப்பட்டன. ஏவ்வாறெனினும் திரைசேரி இயக்க திணைக்களத்தின் வழிகாட்டலுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது திரைசேரி பிணைகளை பாரிய ஒப்பந்ததாரர்கள் வனியோகத்தர்களுக்கு மீதி உள்ள நிலுவையிலான 100 மில்லியன் ரூபாவினை வெளியிட்டதோடு இதில் உள்ளநாட்டு வங்கியினால் நிதியிடப்பட்ட கிராமிய வீதி

நிகழ்ச்சித்திட்ட ஒப்பந்தத்தாரர்கள் / வினியோகத்தர்களும் உள்வாங்கப்பட்டனர். இதற்கு மேலதிமாக உள்நாட்டு வங்கிகளுக்கு திரைசேரி பிணைகள் வெளியிடப்பட்டதோடு இதனூடாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை நிதியியல் செலவு மற்றும் மூல தனத்திற்கான மீள்கொடுப்பனவு ஆகியவற்றை வழங்க தீர்மானித்தது.

சபையானது மேலதிக வருமான வழிமுறைகளை எவ்வாறு வசூலிக்கலாம் என சிந்தித்ததுடன் வீ.அ.அ முகாமைத்துவமானது புதிய வருமான வழிகளை அரசாங்கத்தின் அறிவுறுத்தல்களுடன் இனங்கண்டு எதனை எவ்வாற நிதியியல் பொறிமுறையினூடாக பொருளாதார சவால்களின் போது முன்னெடுக்கலாம் என்பதனையும் ஆராய்ந்தது. அதற்கமைவாக கடுகதிப்பாதை பாவனையாளர் கட்டணத்தை அதிகரிப்பதற்கும் வீதிப்பராமரிப்பு நிதியத்தினை வீதி பயனாளர் வரியின் ஊடாக தாபிப்பதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2023 ஆம் ஆண்டின் பாதீட்டு முன்மொழிவில் கூறப்பட்டுள்ளதாவது :

“60.1 நாட்டினது வீதி முறைமையின் பராமரிப்பானது இத்தேவைப்பாட்டுக்காக வருடாந்தம் ஒதுக்கக்கூடிய பாதீட்டுத் தொகைக்கான தவனைத் தொகைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன ஒவ்வொரு வாகனத்திற்கும் ரூபா 100 இற்கு குறையாத: கட்டணம் ஒன்றினை ஒவ்வொரு வருடமும் வருமான அனுமதிப்புத்திரத்தினாடாக அறவிடும் படியும் அதனூடாக வீதிப்பராமறிப்பு நிதியம் ஒன்றினை தாபிக்கும் படியும் முன்மொழிகிறேன். இந் நிதியத்தின் ஊடாக வருடாந்த வீதிப்பராமரிப்பினை வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றேன். இந் நிதியத்தினை கட்டியெழுப்புவதற்காக பாதீட்டில் 100 மில்லியனை ஒதுக்கும் படி கேட்டுக்கொள்கின்றேன். இந் நோக்கத்தினை இப் பொறிமுறையின் ஊடாக அடைவதற்காக இதனை தாபிக்கும் படி நெடுஞ்சாலைகள் அமைச்சிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்”

2022 ஆம் ஆண்டில் இது ஒரு முக்கிய அடைவாகும் அத்துடன் இது தொடர்பான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது.

திரு. சமிந்த பீ. அதுலுவகே
தலைவர்

பணிப்பாளரின் அறிக்கை

பணிப்பாளர்கள் 2022 ஆம் ஆண்டுக்கான தமது அறிக்கை மற்றும் கணக்காய்வின் நிதியியல் அறிக்கை ஆகியவற்றை முன்வைத்துள்ளனர். இதன் நிதியியல் கூற்றானது இலங்கை பொதுத்துறை கணக்காய்வு தரங்களின் (SLPSAS) படி திரண்ட அடிப்படையில் தயார்படுத்தப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது கீழ் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு துனை நிறுவனங்களை கொண்டுள்ளது

- மகநெகும தயாரிப்பு (வரை) தனியார் நிறுவனம்.
- மகநெகும வீதி கட்டுமானம் மற்றும் கருவிகள் (வரை) தனியார் நிறுவனம்.
- மகநெகும ஆலோசனை மற்றும் செயற்றிட்ட முகாமைத்துவ சேவை (வரை) தனியார் நிறுவனம்.
- அதிவேகப்பாதை பேரூந்து போக்குவரத்து (வரை) தனியார் நிறுவனம்.

எவ்வாறாயினும் இங்கு முன்வைக்கப்பட்டுள்ள வருடாந்த அறிக்கை மற்றும் நிதியியல் கூற்று ஆகியன தாய் நிறுவனமான வீதி அபிவிருத்தி அதிகாரசபையினது ஆகும். திரட்டப்பட்ட நிதியியல் கூற்று தயாரிக்கப்பட்டமைக்கான காரணம் தாய் நிருறுவனம் மற்றும் துணை நிறுவனங்கள் வெவ்வேறான கணக்கீட்டு தரங்களை பின்பற்றி கணக்காய்வினை மேற்கொள்ளாமையினால் ஆகும்.

31.12.2023 இல் நிதியியல் நிலைமை		
	2022 ரூ.பில்	*2021 மீள் கூற்று ரூ.பில்*
மொத்த சொத்துக்கள்	1,217.69	1,180.08
மொத்த பொறுப்புக்கள்	432.52	401.57
நிகர சொத்துக்கள் / பங்கு	785.17	778.51

2022 ஆம் ஆண்டில் இலங்கை கடுமையான பொருளாதார பின்னடைவினை எதிர்கொண்டதன் காரணமாக அரசாங்க நிதி செயற்பாடகளில் பாரிய பிரச்சினைகள் மற்றும் போதிய வெளிநாட்டு நாணயமாற்று இல்லாததன் காரணமாக அத்தியவசியமான இறக்கமதிகளையோ மற்றும் வெளிநாட்டு கடன்களையோ கொடுப்பதற்கான நிதி காணப்படவில்லை. இவ்வாறான பிண்ணனியில் SOE RDA ஆனது இருக்கக்கூடிய குறைந்தளவிலான வளங்களை வினைத்திறனாக பயன்படுத்தி பொதுமக்களுக்கு சேவையை சிறப்பாக வழங்கி உறுதி செய்யும் மிகவும் முக்கியமான வகிபாகத்தை சிறப்பாக ஆற்றியது.

வருடத்தின் இரண்டாம் கால் இறுதிப்பகுதியில் வீ.அ.அ யின் செயற்பாடுகள் அணைத்தும் எரிபொருள் நெருக்கடியினால் பாதிக்கப்பட்டன. இவ்வாறான எரிபொருள் நெருக்கடி காரணமாக போதிய போக்குவரத்து வசதிகள் காணப்படாமையால் அரச சுற்றறிக்கைகளின் பிரகாரம் செலவுகளை குறைப்பதற்காக அலுவலக ஊழியர்களின் வருகையை ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில் மட்டுப்படுத்தியது. இக்காலப்பிரிவில் அலுவலகங்களில் அத்தியவசிய வேலைகளை குறைந்தளவு அலுவலக ஊழியர்களை கொண்டு நிறைவேற்றியதுடன் ஏனையவர்கள் வீட்டிலிருந்தவாறு அலுவலக வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

நிதியியல் செயற்றிறன்

2022 ஆம் ஆண்டானது பொருளாதார சவால்களாலும் நிச்சயமற்ற தன்மைகளினாலும் சூழப்பட்ட ஆண்டாக இருந்தது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது பொதுமக்களுக்காக வீதிப்பராமரிப்பு மற்றும் வீதி அபிவிருத்தியின் உட்கட்டமைப்பு என்பவற்றை பராமரிக்க பிரதானமான வழிமுறைகளாக நிதிப்படுத்தல்களிலேயே தங்கியுள்ளது. 2022 ஆம் ஆண்டுக்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வீதிப்பராமரிப்பு, அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மற்றும் செயற்பாட்டிற்காக பாதீட்டு ஒதுக்கீடாக ரூ.247,706.7 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. பாதீட்டு ஒதுக்கீடு இவ்வாறு ஒதுக்கப்பட்டிருப்பினும் திறைசேரியிலிருந்து பெறப்பட்ட முற்பணம் போதியதாக இல்லாமையினால் பாதீட்டுக்கு எதிரான செலவீனம் 79% ஆக குறிப்பிட்டுக்காட்டியது. வரையறுக்கப்பட்ட முற்பணமே வீ.அ.அ இற்கு வழங்கப்பட்டதனால் உரிய நேரத்திற்கு ஒப்பந்தக்காரர்களுக்கு உரிய பணத்தை செலுத்த முடியாமல் அது ஒப்பந்தத்தாரர்களின் பணப்பாய்ச்சலில் எதிர்பாராத தடங்களை தோற்றுவித்தது. அதன் காரணமாக பெரும்பாலான செயற்றிட்டங்களில் வளர்ச்சி தாமதமாகியதுடன் சில செயற்றிட்டங்கள் இடைநிறுத்தப்பட்டன. குறிப்பாக இந்த வருடத்தில் ருவன்புர கடுகதிப்பாதை நிர்மானப்பணிகள் இடைநிறுத்தப்பட்டன. பின்பு முழுமையாக நிறுத்தப்பட்டன. எவ்வாறாயினும் திறைசேரி தொழிற்பாடுகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக வீ.அ.அ ரூ.36,671.62 மில்லிதொகை.

வாக்கு இல	*விபரணம்*	*தொகை.ரூ.மில்*
117-02-04-01-2506	வீதிப்பராமரிப்பு	76.90
117-02-04-49-2506	கடல்சார் இயக்கம்	97.80
117-02-04-57-2506	பிரதான வீதிகள் மற்றும் அதிவேக பாதைகளை அணுகுவதற்கான பதிலீட்டு வீதி வலையமைப்பின் அபிவிருத்தி	31,352.99
117-02-05-(01-26)-2506	வீதிகளை அகலப்படுத்தல் மற்றும் முன்னேற்றுதல்	688.20
117-02-06-08-2506	தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சேதமடைந்த / பலவீனமான பாலங்களின் மீள்நிர்மானம்.	2.00

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மத்திய கடுகதிப்பாதைக்கான மீரிகமை - குருநாகலைப் பகுதி பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது. தொழிற்பாட்டுக்கான அதிவேகப்பாதை வலையமைப்பில் 40.91 கி.மீ நீளமான கடுகதிப்பாதை புதிதாக இணைக்கப்பட்டிருந்தாலும் அந்த வருடத்தில் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் எரிபொருள் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பு போன்றன காரணமாக பாதையின் வருமானம் பாதிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டு பாதீட்டினால் விதிக்கப்பட்ட மிகை வரியானது கடுகதிப்பாதை வருமானம் மீதும் விதிக்கப்பட்டது. அதற்கமைவாக கருத்தில் கொள்ளப்பட்ட காலப்பிரிவில் ரூ.1,415.86 மில்லியன் செலுத்தப்பட்டது. அதன் விளைவாக 2022 ஆம் ஆண்டுக்கான கடுகதிப்பாதையின் நிகர வருமானம் முன்னய ஆண்டுடன் ஒப்பிடும் போது 80% இற்கு மேற்பட்ட அளவினால் குறைவடைந்தது.

	2022 ரூ.பில்	**2021 இல் மீள்கற்று ரூ. பில்**
மொத்த மீளும் வருமானம்	111.70	89.32
மொத்த செலவீனம்	72.67	43.06
வருமான வரி காலப்பிரிவிற்கு முன்னதான நிலை	6.10	79.37
ஒத்திவைக்கப்பட்ட வரிகளின் பின்னரான மிகையான மீதி	5.50	78.88
கொண்டு செல்லப்பட்ட மீதி	779.44	773.93

2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்நாட்டு வங்கிக்கடன்கள் மற்றும் கடன் பத்திரங்களின் (NSB) மீதி திரைசேரி உத்தரவாத பத்திரங்களால் வீதி அபிவிருத்தி வேலைக்காக ரூ.352.25 பில் மீளப் பெறப்பட்டது.

சொத்துக்களை மூலதனமாக்கல்

வீ.அ.அ யானது சொத்துக்களை மூலதனமாக்குவதற்கான முழு விபரங்களை உள்ளடக்கிய செயற்திட்டம் ஒன்றை தயாரித்தது இந்த செயற்திட்டத்தின் கீழ் சொத்துக்களின் மதிப்பீடானது வீதி உட்கட்டமைப்பு சொத்துக்களின் மதிப்பீடு மற்றும் ஏனைய சொத்துக்கள் எனும் இரண்டு பிரதான வகைப்படுகளின் கீழ் கருத்திற்கொள்ளப்பட்டது. வீதிச் சொத்துக்களில் வீதிகள் மற்றும் பாலங்களின் அனைத்துக் கட்டமைப்புக்கள், வீதித்தளபாட கூறுகள் ஆகிய அனைத்தும் உள்ளடங்கும் ஏனைய சொத்துக்களின் கீழ் கட்டிடங்கள் காணிகள் மற்றும் ஆய்வுகூட கருவிகள் ஆகியன கருத்திற்கொள்ளப்படுகின்றன. வீதிச் சொத்து மதிப்பீட்டிற்காக பின்பற்றப்பட்ட முறைமை நிபந்தனை அடிப்படை மற்றும் உரிய தரவு சேகரிப்பு மற்றும் ஆலோசனைச் சேவைகள் ஆகியன போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்றிட்டத்தின் (TCAMP) கீழ் வளர்ச்சியில் உள்ளன. வருடத்தின் இறுதியில் அனைத்து மாகாணங்களிலும் கட்டிடங்களுக்கான மீள் மதிப்பீட்டின் வளர்ச்சி 46% என குறித்துக்காட்டப்படுகின்றது. மேலதிகமாக கடுகதிப்பாதை இயக்க பராமரிப்பு மற்றும் முகாமைத்துவத்தின் கீழ் உள்ள கட்டிடங்கள் மீள மதிப்பிடப்பட வேண்டும். வருடத்தின் இறுதியில் தேசிய வீதிகளில் (வகை A,B மற்றும் C) 28.32% ஆனவை 189 பாலங்கள் மற்றும் 8 மேம்பாலங்கள் ஆகியன முலதனமாக்கப்பட்டு உள்ளன.

மேலும் வீ.அ.அ தாபிக்கப்பட்ட போது காணிகளுக்கான நிறைவேற்று அதிகாரம் நெடுஞ்சாலை திணைக்களங்களிடமும் முந்தய வீ.அ.அ யினது சொத்துக்கள் சட்டரீதியான உரித்து இன்றி உ-ம் உரிய நிலங்களுக்கான பொருள் இருப்பு இன்மை, திட்டங்கள் மற்றும் உறுதிகள் இன்மை போன்றன. இதன் விளைவாக வீ.அ.அ சபையானது நிலங்களுக்கான உரித்து பிரச்சினைகளில் தலையீடு செய்ய முடியாமலும் உள்ளது. இந்த நிலைமையில் இருந்து மீள்வதற்காக வீ.அ.அ யின் காணிப்பிரிவுகளை சேகரித்துள்ளது. 2014 ஆம் ஆண்டில் வீ.அ.அயினால் கைப்பற்றப்பட்ட நிலங்களுக்கான முன் மானிய உறுதிகளை வழங்குவதற்கான அதிகாரத்தை வீ.அ.அ. யிற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது. அதற்கமைவாக வீ.அ.அ யானது இலவச மானிய சான்றிதழ்களை மற்றும் இலவச மானிய சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்கள் பிரதேச செயலகங்களின் ஊடாக காணிகள் ஆணையாளர் நாயகத்திற்கு காணிகளுக்கான பூர்வாங்க திட்டம் (PP) உள்ள போது அனுப்பப்பட்டுள்ளது.

திட்டத்திற்கான தேவைப்பாடுகள் மற்றும் அட்டை

2005 ஆம் ஆண்டில் இருந்து வீ.அ.அ. ஊழியர்களின் தேவைப்பாடுகள் மற்றும் பதவியுயர்வு ஆகியன SOR இன் பரிந்துரைகளுக்கு அமைவாக பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் மேற்கொள்ளப்படுகின்றது. 2009 ஆம் ஆண்டு வீ.அ.அ யின் வேண்டுகோளுக்கு அமைவாக பணிநிலை மற்றும் பதவிநிலையின் மீள்கட்டமைப்பு ஆகிய சம்பளக்குறியீட்டுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் (MSD) ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் சில சிரேஷ்ட்ட பிரிவிற்கு உட்பட்ட அலுவலர்கள் SOR யினால் அனுமதிக்கப்பட்ட பட்டியலினுள் உள்ளடங்கப்படவில்லை. SOR யின் ஓர் பாகமே தயாரிக்கப்பட்டு MSD இடமிருந்து அனுமதி பெறப்பட்டிருந்தது. அதனுள் 24 பணிப்பளார்கள் மற்றும் 5 மேலதிக பணிப்பாளர்கள் நாயகங்கள் (ADG'S) ஆகியோருக்கு 2019 ஆம் ஆண்டு சேவையின் தேவைப்பாடு கருதி அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மேலும் 2005 ஆம் ஆண்டில் SOR யினால் அனுமதிக்கப்பட்ட பதவிநிலைகள் மற்றும் சம்பளக் குறியீடுகளிலும் 2009 ஆம் ஆண்டில் MSD இனால் அனுமதிக்கப்பட்ட சம்பளக் கட்டமைப்பிலும் பொருந்தாமைகள் காணப்பட்டதன் விளைவாக MSD யானது வீ.அ.அ யிடம் புதிய SOR ஒன்றை தயரித்து MSD யின் அனுமதிக்காக அனுப்புமாறு ஆலோசனை வழங்கியது. இவ்வாறான நிலைமையில் புதிய SOR ஒன்றை தயாரிப்பதற்கான அவசியம் எழுந்தது. இத் தேவைப்பாடானது நிர்வாகத் தேவைகளுக்காக மாத்திரமின்றி அனைத்து பிரிவுகளினதும் தொழிற்பாடுகள் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பிரிவுகளை வியாபித்தல், புதிய பதவிநிலைகளை அறிமுகப்படுத்துவதனூடாக நிறுவனத்தின் தொலைநோக்கு, இலக்கு ஆகியவற்றை அடைந்துகொள்வது போன்றவற்றிற்கு அவசியமாகும்.

2022 ஆம் ஆண்டில் புதிய SOR யினை பூரணப்படுத்த வீ.அ.அ யினால் முடியுமாக உள்ளதோடு புதிய SOR ஆனது பணிப்பாளர் சபையின் அனுமதியினை பெற்று MSD இற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

செயல்பாட்டின் செயல்திறன்

2022 ஆம் ஆண்டில் வீ.அ.அ ஆனது 185 கி.மீ நீளமான தேசிய வீதிகளின் (A மற்றும் B வகை) திருத்த வேலைகளை பயன்படுத்தியதோடு வீ.அ.அ அல்லாத மற்றும் கிராமிய பாதைகளின் 1900 கி.மீ நீளமான வீதிகளை பல்வேறு வெளிநாட்டு மற்றும் வேறுபட்ட உள்நாட்டு செயல்த்திட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மேம்பாடுகளை மேற்கொண்டுள்ளது. ஜனவரி 15 ஆம் திகதி மீரிகமை முதல் யக்கபிடிய வரையான மத்திய கடுகதிப்பாதை பொது மக்களுக்காக திறந்து வைக்கப்பட்டது.

இவ் வருட இறுதியில் வீ.அ.அ பணிநிலைப்பிரிவில் 10,8001 நிரந்தர மற்றும் தற்காலிக ஊழியர்கள் சேவையாற்றினர். 01.05.2022 எனும் 22.08.2022 என திகதியிடப்பட்ட பொது தொழில் முனைவு சுற்றறிக்கையின் பிரகாரம் வீ.அ.அ அலுவலகர்களும் இதனடிப்படையில் சம்பளமற்ற விடுமுறையில் அதிகூடிய காலப்பிரிவாக ஐந்து வருடங்கள் தமது பணி முன்னுரிமை நிலையில் எவ்வித சார்பு நிலையும் இன்றி வெளிநாடு செல்ல அனுமதி வழங்கப்பட்டது. இறுதி ஐந்து வருடங்களுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டிலேயே அதிகளவான ஓய்வூதியர்கள் இராஜினாமாக்கள் மற்றும் சம்பளமற்ற

விடுமுறைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இந் நிலை பிரதானமாக 06/2022 எனும் பொது தொழில் முனைவு சுற்றறிக்கையினை மீளமைவு செய்யப்பட்டதன் விளைவாக SOR யினால் ஊழியர்களின் ஓய்வூதிய வயது மீளாய்வு செய்யப்பட்டமை மற்றும் சம்பளமற்ற விடுமுறை எனும் நிலை காரணிகளாலே இந்நிலை தோன்றியது.
கடந்த சில வருடங்களில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சாத்தியமான வழிகளில் புதிய வருமான வழிமுறைகளை கண்டறிந்து வருமான மார்க்கங்களை வலுப்படுத்தும் செயன்முறைகளை தேடியறிவதாகும். 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியின் விளைவாக வீ.அ.அ யின் வருடாந்த பாதீட்டு தேவைப்பாடுகளுக்கு நிதியீட்ட அரசாங்கமானது பிரச்சினைகளை எதிர்நோக்கியது. அதே நேரம் அரசாங்கமானது அரச அமைப்புக்களுக்கு / நிறுவனங்களுக்கு சுய நிதியீட்டல் பொறிமுறை ஒன்றின் ஊடாக இவ்வாறான பொருளாதார சவால்களை முறியடிக்கும் வண்ணம் அவ்வாறான பொறிமுறைகளை கண்டறிந்து நடைமுறைப்படுத்துவதை ஊக்குவித்தது. இக்காரணத்தின் விளைவாக வீ.அ.அ யானது சாத்தியமான சுய நிதியீட்டல் பொறிமுறை ஒன்றை கண்டறிந்து அதனூடாக பிரதாமாக வீதிகள் மற்றும் அதிவேகப்பாதை பராமரிப்பு, அதிவேகப்பாதை இயக்கங்கள் மற்றும் சிறிய அபிவிருத்திகளை முன்னெடுக்க தீர்மானித்தது. இதற்காக வீ.அ.அ சபை இவ்வாறான சுய நிதியீட்டல் மாதிரிகளை ஆசிய நாடுகளில் இருந்தும் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இருந்தும் தேடிப் பெற்றது. வீதி அபிவிருத்தி நிதியினை (RMF) தாபிக்கும் போது பல்வேறு விடயங்களான எரிபொருள் மீது விதிக்கப்பட்டிருந்த வரி, வாகன அனுமதிப்பத்திரத்திற்கான கட்டணம், வாகன காப்புறுதி பத்திரங்களுக்கான வரி ஆகியன ஆய்வு செய்யப்பட்டு கருத்திற்கொள்ளப்பட்டது. 2023 ஆம் ஆண்டு பாதீட்டில் வீதிப்பராமரிப்புக்கான நிதியீட்டம் எரி பொருளுக்கான வரி வாகன வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் வாகன காப்புறுதி ஆகியவற்றினூடாக பாதீட்டு முன்மொழிவு முன்மொழியப்பட்டிருந்தது.

வீ.அ.அ சபையானது RMF பொறிமுறையினை தாபிக்கவும் அதனது வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலுக்குமான போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகளை அமைச்சுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளது.

கூட்டாண்மை சமூக பொறுப்பு

கூட்டாண்மை சமூக பொறுப்பானது ஓர் நிறுவனம்தான் நெறிமுறை சார்ந்து தனது கட்டுப்பாடுகளை முன்னெடுக்கும் போது தனது பணிப்படையின் அளவை முன்னேற்ற உதவுதலையே கூட்டாண்மை சமூக பொறுப்பு என கருத்திற்கொள்ளப்படும். வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது தனது அபிவிருத்தி செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போது தனது பங்குதாரர்களுடன் இடையீடு செய்யும் போதும் பொருளாதார, சமூக மற்றும் சூழலியல் விழுமியங்களை ஒருங்கிணைத்தே செல்லும்.

அணைத்து பெரும்பாலான அபிவிருத்தி செயற்பாடுகளின் போதும் வீ.அ.அ ஆனது சூழல் தாக்க மதிப்பீடு (EIA), முதன்மை சூழலியல் பரிசோதனை (IEE) அல்லது ஆனைய கணிப்பீடு முறைகளை செய்யததன் பிற்பாடே உரிய செயற்றிட்டங்களுக்கு அனுமதியளிக்கும் முகவர்களிடம் அனுமதியினை கோருகின்றது.

17 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்து கொள்வதற்காக இலங்கை அரசாங்கம் தேசிய பாதீட்டு ஒதுக்கீட்டினூடாக செயற்படுத்தும் அனைத்து செயற்றிட்டங்களையும் அரச நிறுவனங்களினூடாக SDG இன் இலக்குகளை பிரதானமாக அடைய வேண்டும் என்ற நோக்கிலேயே வழிகாட்டியுள்ளது இந்த நோக்கத்திற்கு அமைவாக வீ.அ.அ ஆனது வீதித்துறையுடன் தொடர்புடையதாக மூன்று பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை கண்டறிந்து அதற்கான இலக்குகள் மற்றும் சுட்டிகளை அமைத்துள்ளது.

பணிப்பாளர் சபை விபரம்

திரு.சீ.பீ அதுலுவகே - தலைவர்
வணிக நீர்வாக முதுநிலை பட்டம்

திரு.அதுலுவகே சபைக்கு 2020 பெப்ரவரி 11. ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார். இவர் வணிக நிர்வாக முதுநிலை பட்டத்தினை தன்வசம் கொண்டுள்ளார் தற்போது இவர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் எனும் பணி நிலையில் உள்ளவராவார்.

திரு. டீ.பீ விக்ரமசிங்க
BSc, MPM, SLAS-SP தரம்

திரு. விக்ரமசிங்க சபைக்கு 2020 ஜனவரி 31 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார் இவர் *BSc, MPM, SLAS-SP* தகைமைகளை கொண்டுள்ளவராவார். இவர் தற்போது வலு மற்றும் சக்தி அமைச்சின் மேலதிக செயலாளராக பணியாற்றுகின்றார்.

திருமதி.இ.ஏ.ஆர் ரேணுகா
BSc. (விஷேட) இளமானி

திருமதி இ ஏ ஆர் ரேணுகா இவர் 2020 ஜனவரி 18 ஆம் திகதி சபைக்கு நியமனம் செய்யப்பட்டார் இவர் BSc (விஷேட) இளமானி பட்டத்தினையும் பெற்றவராவார். இவர் தற்போது சுற்றுலா மற்றும் காணிகள் அமைச்சின் மேலதிக செயலாளராக புரிபவராவார்.

திருமதி.எம்.கே.டி.என்.மாதம்பே
MPP (Japan), BA (Hons)

திருமதி.எம்.கே.டி.என்.மாதம்பே அவர்கள் 2022. ஆகஸ்ட் 18 ஆம் திகதி சபைக்கு நியமனம் செய்யப்பட்டார். தற்போது இவர் நிதி அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மேலதிக செயலாளர் நாயகமாக பணி புரிகின்றார.

திரு. டபிள்யூ எச் கே டி பி ரத்நாயக்க
MA (பொருளியலில்)

திரு. ரத்நாயக்க 2020 ஆகஸ்ட் 26 ஆம் திகதி சபைக்கு நியமனம் செய்யப்பட்டார் அவர் பொருளியலில் முதுமானிப்பட்டத்தினை உடையவராவார். தற்போது இவர்.

திரு. என்.பீ.கே ரணவீர
BSc மதிப்பு, MSC *நகர திட்டமிடல், நகர திட்டவாளர்*

திரு. என்.பீ.கே ரணவீர அவர்கள் 2020 ஜனவரி 1 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார். இவர் மொரட்டுவை பல்கழைக்கலகத்தில் நாடு மற்றும் நகர திட்டமிடலில் விஞ்ஞான முதுமானிப் பட்டத்தினையும் பிரதேச திட்டமிடலில் பட்ட முன்னிலை டிப்லோமாவினை களனிப்பல்கலைக்கழகத்தில் இருந்தும் நகர முகாமைத்துவ பட்ட முன்னிலை டிப்லோமாவினை நெதர்லாந்தில் இரஸ்முஸ் பல்கலைக்கலைகத்திலிருந்தும் தோட்ட முகாமைத்துவ விஞ்ஞான இளமமானிப்பட்டத்தினை ஸ்ரீ ஐயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இருந்தும் பெற்றவராவர்.

திரு. பி.பி.எச். ஜெயசிங்க
MSc (MM)/PGDMM, B.Eng AMIChemE

திரு. ஜெயசிங்க அவர்கள் சபைக்கு 2020 டிசம்பர் 2 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார் இவரிடம் MSc (MM)/PGDMM, B.Eng பட்டங்கள் இருப்பதுடன் இவர் இரசாயன பொறியியலாளர் நிறுவனத்தின் அங்கத்தவருமாவார் (AMIcheme) இவர் தற்போது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகமாக தொழிற்படுகின்றார்.

திருமதி. ஐ.எம்.டபிள்யூ.கே. இளங்கசிங்க
BSc Eng. (Hons),M.Eng, PH.D M.I.E (SL), பட்டயப் பொறியியலாளர்.

திருமதி. இளங்கசிங்க சபைக்கு 2023 பெப்ரவரி 24 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார் இவர் பொறியியல் இளநிலை (கௌரவ) பட்டம், பொறியியல் முதுமானிப்பட்டம் (ஜப்பான்), சிவில் பொறியியலில் முனைவர் பட்டத்தினையும் பட்டயப் பொறியியலாளராகவும் உள்ளவராவர். இவர்தற்போது தேசிய நீர் வினியோக மற்றும் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளர் எனும் பதவிநிலையில் உள்ளவராவர்.

திரு.கே.சி. நிரோஷன்
BCom.(Sp)(USS)

திரு நிரோஷன் அவர்கள் சபைக்கு 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார். இவரிடம் பொருளியலில் முதுமானிப் பட்டமும் BCom.(Sp)(USS) இளமானிப்பட்டத்தினையும் தன்னிடம் கொண்டுள்ளதோடு தற்போது போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளராக தொழிற்படுகின்றார.

திரு.வி.கே. சொக்ஸி
ஜனாதிபதி சட்டத்தரணி

திரு.சொக்ஸி அவர்கள் சபைக்கு 2022. ஆகஸ்ட் 18 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார். தற்போது அவர் NIBM இல் தலைவராக செயற்படுகின்றார்.

திரு.எம்.எம்.டபிள்யூ.மனம்பேரி
சட்டத்தரணி

18 ஆகஸ்ட் 2022 இல் திரு.மனம்பேரி சபைக்கு நியமிக்கப்பட்டார். அவர் கார்ப்பரேட் துறையில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக கார்ப்பரேட் சட்டத்தரணியாக சேவையாற்றி வருகிறார்.

.

வைத்தியர்.ஜி.எச்.விஜயவர்தன
B.Sc. (Miami), CITP (UK), FBCS (UK)

திரு. விஜயவர்தன 28 பெப்ரவரி 2023 அன்று சபைக்கு நியமிக்கப்பட்டார். அவர் பிரித்தானிய சமூகத்தின் (FBCS) உறுப்பினரும் பட்டயத் தொழிலாளர் தகவல் தொழில்நுட்பம் மற்றும் இவர் மியாமிய, அமரிக்காவின் விஞ்ஞானப் பட்டதாரியும் ஆவார். இது தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணணிகற்கை பிரிவின் COO/CIO வகிப்பவரும் களபதிவு (Domain) இன் சபை உறுபபினரும் இலங்கை இணையத்தள முன்னோடியும் ஆவார்.

1.2 கூட்டாட்சி அரசின் அறிக்கை

வீதி அபிவிருத்தி அதிகாரசபை (அதிகாரசபை) கட்டமைப்புக்கள், சட்டக கட்டுமானம் மற்றும் அன்றாட வாழ்வியல் தொழிற்கபாடுகளுக்கு தேவையான முகாமைத்துவ வழிகாட்டல்கள் ஆகியன வழங்குதல் கூட்டாட்சி அரசின் கடமை ஆகும்.

இச் சபையானது கீழ் உள்ளவற்றின் வழிகாட்டல்களுக்கு அமைய, தெறியப்படுத்துகின்றது.

- 1981 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபை சட்டம்.
- பொது தொழில் முயற்சி திணைக்களத்தினால் வெளியிடப்படும் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளை கூட்டாட்சி அரசினதான வழிகாட்டுதல்கள்.
- இலங்கை பட்டயக்கணக்காளர்கள் நிறுவகத்தினால் வெளியிடப்படும் கூட்டாட்சி அரசிக்கான சிறந்த பயிற்சிக் கோவை.

பணிப்பாளர்கள் சபை

வீ.அ.அ யானது சமநிலை தண்மையுடைய பணிப்பாளர் சபையினால் (BOD) முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. இப் பணிப்பாளர்கள்பல வருட நிபணத்துவ ஆற்றல் மற்றும் நிறைந்த அறிவினைகளாகவும் அதிகாரசபையின் இலக்குகளை அடைவதற்கு உதவி புரிபவர்களாகவும் உள்ளனர். இச்சபையானது தம்மிடம் காணப்படும் பரந்து பட்ட கடமைகளை பகிர்ந்தளிப்பதற்காக அடிக்கடி சந்திப்புக்களை ஏற்படுத்தப்படுகின்றது.

அதிகாரசபையின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காகவும் அதிகராரசபையானது நியதிச் சட்டங்களின் அடிப்படையிலும், வீதி முறைமைகளின் அடிப்படையிலும் இயங்குவதை உறுதிப்படுத்த சபையானது குறித்த தீர்மானங்கள் மற்றும் தந்திரோபாய தீர்மானங்களையும் மேற்கொள்ளும் சபையானது தன்னிடம் உள்ள அதிகாரங்களை நல்லெண்ண நோக்கில் எடுக்கப்படும் தீர்மானங்கள் வினைத்திறனானவை என்பதை உறுதிப்படுத்துவதற்காக அதகாரப்பரவலாக்கத்தினை மேற்கொள்கின்றது. மேலும் சபையானது நல்லாட்சி அரச கலாச்சாரம் மற்றும் நெறிமுறைகள் பெறுமதிகள் வேலைகளில் பிரதிபலிக்கின்றன என்பதனையும் உறுதிப்படுத்த வேண்டும்.

சபையின் தலைவர் மூலோபாய பிரச்சினைகளில் கவனம் செலுத்துவார். மேலும் அவர் சபை நடைமுறை விதிகள் பின்பற்றப்படுகின்றமையையும் அனைத்து சபை அங்கத்தவர்களும் கூட்டங்களில் வினைத்திறனாக கலந்து கொள்கின்றனர் என்பதனையும் உறுதிப்படுத்துவார்.

பணிப்பாளர் நாயகத்தின் பொறுப்பாக அன்றாட நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்வது மற்றும் நிறைவேற்று குழுவிற்கு தலைமைத்துவத்தினை வழங்குதல் மற்றும் அதிகாரசபையின் தந்திரோபாய மற்றும் இயக்க திட்டங்களுக்கு சபையுடன் ஆலோசித்து அதனை நடைமுறைப்படுத்த அனுமதி வழங்குவதும் ஆகும். அவர் அன்றாட செயற்பாடுகள் சட்டங்களுக்கும் உள்ளக நடைமுறைவிதிகளுக்கும் அமைய சய்யப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்த வேண்டும்.

சபையின் செயலாளராக சட்டத்தரணி ஒருவர் செயற்படுவதோடு இவர் நடைபெறுகின்ற சபை கூட்டங்களுக்கு சமுகமளிப்பதோடு சபையின் பொறுப்புக்கள் பற்றி வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகளையும் வழங்கி அதிகாரசபையின் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய விதிகள் மற்றும் விதிமுறைகள் பற்றியும் வழிகாட்ட வேண்டும்.

சபை சமநிலை

இச் சபையானது தலைவர் மற்றும் 14 நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களையும் கொண்டதாகும் இதன் பணிப்பாளர்கள் 1981 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சட்டம் திருத்தப்பட்ட சட்டம் 2009 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க சட்டத்தின்படி நியமிக்கப்படுவர். இச் சட்டமானது, குறிப்பாக ஒன்பது முன்னால் அலுவலக அதிகாரிகளை, பணிப்பாளர்களை குறிப்பிட்டுள்ளது.

1. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சினால் முன்மொழியப்பட்ட போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி.
2. நிதி அமைச்சினால் முன்மொழியப்பட்ட நிதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி.
3. வலு மற்றம் சக்தி அமைச்சினால் முன்மொழியப்பட்ட வலு மற்றும் சக்தி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி.

4. போக்குவரத்து சேவைகள் முகாமைத்தவ அமைச்சினால் முன்மொழியப்பட்ட போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி.
5. காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் நியமிக்கப்பட்ட காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர்.
6. நீர் வினியோக அமைச்சினால் நியமிக்கப்பட்ட தேசிய நீர் வினியோக மற்றும் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளர்.
7. நகர அபிவிருத்தி அமைச்சினால் நியமிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம்.
8. சுற்றாடல் அமைச்சினால் நியமிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலர்
9. சுற்றாடல் அமைச்சினால் நியமிக்கப்பட்ட புவி அளவையியல் மற்றும் சுரங்க பணியகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலர்

இதற்கு மேலதிகமாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் அமைச்சருக்கு ஏனைய 5 பணியாளர்களையும் சபைக்கு நியமனம் செய்வதற்கான அதிகாரத்தினை சட்டம் வழங்கியுள்ளது

சபைக்கான உப குழு

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஆளுகைக் கட்டமைப்பானது அதனை மேலும் பலப்படுத்தவும் விதிமுறைத் தேவைப்பாடுகளை பூரணப்படுத்துவதற்காகவும் தனது செயற்பாடுகளை சிறப்பான கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தவும் சபைக்கான உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது (AMC) நிதியியல் அறிக்கையிடல்களை கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல், இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு பணிகளை செய்கின்றது. AMC இன் அறிக்கையின் வருடாந்த அறிக்கையில் அத்தயாயம் 1-5 இல் காணப்படுகின்ற விபரங்கள் குழுவின் கொள்கைகளையும், நடைமுறைகளையும் மற்றும் கவனம் குவிக்கப்பட்டுள்ள பரப்புக்களை புரித்துக் காட்டுகின்றது. இக் குழுவானது தனக்கிடையில் வருடத்திற்கு 4 முறை சந்திப்புகளை நடாத்துகின்றனர் AMC ஆனது நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர்களையும் சுயேச்சையாக உள்ள பெரும்பாலான அங்கத்தவர்களையும் கொண்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் பின்வரும் நபர்கள்
அங்கத்தவர்களாக காணப்படுகின்றனர்.

1. திருமதி எம்.கே.டி.என். மாதம்பே - தலைவர் - நியமனம் w.e.f. 02.03.2022
2. திரு. டி.பி. விக்கிரமசிங்க - உறுப்பினர் - நியமிக்கப்பட்ட w.e.f. 01.01.2020.
3. திரு. டபில்யு.எச்.கே.டீ.பீ. ரத்நாயக்க - உறுப்பினர் - நியமனம் w.e.f. 05.07.2022
4. திரு. எம்.ஆர்.ஜி.ஏ.பி. முத்துக்குடே - தலைவர் - ராஜினாமா செய்தார்
5. திரு. பி.எம்.சி.கே. பஸ்நாயக்க - உறுப்பினர் - ராஜினாமா செய்தார்

அட்டவணை 1-1: 2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற சபை கூட்டத்தொடர்களின் போதான வருகை


இல	சபை அங்கத்தவர்கள்	சபை கூட்டங்களுக்கான வருகை	குறிப்பு
1	திரு. சமிந்த பி. அத்தலுவகே (தலைவர்)	09/09	
2	திரு. பி.எம்.சி.கே. பஸ்நாயக்க	08/09	
3	திரு. ஷம்ராஸ் யெஹியா	04/09	இராஜினாமா
	திரு. வி.கே. சோக்ஸி	05/09	நியமனம் w.e.f. 05.07.2022
4	திரு. சமன் திசாநாயக்க	04/09	இராஜினாமா
	திரு. ரஞ்சித் ஜி. ரூபசிங்க	03/09	நியமனம் w.e.f. 05.07.2022
5	திரு. டபிள்யூ.டபிள்யூ.ஏ.பஸ்நாயக்க	04/09	இராஜினாமா
	திரு. எம்.எம். விஜித மனம்பேரி	05/09	நியமனம் w.e.f. 05.07.2022
6	திரு. எம்.ஆர்.ஜி.ஏ.பி. முத்துக்குடே	02/09	இராஜினாமா
	திருமதி எம்.கே.டி.என். மாதம்பே	07/09	நியமனம் w.e.f. 02.03.2022
7	திரு. டி.பி. விக்கிரமாதித்தன்	08/09	
8	திரு. டபிள்யு.எச்.கே.டீ.பீ ரத்நாயக்க	09/09	
9	திருமதி ஈ.ஏ.ஆர். ரேணுகா	09/09	

இல	சபை அங்கத்தவர்கள்	சபை கூட்டங்களுக்கான வருகை	குறிப்பு
10	திரு. கே.பி.பி.வி. சில்வா	08/09	
11	திரு.திலின எஸ்.விஜேதுங்க	05/09	
12	திரு ஹேமந்த ஜயசிங்க	06/09	
13	திரு. என்.பி.கே. ரணவீர	08/09	
14	திரு. ஆர்.எம்.எஸ்.பி.கே. ரத்நாயக்க	05/09	நியமனம் w.e.f. 05.07.2022
15	திரு. எஸ்.ஜி.எல்.டி. மாலகா	04/09	நியமனம் w.e.f. 11.08.2022

1.3 இடர் மதிப்பீடு மற்றும் தணிப்பதற்கான தந்திரோபாயங்கள்

இடர் மதிப்பீடு செய்தலின் நோக்கம் நிறுவனத்தின் தொழிற்கபாடுகளில் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய மனித வள பிரச்சினைகள், நிதியியல் இடர் ஏமாற்று மற்றும் ஏனைய வெளியக நிகழ்வுகளை இனங்காண்பது ஆகும். வினைத்திறனான இடர் முகாமைத்ததுவமானது நிறுவனரீதியான தந்திரோபாய நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு உதவும்.


வருடாந்த மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டு உள்ளக கணக்காய்வாரள்கள் கணக்கீட்டுத்திட்டம் ஒன்றினை தயார் செய்துள்ளனர். இத்தகைய இடர் மதிப்பீடானது கீழ்வரும் நான்கு படிநிலைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



இடரினை இனங்காணுதல்

இடரினை இனங்காணும் செயற்பாடானது தொழிற்படுதல் பிரிவுகளின் தலைவர்களுடன் கலந்துரையாடிப் பெறப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையிலும், முன்னைய கணக்கியல் அறிக்கைகளை மீளாய்வு செய்து உள்ளக கணக்காளர்களின் அனுபவங்களின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இடர் பகுப்பாய்வு



நிகழத்தக்க வாய்ப்பானது குறிப்பாக இணங்காணப்பட்ட இடர் இடம் பெறுவதற்கான சந்தர்ப்பங்களையும் பாதிப்பானது இடரின் கடுமையினை சுட்டிக்காட்டவும் பயன்படுகிறது.

நிகழத்தக்க வாப்பு X பாதிப்பு = இடர்

இடர் மதிப்பாய்வு

ஒவ்வொரு இடரினையும் தரப்படுத்திய பின்னர் உள்ள கணக்கீட்டு பணிப்பாளர் கணக்காய்வு நடாத்தக்கூடிய பிரதேசங்களில் காணப்படும் முக்கிய இடர்களை பட்டியலிடுகின்றனர். இவ்வாறான நிலைகளில் நடுத்தர மற்றும் குறைவான இடர் தெரிவு செய்யப்பட்டு விடயம் நிகழ்வதற்கான இடர் முகாமைத்துவ செயன்முறை மேற்கொள்ளப்பட்டு தவறான இடர் மதிப்பீட்டில் இருந்தும் பாதுகாக்கப்படுகின்றது.

அட்டவணை 1-2: இடர் மதிப்பாய்வு

இனங்காணப்பட்ட இடர்	நிகழக்கூடிய வாய்ப்பு	பாதிப்பு	இடரின் மட்டம்	இடரினை தணிப்பதற்கான நடவடிக்கை
வீதி நிர்மானம் பணியுடன் தொடர்புடைய இடர்கள்				
• வீதி செயற்றிட்டங்களின் போது பொருத்தமற்ற முன்னுரிமைகளைத் தெரிவு செய்தல்	2	2	நடுத்தரம்	2022 ஆம் ஆண்டு தேசிய வீதி பெருந்திட்டமானது (NRMP 2021-2030) சபையினால் உறுதி செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. விஷேட வழி நடத்தும் குழுவானது நாட்டில் நிலவக்கூடிய நெருக்கடி நிலைமையினை கருத்திற் கொண்டு NRMP யின் செயற்றிட்டங்களின் முன்னுரிமை பட்டியலினை மீள்பார்வை செய்து நியமிப்பதற்காக திட்டமிட்டது.
• உடனடி பால பராமரிப்பு / மீள்நிர்மானத்தில் உள்ள தாமதம்	3	3	உயர்வு	பால முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல் அலகின் கீழ் உள்ள பால வடிவமைப்பு அலகில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பால முகாமைத்துவ முறைமைக்கான வருடாந்த செயற்திட்டம் தயாரிக்கப்பட்டது. மேலதிக உறுதிப்படுத்தல்கள் மாகாண பணிப்பாளர்களால் செய்யப்பட்டது
• உடனடி வீதிப்பராமரிப்பில் உள்ள தாமதம்	3	2	உயர்வு	இதற்கான பிரதான காரணம் நேரத்திற்கு தேவைப்படும் நிதி போதாமல் இருப்பதாகும் வீதிப்பராமரிப்பு நிதியம் (RMF) ஒன்றினை தாபிக்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2023 ஈம் ஆண்டிற்கான பாதீட்டு வரைபில் இந்த முன்மொழிவும் உள்வாங்கப்பட்டுள்ளது.
• குறைந்த தரத்திலான நிர்மானப்பணிகள்	1	3	நடுத்தரம்	கட்டுமானத்தின் தரத்தை கண்காணிக்க தொழில்நுட்ப தர உறுதிப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது இப்பிரிவானது தொடர்புடைய சோதனைகளை மேற்கொள்வதற்கும் இணக்கமின்மை குறித்து பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கை செய்வதற்கும் பொறுப்பாகும்
• வீதி பாதுகாப்பில் போதிய கவனம் இல்லை	2	2	நடுத்தரம்	வீதி பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து மேலாண்மை பிரிவு வீதி பாதுகாப்பு தொடர்பான பொறுப்புகளை வழங்குவதற்காக நிறுவப்பட்டுள்ளது. அவர்கள் அபாயகரமான இடங்களைக் கண்டறிந்து, ஆபத்தைத் கணக்காய்வு நடவடிக்கை எடுக்கிறார்கள்.
• ஒப்பந்த மாறுபாடுகள்	2	2	நடுத்தரம்	நம்பகமான உண்மைகளைக் கருத்தில் கொண்டு அனுமதிக்கக்கூடிய வரம்பில் மாறுபாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட மாறுபாடுகளின் செல்லுபடியை உறுதி செய்வதற்காக உள்ளக கணக்காய்வு வழக்கமான விசாரணைகளை மேற்கொள்கிறது

இனங்காணப்பட்ட இடர்	நிகழக்கூடிய வாய்ப்பு	பாதிப்பு	இடரின் மட்டம்	இடரினை தணிப்பதற்கான நடவடிக்கை
பொதுப் பிரச்சினைகள் தொடர்பான இடர்				
• வீதி பாதுகாப்பு சிக்கல்கள்	3	1	நடுத்தரம்	வீதிப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து மேலாண்மைப் பிரிவு தேசிய வீதி வலையமைப்பின் பாதுகாப்புச் சிக்கல்களைக் கவனிக்கிறது.
• பொறுப்பான அதிகாரிகள் பொதுப் பிரச்னைகளில் கவனம் செலுத்துவதில்லை	1	3	நடுத்தரம்	• தேசிய வீதி அமைப்பு தொடர்பான பொதுமக்கள் புகார்களை சேகரிக்க 1968 தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்பட்டது. தகவல் மையம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பான காகித கட்டுரைகளை சேகரிக்கிறது. • அதிவேக நெடுஞ்சாலைகள் தொடர்பான விசாரணை புகார்களை நிர்வகிக்க 1969 நிறுவப்பட்டது.
மனித உறவுகள் மற்றும் பணி செயல்திறன் தொடர்பான இடர்				
• சுனுயு இலிருந்து வெளியேறும் அனுபவம் வாய்ந்த திறமையான வல்லுநர்கள்	3	3	உயர்வு	கவர்ச்சிகரமான நிதி மற்றும் நிதி அல்லாத பலன்கள் முன்மொழியப்பட்டு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்
• தொழிலாளர் தொடர்பான சட்ட சுற்றறிக்கைகளின் தவறான விளக்கங்கள்	2	1	நடுத்தரம்	நிர்வாகம், உள் கணக்காய்வு மற்றும் சட்டப் பிரிவு ஆகியவை பணியாளர்கள் தொடர்பான தொடர்புடைய செயல்கள் மற்றும் சுற்றறிக்கைகளை தெளிவுபடுத்துவதில் ஈடுபட்டுள்ளன.
சொத்துகள் தொடர்பான இடர்				
• மோசமான சொத்து பதிவு பராமரிப்பு	1	3	நடுத்தரம்	சொத்துக்கள் மீது வலுவான உள் கட்டுப்பாட்டு அமைப்பை நிறுவுதல் வருடாந்தம் விரிவான சொத்துக் கணக்கீடு மற்றும் பதிவுப் புத்தகங்களுடன் ஒப்பிடுதல்
• வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் விபத்து	2	3	நடுத்தரம்	காப்பீடு மூலம் அபாயத்தை மாற்றுதல்
• சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்துதல் பயன்படுத்துதல் மதிப்புமிக்க தகவல்களை தவறாகப் பயன்படுத்துதல்	1	1	குறைவு	தொழிலாளர் திருட்டு தொடர்பாக சுயாதீன விசாரணை நடத்தி அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்
தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான தகவல் மேலாண்மை அமைப்பு இல்லாதது தொடர்பான ஆபத்து				

இனங்காணப்பட்ட இடர்	நிகழக்கூடிய வாய்ப்பு	பாதிப்பு	இடரின் மட்டம்	இடரினை தணிப்பதற்கான நடவடிக்கை
• இணைப்பு இழப்பு	3	3	உயர்வு	நிலத் தரவுத் தளம் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கியமான பகுதிகளில் விரிவான மேலாண்மைத் தகவல் அமைப்பை நிறுவ ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.
• புதுப்பிக்கப்பட்ட தரவுத் தளம் கிடைக்கவில்லை	3	3	உயர்வு	
• தொழில்நுட்ப தகுதி வாய்ந்த பணியாளர்கள் பற்றாக்குறை	3	3	உயர்வு	SOR இது குறித்து உரையாற்றினார்
• பணியாளர்களால் மென்பொருள் கையாளுதல்	1	1	குறைவு	அமைப்பின் அருவமான சொத்துக்களைப் பாதுகாக்க வலுவான உள் கட்டுப்பாட்டு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. இதில் மென்பொருள் அதிகாரப்பூர்வ மின்னஞ்சல் மூலம் மட்டுமே புதுப்பிக்கப்படும்.
• முழு அதிவேக நெடுஞ்சாலை வலைப்பின்னக்குக்கும் மின்னணு கட்டணம் செலுத்துதல் முறை இல்லை	3	3	உயர்வு	ஒருங்கிணைந்த பல பாதை பரிட்சார்த்த ஓட்ட அமைப்பு திட்டமிடப்பட்டுள்ளது
கணக்காய்வு *அபாயங்கள்*				
• கணக்காய்வுர்கள் அபாயங்களை முன்கூட்டியே அடையாளம் காணத் தவறிவிடுகிறார்கள்	1	3	உயர்வு	• அனைத்து முக்கிய ஆபத்து காரணிகளையும் கருத்தில் கொண்டு கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்து அதற்கேற்ப கணக்காய்வு நடத்தவும் • திறமையான பணியாளர்களை நியமிக்கவும் • காலாண்டுக்கு அழைப்பு கணக்காய்வு மற்றும் மேலாண்மை கூட்டம்

1.4 கணக்காய்வு குழுவின் அறிக்கை

2022 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த 2023 ஆம் ஆண்டுக்குரிய கணக்காய்வு குழுவின் (குழு)அறிக்கையை முன்வைப்பதில் பேருவகை அடைகின்றேன்

குழுவின் முதநிலை நோக்கமாக நிதியியல் அறிக்கையிடல் செயன்முறையினை கண்காணித்தல் நிகழ்கின்றது. அத்துடன் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் இடர் முகாமைத்துவ செயன்முறையினை கண்காணித்தல், சட்டங்களுடனும் விதிமுறைகளுடனும் இணங்கிச் செல்கினற்றதா என்பதனை கண்காணித்தல் ஆகியன இக்குழுவின் பணிகளாகும்.

சபை பணிப்பாளர்களுக்கு (சபை) வீதி அபிவிருத்தி அதாகரசபையின் (அதிகாரசபை) நிதியியல் அறிக்கையிடல் மற்றும் சுற்றாடல் உள்ளக கட்டுப்பாட்டின் போதான வினைதிறன் ஆகியவற்றில் குழுவானது இணக்கம் காணுதலை உறுதிப்படுத்துகின்றது.

குழுவானது குறிப்பாக உள்ளக மற்றும் வெளியக கணக்காய்தல் தொழிற்பாடகள், மேசடி மற்றும் இடர் முகாமைத்துவம் மற்றும் அதிகாரசபையின் ஏனைய அனைத்து தொழிற்பாடுகளிலும் கவனம் செலுத்துகின்றது.

.

குழுவின் அங்கத்துவம்

சபையானது 18.02.2022 இல் குழுவினை நியமனம் செய்தது :

1. திருமதி. எம் கே டி என் மாதம்பே (தலைவர்),
   மேலதிக பணிப்பாளர் நாயகம்
   முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், நிதி அமைச்சு

1. திரு. டீ.பீ விக்ரமசிங்க (அங்கத்தவர்)
   மேலதிக செயலாளர் நாயகம் - வலு மற்றும் சக்தி அமைச்சு

நிறைவேற்று அல்லாத மற்றும் சுயேச்சையான

2. திரு. டபல்யு.எச்.கே.டீ.பீ. ரத்நாயக்க (அங்கத்தவர்)
   பணிப்பாளர் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு
   போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

நிறைவேற்று அல்லாத

திரு எம்.ஆர்.ஜீ.ஏ.பீ முத்துகொட அவர்கள் குழுவின் தலைவராக அவரது சேவைக்காலத்தின் போது செய்த பணிகளை குழுவானது பாராட்டியது.

சபையானது குழுவில் தற்போது அங்கத்துவம் வகிக்கின்ற அங்கத்தவர்களின் நிதியியல் விடயங்களை கையாளக்கூடிய விதம் மற்றும் அனைத்தும் அனைத்து திறமைகளையும் நிறைவாக பெற்றுள்ளமை நிபணத்துவம் மற்றும் வீதித்துறையில் காணப்படும் அனுபவம் ஆகியவற்றில் திருப்தியடைகின்றது.

உள்ளக கணக்கீட்டு பணிப்பாளர் குழுக்கூட்டங்களை கூட்டுதல் மற்றும் குழுவின் முன்னால் நிகழ்ச்சிப் பதிவுகளை பேணுதல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். குழுவின் கூட்டங்களில் பங்குபற்றும் ஏனைய நபர்களாக பணிப்பாளர் நாயகம், தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பிரதிநிதிகள், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பிரதான உள்ளக கணக்கயர்வாரள் மற்றும் பணிப்பாளர்கள், அதிகாரசபையின் ஏனைய சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் அதிகாரசபையின் துனை நிறுவனங்கள் உரியவர்கள் பங்குபற்றுவதுடன் குழுவில் முன்வைக்கப்படும் கணக்கீட்டு பிரச்சினைகளுக்கு உரிய பதில்கள் வழங்கப்படுகின்றன.

குழுவின் வகிபாகம்

குழுவின் பொறுப்புக்கள் ஓர் பட்டயம் ஒன்றினூடாக வரையறுக்கப்பட்டுள்ளது. அத்துடன் குழுவின் விவகாரங்கள் அனைத்தும் பட்டயத்துடன் இணைந்தே செல்கின்றது.

கீழ் வருவன குழுவின் பொறுப்புக்களாவதோடு. கீழ் உள்ளவற்றிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

- அதிகாரசபையின் நிதியியல் கூற்றின் ஒருமைப்பாட்டினை கண்காணித்தல்.
- சபையின் பரிந்துரைகளுடன் அங்கீகராரம் கிடைக்கப்பெற்ற ஒவ்வொரு மாத மற்றும் வருடாந்த நிதியியல் கூற்றுக்களை மீளாய்வு செய்தல்.
- அனர்த்த முகாமைத்துவம் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் செயன்முறைகளை கண்காணித்தல்.
- சட்ட மற்றும் செயன்முறைகளை ஒழுங்க முறை தேவைப்பாடுகளுடன் இணைந்து செல்கின்றதா என்பதனை கண்காணித்தல்
- உள்ளக கணக்காய்வு தொழிற்பாட்டின் போதான வினைத்திறனை மீள்பார்வை செய்தல்.

கணக்கீட்டு அறிக்கை

குழுவானது அதிகாரசபை மற்றும் அதன் துனை நிறுவனங்களினது மாதாந்த மற்றும் வருடாந்த கணக்கீட்டு பெறுபேறுகளை கண்காணிப்பதன் நோக்கம் துல்லியத்தன்மை, பூரணத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினது காலப்பிரிவு ஆகியவற்றினை உறுதிப்படுத்துவதற்கு ஆகும்.

குழுவானது அதிகாரசபை மற்றும் துனை நிறுவனங்களின் அறிக்கைகளை வழமையான அடிப்படையில் மற்றும் நேரடியாக முகாமைத்துவத்திற்கு தேவையான தந்திரோபாயங்கள் மற்றும் கட்டுப்பாட்டிவூடாக வினைத்திறனை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆகியவற்றை மீளாய்வு செய்கிறது.

உள்ளக கணக்காய்வு மற்றும் இணங்கதல்

அதிகாரசபையின் உள்ளக கணக்காய்வு தொழிற்பாடானது அதிகாரசபையின் தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த கணக்காய்வு திட்டத்தின் அடிப்படையில் நடாத்தப்படுகிறது. மேலும் இதில் குழு அல்லது சபை பணிப்பாளர்களின் சிரேஷ்ட முகாமைத்துவம் வேண்டுகின்ற போதும் விசாரணைகளை மேற்கொள்கின்றது.
இக் குழுவானது வினைத்திறன், செயற்பாடு மற்றும் உள்ளக கணக்காய்வு தொழிற்பாடுகளின் நோக்கம் மற்றும் மீள்பார்வை:

- குழு மற்றும் சபை அங்கத்தவர்களது அறிக்கையிடல் வரி மற்றும் அணுகுகை
- உள்கள கணக்காய்வு திட்டம் மற்றும் திட்டத்தினது அடைவுகள்
- உள்ளக கணக்கயாய்வின் முக்கியமான முடிவுகள், முகாமைத்தவத்தினது போதுமான அளவு பதில் அளிப்புக்கள் மற்றும் சரியான நடவடிக்கைகளின் காலப்பிரிவுகள்
- உள்ளக கணக்காய்வு வளங்களின் போதிய தன்மை

இடர் முகாமைத்துவம்

குழுவானது அதிகாரசபையின் முகாமைத்துவத்துடன் பணியில் ஈடுபடும் போது முக்கிய இடர்களை இணங்காண்பதற்காக மற்றும் மதிப்பீடு செய்வதற்காகவும் கணக்காய்வ முகாமைத்துவ தொழிற்பாடுகளின் போதிய தன்மையின் ஊடாக இவ்வாறான இடர்களை இயன்றவரை தணிப்பதற்கு உரிய நேரத்திற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

2022 ஆம் ஆண்டின் போதான செயற்பாடுகள்

2022 ஆம் ஆண்டின் போதான குழுவின் கூட்டங்கள் மற்றும் அதன் செயற்பாடுகள் கீழ்வருமாறு,

- உள்ளக மற்றும் வெளியக கணக்கயாய்வு இணங்காணல்கள் மற்றும் பரிந்துறைகள் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளின் போதான பரிந்துரைகள் போன்றவற்றினை மீளாய்வு செய்தல்
- பரிந்துரைக்கப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்திகளை மேற்கொள்ள கொள்கைகள் மற்றும் பிரதான கணக்கீட்டு செயன்முறைகளை மீளாய்வு செய்தல்
- வெளியக கணக்காய்வாரள்களின் ஈடுபாட்டினை கண்காணித்தல்.
- உள்ளக கணக்கீட்டு தெழிற்பாடுகள் மற்றும் அதன் வளங்களின் போதிய தன்மையினை மீளாய்வு செய்தல்.

உள்ளக கணக்காய்வு

- உள்ளக கண்க்கீட்டு தொழிற்பாடுகளின் அறிக்கைகளை உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் இடர் முகாமைத்துவ செயற்பாடுகளின் போதிய தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்த மீளாய்வு செய்தல்.
- உள்ளக கணக்கீட்டு செயற்பாடுகளின் வினைத்திறனை மதிப்பீடு செய்தல் மற்றும் தொழிற்பாடுகளை பலப்படுத்த பரிந்துரை செய்யப்பட்ட விடயங்களையும் மதிப்பீடு செய்தல்.

இடர் முகாமைத்துவம்

- நடவடிக்கைகளை தணிப்பதற்காக அதிகாரசபையின் இடர் முகாமைத்துவம் மற்றும் அதன் வினைத்திறனை மீளாய்வு செய்தல்.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் சார்பாக:

எம்.கே.டீ.என் மாதம்பே (Ms)
தலைவர்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

1.5 நிறுவன முகாமை

பணிப்பாளர் நாயகம்

பொறியியலாளர்.எல்.வீ.எஸ் வீரகோன்

மேலதிக பணிப்பாளர் நாயகம் - சொத்து இயக்கம் மற்றும் முகாமைத்துவம்

பொறியியலாளர். எஸ் ஓபநாயக்க

மேலதிக பணிப்பாளர் நாயகம் - நிர்மாண வடிவமைப்பு

பொறியியலாளர். எல்.எஸ் பிரேமதிலக

மேலதிக பணிப்பாளர் நாயகம் - திட்டமிடல் வடிவமைப்பு (தற்காலிகம்)

பொறியியலாளர்.(திருமதி) பீ^{B}.ஏ.ஆர். பிரேமரத்ன

மேலதிக பணிப்பாளர் நாயகம்- கருத்திட்டம் (தற்காலிகம்)

பொறியியலாளர்.(திருமதி) பீ^{B}.ஏ.ஆர். பிரேமரத்ன

பிரதான முகாமைத்துவ அலுவலகப் பணிப்பாளர் விபரம்

பொறியியலாளர். எல்.எஸ் வீரகோன்
பணிப்பாளர் நாயகம்

ஐம்பத்தொன்பது வயதுடைய பட்டயப்பொறியியலாளர் ஆவார் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான நிறைவேற்று அலுவலராக அதிகாரசபையின் ஒட்டுமொத்த தொழிற்பாடுகளுக்கும் பணிப்பாளர் நாயகம் பொறுப்புடையவர் என்பதுடன் கீழ் வரும் வியடங்களான அதிகாரசபையின் கொள்கை தொடர்பான பொதுவான வழிகாட்டல்கள், அதிகாரசபையின் தொழில் தொடர்பான வழிகாட்டல்கள், நிறுவனத்தின் மற்றும் செயற்படுத்தல் அதிகாரங்கள் மற்றும் அதிகாரசபையினதும் அதன் அங்கத்தவர்களினதும் நிர்வாக கட்டுப்பாடுகள் போன்றன முக்கியமானவையாகும்.

வீ.அ.அ. இல் தனது தொழிலினை 1995 ஆம் ஆண்டு கட்டிடப்பொறியியலாளராக ஆரம்பித்தார். வேறுபட்ட செயல் திறமை கொண்ட வடிவமைப்பு பொறியியலாளராக, செயற்றிட்ட பொறியியலாளராக, பிரதான பொறியியலாளராக (வடிவமைப்பு) மற்றும் செயற்றிட்ட பணிப்பாளராக எனும் பல்வேறுபட்ட துறைகளில் 2021 ஆண்டு பெப்ரவரி மாதம் பணிப்பாளர் நாயகமாக பணியேற்பதற்கு முன்னர் வேலை செய்துள்ளார். இவர் வீதி மற்றும் கடுகதிப்பாதை நிர்மானம், வீதி / கடுகதிப்பாதைகள் மற்றும் பால வடிவமைப்பு ஆகியவற்றில் பரந்த அனுபவத்தினை உடையவராவர். மேலும் இவர் பாரிய செயற்றிட்டங்களில் பல்வேறு வகைகளிலான கொள்முதல் வேலைகளிலும் ஈடுபட்டவர் ஆவார். இவர் அதிகாரசபையின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள், வழிகாட்டல்கள், குறிப்புக்கள் மற்றும் தரநிலைகள் ஆகியவற்றினை புதுப்பித்தல் மீளாய்வு செய்தல் ஆகியவற்றிற்கு நேரடியாக பங்களித்துள்ளார்.

1.6 கண்ணோட்ட பணி

சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் ஏதேனும். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் போக்குவரத்து உட்கட்டமைப்பானது நெருக்கமான தொடர்பை கொண்டுள்ளது.

PMU மேற் செலவு	*800.00*	*16.01.2017*	*31.12.2023*	-	*372.14*	-	*410.55*

பிரச்சினைகள்:

நாட்டில் நிலவிய பொருளாதார மற்றும் நிதி நெருக்கடி காரணமாக ஒப்பந்தத்தாரர்கள் மற்றும் ஆலோசகர்களுக்கு 2021 ஆம் ஆண்டின் ஜுலை மாதம் தொடக்கம் மிக நீண்ட காலமாக நிலுவையில் உள்ள கொடுப்பனவுகள் செலுத்தப்படவில்லை. அதன் விளைவாக ஒப்பந்தத்தாரர்கள் மீதி உள்ள வேலைகள் மற்றும் குறைகளை நிறைவு செய்யும் வேலைகளையும் முன்னெடுக்கவில்லை. ஆலோசனையாளர்களும் கலைந்து சென்றனர். குறைகளை அவதானிக்கும் காலப்பிரிவானது 2022 நவம்பர் 15 ஆம் திகதியுடன் காலாவதியாகியது. இறுதியாக சிக்கல் மிகுந்த ஒப்பந்தப் பிரச்சினைகள் தோன்றியதுடன் அப்பிரச்சினைகளை நிலுவையில் உள்ள கொடுப்பனவுத் தொகைகளை செலுத்தாது தீர்க்க முடியாது எனும் நிலை தோன்றிது. குறிப்பாக, ஒப்பந்தத்தாரர்கள் வீட்டு சேதங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கும் சூழலியல் பிரச்சிணைகள் தொடர்பான மக்களின் முறைப்பாடுகள், சில பிரதேசங்களில் ROW வேலியின் எஞ்சிய வேலைகள், வடிகாலமைப்பு முறைமையினை தொடர்பு படுத்தும் கால்வாய்களை பூரணப்படுத்தும் வேலைகள் ஆகியன புறக்கணிக்கப்பட்டது.

(iii) மத்திய கடுகதிப்பாதை செயற்திட்டம் - 3

மத்திய கடுகதிப்பாதை பிரிவு 3 ஆனது பொத்துஹேரவில் (ch 0+840 கி.மீ) ஆரம்பமாகி ரம்புக்கனை ஊடாக கலகெதர (ch 32+ 500 கி.மீ) வரை செல்கின்றது. இப்பிரிவில் வேகத்திற்கான வடிவமைப்பானது 100 கி.மீ/மணி ஆவதோடு நான்கு ஒழுங்கைகளைக் கொண்ட இருபக்க நெடுஞ்சாலையாகும்



வரைபடம் 2-5: மத்திய கடுகதிப்பாதை பிரிவு - III

2022 ஆம் ஆண்டின் போதான செயற்பாடுகளின் முன்னேற்றம்

அடிப்படை செயற்திட்ட விபரங்கள்

- செயற்திட்ட நீளம் : சுமார் 31.7 கி.மீ
- இடைமாறல்கள் : பொத்துஹேர முறைமை இடமாறல், பொல்கஹவல, ரம்புக்கன, கலகெதர
- வெட்டுக் கொள்வளவு : 4,085,750 Cu.m
- நிரப்புக் கொள்வளவு : 4,065,640 Cu.m
- ஓய்வு வசதிகள் : குடா ஓயாவுக்கு அருகாமையில் ஓய்வுப் பிரதேசம் ரம்புக்கனையின் பிரதான பாதையின் இருபுறுமம் உள்ளஓய்வுப் பகுதி
- பாலங்களின் எண்ணிக்கை : 20
- வீதி வராவதி எண்ணிக்கை : 20
- மதகுகளின் எண்ணிக்கை : 6.85 கி.மீ
- சுரங்கப்பாதைகளின் எண்ணிக்கை : 92
- மேம்பாலங்களின் எண்ணிக்கை : 25
- சுரங்கங்களின் எண்ணிக்கை : 13
- மொத்த சுரங்கப்பாதை : 1
- மொத்த சுரங்கப்பாதை நீளம் : 295 மீ

காணி சுவீகரிப்பின் முன்னேற்றம் (நடைபெற்றுக் கொண்டிருப்பவை)

மத்திய கடுகதிப்பாதையின் பிரிவு – 3 யின் காணி சுவீகரிப்பின் முன்னேற்றம் அட்டவணை 2 யில் காட்டப்பட்டுள்ளதோடு காணி சுவீகரிப்பின் பௌதீக முன்னேற்றம் 2022 ஆம் ஆண்டின் டிசம்பர் மாத இறுதியில் 89.71% ஆகும்

அட்டவணை 2-60: காணி சுவீகரிப்புத்திட்டம்

சங்கிலித் தொடர்	நீளம் (கி.மீ)	பூரணப்படுத்தப்பட்ட திகதி
0+840 – 12+890	12.05	04.08.2021
12+890 – 17+950	05.06	31.06.2022
17+950 – 32+500	14.55	31.12.2023

சிவில் வேலை நிர்மாணப் பணிகள்

அமைச்சரவை பத்திர இல.20/2072/319/021 இன் படி 18.12.2020 திகதி யிடப்பட்ட அமைச்சரவைக்கான குறிப்பு, நெடுஞ்சாலைகள் அமைச்சரால் அமைச்சரவையில் 11.01.2021 இல் முன்வைக்கப்பட்டது. மத்திய கடுகதிப்பாதையின் ஒரு பகுதி (பொத்துஹேரவில் உள்ள லிஹினிகிரியவில் இருந்து) ch 0+840 கி.மீ (ரம்புக்கனை) வரையான மத்திய கடுகதிப்பாதை பொதி 1 வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் (RDA) தொடங்கி வைக்கப்பட்டது.

அமைச்சரவை தீர்மானத்தின் படி மத்திய கடுகதிப்பாதைப்பிரிவு 3 யிற்கான PMU ஆனது ஆரம்ப வேலைகளை (தளத்தினை துப்பரவு செய்தல் மற்றும் பைலட் வீதிகளின் நிர்மாணம் போன்றன) ஆரம்பித்துள்ளது. இவ் ஆரம்ப வேலைகள் ch 0+840 கி.மீ இலிருந்து வழிகாட்டலிலிருந்து ch 12+840 கி.மீ வரை நேரடியாக GOSL இன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட வளங்கள் மூலம் செய்யப்படவுள்ளது.

எவ்வாறாயினும் நிர்மாண வேலைகளை துரிதப்படுத்த பிரிவானது (ch 0+840 கி.மீ இலிருந்து ch 12+840 வரை) 17 நிர்மாணப்பொதிகளாக பிரிக்கப்பட்டுள்ளதுடன் உள்நாட்டு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து போட்டிச் செயன்முறை மூலமாக கேள்விப்பத்திர அழைப்பு விடுக்கப்பட்டு கடுகதிப்பாதையின் பிரிவானது உப அடி மட்டம் வரை நிர்மாணிக்கப்படவுள்ளது.

CEP 3 இன் எஞ்சிய பிரிவின் ரம்புக்களை (ch12+840 கி.மீ) முதல் கலகெதரை (ch 32+890. கி.மீ) கலகெதரை (ch 32+450 கி.மீ) வரையான பகுதியனை பூரணப்படுத்த அமைச்சரவை கூட்டத்தில் 14.06.2021 இல் தீர்மானம் எட்டப்பட்டதுடன் இது வடிவமைப்பு, நிதி, இயக்கம், பராமரிப்பு மற்றும் மாற்றலுக்கான (DBFOMT) அடிப்படை ஆகியவற்றுக்காக முதலீட்டாளர்களால் மேற்கொள்ளப்படவுள்ளது.

அதற்கமைவாக ஆர்வமுடைய முதலீட்டாளர்களிடமிருந்து மேலுள்ள விடயத்தினை நடைமுறைப்படுத்த முன்மொழிவுகள் வரவேற்கப்பட்டுள்ளன. முன்மொழிவுகள் 04.10.2021 ஆம் திகதி பெறப்பட்டதோடு அவை திறந்து மதிப்பீடு செய்யப்பட்டது. போட்டியாளர்களில் தொழில்நுட்ப ரீதியான தகுதி நிலையை அடைந்த ஒப்பந்த காரர்களிடம் பேச்சுவார்த்தைகளை CANC ஆரம்பித்தது. நாட்டின் தற்போதைய நிலைமையின் காரணமாக பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவு பெறவில்லை. அதற்கமைவாக தற்போதைய கொள்முதல் செயல்முறைகளுக்காக அமைச்சரவையினால் இரத்து செய்யப்பட்டதுடன் இப் பிரிவு மீள விலை மனு கோரலுக்காக விடப்பட்டது.

ஆலோசனை சேவைகள்

அமைச்சரவை அனுமதிக்கு அமைவாக ch 0+840 கி.மீ இலிருந்து ch 12+890 கி.மீ வரையான பிரிவு வீ.அ.அ இனால் மேற்பார்வை செய்யப்பட்டது. மிகுதி உள்ள பிரிவுகளுக்கான ஆலோசனைசேவையானது சிவில் வேலை ஒப்பந்தத்தின் நடைமுறைப்படுத்தல் முறையில் தங்கியுள்ளதுடன் இப்பரிவுகளுக்கான சிவில் வேலை ஒப்பந்தத்தாரர்கள் தொரிவு செய்யப்பட்ட பின்னரே ஆலோசனை சேவை ஒப்பந்தத்தாரர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

செயற்திட்ட நிதியிடல் (நடைபெறுகின்றது)

GOSL இனால் ch 0+840 கி.மீ இலிருந்து ch 12+890 கி.மீ வரை நிதியிடல் வழங்கப்பட்டதுள்ளதுடன் எஞ்சிய பாகத்துக்கான நிதியிடல் வெற்றிகரமாக சலுகையாளர்களினூடாக பெறப்படவுள்ளது.

அட்டவணை 2-61:லிஹினிகிரியவில் இருந்து ரம்புக்கனை வரையான பிரிவின் ஒப்பந்தத்தின் முன்னேற்றம்

பொதி	ஒப்பந்தத்தாரரின் பெயர்	டெக் (ரூ.மில்.)	ஆரம்பிக்கப்பட்ட திகதி	நிறைவு செய்ய எதிர்கார்க்கும் திகதி	2021 யின் இறுதியில் பௌதீக முன்னேற்றம் (%)	2021 இன் இறுதிவரை திரட்டிய செலவீனம் (ரூ.மில்)	2022 இன் இறுதியில் பௌதீக முன்னேற்றம் (%)	2022 இன் இறுதி வரை திரட்டிய செலவீனம் (ரூ.மில்)
பொதி 1A (Ch. 0+840 கி.மீ முதல் Ch. 1+580 கி.மீ) : 0.74 கி.மீ ஒப்பந்த இல. RDA/CEP3/PACK1A	எட்வார்ட் மற்றும் செரிஸ்டி (தனி) வரை	859.30	20.08.2021	19.08.2022	16.00	162.76	48.90	351.46
பொதி 1B (Ch. 1+580 கி.மீ முதல் Ch. 2+400 கி.மீ) : 0.82 கி.மீ ஒப்பந்த இல. RDA/CEP3/PACK1B	எட்வார்ட் மற்றும் செரிஸ்டி (தனி) வரை	743.62	20.08.2021	19.08.2022	7.60	132.54	31.72	296.18
பொதி 1C (Ch. 2+400 கி.மீ முதல் Ch. 3+090 கி.மீ) : 0.69 கி.மீ ஒப்பந்த இல. RDA/CEP3/PACK1C	எட்வார்ட் மற்றும் செரிஸ்டி (தனி) வரை	912.00	20.08.2021	19.08.2022	11.30	155.27	16.50	252.14
பொதி 1D (Ch. 3+090 கி.மீ முதல் Ch. 4+400 கி.மீ) : 1.31 கி.மீ ஒப்பந்த இல. RDA/CEP3/PACK1D	K.D.A. வீரசிங்க மற்றும் (தனி) வரை	3,587.39	24.12.2021	23.06.2023	0.00	469.24	4.31	644.39
பொதி 1E (Ch. 4+400 கி.மீ முதல் Ch. 4+920 கி.மீ) : 0.52 கி.மீ ஒப்பந்த இல. RDA/CEP3/PACK1E	எட்வார்ட் மற்றும் செரிஸ்டி (தனி) வரை	997.59	06.12.2021	05.12.2022	0.50	131.15	15.80	269.54


பொதி	ஒப்பந்தத்தாரரின் பெயர்	டெக் (ரூ.மில்.)	ஆரம்பிக்கப்பட்ட திகதி	நிறைவு செய்ய எதிர்கார்க்கும் திகதி	2021 யின் இறுதியில் பௌதீக முன்னேற்றம் (%)	2021 இன் இறுதிவரை திரட்டிய செலவீனம் (ரூ.மில்)	2022 இன் இறுதியில் பௌதீக முன்னேற்றம் (%)	2022 இன் இறுதி வரை திரட்டிய செலவீனம் (ரூ.மில்)
பொதி 1F (Ch. 4+920 கி.மீ முதல் Ch. 5+140 கி.மீ) : 0.22 கி.மீ ஒப்பந்த இல. RDA/CEP3/PACK1F	துடாவ பிரதர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்	992.83	06.12.2021	05.12.2022	0.82	117.46	10.49	263.07
பொதி 1G (Ch. 5+140 கி.மீ முதல் Ch. 5+820 கி.மீ) : 0.68 கி.மீ ஒப்பந்த இல. RDA/CEP3/PACK1G	செனுரா சிவில் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட்	944.77	06.12.2021	05.12.2022	0.00	62.73	50.10	357.40
பொதி 1H (Ch. 5+820 கி.மீ முதல் Ch. 6+270 கி.மீ): 0.45 கி.மீ ஒப்பந்த இல. RDA/CEP3/PACK1H	PND கன்ஸ்ட்ரக்ஷன் (பிரைவேட்) லிமிடெட்	872.57	03.12.2021	02.12.2022	2.00	116.66	6.80	201.62
பொதி 1I (Ch. 6+270 கி.மீ முதல் Ch. 6+900 கி.மீ) : 0.63 கி.மீ ஒப்பந்த இல. RDA/CEP3/PACK1I	கே.டி. ஈபர்ட் அண்ட் சன்ஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட்	938.49	06.12.2021	05.12.2022	4.00	120.11	17.20	219.69
பொதி 1J (Ch. 6+900 கி.மீ முதல் Ch. 8+050 கி.மீ) : 1.15 கி.மீ ஒப்பந்த இல. RDA/CEP3/PACK1J	NEM கன்ஸ்ட்ரக்ஷன் (பிரைவேட்) லிமிடெட்	3,963.43	24.12.2021	23.06.2023	0.00	503.37	3.90	772.20
பொதி 1K (Ch. 8+050 கி.மீ முதல் Ch. 8+850 கி.மீ): 0.8 கி.மீ	ருஹுனு டெவலப்மெட் ஒப்பந்ததாரர்கள்	961.48	23.11.2021	22.11.2022	2.70	125.68	18.52	277.51

பொதி	ஒப்பந்தத்தாரரின் பெயர்	டெக் (ரூ.மில்.)	ஆரம்பிக்கப்பட்ட திகதி	நிறைவு செய்ய எதிர்கார்க்கும் திகதி	2021 யின் இறுதியில் பௌதீக முன்னேற்றம் (%)	2021 இன் இறுதிவரை திரட்டிய செலவீனம் (ரூ.மில்)	2022 இன் இறுதியில் பௌதீக முன்னேற்றம் (%)	2022 இன் இறுதி வரை திரட்டிய செலவீனம் (ரூ.மில்)
ஒப்பந்த இல. RDA/CEP3/PACK1K	மற்றும் பொறியியல் (பிரைவேட்) லிமிடெட்							
பொதி 1L (Ch. 8+850 கி.மீ முதல் Ch. 9+100 கி.மீ): 0.25 கி.மீ ஒப்பந்த இல. RDA/CEP3/PACK1L	நவலோகா கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்	621.55	30.11.2021	29.11.2022	0.00	79.87	14.70	117.07
பொதி 1M (Ch. 9+100 கி.மீ முதல் Ch. 9+900 கி.மீ); 0.8 கி.மீ ஒப்பந்த இல. RDA/CEP3/PACK1M	அணுகல் பொறியியல் பிஎல்சி	3,884.10	03.01.2022	02.07.2023	0.00	468.73	4.28	704.02
பொதி 1N (Ch. 9+900 கி.மீ முதல் Ch. 11+230 கி.மீ) : 1.33 கி.மீ ஒப்பந்த இல. RDA/CEP3/PACK1N	சர்வதேச கட்டுமானக் கூட்டமைப்பு (பிரைவேட்) லிமிடெட்	4,497.80	23.12.2021	22.06.2023	0.00	578.43	5.20	861.56
பொதி 1O (Ch. 11+230 கி.மீ முதல் Ch. 11+480 கி.மீ): 0.25 கி.மீ ஒப்பந்த இல. RDA/CEP3/PACK1O	RR கன்ஸ்ட்ரக்ஷன் (பிரைவேட்) லிமிடெட்	851.90	03.01.2022	02.01.2023	0.00	0.0	1.39	114.07
பொதி 1P (Ch. 11+480 கி.மீ முதல் Ch. 12+000 கி.மீ); 0.52 கி.மீ	டெக் குரூப் (பிரைவேட்) லிமிடெட் விற்கவும்	508.83	23.11.2021	22.11.2022	4.00	65.16	43.52	247.98

பொதி	ஒப்பந்தத்தாரரின் பெயர்	டெக் (ரூ.மில்.)	ஆரம்பிக்கப்பட்ட திகதி	நிறைவு செய்ய எதிர்கார்க்கும் திகதி	2021 யின் இறுதியில் பௌதீக முன்னேற்றம் (%)	2021 இன் இறுதிவரை திரட்டிய செலவீனம் (ரூ.மில்)	2022 இன் இறுதியில் பௌதீக முன்னேற்றம் (%)	2022 இன் இறுதி வரை திரட்டிய செலவீனம் (ரூ.மில்)
ஒப்பந்த இல. RDA/CEP3/PACK1P								
பொதி 1Q (Ch. 12+000 கி.மீ முதல் Ch. 12+890 கி.மீ): 0.89 கி.மீ ஒப்பந்த இல. RDA/CEP3/PACK1Q	மாகா இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட்	2,757.99	27.12.2021	26.06.2023	0.00	355.87	5.00	496.78

(iv) மத்திய கடுகதிப்பாதை செயற்திட்டம் - 4

குருநாகலில் இருந்து தம்புள்ளை வரையிலான மத்திய கடுகதிப்பாதை செயற்திட்டம் பிரிவு IV ஆனது வடமேல் மாகாணத்திலிருந்து (குருநாகல் மாவட்டம்) ஊடாக சுமார் 58.6 கி.மீ ஊடறுத்துச் செல்கின்றது 2022 ஆம் ஆண்டின் போது கடுகதிப்பாதையின் இப்பிரிவிற்கான காணி சுவீகரிப்ப செயன்முறையானது நடைபெறுகின்றது இக்கடுகதிப்பாதைக்காக 475 ஹெக்டேயர் காணித்துண்டுகள் காணி சுவீகரிப்புச் சட்டத்தின் பிரிவு 38 (அ) இன் கீழ் 2016/2017/2018 ஆம் ஆண்டுகளில் இடைக்கால உத்தரவின் ஊடாக பெறப்பட்டது. சிவில் வேலைகள் மற்றும் ஆலோசனை வேலைகளுக்கான ஒப்பந்தத்தாரர்களை தெரிவு செய்யும் கொள்முதல் செயன்முறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் நிதியிடல் முகவரினால் நிதியினை தயார்படுத்துவதில் உள்ள தோல்வி காரணமாக ஒப்பந்தத்தினை வழங்கும் வேலைகள் இன்னும் பூரணப்படுத்தப்படவில்லை.



வரைபடம் 2-5: மத்திய கடுகதிப்பாதை செயற்திட்டம் - 4

2022 ஆம் ஆண்டின் போதான செயற்பாடுகளின் வளர்ச்சி

- காணி சுவீகரிப்பு வேலைகள்
  2022 ஆம் ஆண்டின் இறுதியில் காணி சுவீகரிப்பு வேலைகளின் வளர்ச்சி 73.22% ஆகும். (LARC இனால் முன்னெடுக்கப்பட்டது. LARC இனால் கூட்டங்கள் மற்றும் இழப்பீடுக் கொடுப்பனவு வேலைகள்)
- சிவில் வேலைகள் மற்றும் ஆலோசனை வேலைகள் - ஆரம்பிக்கப்படவில்லை

இவ் வருடத்தின் போது முன்னேற்றத்திற்கான தடைகள்

விசாரணைகளை முன்னெடுப்பதில் உள்ள வரையறைகள், LARC மற்றும் சுபர் LARC கூட்டங்களில் நாட்டில் தற்போது உள்ள பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகளில் இழப்பீடுகள் வழங்கப்பட முடியாமல் உள்ளது. அரசாங்கமானது செயற்றிட்ட முகாமைத்துவ அலகின் செயற்திட்ட ஊழியர்களின் சேவையினை இடைநிறுத்த தீர்மானித்தது. தற்போது நடைபெறுகின்ற செயற்பாடுகளை வீ.அ.அ இன் ஊழியர்களைக் கொண்டே செயற்படுத்தி செயற்திட்டத்தின் செலவினை குறைக்க தீர்மானித்தது.

அட்டவணை 2-62: மத்திய கடுகதிப்பாதை செயற்திட்டம் பிரிவு – 4 குருநாகலையில் இருந்து தம்புள்ள வரையான வளர்ச்சியின் சுருக்கம்.

விபரணம்/செயற்பாடு	டெக் (ரூ.மில்.)	ஆரம்பிக்கப்பட்ட திகதி	நிறைவு செய்ய எதிர்பார்க்கப் படும் திகதி	2021 யின் இறுதியில் பௌதீக முன்னேற்றம்	2021 இன் இறுதிவரை திரட்டிய செலவீனம் (ரூ.மில்)	2022 இன் இறுதியில் பௌதீக முன்னேற்றம்	2022 இன் இறுதி வரை திரட்டிய செலவீனம் (ரூ.மில்)
காணி சுவீகரிப்பு	10,000	ஜூன் 2016	டிசம்பர்.2022	70.70%	471.57	73.22%	480.27
சிவில் வேலை (நிர்மாணம்)	166,557	ஒப்பந்தம் வழங்கப்படவில்லை	இன்னும் தீர்மானிக்கப்படவில்லை	-	-	-	-
ஆலோசனை	2500	ஒப்பந்தம் வழங்கப்படவில்லை	இன்னும் தீர்மானிக்கப்படவில்லை				
PMU இன் செலவீனம்	774	ஜூன் 2016	செயற்திட்டம் மூடப்படும் வரை		460.72		543.52

2.3.2 துறைமுக அணுகுகை மேலுயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம்

இச் செயற்திட்டமானது கீழ் உள்ள செயற்திட்டக் கூறுகளை உள்ளடக்கி உள்ளது.;

- மேலுயர்த்தப்பட்ட துறைமுக அணுகுகை நெடுஞ்சாலை நிர்மாணம்
- இலங்கை துறைமுக அதிகாரசபைக்கான கடல் வழி வசதிகள் மையத்தின் நிர்மாணம்.
- பல் ஒழுங்கை இலவச ஓட்ட இலத்திரனியல் பண வசூலிப்பு முறைமையின் நிறுவல் (MLFF-ETC)

நிதியிடல் விபரங்கள்:

நிதியிடல் முகவர் : ஆசிய அபிவிருத்தி வங்கி
கடன் இல : 3716 - SRI
மொத்த செலவீனம் : அ.டொ. 360.2 மில்லியன்
ஆ.அ.வ யிடமிருந்து : அ.டொ. 300 மில்லியன்
இலங்கை அரசிடமிருந்து: அ.டொ. 60.2 மில்லியன்
கடன் விளைவுத் திகதி : 17வது ஜனவரி 2019
கடன் காலாவதித் திகதி : 30வது ஜூன் 2025

(i) துறைமுக அணுகுகை மேலுயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை நிர்மானம்.

கொழும்பு நகரத்தின் வீதி வலையமைப்பினை வினைத்திறனான அடிப்படையில் முன்னேற்றுவதற்கு துறைமுக அணுகுகை மேலுயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை திட்டமிடப்பட்டுள்ளது. இக் கடுகதிப்பாதையானது துறைமுக நகரம் மற்றும் காலி முகத்திடலினை புதிய களனிப்பால செயற்திட்டத்தின் இங்குருகொட இடைமாறல் ஊடாக இணைக்கின்றது.

அட்டவணை 2-63: துறைமுக அணுகுகை மேலுயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை நிர்மாணத்தின் அடிப்படை சிவில் வேலைகள் பற்றிய விபரங்கள்.

பரிமாணம்	துறைமுக அணுகல் மேலுயர்த்தப்பட்ட நெடுஞ்சாலையின் (5.27 கி.மீ) நிர்மாணம் மற்றும் துறைமுக அணுகுகை புனர்நிர்மாண் செய்தல்		
சிவில் வேலைகள் - அடிப்படைத் தகவல்கள்			
ஒப்பந்த இல	RDA/ADB/OCB/PAEH/CW/01		
தொழில் வழங்குனர்	நெடுஞ்சாலைகள் அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை		
ஒப்பந்ததாரர்	சீனாவின் சிவில் பொறியியல் நிர்மாணக் கூட்டுத்தாபனம், ஹுபை மாகாண வீதி மற்றும் பால தனியார் நிறு மற்றும் ஹுனான் மாகாண தொடர்பாடல் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு நிறுவனம். **(CCECC-HPRB-HNRBI JV)**		
பொறியியலாளர்	சேலாடிய அசோசியேட்ஸ் உடன் இணைந்து ரோங்டன் சர்வதேச மற்றும் ஆபு ஆலோசகர்கள் **(SRM JV)**		
கடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது	17 தை 2019		
ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது	10 ஐப்பசி 2019		
ஆரம்பத்திகதி	27 ஐப்பசி 2019		
உண்மையான பூரணப்படுத்தற் திகதி	25 ஐப்பசி 2022		
மீளமைக்கப்பட்ட பூரணப்படுத்தற் திகதி	30 வைகாசி 2023		
உண்மையான ஒப்பந்தத் தொகை	LKR 28,002,225,693.29		
இடைமாறல்கள்	ரேம்ப் 1	உள் நுழைவு – அலுத் மாவத்தை வெளியேறல் – அலுத் மாவத்தை	ஒப்பந்தத்தில் சேர்க்கப்படவில்லை
	ரேம்ப் 2	உள் நுழைவு – விமலதர்ம சுற்றுவட்டம் வெளியேறல் – அப்துல் காதர் வீதி	

	ரேம்ப் 3	உள் நுழைவு – துறைமுகம் வெளியேறல் – துறைமுகம்
	ரேம்ப் 4	உள் நுழைவு – காலி முகத்திடல்/ துறைமுக நகரம் வெளியேறல் – காலி முகத்திடல்/ துறைமுக நகரம்
ஒழுங்கைகளின் எண்ணிக்கை	4 ஒழுங்கைகள் (3.5 m x 4)	
வன் தோற்ப்பட்டை	உள் – 1.25 m வெளி – 2.5 m	
துறைமுக அணுகுகை வீதி மற்றும் துறைமுக உள் வீதிகளின் நிர்மாண நீளம்	4.14 கி.மீ	

செயற்பாடுகளின் முக்கியத்துவம் :

பாரிய செயற்பாடுகள்	**குவியல்**	**குவியல் தலைகள்**	**துண்டுகள்**	**சமூக கற்கை**	**துண்டிப்பு வார்ப்பு**
மொத்த அளவு	502	198	198	125	3279



வரைபடம் 2-6: மேலுயர்த்தப்பட்ட துறைமுக அணுகுகை நெடுஞ்சாலை

(ii) கடல் வழி வசதிகள் மையத்தின் நிர்மாணம்.

தற்போது இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்கள் பல்வேறு இடங்களில் தங்கியிருப்பதுடன் இந் நிலைமையே குறைவான உற்பத்தி திறனுக்கும் காரணமாக உள்ளது.துறைமுக நிலத்தில் கணிசமான பரப்பு நிலம் இந்த நோக்கத்திற்காகவே பயன்படுத்தப்படுகின்றது. மேலும், பல்வேறு கப்பல் நிறுவனங்கள் மற்றும் ஏனைய துறைமுகத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் கொழும்பு துறைமுக இடத்துக்கு அருகாமையில் தமது அலுவலகங்களை தற்காலிக இடங்களில் பராமரித்து வருகின்றனர்.

லோட்டஸ் வீதியில் இம் மும்மொழியப்பட்டுள்ள கடல் வழிவசதிகள் மையமானது கொழும்பு 1 யில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமான நிலத்தில் 17 மாடிகளைக் கொண்ட கட்டிடமாக கட்டப்பட்டது. இம் மையமானது இலங்கை துறைமுக சபையினால் வழங்கப்படும் துறைமுக சேவைகளை வழங்கும் போதான வினைதிறனை முன்னேற்றுவதற்காக பங்களிப்பு செய்வதொடு அதிகாரசபையின் ஊழியர்களும் ஒரே இடத்தில் வேலை செய்வதற்கும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்கள் ஒரே இடத்தில் இயங்குவதற்கும் உதவி செய்யும். இதனூடாக கடதாசி விரயம் இன்றிய நிகழ்நிலை அலுவலகமாக முறைமையாக முன்னேற்றமுடைய தொழில்நுட்பம் பயனாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

துறைமுக அணுகுகை மேலுயர்த்தப்பட்ட நெடுஞ்சாலையின் நிர்மாணமானது துறைமுக வளாகத்தினூடாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் முன்னெடுக்கப்படும். முன்மொழியப்பட்டுள்ள கடல் வழி வசதிகள் மையமானது ஆசியா அபிவிருத்தி வங்கியின் நிதிப்படுத்தலின் ஊடாக இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையும் இணைந்து செயற்படுத்தியது.

அட்டவணை 2-64: கடல் வழி வவசதிகள் மையத்தின் சிவில் வேலைகளின் அடிப்படை விபரங்கள்

வேலையின் பரப்பு	
கட்டம் I - துணை கட்டமைப்பின் நிர்மாணம்	
துளையில் குவித்தல் [171 எண்]:	வெவ்வேறு ஒப்பந்தம் மூலம் நிறைவு செய்யப்பட்டது.
கட்டம் II- மேற் கட்டமைப்பின் நிர்மாணம்	
வடிவமைப்பு மற்றும் கட்டுமான ஒப்பந்தம்:	17 மாடி கட்டிடம்
மொத்த நிலப் பிரதேசம்:	35,000 சதுர மீட்டர்
சிவில் வேலைகள் - அடிப்படை தகவல்கள்	
ஒப்பந்த இல	RDA/ADB/OCB/PAEH/CW/02
வேலை தருனர்	நெடுஞ்சாலைகள் அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை
ஒப்பந்ததாரர்	சீனாவின் சிவில் பொறியியல் கட்டுமான கூட்டுத்தாபனம் மற்றும் சீனாவின் புகையிரத பாதை கட்டுமான குழு (தனி) நிறுவனத்தின் கூட்டு முயற்சி (CCECC – CRCG JV)
பொறியியலாளர்	ஷெலாடியா அசோசியேட்ஸ் மற்றும் ரங்டன் சர்வதேச மற்றும் எம்ஜி ஆலோசகர்களின் கூட்டு முயற்சி **(SRM JV)**
கடன் ஒப்பந்தம் கைச்சாடத்திடப்பட்ட திகதி	17 ஜனவரி 2019
ஏற்புக் கடிதம் வழங்கப்பட்ட திகதி	23 ஜூன் 2021
ஆரம்பத்திகதி	07 ஜூலை 2021
பூரணப்படுத்தப்பட்ட திததி	06 ஜூலை 2023
ஒப்பந்த தொகை	Rs. 4,999,431,388.47

(iii) பல் ஒழுங்கை இலவச ஓட்ட இலத்திரனியல் வண வசூலிப்பு முறைமை (MLFF- ETC)

இச் செயற்றிட்டத்தின் கீழ் பல் ஒழுங்கை இலவச ஓட்ட இலத்திரனியல் பண வசூலிப்பு முறைமையினை அதிவே கடுகதிப்பாதை வலைபின்னலுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இச் செயற்றிட்டத்தின் சராசரியாக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா. 34 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். செயற்திட்டமானது 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு 2024 ஆம் ஆண்டில் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது. போதிய நிதியிடல் இல்லாமையால் ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டுள்ளது..

எதிர்பார்க்கப்படும் நன்மைகள்

- அதிவேகப்பாதை பயனர் பயனாளர்கள் முற்கொடுப்பனவு கணக்கொன்றின் ஊடாக கொடுப்பனவுகளை செலுத்தக்கூடியதாக இருக்கும்.
- தற்போது பணவசூலிப்பு சாவடிகளில் உள்ள தாமதம் இம் மும்மொழியப்பட்டுள்ள புதிய முறைமையின் ஊடாக குறைவடையும். என்பதோடு இதனூடாக சூழல் நேய போக்குவரத்து முறைமை ஒன்றை காபன் வெளியீடு குறைவாகவும் ஆகக்குறைந்த எரிபொருள் நுகர்வினையும் கொண்ட ஓர் நிலைமைய உருவாக்க முடியும்.
- இலத்திரனியல் கணக்கிலிருந்து கொடுப்பனவு கழிக்கப்படுவதோடு, பயனாளர்கள் தமது கணக்கின் மீதியினையும் பார்வையிடலாம் என்பதோடு கணக்கிற்கு எந்த நேரத்திலும் பண வைப்பினை மேற்கொள்ளலாம்.
- இப் புதிய முறைமையை கொண்டு ஒரு மணித்தியாலத்திற்கு 1200 வாகனங்களை இயக்குவதற்கு சாத்தியப்படும் என்பதுடன் தற்போதுள்ள முறையில் மணித்தியாலத்திற்கு 350 வாகனங்களையே இயக்கலாம்.. புதிய முறையினூடாக பண வசூலிப்பு சாவடிகளில் உள்ள நெரிசலின் அளவு குறைவடையும்.

துறைமுக வளாகததிற்கு வெளியில் ஓர் இடத்தில் அலுவலகம் ஒன்றினை வாடகைக்கு எடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன

தடைகள்	எடுக்கப்பட்ட / முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்
• முன்வார்ப்பு பிரிவு வார்த்தல், சமுகக் கற்கைநிர்மானம் ஆகியவற்றில் திட்டத்திற்கு ஏற்றவாறான தாமதம்.	• வளர்ச்சியின் அளவினை அதிகரிப்பதற்காக மேலதிக முன்வார்ப்பு பிரிவு மற்றும் சமுகக் கற்கைகள் பெறப்பட்டன.
• திட்டத்தின் அடிப்படையில் வேலைகளை ஆரம்பிப்பதில் உள்ள தாமதம்	• மேலதிகமாக உத்தர இயந்திர ஆரம்பிப்பு ஒன்று தளத்திற்கு பெறப்பட்டுள்ளது.
• பிரிவு 3+600 முதல் 3+860 வரையான SLPA இனால் கையளிப்பதில் உள்ள தாமதம் (தற்போது உள்ள வேலைத்தள பிரதேசம்)	• 2023 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம் இறுதியில் இப்பிரிவானது SLPA இற்கு கையளிக்கப்பட்டது.
• SLPA கட்டிடத்தினை இடமாற்றம் செய்வதில் உள்ள தாமதம	• துறைமுக வளாகததிற்கு வெளியில் ஓர் இடத்தில் அலுவலகம் ஒன்றினை வாடகைக்கு எடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன

அட்டவணை 2-65: துறைமுக அணுகல் மேலுயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை செயற்திட்டத்தின் வளர்ச்சியின் சுருக்கம்.

விபரம்	மொத்த மதிப்பிடப்பட்ட செலவு (ரூ.மில்லியன்)	தொடங்கப்பட்ட திகதி	முடிக்க எதிர்பார்க்கப்படும் திகதி	2021 இன் இறுதி வரையிலான வளர்ச்சி வீதம் (%)	2021 இன் இறுதி வரையிலான செலவீனம் (ரூ. மில்லியன்)	2022 இன் இறுதியில் வளர்ச்சி வீதம் (%)	2022 ஆம் ஆண்டின் செலவுகள் (ரூ. மில்லியன்)
துறைமுக அணுகல் மேலுயர்த்தப்பட்ட நெடுஞ்சாலையின் கட்டுமானம்	28,002	செப்-19	மே-23	23%	7,537.27	54.3	22,890.98
கடல்சார் வசதி மையத்தின் நிர்மாணம் (கட்டிடம்)	4,999	ஜூலை-21	மார்ச்-23	6%	928.66	20.2	1,919.99
கடல்சார் வசதி மையத்திற்கான குவித்தல் வேலைகள் (பைலிங்)	624	ஜூன்-19	ஏப்-20	100%	414.87	100.0	430.47
இலத்திரனியல் பண வசூலிப்பு முறைமைக்கான ஒப்பந்ததாரர்	4,480	டிசம்பர்-22	டிசம்பர்-23	-	-	-	-
PAEH இன் நிர்மாணத்திற்கான மேற்பார்வை	1,290	2019-அக்	செப்-25	N/A	549.92	93%	1,202.72
இலத்திரனியல் பண வசூலிப்பு முறைமைக்கான முகாமைக்கான ஆலோசகர்	552	அக்-21	மார்ச்-23	N/A	27.27	26.80%	148.38
தனிப்பட்ட ஆலோசனை-கட்டமைப்பு ஆலோசனை	65	டிசம்பர்-20	டிசம்பர்-22	N/A	-	8.30%	5.43
தனிப்பட்ட ஆலோசனை - ஒப்பந்தப் பொறியாளர்	20	டிசம்பர்-20	டிசம்பர்-24	N/A	-	23.20%	4.65
துறைமுக கட்டிடங்களின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம்	141	ஜூன்-19	ஜூலை-25	N/A	90.05	71%	100.11

2.3.3 புதிய களணி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையிலான மேலுயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை

கொழும்பு மற்றும் அதனை சூழ உள்ள பிரதேசங்களில் உச்ச நேரங்களின் போது கொழும்பு மாநகர தற்போதுள்ள நிலையில் காணப்படும் போக்குவரத்து நெரிசலின் காரணமாக கொழும்பு மாநகர பிரதேசத்தில் அதன் கொள்ளளவை விட அதிகரித்த அளவிலேயே போக்குவரத்து நெருக்கடி காணப்படுகின்றது தற்போது தெற்கு கடுகதிப்பாதை, கொழும்பு - கட்டுநாயக்க கடுகதிப்பாதை மற்றும் வெளிச் சுற்று வட்ட கடுகதிப்பாதை ஆகியன இயக்கத்தில் உள்ளன வெளிச்சுற்றுவட்ட கடுகதிப்பாதை கொழும்பு நகரப் பிரதேசத்தில் உள்ள போக்குவரத்து நெரிசலின் ஊடாக செல்வதில்லை. எவ்வாறாயினும் ஒவ்வொரு நாளும் அதிக அளவில் வாகனங்கள் கொழும்பு நகரத்திற்குள் வருகின்றன.

தற்போது உள்ள வீதிகளை விரிவுபடுத்தும் வழிமுறையானது பௌதீக ரீதியாக அதிக அளவில் நில சுவீகரப்பு மற்றும் மீளக் குடியமர்த்தல் தேவைப்பாடுகளை வேண்டுவதனால் மிகவும் கடினமான ஒன்றாக காணப்படுகிறது. இதனால், வீதியின் கொள்ளளவினை அதிகரிப்பதற்கான வழிமுறையாக மேலுயர்த்தப்பட்ட வீதிகளினை அபிவிருத்தி செய்வதற்காக தந்திரோபாயமாக இடஅமைவுகளை தொடர்பு படுத்தல் எனும் வழிமுறை இனங்காணப்பட்டுள்ளதுடன் இதற்காக மிகக் குறைந்த அளவினான காணி சுவீகரிப்பே தேவைப்படுத்தப்படுகின்றது.

மேலும் தற்போதுள்ள கடுகதிப்பாதை வலைபின்னலை இணைப்பதன் ஊடாகவே பொருளாதார, நிர்வாக மற்றும் போக்குவரத்து மையமாக உள்ள கொழும்பு பிரதேசத்தின் ஒட்டுமொத்த போக்குவரத்து வினைதிறனை அதிகரிப்பதானது அவசியமான ஒன்றாக உள்ளது. இதனால் புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையிலான மேலுயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை செயற்றிட்டம் முன்மொழியப்பட்டுள்ளதோடு இது வடிவமைப்பு கட்டிடம் - நிதி - இயக்கம்-பராமரிப்பு மற்றும் பரிமாற்றம் (DBFOM) அடிப்படையில் வழங்கப்பட்டது. இச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அமைச்சரவை அமைச்சர்களின் அங்கீகாரம் 10.03.2016 ஆம் திகதியன்று வழங்கப்பட்டது.

இச் செயற்திட்டமானது அரசாங்கத்தின் ‘‘நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு, தேசிய கொள்கையின் கீழ் நாட்டில் அதிக முன்னுரிமை வழங்கப்படும் செயற்திட்டமாக இனங்காணப்பட்டுள்ளது.

பிரதான சுவடு மற்றும் அனுகல் வீதிகளின் நீளம் முறையே 16.4 கி.மீ மற்றும் 15.3 கி.மீ ஆகியன என மதிப்பிடப்பட்டுள்ளது. இச் செயற்றிட்டமானது ஒருகொடவத்தையில் ஆரம்பிப்பதோடு புதிய களணிப்பாலத்தினையும் இணைக்கின்றது. பேஸ்லைன் வீதிக்கான அணுகல் தெமட்டகொடையில் முன்மொழியப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட சுவடானது இராஜகிரிய, கொஸ்வத்தை மற்றும் கோஹன்தர இடைமாறல்களின் ஊடாக செல்வதோடு அதுருகிரியவில் வெளிச்சுற்று வட்ட நெடுஞ்சாலையினையும் இணைக்கிறது (கீழ் உள்ள வரைபடத்தைப் பார்க்க) புதிய களணிப் பாலத்திலிருந்து அதுருகிரிய வரையான மேலுயர்த்தப்பட்ட நெடுஞ்சாலையானது பெரும்பாலும் தெமட்டகொடை கால்வாய் மற்றும் கைவிடப்பட்ட வயல் வயல் பிரதேசங்களின் ஊடாகவே செல்கின்றது. இதனால் காணி சுவீகரிப்பிற்கான தேவைப்பாடானது மிகவும் குறைவாகவே உள்ளது. இம் மேலுயர்த்தப்பிட்ட நெடுஞ்சாலையானது கட்டுப்படுத்தப்பட்ட அணுகலினை உடைய 4 ஒழுங்கை வீதியாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் வடிவமைக்கப்பட்ட வேகம் 80 கி.மீ/மணி ஆகும். இச் செயற்திட்டத்திற்கான மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடு 920.5 பில்லியன் அ.டொ ஆவதோடு GOSL இதற்காக ரூ.89,087.04 பில்லியன்களை ஒதுக்கியுள்ளது. என்பதோடு இதற்கான சலுகை காலப்பிரிவு 18 வருடங்களாகும். இதில் 3 வருட கட்டுமான காலப்பிரிவும் உள்ளடங்குகின்றது.

செயற்திட்டத்தின் நன்மைகள்

- வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலை மற்றும் ஏனைய கடுகதிப்பாதை வலையமைப்பிற்கான இலகு அணுகலினை இது வழங்குகின்றது.
- துறைமுகம் மற்றும் கொழும்பின் ஏனைய பிரதேசங்களுக்கான பொருட்போக்குவரத்தினால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் குறைவடையும்.
- கொள்களன் வண்டிகளால் நெடுஞ்சாலைகள் மற்றும் கொழும்பினை அண்டியுள்ள பிரதேசங்களில் இருந்து ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கலாம்
- கொழும்பு மாநகரப் பிரதேசத்தில் இருந்து மாலபே போக்குவரத்து மையம் மற்றும் பத்தரமுல்லை (கொஸ்வத்தை) நிர்வாக மையம் ஆகியவற்றினை இலகுவாக சென்று அடையலாம்.


PMU இன் பொறுப்புக்கள்

முன்கட்டுமான நிலை

- சமூக, சூழலியல் மற்றும் பொருளாதார இயலுமைகளுடன் கூடிய இசைவாக்கம் கொண்டதா என்பதனை பார்ப்பதற்கான சாத்தியக் கூறு கற்கைகள் முன்னெடுக்கப்படல்.
- இச் செயற்றிட்டத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேச வாழ் மக்களுக்கு விழிப்புணர் நிகழ்ச்சிகளை முன்னெடுப்பதினூடாக அடிப்படை அளவையியலுக்கான ஒப்புதலை பெற்றுக் கொள்ளல்.
- செயற்றிட்டம் தொடர்பான விழிப்புணர்வூட்டல் சந்திப்புக்களை பொதுமக்களுக்காக ஏற்பாடு செய்தல்.
- தேவைப்படுத்தப்படும் அனுமதிகளை உரிய அதிகாரசபைகளிடம் இருந்து பெற்றுக்கொள்ளல் மற்றும் அவர்களுடன் ஒருங்கிணைந்து செல்லல்.
- மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து (CEA) சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையிற்கு (ETA) தேவையான அனுமதிகளை பெற்றுக் கொள்ளல்.
- அடிப்படை அளவையியல் வேலைகள்
- செயற்றிட்டத்திற்கான மீளக் குடியமர்த்தல் செயற்திட்டம் (RAP).
- பாதை உரிமையிற்கான (ROW) காணி சுவீகரிப்பு மற்றும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள்
- ஆலோசனை வேலைகளுடன் தொடர்புடைய கொள்முதல் செயற்பாடுகள் மற்றும் முதலீட்டாளர்களுக்கான தெரிவு EOI இற்கான தயார்படுத்தல், தொழிநுட்ப அட்டவணைகள், REP மற்றும் கொள்முதல் கற்கைக்கான குழு / CANC ஆகியவற்றின் தொழிற்பாட்டுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட இலக்கின் படி மற்றும் கொள்முதல் திட்டத்தின் படி நேரத்துடன் இணங்கி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றதா என்பதனைக் கண்காணித்தல்.
- பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீள அமைவுக்காக வழங்கப்பட்ட தளங்களின் மீளக்குடியமர்த்தலின் அபிவிருத்தி.

கட்டுமான நிலை

- ROW இற்கான ஒதுக்கப்படாத மற்றும் வெற்றாக உள்ள உடைமையினை வழங்குதல்.
- செயற்றிட்ட செயற்படுத்தலின் போது மற்றும் அதற்கு முன்னைய நிலைகளில் தனியார் பங்குதாரர்களுக்கு சலுகை ஒப்பந்த நிபந்தனைகளின் அடிப்படையில் உரிய ஆதரவினை வழங்குதல்.
- சலுகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொடுப்பனவின் கிடைப்புத் தன்மையினை ஏற்படுத்தல்.
- உரிய முகவர்களிடம் இருந்து செயற்றிட்ட பதிவுகளை சேகரித்தல் மற்றும் இதனை இணைந்த செயற்றிட்ட தரவு வங்கி ஒன்றினை தாபிப்பதன் ஊடாக வழமையான புதுப்பித்தல் தரவுகளை பதிப்பதன் ஊடாக அது அடிப்படை தகவல் முறைமையாகவும் கண்காணிப்பு கருவியாகவும் செயற்படும்.
- செயற்றிட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் செயற்றிறனை கண்காணிப்பதன் ஊடாக அவர்களின் ஒப்பந்த கடப்பாட்டின் நிறைவேற்றத்தினை உறுதி செய்தல்.
- தனிப்பட்ட ஒப்பந்தங்களின் காலப்பிரிவு ரீதியான வளர்ச்சியினை மீளாய்வு செய்வதன் ஊடாக இழப்புக்கள், பிரச்சினைகள் மற்றும் தீர்வுகளை உயர் அதிகாரசபைகளுடன் கலந்தாலோசிப்பதன் ஊடாக இனங்காணல்.



வரைபடம் 2-7: செயற்திட்ட இட அமைவின் வரைபடம்

அட்டவணை 2-66: ஒட்டுமொத்த திட்ட முன்னேற்றம்

விபரணம்	முன்னேற்றம்	
சாத்தியக்கூறு ஆய்வு (NKB-அத்துருகிரிய)	நிறைவு	
EIA மற்றும் RAP NKB முதல் ராஜகிரிய பிரிவுக்கான அறிக்கைகள்	நிறைவு	
காணி சுவீகரிப்பு (NKB-அத்துருகிரிய)	NKB **யிலிருந்து இராஜகிரிய பிரிவு:** பிரிவு:15 அரசிதழ்கள் (பிரிவு 38) வெளியிடப்பட்டுள்ளன :15 எண்கள் PP ஆய்வுகள் முடிக்கப்பட்டுள்ளன. மதிப்பீட்டுத் துறையின் மதிப்பீட்டிற்கான கோரிக்கை, 1150 இடங்களுக்கு செய்யப்பட்டது. பிரிவு 10(1) அறிவிப்பு வெளியிடப்பட்டது-1223 பெறப்பட்ட மதிப்பீட்டின் எண்ணிக்கை -871	**ராஜகிரிய முதல் அதுருகிரிய பிரிவு வரை:** COA இன் வழக்கு எண் 546.'.2021 மற்றும் 545.'.2021 ஆகியவற்றின் தடை உத்தரவின்படி, மேலும் கையகப்படுத்தும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. ஐந்து முற்பணம் தடங்கள் பெறப்பட்டன. பிரிவு 38(a) ஒரு முற்பணத்தடயங்களுக்கு வெளியிடப்பட்டது. பிரிவு 38(a) 4 அட்வான்ஸ் தடங்களுக்கு வெளியிடப்படும்.

விபரணம்	முன்னேற்றம்	
பயன்பாட்டு மாற்றுதல் (மேடை- அத்துருகிரிய)	**ராஜகிரிய பிரிவுக்கு NKB:** களனிதிஸ்ஸ முதல் கொலன்னாவை வரை 132KV பாதையையும், கொலன்னாவை முதல் பன்னிப்பிட்டிய வரையிலான 132KV பாதையை உயர்த்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. களனிதிஸ்ஸ முதல் கொலன்னாவ வரையிலான பாதைக்கு ரூபா 130 மில்லியன் செலுத்தப்பட்டது. இரண்டாவது தவணையாக 380 மில்லியன் செலுத்த வேண்டும். கொலன்னாவையை உயர்த்துவதற்கு ரூபா 280 மில்லியன் வின் முதல் தவணை - பன்னிபிட்டிய 132KV லைன் உடனடியாக செலுத்தப்பட வேண்டும். மீதொட்டமுல்ல- கொலன்னாவையிலிருந்து 33Kv பாதையை மாற்றுவதற்கு ரூபாய் 30 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. துணை மின் நிலையத்தை (நிக்ரோதாராம சாலை) மாற்றுவதற்கான மதிப்பீடு நடந்து வருகிறது. CEB வளாகத்தை மதிப்பாய்வு செய்வதற்காக CEB க்கு வரைவு புரிந்துணர்வு ஒப்பந்தம் அனுப்பப்பட்டது. ரூ.1051 மில்லியன் நிதி கோரப்பட்டது இன்னும் பெறப்படவில்லை.	**ராஜகிரிய முதல் அதுருகிரிய பிரிவு வரை:** ஊழுயு இன் வழக்கு எண் 546/2021 மற்றும் 545/2021 இன் தடை உத்தரவின்படி, பயன்பாட்டு மாற்றும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால், CEB யிடம் இருந்து மதிப்பீடு பெறப்பட்டுள்ளது.
கொள்முதல் வேலை (NKB – அத்துருகிரிய)	06.11.2020 அன்று ஏழு விண்ணப்பதாரர்களுக்கு RFP வழங்கப்பட்டது. நிதி முன்மொழிவு மற்றும் தொழில்நுட்ப முன்மொழிவின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக கணிசமான அளவில் பதிலளிக்கக்கூடிய மற்றும் தொழில்நுட்ப தகுதி பெற்ற ஏலத்தில் உள்ள CHEC உடன் பேச்சுவார்த்தை நடத்த அமைச்சர்கள் அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. திருத்தப்பட்ட சலுகை காலம் (18 ஆண்டுகள்) மற்றும் CANC ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரையாண்டு வருடாந்திர கொடுப்பனவுக்கு அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. சலுகை ஒப்பந்தம் (CA) மற்றும் பணியமர்த்துபவர்களின் தேவையில் (ER) அட்டவணைகள் தொடர்பான பேச்சுவார்த்தைகள் கிட்டத்தட்ட நிறைவடைந்துள்ளன. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் 21/03/2022 தேதியிட்ட கடிதத்திற்கு பதிலளிக்கும் விதமாக, CA ரூ ER இல் உள்ள சிக்கல்களுக்கான சட்ட ஆலோசனைகள் 01/04/2022 அன்று மாண்புமிகு அட்டர்னி ஜெனரல் (AG) துறையிடமிருந்து பெறப்பட்டது. 15/04/2022 தேதியிட்ட AG இன் கடிதத்தின்படி, 21/02/2022 அன்று மேல்முறையீட்டு நீதிமன்றம் (COA) வழங்கிய இடைக்கால நிவாரண உத்தரவு, 6+900km முதல் 16+400km (ராஜகிரிய-அதுருகிரிய) பகுதிக்கு மட்டுமே பொருந்தும். CHEC பிரிவு 1 (NKB முதல் ராஜகிரிய வரை) CA வில் மட்டும் கையெழுத்திட உடன்படவில்லை, மேலும் CA இன் ஷரத்துகளில் மாற்றங்களுக்கான கருத்தியல் முன்மொழிவை சமர்ப்பித்துள்ளது, இந்த புதிய கருத்தாய்வு முன்மொழிவுக்கு திட்டக் குழு (PC) மற்றும் CANC ஆகியவற்றின் பரிந்துரையைப் பெறுமாறு கௌரவ AG அறிவுறுத்தியுள்ளார். இது சம்பந்தமாக ஆகஸ்ட் 2022 இல் பல பிசி கூட்டங்கள் நடத்தப்பட்டன மற்றும் ஆகஸ்ட் 2022 இன்	

விபரணம்	முன்னேற்றம்
	இறுதியில் பிசியின் பரிந்துரைகள் CANC க்கு சமர்ப்பிக்கப்பட்டன. TEC அறிக்கையை விவாதிக்க 27/09/2022 அன்று CANC கூட்டம் நடைபெற்றது.
இராஜகிரிய முதல் அதுருகிரிய வரையிலான பிரிவுக்கான EIA	CEA அனுமதி பெறுவதற்காக நிகழ்நிலை மூலம் ஸ்கோப்பிங் கூட்டம் நடத்தப்பட்டது. 19.07.2021 அன்று வர்த்தமானி எண் 2237/07 இன் கீழ் EPA பகுதியில் கட்டுமான உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலைத் திட்டம் அனுமதிக்கப்பட்ட நடவடிக்கையாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. EIA க்கான ஆலோசனை சேவைகள் களனி பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மற்றும் வரைவு EIA அறிக்கை CEA க்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. EIA அறிக்கை 2022 அக்டோபர் 4 முதல் நவம்பர் 16 வரை பொதுமக்களுக்காக திறக்கப்பட்டுள்ளது. இரண்டாவது TEC கூட்டம் 1 நவம்பர் 2022 அன்று நடைபெற்றது. ஆலோசகர் குழு 2 வது TEC மற்றும் பொதுமக்களின் கருத்துகளை கவனித்தது மற்றும் மதிப்பாய்வுக்காக RDA இன் ESD பிரிவுக்கு அனுப்பப்பட்டது. RAP மற்றும் SIA இன் இறுதி சமர்ப்பிப்பு ஆலோசகரால் செய்யப்படவில்லை.
NKB இராஜகிரிய பகுதிக்கு மீள்குடியேற்றம்	சுமார் 1100 குடும்பங்களை வீட்டுத் திட்டத்தில் குடியமர்த்துவதற்கு UDA உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. 07/06/2021 அன்று பாதிக்கப்பட்ட 1100 வீடுகளை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. இரண்டு வீட்டுத் திட்டங்கள் ஆக்கிரமிக்க தயாராக உள்ளன. அமைச்சரவை அனுமதியின் பிரகாரம் 1வது மற்றும் 2வது குழுக்கள் நிறைவடைந்ததன் பின்னர் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். பாதிக்கப்பட்ட 600 பேருக்கு ரே.ீபிள் குலுக்கல் நடத்துவதற்கான கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வீட்டுத் திட்டங்களுக்கான பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்கான ஏலம் பெறப்பட்டது.
சுயாதீன பொறியாளர் தேர்வு	EOI ஆவணம் 29/09/2021 அன்று வெளியிடப்பட்டது. விண்ணப்பதாரர்களின் குறுகிய பட்டியலுக்கான EOI இன் மதிப்பீடு நடந்து வருகிறது. CACPC இன் உறுப்பினர்கள் கீழ்க்கண்டவை தொடர்பான தங்கள் அறிக்கையை CACPC யின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பித்துள்ளனர் -EOI குறுகிய பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள். CACPC உறுப்பினர்கள் -சுயாதீன பொறியாளர் கொள்முதல் செய்வதற்கான REP ஆவணம் சுயேச்சை பொறியியாளர் நியமனத்திற்கான முத்தரப்பு ஒப்பந்த ஆவணம் ஏஜி துறையிடம் சமர்ப்பிக்கப்பட்டு, ஏஜியிடம் இருந்து கருத்துகள் பெறப்பட்டுள்ளன.

அட்டவணை 2-67: வளர்ச்சியின் சுருக்கம்

விவரணம்	டெக் (ரூ.மில்லியன்)	ஆரம்பிக்கப்பட்ட திகதி	நிறைவுத் திகதி	2021 யின் இறுதியில் பௌதீக முன்னேற்றம்	2021 இறுதி வரையிலான மொத்தச் செலவு (ரூ. மில்லியன்)	2022 யின் இறுதியில் பௌதீக முன்னேற்றம	2022 இன் இறுதியில் ஒட்டுமொத்த செலவு (ரூ. மில்லியன்)
புதிய களனி பாலம் - அதுருகிரியவில் இருந்து உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை	379,589.20	Aug 2017	Jan 2025	12.7%	1041.4	16.45%	1081.6

வருடத்தில் முன்னேற்றத்திற்கு தடை

I. மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட இடைக்கால நிவாரணங்கள்
II. தொற்றுநோய் நிலைமை.
III. சரியான நேரத்தில் முற்பணம் பெறவில்லை.
IV. ஏனைய பங்குதாரர் நிறுவனங்களில் இருந்தான தாமதம்.
V. இறுதி உடன்படிக்கையில் சலுகை உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தைகள் இன்றியே தொடர்பு பட்டன.

2.3.4 விஷேட செயற்திட்ட முகாமைத்துவம்

கீழ் உள்ள இரு செயற்திட்டங்கள் PMU இன் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

- அரபு பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியத்தினால் (KFAED) நிதியிடப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள 25 பாலங்களின் மீள்நிர்மாணம்.
- பேஸ்லைன் வீதியின் தெற்கு விஸ்த்தரிப்பின் நிர்மாணம் (கட்டம் III – நிலை – I)

(i) 25 பாலங்களின் மீள் நிர்மான செயற்திட்டம் (KFAED கடன்)

செயற்த்திட்டமானது மூன்று பொதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொதி 1 யின் நிர்மாண வேலைகள் 2020 ஆம் ஆண்டு பூரணப்படுத்தப்பட்டது. போதி 2 மற்றும் 3 யின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- **ஆலோசனை சேவைகள்**

பொதி 2 யிற்கான ஆலோசனை சேவைகள்

- இவ் ஒப்பந்தமானது J.T.V. Dr. அப்துர் ரஹீம் ஆலோசகர் (NARCO)/ வளங்கள் அபிவிருத்தி ஆலோசகர்கள் (தனி) நிறுவனத்துக்கு லழங்கப்பட்டது.
- ஒப்பந்த உடன்படிக்கையானது 25/09/2018 இல் கைச்சாத்திடபபட்டதுடன் ஆலோசனை சேவைகள் 05/10/2018 இல ஆரமபிக்கப்பட்டது.

பொதி 3 யிற்கான ஆலோசனை சேவைகள்

- இவ் ஒபப்தமானது இணைந்த சேவையாக M/S அப்துல் ஹாதி பொறியியல் ஆலோசகர்கள் (AEC) மற்றும் ஆலோசனை பொறியியலாளர்கள் மற்றும் கூடடுத்தாபனம் (தனி) நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.
- ஒப்பந்த உடன்படிக்கையானது 15/05/2020 யில் கைச்சாத்திடப்பட்டதுடன் ஆலோசனை சேவைகள் 01/07/2020 இல் ஆரம்பிக்கப்பட்டது.
- ஆலோசகர்கள் தமது ஆலோசனை சேவையை 2022 ஆகஸ்ட் 31 ஆம் திகதியில் இருந்து IPC யின் கொடுப்பனவு வழங்கப்படாமையினால் இடை நிறுத்தினர்

- **சிவில் வேலைகள்**

பொதி 2 யிறகான சிவில் வேலைகள்

- ஒப்பந்த உடன்படிக்கையானது வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் ELS கடடுமான (தனி) நிறுவனத்துக்கு இடையில் 2020 மே 15 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டதுடன் சிவில் வேலைகள் 2020 ஜனவரி 23 ஆம் திகதி ஆரம்பித்த வைக்கப்பட்டன.
- சிவில் வேலைகள் 2022 பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி பூரணப்படுத்தப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டது.
- வழங்குனரினால் பிரித்து அளித்தல் தடைப்பட்டதனால SAC யிற்கான கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டன
- ஒப்பந்தத்தாரருக்கு 4 கோரிக்கைகளில் முரண்பாடு காணப்பட்டதுடன் ஒப்பந்தத்தின் ஏற்பாட்டின் படி DAB நியமிக்கப்பட்டது. DAB யின் பூர்வாங்க கூட்டம் 12.12.2022 இல் இடம் பெற்றதுடன் தற்போது அது செயன்முறையில் உள்ளது.
- DNP ஆனது 2023 பெப்ரவரி 2 யில் நிறைவுறுவதுடன் ஒப்பந்தத்தாரரினால் இறுதி பற்றுச் சீட்டுகள் கையளிக்கப்பட வேண்டும்.

பொதி 3 க்கான சிவில் வேலைகள்

- ஒப்பந்த உடன்படிக்கையானது வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் கூட்டு முயற்சியான M/S ஆலோசனை பொறியியலாளர்கள் மற்றும் ஒப்பந்தத்தாரர்கள் (CEC) மற்றும் சன்கன் கட்டுமான (தனி) நிறுவனத்திற்கும் இடையில் 2020 ஜுன் 24 ஆம் திகதி நடைபெற்றது.

- நிர்மாண வேலையானது கொரோனா பெருந்தொற்று, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் நாட்டில் உள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மூலப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட திடீர் அதிகரிப்பு என்பன காரணமாக மந்த நிலையிலேயே கட்டுமான பணிகள் இடம்பெற்றன.

- கடுகஸ்தோட்டை – குரநாகலை – புத்தளம் வீதி (A10) இல் உள்ள பால இல 75/1 மற்றும பால இல 76/1 மற்றும பரந்தன் - கரச்சி – முல்லைதீவு வீதி (A035)இல் உள்ள பால இல 53/1 ஆகிய பாலங்கள் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டது.
- கடன் ஒப்பந்தத்திற்கு அமைவாக ஆலோசனையாளர்களினால் சிவில் வேலை ஒப்பந்த வேலைகள் இடைநிறுததப்பட்டதால் வழங்குனர் இடைநிறுத்தினர்.
- கடன் ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டதால் ஒப்பந்தத்தாரருக்கு ரூபா.68.192 மில்லியன் கொடுப்பனவு வழங்கப்படவில்லை

கடன் சேமிப்பில் குவைத் டினார் 3,149,707.02 (சுமார் 3,700 மில்லியன் ரூபாய் ஆனது குவைத்டினாருக்கு எதிரான மதிப்பிரக்கம் காரணமாக முன்மொழியப்பட்ட நிர்மாணங்களில் பொதி 4,5 மற்றும் 6 ஆகிய பொதிகளின் கீழ் உள்ள மேலதிக பாலங்களை இக் கடன் சேமிப்பினைக் கொண்டு நிர்மாணிக்க தீர்மாணிக்கப்பட்டது.

பொதி 04: கொழும்பு – காலி - ஹம்பாந்தோட்டை – வெல்லவாய வீதியில் (A002) பால இல 52/1 இன் மக்கொனை பாலம்.

- வீ.அ.அ மற்றும் ELS கட்டுமான தனி நிறுவனத்திற்கும் இடையில் ஒப்பந்தம் உடன்படிக்கை 2022 மார்ச்03 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது.
- ஒப்பந்தத்தார் தட்டுப்பாடு காரணமாக நிர்மான வேலைகள் மந்த கதியில் உட்பட்டதுடன் ஒப்பந்தத்தாரர் தமது வேலைகளை 2022 ஜுலை 21 ஆம் திகதி தற்காலிகமாக இடைநிறுத்தினர்

பொதி 05 மற்றும் ஆறு

அட்டவணை 2-68: மேலதிக பாலம் பொதிகளின் நிலைமை

பாலம்	தற்போதைய நிலைமை
ஏகல - கொடதெனியாவ வீதியில் (B111) பாலம் இல. 4/1	நிதி உடன்பாடு பெறப்படவுள்ளது
யாழ்ப்பாணம் சந்தியில் உள்ள பாலம் எண். 1.̓.6 - ஸ்ரீ மகா போதி வீதி (B164)	நிதி உடன்படிக்கைக்காக குறிப்பிட்டுள்ள பாலங்களை உள்ளடக்குவதற்கான வேண்டுகோள் 2022 பெப்ரவரி 17 ஆம் திகதி அனுப்பப்பட்டது. நிதி உடன்படிக்கைக்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றோம்.
கிரிந்திவிட்ட – கணேமுல்ல வீதியில் (B226) பாலம் இல. 1/5	
ஜா-எல - ஏகல - கம்பஹா - யக்கல வீதியில் (A033) பாலம் இல. 13/2	
ஜா-எல - ஏகல - கம்பஹா - யக்கல வீதியில் (A033) பாலம் இல. 10/3	
துனகஹா - நில்பனகொட வீதியில் பாலம் எண். 1/2 (B108)	





அட்டவணை 2-69: 2022 ஆம் ஆண்டில் 25 பாலங்களின் மீள்கட்டுமான செயற்திட்டத்தின் வளர்ச்சி

வீதி / பாலப் பெயர்	பால இல	டெக் ரூ.மில்	தொடங்கப் பட்ட திகதி	நிறைவு செய்யப்பட்ட / முடிக்க எதிர்பார்க்கப் படும் திகதி	2021 இன் இறுதி வரையிலான வளர்ச்சி வீதம் (%)	2021 இன் இறுதி வரையிலான செலவீனம் (ரூ. மில்லியன்)	2022 இன் இறுதியில் வளர்ச்சி வீதம் (%)	2022 ஆம் ஆண்டின் செலவுகள் (ரூ. மில்லியன்)
பொதி 01								
ஆலோசனை சேவைகள்	-	26.00	04.09.2015	நிறுத்தப்பட்டது	-	25.68	-	25.68
கடுவெல-பியாகம வீதி (AB04)	1/1	1,165.84	07.09.2015	19.06.2020	100%	1,184.71	100%	1,230.18
கலகெதர-ஹொரண வீதி (B123)	14/3							
கலகெதர-ஹொரண வீதி (B123)	14/8							
கேகாலை-புலத்கொஹபிடிய-கரவனெல்ல வீதி (A021)	11/4							
வெயங்கொட-ருவன்வெல்ல வீதி (B445)	32/1							
தங்காலை-வீரகெட்டிய வீதி (B410)	2/2							
தங்காலை-வீரகெட்டிய வீதி (B410)	2/3							
ஆம்பிலாந்துறை-வேரமுனை ரவுட் (B018)	10/2							
பொதி 02								
ஆலோசனை சேவைகள்		231.41	2018.10.05	2023.01.22		152.44	-	205.54
கேகாலை-புலத்கொஹபிட்டிய-கரவனெல்ல வீதி (A021)	39/4	1,289.76	23.01.2020	10.02.2022	97.65%	819.76	100%	955.48
கலிகமுவ-ருவன்வெல்ல வீதி (B127)	20/2				100%			
கலிகமுவ-ருவன்வெல்ல வீதி (B128)	16/1				100%			
தெஹியோவிட்ட-தெரணியகல - நூரி வீதி (B093)	2/2				100%			
தெஹியோவிட்ட-தெரணியகல - நூரி வீதி (B093)	5/1				96.84%			
தெஹியோவிட்ட-தெரணியகல - நூரி வீதி (B093)	7/1				100%			

வீதி / பாலப் பெயர்	பால இல	டெக் ரூ.மில்	தொடங்கப் பட்ட திகதி	நிறைவு செய்யப்பட்ட / முடிக்க எதிர்பார்க்கப் படும் திகதி	2021 இன் இறுதி வரையிலான வளர்ச்சி வீதம் (%)	2021 இன் இறுதி வரையிலான செலவீனம் (ரூ. மில்லியன்)	2022 இன் இறுதியில் வளர்ச்சி வீதம் (%)	2022 ஆம் ஆண்டின் செலவுகள் (ரூ. மில்லியன்)
தெஹியோவிட்ட-தெரணியகல - நூரி வீதி (B093)	8/9				100%			
தெஹியோவிட்ட-தெரணியகல - நூரி வீதி (B093)	14/1				100%			
மாவனல்ல-ஹெம்மாதகம-சிங்கபிட்டிய வீதி (B279)	17/1				98.36%			
பொதி 03								
ஆலோசனை சேவைகள்		353.74	2020.07.01	2023.03.01		131.57	-	220.13
கட்டுகஸ்தோட்டை - குருநாகல் - புத்தளம் வீதி (A010)	75/1	2,057.61	20.07.2020	19.01.2022	83%	1,144.25	99%	1,536.02
கட்டுகஸ்தோட்டை - குருநாகல் - புத்தளம் வீதி (A010)	76/1				99.8%		100%	
தோப்பு - மாதம்பே சாலை (B419)	16/1				55.4%		75.4%	
நாவட்குளி - கெரதீவு - மன்னார் வீதி (A032)	78/5				81%		95.8%	
பரந்தன் - கரைச்சி - முல்லைத்தீவு வீதி (A035)	53/1				94%		100%	
கொழும்பு - கண்டி வீதி (A001)	31/3				67%		84.2%	
கொழும்பு- கண்டி வீதி (A001)	32/2				47.5%		83.3%	
பட்டுலுஓயா -உடப்புவ - ஆண்டிமுனை வீதி (B614)	3/5				73%		94.9%	

2.3.5 இதர வெளிநாட்டு உதவி செயற்றிட்டம்

இதர வெளிநாட்டு செயற்திட்டங்கள் (MFAP) வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களினாலேயே இயங்கப்படுகின்றது. இவை பெரும்பாலும் இருபக்க முகவர்களாகவே காணப்படும். 2022 ஆம் ஆண்டில் இப்பிரிவானது சர்வதேச அபிவிருத்திக்கான OPEC நிதியத்தினாலும் (OFID), அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தினாலும் (SFD), ஹங்கேரிய நிதி மற்றும் GOSL நிதியினாலும் இயங்குகின்றது.

(i) அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தினால் நிதி அளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு செயற்திட்டத்தின் கீழ் வீதிகளின் புனர்நிர்மாணம் மற்றும் முன்னேற்றம் (SFD-2)

இச் செயற்திட்டத்தின் கீழ் 6 வீதிப்பிரிவுகளின் 79.3 கி.மீ நீளமுடைய மத்திய கிழக்கு, சபரகமுவை மற்றும் மேல் மாகாணங்களின் வீதிகளின் புனர்நிர்மாணம் மற்றும் முன்னேற்றம் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் முடிவடைந்தது.

2018 ஆம் ஆண்டில் கண்டி - யாழ்ப்பாண வீதியின் 53+740 கி.மீ இல் இருந்து 58+000 கி.மீ வரையான பிரிவின் முன்னேற்ற வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நிதியத்தில் இருந்தான சேமிப்பினை பயன்படுத்தி 2020 ஆம் ஆண்டில் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டன. மேலும் கடன் மிகுதியினைப் பயன்படுத்தி ஒருகொடவத்தை - அம்பத்தளை வீதியில் (B435) உள்ள மூன்று பாலங்களின் (பால இல 4/3, 6/1 மற்றும் 6/2) சரிவுப்படுத்தல் வேலைகள் இடம் பெற்றன. ஒருகொடவத்தை - அம்பத்தளை வீதி முன்னேற்றம் செயற்திட்டத்தின் கீழ் காணி சுவீகரிப்புப் பணிகள் பூரணப்படுத்தப்பட்டதன் காரணமாக இப் பால செயற்திட்டத்திற்காக புதிதாக காணிகள் எதுவும் சுவீகரிக்கப்படவில்லை. பாலத்தின் நிர்மாண வேலைகள் NWS மற்றும் DB யின் தற்போதுள்ள நீர் குழாய்களின் பரம்பலினாலும் தடைப்பட்டது. செயற்திட்டத்தின் முன்னேற்றத்தின் சுருக்கம் அட்டவணை 77 இல் காட்டப்பட்டுள்ளது.

(ii) சர்வதேச அபிவிருத்திக்கான OPEC நிதியத்தினால் நியமிக்கப்பட்ட தேசிய வீதிகளின் முன்னேற்ற செயற்திட்டத்தின் கீழ் வீதிகளின் புனர்நிர்மாணம் மற்றும் முன்னேற்றம் (OFID-1)

இலங்கை அரசானது (GOSL) சர்வதேச அபிவிருத்திக்கான OPEC நிதியத்திடம் இருந்து 39.2 கி.மீ நீளமுடைய 4 வீதிகளின் புனர்நிர்மாணம் மற்றும் பொல்கஹவலை - கேகாலை வீதியில் உள்ள மா ஓயாவிற்கு குறுக்காக உள்ள பால இல.3/2 இன் புனர்நிர்மாணம் ஆகியவற்றிற்காக தேசிய வீதிகளின் முன்னேற்ற செயற்திட்டத்தின் கீழ் 40 மில்லியன் அமரிக்க டொலர்களை பெற்றுக் கொண்டது.

மேற்கூறிய செயற்திட்டத்தினை பூரணப்படுத்திய பின்பு சேமிப்பில் உள்ள நிதியினைக் கொண்டு பேராதெனிய - பதுளை - செங்கலடி வீதியில் (A005) உள்ள பிரிவினை (0.42 கி.மீ இல் இருந்து 3.05 கி.மீ) முன்னேற்ற தீர்மானிக்கப்பட்டது. இது அசல் செயற்திட்டத்தில் இருந்து முன்னேற்றமானது அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதுடன் 2017 ஆம் ஆண்டு இதனுடைய நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது.

மிகுதி உள்ள கடன் நிலுவையைக் கொண்டு ஒருகொடவத்தை - அம்பத்தளை வீதியில் உள்ள இரு பாலங்களின் (பால இல 3/1 மற்றும் 4/2) ஆகியனவற்றின் அகலப்படுத்தல் மற்றும் புனர்நிர்மாணம் செய்வதற்கு பயன்படுத்த நன்கொடையாளர்களின் உடன்பாடு பெறப்பட்டது.

ஒருகொடவத்தை - அம்பத்தளை வீதி (B435) முன்னேற்ற செயற்திட்டத்தின் கீழ் காணி சுவீகரிப்புப் பணிகள் பூரணப்படுத்தப்பட்டதன் காரணமாக இச் செயற்திட்டத்திற்காக புதிதாக காணிகள் எதுவும் சுவீகரிக்கப்படவில்லை. செயற்திட்டத்தின் முன்னேற்றத்தின் சுருக்கம் அட்டவணை 78 இல் காட்டப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் ஏற்கனவே பூரணப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் காணி சுவீகரிப்பிற்கான இழப்பீடாக ரூ.262.57 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.

அட்டவணை 2-70:அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தால் (SFD-2) நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் வளர்ச்சி.

வீதி / பாலப் பெயர்	பால இல	டெக் ரூ.மில்	தொடங்கப்பட்ட திகதி	நிறைவு செய்யப்பட்ட / முடிக்க எதிர்பார்க்கப்படும் திகதி	2021 இன் இறுதி வரையிலான வளர்ச்சி வீதம் (%)	2021 இன் இறுதி வரையிலான செலவீனம் (ரூ. மில்லியன்)	2022 இன் இறுதியில் வளர்ச்சி வீதம் (%)	2022 ஆம் ஆண்டின் செலவுகள் (ரூ. மில்லியன்)
கண்டி – யாழ்ப்பாணம் வீதி (A009) பகுதிக்கான புனர்வாழ்வு மற்றும் மேம்பாடுகள் 53+740 கி.மீ – 58+000கி.மீ இலிருந்து நாவுலா நகரம் உட்பட	4.26 கி.மீ	590.62	04/12/2018	03/08/2020	100%	551.27	100%	-
ஒருகொடவத்தை - அம்பத்தலே வீதியில் (B435) பாலம் 4/3 ஐ மேம்படுத்துதல்	9.5 m	251.1	19/09/2019	08/03/2022	56.4%	205.61	100%	236.89
ஒருகொடவத்தை - அம்பத்தலே வீதியில் (B435) பாலம் 6/1 ஐ மேம்படுத்துதல்	8.5 m	257.26	19/09/2019	08/03/2022	96.4%	176.54	100%	204.49
B435 ஒருகொடவத்தை – அம்பத்தலே வீதியில் (டீ435) பாலம் 6/2 ஐ மேம்படுத்துதல்	12.5 m	317.2	11/10/2019	30/04/2022	52.6%	148.81	82%	184.26

(iii) சர்வதேச அபிவிருத்திக்கான. OPEC நிதியித்தினால் (OFID - 2) நிதியளிக்கப்பட்ட கொழும்பு தேசிய நெடுஞ்சாலைகள் செயற்றிட்டத்தின் கீழ் வீதிகளின் புனர்நிர்மாணம் மற்றும் முன்னேற்றம் (OFID -2)

இலங்கை அரசாங்கமானது. (GOSL) சர்வதேச அபிவிருத்திக்கான OPEC நிதியத்திடம் இருந்து 60 கி.மீ நீளமுள்ள. கொழும்பு மாவட்டத்தின் 13 விதிகளின் புனர்நிர்மாணம் மற்றும் முன்னேற்றம் மற்றும் நாவலை - நாரஹேன்பிட - நுகேகொடை வீதியிலுள்ள பால இல 2/1 இற்கான ‘‘அகலப்படுத்தல் ஆகியவற்றுக்காக தேசிய நெடுஞ்சாலைகள் திட்டத்தின் கீழ் 50 மில்லியன் அமெரிக்க பொலர்களை கடனாகப் பெற்றது.

ஸ்ரீஜயவர்தனபுர வைத்தியசாலைக்கான அணுகல் வீதி, தெமட்டகொடை - வெல்லம்பிடிய வீதி கொலன்னாவை. - யக்பெத்த வீதி, வெலிக்கடை கொஹிலவத்தை வீதி அலுத்மாவத்தை மற்றும் மத்திய வீதியின் (மட்டக்குலி) நாரஹேன்பிட - நாவலை - நுகெகொடை வீதியில் உள்ள பால இல 2/1 மற்றும் கோட்டே போப்பே வீதியின் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் கொட்டாவ தலங்கொட வீதி, ஒருகொடவத்தை - அம்பத்தளை வீதி (நிலை 1 மற்றும் 2) ஆகியவற்றின் அகலப்படுத்தல் மற்றும். முன்னேற்ற வேலைகள் நடைபெறுகின்றன. மேலும், வல்கமை – தியகம வீதி (7.06 கி.மீ பிலியந்தலை - மஹரகம வீதிகளின் (5.38 கி.மீ அகலப்படுத்தல் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

- **கோட்டே போப்பே வீதியின் (B240) முன்னேற்றம். (பிரிவு 16+740 கி.மீ இல் இருந்து 28+004 கி.மீ வரை**

சர்வதேச நிர்மாண கூட்டுத்தாபனம் (தனி) நிறுவனம் 2021 இல் பூரணப்படுத்தியது. காணி சுவீகரிப்பு பணிகள் நடைபெறுகின்றதுடன் ஹோமாகம மற்றும் பாதுக்கை பிரதேச செயலகப்பிரிவுகளிலும் இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. காணி சுவீகரிப்பிற்கான இழப்பீட்டு கொடுப்பனவாக ரூ.1228.7 மில் செலுத்தப்படுகிறது.

- **கொட்டாவை - தலகல வீதியின் (B239) முன்னேற்றம் (1+000 கிமீ முதல் 15+480 கி.மீ வரை பகுதி)**

இச் செயற்றிட்டத்தின் ஒப்பந்ததாரராக M/S சர்வதேச நிர்மாண, கூட்டுத்தாபனம். (தனி) நிறுவனம். காணப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டில் இதன் வேலைகள் அனைத்தும் பூரணப்படுத்தப்பட்டன. காணி சுவீகரிப்பு முன்னேற்றத்தில் உள்ளதுடன் மஹரகமை, கெஸ்பேவை, ஹோமாகமை, பாதுக்க மற்றும் ஹொரணை பிரதேச செயலகப்பிரிவுகள் காணி சுவிகரிப்பில் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. இழப்பீட்டுக் கொடுப்பனவானது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. காணி கவீகரிப்பிற்கான, இழப்பீட்டுக் கொடுப்பனவாக 1448.69 மல்லியன் செலுத்தப்பட்டது. நீதிமன்ற வழக்கொன்றினால் 75 மீ நீளமான காணியின் சுவீகரிப்பினை பூரணப்படுத்த முடியாதுள்ளது.

- **ஒருகொடவத்தை - அம்பத்தளை வீதியின் (B435) முன்னேற்றம் (0+000 கி.மீ) இலிருந்து 7700 கி.மீ வரையான பிரிவு**

இச் செயற்றிட்டத்தின் கீழ் ஒருகொடவத்தை அம்பத்தளை வீதியானது 4 ஒழுங்கை வசதிகளுடன் அகலப்படுத்தப்படவுள்ளது. இவ் வீதியின் முன்னேற்றமானது இரு கட்டங்களில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கட்டம் 1: பரிவு 2+900 கி.மீ – 4+200 கி.மீ மற்றும் 5+440 கி.மீ – 7+700 கி.மீ

கட்டம் 11: பிரிவு 0+000 கி.மீ - 2+900 கி.மீ மற்றும் 4+200 கி.மீ – 5+440 கி.மீ

காணி சுவீகரிப்பு:

கட்டம் 1 யின் கீழ் சுவீகரிக்கப்பட்ட கட்டிடங்கள் அனைத்தும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதுடன் கட்டம் II இன் கீழான கட்டிடங்களை தரைமட்டமாக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. காணி சுவீகரிப்பிற்கான இழப்பீடாக ரூ.5686.24 மில்லியன் செலுத்தப்பட்டது.

சிவில் வேலைகளின் முன்னேற்றம்:

கட்டம் I: ஒப்பந்தத்தாரர்: தொகுதி HCM JV

குறைவான செயற்றிறன் காரணமாக 18.10.2019 இல் ஒப்பந்தத்தாரர் இடைநிறுத்தப்பட்டதுடன் பின்னர் 20.02.2020 இல் இவ் இடைநிறுத்தம் மீளப்பெறப்பட்டது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் கட்டுமான வேலையின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றமானது காணி சுவீகரிப்பின் தாமதம் மற்றும் NWS & DB இன் நீரக்குழாய் பதித்தல் வேலைகளினால் தாமதமடைந்து உள்ளது

கட்டம் II - ஒப்பந்தத்தாரர்: துடாவை சகோதரர்கள்

2022 ஆம் ஆண்டின் இறுதியில் கட்டுமான வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளதுடன் கட்டம் II யின் நிர்மாண வேலைகளில் தற்போது உள்ள பயன்பாடுகள் (CEB/LECO & SLT) ஆகியன தாமதித்தினை ஏற்படுத்துகின்றது.



Ch.7+030-7+060 RHS இல் ABC
படை தயார்படுத்தல்



Ch.7+000 RHS இல்
வடிகாலமைப்புடன் நடைபாதை
நிர்மாணம்



Ch. 2+800 LHS இல் ABC
பதித்தல் வேலை

- **மஹரகம - பிலியந்தலை வீதி (B367) பகுதியை 0+000 கி.மீ இலிருந்து 5+800 கி.மீ வரை முன்னேற்றுதல்.**
  செயற்திட்ட நிதியில் உள்ள வரையறைகள் காரணமாக 1.8 கி.மீ பிரிவிற்கு மாத்திரம் வேலைகளை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டது. பிலியந்தளவில் இருந்து திப்பரிவு வரையே இது முன்னெடுக்கப்படவுள்ளது. ஒப்பந்தத்தினை வழங்குவதற்காக MPC அனுமதியனை எதிர்பார்த்துள்ளோம். காணி சுவீகரிப்பிற்காக இழப்பீட்டுத் தொகையாக ரூ.947.84 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது..

- **வல்கம - தியகம வீதி (B452) பகுதியை 0+000 கி.மீ இலிருந்து 7+060 கி.மீ வரை முன்னேற்றுதல்.**

  காணி சுவீகரிப்பில் உள்ள தாமதம் காரணமாக கேள்விப்பத்திரம் கோரளை தாமதப்படுத்த பிரிவுகள் தீர்மாணித்தது. காணி சுவீகரிப்பில் கடுவலை மற்றும் ஹோமாகம பிரதேச செயலகப்பிரிவுகளில் உள்வாங்கப்பட்டுள்ளன. காணி சுவீகரிப்பு இழப்பீட்டுக் கொடுப்பனவாக ரூ.1080.26 மில் செலுத்தப்பட்டுள்ளதுடன் காணி சுவீகரிப்பிற்காக முப்பீட்டுத தொகையாக 31.12.2022 இல் ரூ427.56 பெறுமதியான பண வவுசர்கள் காணப்படுகின்றன.

(iv) சர்வதேச அபிவிருத்திக்கான OPEC நிதியத்தினால் நிதியளிக்கப்பட்ட மேல்மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் வீதிகளின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி (OFID-3)

இலங்கை அரசாங்கமானது சர்வதேச அபிவிருத்திக்கான OPEC நிதியத்திடமிருந்து (OFID) மேல் மாகாணத்திலுள்ள 25.79 கி.மீ நீளமான வீதிகளை மேல் மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் புனரமைக்க 17 மில்லியன் அமரிக்க டொலர்களை பெற்றுள்ளது.

பொதி I
கடுவலை - அத்துருகிரிய வீதி (0.0 கி.மீ -9.50 கி.மீ)

பொதி II
வாதுவை - மொரன்துடுவை வீதி (0.0 கி.மீ-5.28 கி.மீ)
பெல்லன - மொரகொல்லை (0.0 கி.மீ-9+80 கி.மீ)

2020 ஆம் ஆண்டு பொதி II யின் நிர்மாண வேலைகள் அனைத்தும் பூரணப்படுத்தப்பட்டன.

பொதி 1- கடுவலை - அத்துருகிரிய வீதியின் (B174) அபிவிருத்தி 0.0 கி.மீ-9.50 கி.மீ

ஒப்பந்தத்தாரராக ஹோவல் கட்டுமான தனியார் நிறுவனம் காணப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் பௌதீக முன்னேற்றம் 91.95% ஆகும். காணி சுவீகரிப்பில் உள்ள தாமதம் மற்றும், CEB துளைகளை நகர்த்துதல் BOQ அளவினை அதிகரித்தல், கோவிட் பெருந்தொற்றினால் தளம் மூடப்பட்டமை, போதுமான அளவு உரிபொருள் இயந்திரங்களுக்கு இல்லாமை மற்றும் மூலப் பொருள் தட்டுப்பாடு ஆகியவற்றின் காரணமாக காரணமாக காலப்பிரிவு நீடிப்பானது 15.03.2023 வரை வழங்கப்பட்டது. காணி சுவீகரிப்பிற்கான இழப்பீட்டுத் தொகையாக ரூ.972.07 மில்லியன் வழங்கப்பட்டுள்ளதோடு செயற்திட்ட முன்னேற்றத்தனை பிரதானமாக காணிசுவீகரிப்பில் உள்ள தாமதம் தாக்கம் செலுத்துகின்றது. கடுவலை பிரதேச செயலகப்பிரிவு காணி சுவீகரிப்பில் உள்வாங்கப்பட்டுள்ளது. பயன்பாடுகளை நகர்த்துதலில் உள்ள தாமதம் காரணமாகவும் கட்டுமான வேலைகள் தடைபடுகின்றன.

(v) OFID இனால் நிதியிடப்பட்ட காலி - தெனியாய - மாதம்பை வீதி (A017) செயற்திட்டம் (OFID-4)

இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் பின்னர் எனக்கு கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கின்ற அதிகார சபையின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கியுள்ள எனினும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்களாக கருதப்படுகின்றது. ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியிருக்காததுடன் நான் அவை மீது எவ்வகையிலும் சான்றுப்படுத்தலினை அல்லது அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கையில் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது ஏனைய வகையில் பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருத்தமற்றுள்ளதா என்பதனை கவனித்துப் பார்ப்பதாகும்.

அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை நான் வாசிக்கையில், அதில் பொருண்மையான பிழையாகக் காட்டுதல் உள்ளது என முடிவுக்கு வந்தால் சரிசெய்வதற்காக

நிருவகிக்கின்ற தரப்பினர்கக்கு இவ்விடயங்களைத் நான் தெரியப்படுத்துதல் வேண்டும். இன்னும் சரிசெய்யப்படாத பொருண்மையான பிழையாகக் காட்டுதல்கள் இருக்குமாயிருந்தால் அவற்றை அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படவும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகாரசபை தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயனபடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதிகாரசபையின் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக அதிகாரசபையின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக இருக்குமாயிருந்தால் எனது அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் அதிகாரச் சபையின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிரயாயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள தாக்கங்களை தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை அதிகாரசபை பேணி வந்திருந்தது

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் 1.2 குறிப்பிடப்பட்டுள்ள இ, உ, க, ங, ண, ப, வ போன்ற சிபார்சுகள் தவிர கடந்த ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும், வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க அதிகாரசபையின் அங்கத்தவர்கள் எவருக்கும் அதிகாரசபை சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றதென.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது அதிகாரசபையின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகவில்லை.

சட்டங்கள்/ பணிப்புரைக்கான தொடர்பு	விபரம்
(அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாண கோவை	
i. 104 -108 ஆம் பிரமாணம்	• இழப்பொன்று ஏற்படும் போது, இழப்பின் அளவு மற்றும் காரணம் தீர்மானிக்கப்படவும் அதற்கு பொறுப்பானவர்கள் இனங்காணப்படவும் புலனாய்வொன்று ஆரம்பிக்கப்படவும் வேண்டும். அவ்வாறாயினும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டினுள் ஏற்பட்ட 121 வாகன விபத்துக்கள் தொடர்பாக அதிகார சபைக்கு ஏற்பட்ட நட்டம் மற்றும் அதற்கு பொறுப்பு கூற வேண்டிய தரப்பினர்கள் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 02 ஆரம்பகட்ட புலனாய்வுகள் மட்டும் நடத்தப்பட்டிருந்தது. • வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மகநெகும வீதி நிர்மாணிப்பு மற்றும் இயந்திர உபகரண கம்பனிக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த 02 கப் வாகனங்கள் 2022 மே 09 ஆம் திகதி நடந்த வன்முறை சம்பவங்கள் காரணமாக முழுமையாக பாதிப்பிற்கு உட்பட்டிருந்ததுடன் அதற்காக மதிப்பிடப்பட்ட காப்புறுதி இழப்பீட்டு பணம் ரூபா 27.5 மில்லியன் ஆகிய போதிலும் குறித்த இழப்பீட்டு தொகை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் கிடைக்கப்பெறவில்லை. மேலும், நிதி பிரமாணம் பிரகாரம் நட்டத்தின் அளவு மற்றும் காரணங்கள் தீர்மானிக்கப்படவும் பொறுப்பு கூறப்பட வேண்டியவர்கள் இனங்கண்டு புலனாய்வொன்று ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
ii. 135(4) ஆம் நிதி பிரமாணம்	நிதி அதிகாரமளிக்கும் ஆவணம் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை மீள்திருத்தப்பட வேண்டிய போதிலும், அதிகார சபையினால் அவ் ஆவணம் 2020 ஆம் ஆண்டின் பின்னர் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ) தாபன விதிக் கோவையின் VIII ஆம் அதிகாரத்தின் 10 ஆம் பிரிவு	அரச விடுமுறை நாளன்று வேலை செய்வதற்கு விடுமுறை தின கொடுப்பனவு செலுத்தல் தொடர்பாக தாபன விதிக் கோவையில் இல்லாத விடயங்கள் தாபன பணிப்பாளர் நாயகத்திடம் கேட்டறிய வேண்டிய போதிலும், அவ்வாறு இன்றி அலுவலக சேவைக்காக இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும் சேவை தேவையின் அடிப்படையில் அலுவலக நேரத்தின் பின்னர் சேவையில் ஈடுபட்ட மணித்தியாலத்தின் கூட்டுத்தொகை கணித்து 08 மணித்தியாலத்திற்கு ஒரு விடுமுறை நாள் என கருதப்பட்டு விடுமுறை தின கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அதிவேக வீதி இயக்கம், பராமரிப்பு மற்றும்

முகாமைத்துவ பிரிவிற்கு இணைக்கப்பட்டு சேவையாற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு 2022 சனவரி தொடக்கம் திசெம்பர் வரை காலப்பகுதிக்காக ரூபா 6.84 மில்லியன் விடுமுறை தினக் கொடுப்பனவானது நிலவிய நிதியேற்பாடுகளுக்கு முரணாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் 20 ஆம் பிரிவு

வாழ்க்கை படி கொடுப்பனவிற்கு மேலதிகமாக, அதிகார சபைக்கென்றே விசேடமான, வெவ்வேறு நோக்கங்களுடன் கொடுப்பனவு செய்யப்படுகின்ற வீதி அபிவிருத்தி அதிகார சபை கொடுப்பனவு, மேலதிக வேலை கொடுப்பனவு, சீராக்கல் கொடுப்பனவு மற்றும் பொறியியற் கொடுப்பனவு உள்ளடங்கலாக 12 கொடுப்பனவுகள் கருத்திற் கொண்டு பணிக்கொடை கணிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்குரியதாக பணிக்கொடை ஒதுக்கம் ரூபா 1,232.83 மில்லியனினால் மிகையாக கணிக்கப்பட்டிருந்தது. மேலும், அங்கீகரிக்கப்படாத கொடுப்பனவுகள் உட்பட பணிக்கொடை கொடுப்பனவு செய்தமையின் காரணத்தினால் மீளாய்வாண்டினுள் ரூபா 40.92 மில்லியன் அதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2018 சனவரி 24 திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை :

i. 1 ஆம் பிரிவு

அதிகார சபையினால் மனித வள அபிவிருத்தி செய்யும் முறைமையொன்றினை அறிமுகப்படுத்தி கொடுத்திராததுடன் பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு அல்லது செயலாற்றலினை மீளாய்வு செய்யும் முறைமையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

ii. 5 ஆம் பிரிவு

மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை

i. 2006 செப்தெம்பர் 22 திகதிய 30 ஆம் இலக்க சுற்றறிக்கையின் II ஆம் பின்னிணைப்பின் 04 ஆம் பந்தி

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் விதிகளுக்கு மற்றும் வழிக்காட்டிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவிஉயர்வு நடைமுறைகளுக்கு உட்பட்டு திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பதவியணி மீள் கட்டமைப்பு பரிந்துரை செயற்படுத்தாது அதிகார சபையினால் 14 பதவிகளுக்குரியதாக 259 ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்திருந்தது. இந்த

		உத்தியோகத்தர்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த சம்பள அளவுதிட்டங்களில் ஆரம்ப சம்பளத்தினை விட அதிகமான சம்பள அளவுத் திட்டங்களில் வைக்கப்பட்டு சம்பளங்கள் செலுத்தப்பட்டமையின் காரணத்தினால் மீளாய்வாண்டில் ரூபா 56.78 மில்லியன் சம்பளமாக அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.
ii.	2006 ஆகஸ்ட் 01 திகதிய 28 (II) ஆம் இலக்க சுற்றறிக்கை	முகாமைத்துவ சேவைக் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படாத 12 பதவிகளுக்காக 51 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டு மீளாய்வாண்டினுள் ரூபா 23.6 மில்லியன் சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.
(ஊ)	2021 நவம்பர் 16 திகதிய அரச தொழில் முயற்சிகளுக்கான வழிக்காட்டி கோவை	
	3.2 ஆம் பிரிவு	ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைக்காக (Scheme of Recruitment) பணிப்பாளர் சபையின் மற்றும் வரிசை அமைச்சின் பரிந்துரையுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதிகார சபையின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைக்காக அவ்வாறான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந் நிலை 2005 ஆம் ஆண்டு தொடக்கம் நிலவி வருகின்றமை அவதானிக்கப்பட்டது.
	3.3 ஆம் பிரிவு	அதிகாரசபையினால் தயாரிக்கப்படுகின்ற மூலோபாய திட்டத்தில் நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவுகளின் (Divisions of the SOE) ஊழியர் தேவை, மனித வள திட்டமொன்றாக(Human Resource Plan) காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான பிரிவுகளுக்கான ஊழியர் தேவை இனங்காணப்பட்டிருக்கவில்லை.

அதிகாரங்கள், கடமைகள், செயற்பாடுகள்	அவதானிப்பு
(அ) 2008 இன் 40 ஆம் இலக்க தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின் 13 மற்றும் 14 ஆம் பிரிவுகள் மற்றும் 2011 நவம்பர் 18 திகதிய 1732/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிக்கையின் 07 ஆம் பந்தி	அதிவேக வீதி கட்டணமாக சேர்க்கப்படுகின்ற பணத்தொகை அதிகார சபையின் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியதுடன், கட்டணங்கள் சேர்க்கப்படுகின்ற தேசிய நெடுஞ்சாலைகள் அபிவிருத்திக்கு மற்றும் பராமரிப்பிற்கு அந்த நிதி பயன்படுத்தப்படல் வேண்டும். எனினும் அவ் விடயங்களுக்கு முரணாக அவ்வாறு சேர்க்கப்பட்ட நிதியில் ரூபா 1,000 மில்லியன் மீளாய்வாண்டில் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது.
(ஆ) 2008 இன் 40 ஆம் இலக்க நெடுஞ்சாலைகள் சட்டம்	
i. 4(3) ஆம் பிரிவு	வீதி அபிவிருத்தி அதிகார சபை, குறித்த உள்ளூராட்சி நிறுவனம் மற்றும் வேறு முகவர் நிறுவனங்களினால் ஏற்கப்பட்டுள்ள மாவட்டத்தின் வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் குறிப்பாக காண்பிக்கப்படுகின்ற "ஒருங்கிணைந்த வீதி அமைப்பு அபிவிருத்தி மற்றும் பராமரிப்பிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம்" தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
(இ) 2005 நவம்பர் 03 திகதிய ஆம் அமப/05/1711/016/110 ஆம் இலக்க அமைச்சரவை தீரமானம்	மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அமைச்சரவை தீர்மானித்துள்ள வீதி பராமரிப்பு பொறுப்பு நிதியமொன்று தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து அதிகாரசபையின் அதிகாரங்கள், கடமைகள், மற்றும் செயற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பின் வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து அதிகாரசபையின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக கால எல்லைக்குள் உரிய சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது என.

(அ) வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான இயந்திர உபகரணங்கள் வாடகைக்கு வழங்கல், கடைகள் வாடகைக்கு வழங்கல், பாதுகாப்பான வீதிகளை பயன்படுத்தல் மற்றும் சாலை இருப்புக்களில் விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 28 நிறுவனங்களிடமிருந்து மற்றும் 05 நபர்களிடமிருந்து மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை வருமானம் ரூபா 50.07 மில்லியன் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதி அபிவிருத்தி அதகிார சபையின் பதவியணியின் 290 உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டினுள் 18 செயற்திட்ட அலுவலகங்களில் சேவையில் இணைக்கப்பட்டிருந்ததுடன், குறித்த பதவியணிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ரூபா 65.1 மில்லியன் சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறெனினும், குறித்த சம்பளத்தினை மீள்நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், பெற வேண்டிய இந்த 18 செயற்திட்டங்களில் 07 செயற்திட்டங்களின் பணிகள் மீளாய்வாண்டு இறுதியில் நிறைவு செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) அதிகாரசபையினால் 2019 தொடக்கம் 2021 வரையான ஒவ்வொரு ஆண்டிற்கும் நிதிக் கூற்றுக்கள் மீள் சீராக்கம் செய்யப்பட்டிருந்ததுடன் (Re-State) இதன் காரணத்தினால் செலுத்தப்பட வேண்டிய வருமான வரி ரூபா 209.5 மில்லியனினால் குறைந்திருந்தது. அதன் பிரகாரம், மேலதிகமாக செலுத்தப்பட்ட வருமான வரி குறைத்துக் கொள்ள வேண்டிய போதிலும், இந்த மேலதிக கொடுப்பனவு ஆண்டினுள் செலுத்தப்பட வேண்டிய வருமான வரிக்கு ஈடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2022 திசெம்பர் 31 இல் அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களினுள் உள்ளடக்கப்பட்ட பிற்போடப்பட்ட வெளியீட்டு வரி (Differd output tax) ரூபா 79.58 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், இந்த மீதியினுள் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலவி வரும் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 35 மில்லியனாக காணப்பட்ட போதிலும் ஆண்டு இறுதி வரையிலும் குறித்த மீதிகள் தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதியின் இலத்திரனியல் கட்டணம் அறவிடுவதற்கு 2014 திசெம்பர் 18 ஆந் திகதி வீதி அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை வங்கியுடன் உடன்பட்ட ஒப்பந்தத்தின் ஒப்பந்த காலம் 2020 யூன் 08 ஆந் திகதி நிறைவடைந்து 02 ஆண்டுகள் கடந்திருப்பினும் புதிய ஒப்பந்தமொன்றிற்கு உடன்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. செல்லுப்படியாகும் ஒப்பந்தமொன்று இன்றி 2020 தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரை 03 ஆண்டிற்காக கொடுக்கல்வாங்கல் கிரயமாக (Transaction Cost) கூட்டுத்தொகை ரூபா 19.7 மில்லியன் இலங்கை வங்கிக்கு செலுத்தியிருந்தது.

(ஊ) அதிகார சபையின் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதியின் இலத்திரனியல் கட்டணம் செலுத்தும் முறை பயன்படுத்துவோரை உற்சாகப்படுத்துவதற்கு இலத்திரனியல் கட்டணம் செலுத்தும் முறைக்கு மாறுகின்ற ஆரம்ப 06 மாதங்களினுள் குறித்த கட்டணத்தில் 10 சதவீத கழிவொன்று அவ் வீதிகளை பயன்படுத்துவோருக்கு பெற்றுக் கொடுப்பதற்கு தீமானிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறெனினும், அங்கீகாரமின்றி அக் காலப்பகுதியின் பின்னரும் அக் கழிவு முறை செயற்படுத்தப்பட்டமையினால் 2022 ஆம் ஆண்டிற்குரியதாக ரூபா 33 மில்லியன் உட்பட, 2020 தொடக்கம் 2022 வரை 03 ஆண்டுகளுக்கு கூட்டுத்தொகை ரூபா 89 மில்லியன் வருமானம் அதிகார சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.

(எ) அதிகார சபைக்கு சொந்தமாக கிரயம் ரூபா 228.6 மில்லியனான 19 வாகனங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கும், ரூபா 83.5 மில்லியன் கிரமயான 11 வாகனங்கள் மகநெகும இயந்திர உபகரணங்கள் கம்பனிக்கும் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் அதிவே வீதிகளில் கடமைகளுக்காக மீளாய்வாண்டில் ரூபா 281.35 மில்லியன் செலவு செய்து வெளி நிறுவனங்களிடமிருந்து வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன.

(ஏ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பதவியணி 10,801 ஆக காணப்பட்டதுடன், அப் பதவியணிக்காக 2022 ஆம் ஆண்டில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 8,315.03 மில்லியனும், நிர்வாக செலவீனம் ரூபா 842.4 மில்லியனும், தேசிய வங்கி கடன் வட்டி மற்றும் கடன் தவணைகளாக ரூபா 52,621.53 மில்லியனுமாக ஒட்டுமொத்தம் மீண்டெழும் செலவீனமாக ரூபா 61,778.97 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தனிநபர் வருடாந்த சாதாரண சம்பளம் மற்றும் கொடுப்பனவு செலவினம் ரூபா 0.77 மில்லியனாக காணப்பட்டது. மேலும், 2022 மூலதன செலவீனம் ஏற்பதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 140,294.27 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு கொடுத்திருந்த போதிலும், பெறப்பட்ட நிதியேற்பாடு ரூபா 96,008.46 மில்லியனாகும். அவ் அளவிலும் ரூபா 21,231.7 மில்லியன் 2021 ஆம் ஆண்டில் ஏற்படுத்திக் கொண்ட கடப்பாடுகள் தீர்ப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டில் ஏற்கப்பட்டுள்ள மூலதன செலவினம் ரூபா 98,225.92 மில்லியனாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதியில் தீர்க்கப்படாத செலவீன பெறுமதி ரூபா 23,449.15 மில்லியன் ஆகும். ஒட்டுமொத்த செலவீனமான ரூபா 160,004.89 மில்லியனில் 39 சதவீதம் மட்டும் மீண்டெழும் செலவீனத்திற்காக செலவிடுவதற்கு நேர்ந்தமையினால் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நோக்கம் மற்றும் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றலானது கீழ் மட்டத்தில் காணப்பட்டதுடன், இது தொடர்பாக நீண்ட ஆய்வொன்று மேற்கொண்டு அவை நிறைவேற்றுவதற்குரிய பயனுறுதிமிக்க கூட்டிணைந்த திட்டமொன்று மற்றும் செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிப்பதனை குறித்து விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஐ) 2022 திசெம்பர் 31 இல் அதிகார சபையினால் குறுகிய கால நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,226.43 மில்லியன் வரிசை அமைச்சின் கோரிக்கையின் அடிப்படையில் அமைச்சிற்கு பெற்றுக் கொடுத்திருந்த காரணத்தினால் அதிகார சபை இழந்திருந்த வட்டி வருமானம் ரூபா 410.69 மில்லியன் ஆகும். அவ்வாறே பொது திறைச்சேரியின் இணக்கம் இன்றி வரிசை அமைச்சிற்கு செலவின விடயங்களுக்கு பணம் பெற்றுக் கொடுத்தல் கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாகியது.

(ஒ) 2011 தொடக்கம் 2020 ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ரூபா 16.5 மில்லியனிற்குரிய பொருட்கள் மற்றும் சேவை வழங்கலுக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த பண வைப்புக்கள் மற்றும் முற்பணம் தீர்க்கப்படுவதற்கு அல்லது பணம் மீள பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த மீதியினுள் 2011 ஆம் ஆண்டில் தெற்கு அதிவேக வீதி திறப்பு விழாவினை ஒழுங்கமைப்பதற்கு ஏற்கப்பட்ட செலவில் 50 சதவீமான ரூபா 5 மில்லியனும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஓ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 21 (1) பிரிவின் பிரகாரம், பிரதேச சபை நிர்வாக எல்லையினுள் காணப்படுகின்ற நெடுஞ்சாலைகள் மற்றும் வீதிகளின் உரித்து அவ் உள்ளூர் ஆட்சி சபைக்களுக்குரியதாகும். இதன் பிரகாரம், அதிகார சபையினால் அவ் வீதிகள் பழுதுபார்த்தல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஏற்கப்பட்ட செலவீனம் அந் நிறுவனங்களுக்கு மூலதனமாக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மூலதனமாக்கப்படாது செலவீனமாக பதிவழித்தல் கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாகியது. மீளாய்வாண்டில் அவ்வாறு அதிகார சபைக்கு சொந்தமாகாத வீதிகளுக்காக (Non-RDA) ஏற்கப்பட்ட ரூபா 9,218 மில்லியன் செலவீனம் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் அதிவேக வீதிகள் நிர்மாணிப்பதற்கு காணி சுவீகரித்தலுக்காக ஏற்கப்பட்ட கிரயம் ரூபா 33,815.28 மில்லியனாக காணப்பட்ட போதிலும் அதற்குரிய பதிவேடொன்று அதிகார சபையின் காணி பிரிவினால் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.

(க) 2020, 2021 ஆண்டுகளுக்குரியதாக 100,000 கிலோ மீட்டர் வீதிகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பெறுகை மற்றும் தொழில்நுட்ப மீளாய்வு அங்கத்தவர்களுக்கு 2006 பெறுகை வழிக்காட்டி கோவையின் ஏற்பாடுகளை மிகைத்து செலுத்தப்பட்டிருந்த 6.19 மில்லியன் தொகை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், குறித்த மீதியினுள் அதிகார சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்ற உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3.03 மில்லியனும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ங) பலவீனமான பாலங்கள் மறுசீரமைப்பு நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நடைமுறையிலுள்ள வேலை பெறுமதி ரூபா 692.48 மில்லியன் ஆகும். அதனுள் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 50.29 மில்லியன் ஊவா மாகாணத்திற்கு சொந்தமான 13/6 ஆம் இலக்க தெமோதர-ஸ்பிரின் மணல் பாலம் மறுசீரமைக்கும் ஒப்பந்தம் 2019 யூன் 05 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2020 மார்ச் 31 ஆந் திகதி நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தக்காரருக்கு பணி முற்பணம் செலுத்தலானது 2020 மே 29 ஆந் திகதி மற்றும் 2020 செப்தெம்பர் 07 ஆந் திகதி வரை தாமதமாகியதன் காரணத்தினால் ஒப்பந்தக்காரரினால் குறித்த பணி நிறைவு செய்யப்பட்டிராததுடன் மீளாய்வாண்டு இறுதியில் அதன் பௌதீக செயன் முன்னேற்றம் 90 சதவீதமாக காணப்பட்டது.

(ச) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 100,000 கிலோ மீட்டர் வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 2020 – 2022 காலத்தினுள் அதிகார சபைக்கு சொந்தமற்ற வீதிகளின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக ஏற்கப்பட்ட கிரயமாக நடைமுறையிலுள்ள வேலையின் (WIP – Non RDA) கீழ் காண்பிக்கப்படுகின்ற பெறுமதி ரூபா 125,586.76 மில்லியன் ஆகும். எனினும் இந்த நடைமுறையிலுள்ள வேலைகளுக்குரிய ஒப்பந்தக்காரரின் பெயர், ஒப்பந்தக் காலம், பெறுமதி மற்றும் ஒப்பந்தக் காலம் நீடித்தல் போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஞ) 100,000 கிலோ மீட்டர் வீதிகள் செயற்தட்டம் தவிர அதிகார சபை செயற்படுத்தப்படுகின்ற ஒப்பந்தங்களுக்குரியதாக 2022 திசெம்பர் 31 இல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தொகை ரூபா 1,089.73 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், அம் மீதியினுள் 03 ஆண்டுகளை மிகைத்த பெறுமதி ரூபா 503.66 மில்லியன் ஆகும். ஒப்பந்தக்காரர்களினால் ஒப்பந்த நடவடிக்கைகள் உரிய காலத்தில் நிறைவு செய்யப்படாமை மற்றும் பிழைகள் சீர்செய்யப்படாமையினால் நிறுத்தி வைக்கப்பட்ட பணம் உரிய காலத்தில் விடுவிக்க முடியாதிருந்தது.

(ட) 2022 திசெம்பர் 31 இல் செலுத்தப்பட வேண்டிய நிறுத்தி வைக்கப்பட்ட தொகையில் ரூபா 175.60 மில்லியன் ஒப்பந்தக்காரரினால் கோரப்படாமையினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், இதில் குறைப்பாடு உத்தரவாதக் காலம் கடந்துள்ள மற்றும் பணி நிறைவு செய்யப்பட்டிராத தெயட கிருல செயற்திட்டத்தின் கீழ் நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 22.88 மில்லியனில் ரூபா 12.42 மில்லியன் தொகை மீளாய்வாண்டு இறுதியில் பழிவழிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. மேலும், தெற்கு மாகாண பிரதேச அலுலவகம் மேற்கொண்ட 45 செயற்திட்டங்களின் குறைப்பாடு உத்தரவாதக் காலம் 2017 – 2021 ஆண்டுகளில் நிறைவடைந்துள்ள போதிலும், பணி நிறைவுச் சான்றிதழ் வழங்கப்படாமையின் காரணத்தினால் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய நிறுத்தி வைதத்தற் தொகை ரூபா 5.72 மில்லியனாக காணப்பட்டதுடன், 08 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 8.51 மில்லின் நிறுத்தி வைத்தற் தொகை கொடுப்பனவிற்கு நிதி இன்றி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ண) மீளாய்வாண்டு இறுதியில் ஒப்பந்த நடவடிக்கைகள் நிறைவேற்றுவதற்கு வாடிக்கையாளர்களிடம் பெற்றுக் கொண்ட வைப்பு மீதி (Client Deposit) ரூபா 2,959.35 மில்லியன் ஆகும். அதில் 05 ஆண்டு கடந்திருந்த போதிலும், நிறைவேற்றப்படாத 150 ஒப்பந்தங்கள் காணப்பட்டதுடன், அதற்குரிய மீதி ரூபா 614.94 மில்லியன் ஆகும். மேலும், 3-5 ஆண்டுகளுக்கு இடைப்பட்டு நிறைவேற்றப்படாத ஒப்பந்தங்கள் 449 ஆக காணப்பட்டதுடன், அதற்குரிய மீதி ரூபா 1,015.75 மில்லியன் ஆகும். மாகாண அலுவலகங்களுடன் ஒப்பந்தங்கள் தொடர்பான தகவல் பரிமாற்றம் தாமதமாகல் மற்றும் பின்னூட்டல் நடவடிக்கைகளில் காணப்படுகின்ற பலவீனமும் இந்த பணம் தீரக்கப்படாமைக்கு காரணமாகியுள்ளதென அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த வாடிக்கையாளர் வைப்பு மீதியினுள் இலங்கை மகாவலி அதிகாரசபையினால் அதிகமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 42.96 மில்லியன் 2022 நவம்பர் 16 ஆம் திகதி கோரப்பட்டிருந்த போதிலும் அதிகார சபையினால் அதன் துல்லியம் உறுதி செய்யப்பட்ட கணக்காய்வு திகதியான 2023 யூன் 10 ஆந் திகதி வரையிலும் அப் பெறுமதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ந) அதிகார சபையினால் 10 நிர்மாணிப்பு செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தக்காரர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த முற்பணங்களின் பெறுமதி ரூபா 45,811.79 மில்லியனாக காணப்பட்டதுடன், அப் பெறுமதியில் 05 செயற்திட்டங்களுக்குரியதாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 15.53 மில்லியன் முற்பணம் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதி வரையிலும் குறித்த மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மத்திய அதிவே வீதி செயற்திட்டம் கட்டம் I, மத்திய அதிவே வீதி செயற்திட்டம் கட்டம் II மற்றும் ருவன்புர அதிவே வீதி செயற்திட்டத்திற்காக கூட்டுத்தொகை ரூபா 39,976.2 மில்லியன் முற்பணமாக செலுத்தப்பட்டிருந்ததுடன், குறித்த 03 செயற்திட்டங்களின் பணிகள் இடை நடுவே நிறுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பணிகள் ஆரம்பிப்பதற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ரூபா 45,811.79 மில்லியன் முற்பணம் தீர்ப்பதற்கு முடியாதிருந்தது.

(ந) இலங்கை அரசு, கொரிய இறக்குமதி ஏற்றுமதி வங்கியுடன் 2017 ஏப்ரல் 06 ஆந் திகதி உடன்பட்ட இணக்கத்தின் பிரகாரம் 199.27 மில்லியன் ஐ.அ. டொலர்கள் கடன் தொகை கண்டி சுரங்கப்பாதை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக பெற்றுக் கொடுப்பதற்கும் அக் கடன் தொகை பெற்றுக் கொள்ளும் திகதியிலிருந்து 05 ஆண்டுகள் காலத்தினுள் பணிகள் நிறைவு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. குறித்த கடன் தொகை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக எழுத்துமூல ஒப்பந்தமொன்று ஏற்படுத்திக் கொள்வதற்கு முன்னர் சுற்றாடல் பாதிப்பு ஆய்வு அறிக்கை (EIA) பெற்றுக் கொண்டு அதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் மீள்குடியேற்ற செயல்நடவடிக்கை திட்டம் தயாரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மதிப்பீட்டின் பெறுமதி ரூபா 95.75 மில்லியனான சுற்றாடல் பாதிப்பு ஆய்வு அறிக்கை தயாரிக்கும் ஒப்பந்தம் பேராதெனிய பல்கலைக்கழகத்திற்கு 2021 மார்ச் 25 ஆந் திகதி கொடுக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 59.86 மில்லியன் மீளாய்வாண்டு இறுதியில் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்திருந்த போதிலும், குறித்த அறிக்கை தயாரிக்கும் நடவடிக்கைகள் 2023 மே 31 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், மீள் குடியேற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் ஒப்பந்தம் தனியார் கம்பனியொன்றிற்கு 2022 ஒக்தோபர் 04 ஆந் திகதி ரூபா 8.47 மில்லியனிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம் அப் பணி 04 மாதங்களினுள் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் 2023 மே 30 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. இக் காரணத்தினால் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பிற்கு ஒப்பந்தக்காரரொருவர் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் 2023 ஆகஸ்ட் 31 வரையிலும் ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது.

(ப) சுற்றுலாவிடுதி நிர்மாணிப்பதற்கு தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு அதிகார சபையினால் 2005 ஆம் ஆண்டில் ரூபா 60 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அத் தொகையில் ரூபா 44.18 மில்லியன் பெறுமதியான பணிகள் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், எஞ்சிய ரூபா 15.82 மில்லியனிற்குரிய பணிகள் மேற்கொள்வதற்கு அல்லது குறித்த முற்பணம் மீண்டும் அறவிடப்படுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அதிகார சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ம) 100,000 கிலோ மீட்டர் மாற்று வீதிகள் மறுசீரமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டிருந்த பொறியியல் மிகை மதிப்பீடு திருத்துமாறு மற்றும் சீர்செய்யுமாறு அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு வரிசை அமைச்சின் செயலாளரினால் 2022 ஒக்தோபர் 03 ஆந் திகதி ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. மேலும், சில சந்தர்ப்பங்களின் போது மிகை மதிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்த மதிப்பீடு பெறுமதிகள் திருத்தப்பட்ட இறுதி விலைப்பட்டியல் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுமென அமைச்சின் செயலாளர் கணக்காய்விற்கு தெரிவித்திருந்தார். எவ்வாறாயினும் பின்னர், 2021 ஏப்ரல் 27 ஆந் திகதியின் முன்னர் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களுக்காக உடன்பட்ட பெறுமதியும் அதன் பின்னர் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்திற்காக உள்ளவாராக மேற்கொள்ளப்பட்ட பணிகளின் பிரகாரம் கொடுப்பனவு செய்வதற்கும் அமைச்சின் செயலாளரின் MOR&H/SEC/GEN/2022/71 ஆம் இலக்க 2022 ஒக்தோபர் 03 திகதிய கடிதத்தின் ஊடாக அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மிகை மதிப்பீட்டின் அடிப்படையில் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 115,435 மில்லியன் கொடுப்பனவு செய்தமை கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாக காணப்பட்டது.

(ய) 2022 திசெம்பர் 31 ஆந் திகதி ஆகையில் தேசிய நிதியின் ஊடாக செயற்படுத்தப்பட்ட தேசிய, பிரதேச மற்றும் கிராம ரீதியில் 100,000 கிலோ மீட்டர் மாற்று வீதிகள் மறுசீரமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்ட ஒட்டுமொத்த வீதியின் நீளம் 17,847 கிலோ மீட்டர் ஆவதுடன் அதில் வேலை நிறைவு செய்யப்பட்டிருந்த அளவு 6,298 கிலோ மீட்டர் ஆகும். மேலும் நடைமுறையிலுள்ள வேலையின் அளவு 11,549 கிலோ மீட்டர்கள் ஆகும். இந்த பணிகளுக்காக ரூபா 142,821 மில்லியன் மீளாய்வாண்டு இறுதியில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அத் திகதியில் கொடுப்பனவு செய்வதற்கு கையிலுள்ள விலைப்பட்டியல்களின் பெறுமதி ரூபா 16,810 மில்லியன் ஆகும். அச் செலவினை தீர்ப்பதற்கு தேசிய வங்கியிடமிருந்து ரூ 43,205 மில்லியனும் அமைச்சின் செலவின விடயத்தின் கீழ் ரூபா 68,263 மில்லியனும், திறைச்சேரி உண்டியல் வெளியிடல் ஊடாக 2022 திசெம்பர் 27 ஆந் திகதி ரூபா 31,353 மில்லியன் மற்றும் 2023 மார்ச் 13 ஆந் திகதி ரூபா 4,587 மில்லியனுமாக இரு சந்தர்ப்பங்களின் போது ரூபா 35,940 மில்லியன் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

(ர) குருநாகலை, பொலன்னறுவை மற்றும் நுவரஎலிய மாவட்டங்களில் இலட்சம் கி.மீ வீதிகள் செயற்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த 42 வீதி நிர்மாணிப்பு செயற்திட்டங்களின் 119 வீதிகளுக்குரிய மதிப்பீடுகள் தாரிக்கும் போது பிரதான வேலை விடயங்களின் விலை வீதங்கள் மிகையாக கணிக்கப்படல், மூலப்பொருட்கள் போக்குவரத்து தூரம் உள்ளவாரான தூரத்தினை பார்க்கிலும் அதிகமாக காணப்படல், செயற்திட்ட மேற்பார்வை கிரயம் மற்றும் நிர்வாக கிரயம் உயர் வீத்தில் காண்பிக்கப்படல், மூலப்பொருள் கழிவுகளுக்காக அசாதாரண பெறுமதிகள் உள்ளடக்கப்படல் காரணமாக ஒப்பந்த கிரயம் ரூபா 220.91 மில்லியினால் மிகையான மதிப்பிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ல) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 21 (1) பிரிவின் பிரகாரம் பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் காணப்படுகின்ற நெடுஞ்சாலைகள் மற்றும் வீதிகள் தொடர்பான பொது அதிகாரம் பிரதேச சபைக்கு உரியதென காண்பிக்கப்பட்டுள்ள போதிலும், அவ் ஏற்பாடுகள் கருத்திற் கொள்ளப்படாது வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இந்த ஒரு இலட்சம் வீதிகள் நிர்மாணிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் வீதிகள் அபிவிருத்தி செய்வதற்கு உடன்பாடிருந்ததுடன், அதற்காக குறித்த பிரதேச சபைகளிடமிருந்து எழுத்துமூல அங்கீகாரம் பெற்று கொள்ளப்படாமை குருநாகலை மாவட்டத்தின் இந்த வீதி நிர்மாணிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. நிறைவு செய்யப்பட்ட, இடைநடுவே நிறுத்தப்பட்ட மற்றும் உடன்பட்ட எனினும் வேலைகள் ஆரம்பிக்கப்படாத வீதிகள் மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்கு அதிகார சபையினால் பிரதேச சபைக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும், அவ் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளில் காணப்பட்ட குறைப்பாடுகள் காரணமாக குறித்த பிரதேச சபைகளினால் அவ் வீதிகள் பொறுப்பேற்றலானது நீராகரிக்கப்பட்டிருந்தது.

(வ) 2022 திசெம்பர் 31 ஆந் திகதியாகையில் இலட்சம் கி.மீ வீதிகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 6,426 கி.மீட்டர்கள் நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 193,518 மில்லியனான 2481 வேலை கட்டளைகள் (Work Oder) மகநெகும நிர்மாணிப்பு இயர்திர உபகரண கம்பனிக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன், அதில் கிரயம் ரூபா 131,650 மில்லினான 4,732.8 கி.மீட்டர் வீதிகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதில் 306.97 கி.மீட்டர்களுக்குரிய பெறுமதி ரூபா 5,920 மில்லியன் ஆன 71 வேலை கட்டளைகளின் ஒப்பந்த நடவடிகைகள் மட்டும் நேரடியே மேற்கொள்வதற்கு கம்பனி கையேற்றிருந்தது. அது மொத்த வேலை கட்டளை பெறுமதியில் 03 சதவீதம் என்ற குறைவான பெறுமதியாக காணப்பட்டதுடன் எஞ்சிய வேலைகள் 97 சதவீதத்திற்குரிய 4,425.87 கி.மீட்டர் வீதிகளுக்காக கிரயம் 125,730 மில்லியன் ஆன 1,753 வேலைக் கட்டளைகளின் ஒப்பந்த நடவடிக்கைகள், கம்பனியின் சேவை வழங்குனர்களாக இனங்காணப்பட்ட உப ஒப்பந்தக்காரர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. மேலும், இவ்வாறு உப ஒப்பந்தம் பெற்றுக் கொடுத்தல் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் பத்திரிக்கை இல 2008/1109 க்கு முரணாக காணப்பட்டதுடன், 2020 மே 07 ஆந் திகதிய அமப/20/0731/221/005-1 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், அரச கம்னியொன்றிற்கு ஒப்பந்தங்கள் பெற்றுக் கொடுக்கும் நோக்கங்களும் நிறைவேற்றப்பட்டிராததுடன், உப ஒப்பந்தக்காரர்களின் இலாபமாக அரச பணம் ரூபா 20,955 மில்லியன் மட்டும் தனியார் ஒப்பந்தக்காரர்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டு இறுதியில் மொத்த வேலை கட்டளைகளில் ரூபா 32,736 மில்லியன் ஆன 351 வேலை கட்டளைகள் இரத்து செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 29,130 மில்லியனிற்குரிய 306 வேலை கட்டளைகளின் நிர்மாணிப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ழ) அரச றெகை வழிக்காட்டி கோவையின் 5.4.4 ஆம் பந்தியின் பிரகாரம் ஏற்றுக் கொள்ளக் கூடிய முற்பண கொடுப்பனவு பத்திரம் சமர்ப்பித்தால் ஒப்பந்த தொகையில் 20 சதவீதம் பணி முற்பணமாக பெற்றுக் கொடுக்க முடியும். எனினும் மகநெகும நிர்மாணிப்பு இயந்திர உபகரண கம்பனியினால் உப ஒப்பந்தக்காரர்களுக்கு பெற்றுக்

கொடுக்கப்பட்டிருந்த 1753 வேலை கட்டளைகளுக்காக பணி முற்பணம் பெற்றுக் கொடுக்கும் போது 16 வேலைக கட்டளைகளுக்கு மட்டும் பணி முற்பண பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. மேலும், 2022 திசெம்பர் 31 இல் தீர்க்கப்பட வேண்டிய பணி முற்பண பெறுமதி ரூபா 1910 மில்லியனாக காணப்பட்டதுடன், அத் தொகை தீர்க்கப்படும் அல்லது மீண்டும் அறவிடும் நிச்சயமற்ற தன்மையும் காணப்பட்டது.

(ள) மாத்தறை மாவட்டத்தின் ஒப்பந்தக்காரர்களுக்கு பணி முற்பணம் பெற்றுக் கொடுக்கும் போது ஒப்பந்தக்காரர்களடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 590.28 மில்லியனான 26 பணி முற்பண பத்திரங்களின் செல்லுப்படியாகும் காலம் மீளாய்வாண்டு இறுதியில் காலாவதியாகியிருந்தது. எனினும் வேலை நிறைவு செய்யப்படாத மற்றும் வலைகள் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள வீதிகளுக்குரிய பணி முற்பண பத்திரங்களின் செல்லுப்படியாகும் காலப்பகுதி நீடிப்பதற்கு அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையேற்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இக் காரணத்தினால் கணக்காய்வு திகதியாகிய 2023 மார்ச் 15 ஆந் திகதியாகையில் ஒப்பந்த்காரர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த பணி முற்பணம் ரூபா 398.92 மில்லியன் மீண்டும் அறவிடப்படுவதற்கு இயலாதிருந்தது.

(ற) தெரிவு கணக்காய்வு பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் காலி மாவட்டத்தினுள் மகநெகும நிர்மாணிப்பு கம்பனிக்கு கையளித்த ரூபா 1,735.62 மில்லியனான 74 நிர்மாணிப்பு ஒப்பந்தங்களின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் புத்தளம் மாவட்டத்தினுள் 124 வீதிகளின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் புத்தளம் மாவட்டத்தினுள் 20 வீதிகள் அப்விருத்திக்கு ரூபா 5,291 மில்லியனும் பொலன்னறுவை மாவட்டத்தினுள் 10 வீதிகள் அபிவிருத்திக்கு ரூபா 377.26 மில்லியனும் செலவிடப்பட்டிருந்த போதிலும் அந் நிர்மாணிப்புக்களும் புத்தளம் மாவட்டத்தினுள் 208 வீதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளும் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது. இக் காரணத்தினால் வீதியினை பயன்படுத்தும் பொது மக்கள் சிரமத்திற்கு உட்பட்டிருந்ததுடன் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கொண்டு வரப்பட்ட மூலப்பொருட்கள் பாதுகாப்பற்று காணப்பட்டது.

(ன) மாத்தறை மாவட்டத்தில் 02 ஒப்பந்த தொகுப்புக்களின் கீழ் ABC போடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த பெறுமதி ரூபா 62.74 மில்லியனான வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் 10 இல் போடப்பட்டிருந்த ABC முழுமையாக கலன்று அகற்றப்பட்டிருந்தமையினால் வீதிகள் அபிவிருத்தி செய்வதற்கு முன்னர் காணப்பட்ட நிலைமைக்கு வந்துள்ளதுடன், வீதியானது போக்குவரத்திற்கு பயன்படுத்தமுடியாத நிலையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பனவு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 17.15 மில்லியன் விளைவற்ற செலவீனமாகியிருந்தது.

(ஜ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட அலுவலகங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் பிரகாரம், 14 செயற்திட்டங்களுக்காக கையேற்கப்பட்ட ஒட்டுமொத்த காணித் துண்டுகள் 48,427 ஆக காணப்பட்டதுடன் காணி சுவீகரித்தல் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் மீளாய்வாண்டு இறுதியில் அதிகார சபைக்கு உரித்து

கையேற்கப்பட்ட காணித் துண்டுகள் 4,543 ஆக அதாவது 09 சதவீதமாக மட்டும் காணப்பட்டது.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) கணக்காய்விற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியாகையில் தேசிய வங்கி ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட கடனில் மீள் செலுத்துவதற்குள்ள அளவு ரூபா 356,059.32 மில்லியன் ஆவதுடன், கடன் பெற்றுக் கொண்டமையின் காரணத்தினால் 05 ஆண்டுகள் காலத்தினுள் தேசிய வணிக வங்கிக்கு செலுத்துவதற்குள்ள வட்டி பெறுமானம் ரூபா 108,970.36 மில்லியனாக காணப்பட்டது. மேலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூபா 37,668.7 மில்லியனாகவும் செலுத்த வேண்டிய கடன் தவணை பெறுமதி ரூபா 2,502.3 மில்லியனாகவும் காணப்பட்டது.

(ஆ) அதிகார சபையினால் 2 ½ ஆண்டுகள் மற்றும் 4 ½ ஆண்டுகள் இடையே சலுகை காலத்தின் அடிப்படையில் 10 ஆண்டுகள் மற்றும் 18 ஆண்டுகள் இடையே காலத்தினுள் செலுத்தி முடிக்கும் அடிப்படையில் 07 தேசிய வங்கிகளில் 34 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 408,541.01 மில்லியனில் 2022 திசெம்பர் 31 இல் தொடர்ந்தும் செலுத்த வேண்டியுள்ள ரூபா 356,059.31 மில்லியன் பெறுமதியான கடன், தவணை கொடுப்பனவு காலம் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டு 2020 மார்ச் 13 திகதிய MFE/ERD/14/CM/2020/065 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரிக்கை சமர்ப்பித்து கடன் மீள் கட்டமைக்கப்பட்டிருந்தது. மீள் கட்டமைப்பிற்குரிய மதியுரை பெற்றுக் கொள்வதற்கு மக்கள் வங்கிக்கு ரூபா 10.80 மில்லியன் மதியுரைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் கடன் மீள் கட்டமைக்கப்பட்டமையினால் வருடாந்தம் அதிகரிக்கப்பட்ட வட்டி விகிதத்தின் அடிப்படையில் ரூபா 400.74 மில்லியன் மேலதிக வட்டித் தொகை செலுத்துவதற்கு அதிகார சபைக்கு நேரிட்டிருந்தது.

(இ) 2019 செப்தெம்பர் 25 திகதிய அமப/19/2547/119/068-1 ஆம் இலக்க மற்றும் 2019 ஆகஸ்ட் 07 திகதிய அமப/19/1983/119/068 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மீரிகம தொடக்கம் குருநாகலை வரை மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டம் அபிவிருத்தி செய்தல், நிலுவை விலைப்பட்டியல் கொடுப்பனவு செய்தல், அவ் வீதியின் I, II மற்றும் III ஆம் பகுதிகளின் காணிகள் சுவீகரித்துக் கொள்வதற்கான இழப்பீட்டு தொகை செலுத்துவதற்கு தேசிய வங்கியினால் கடன் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அங்கு மீண்டும் செலுத்தும் திறனின் அடிப்படையில் அதிவேக வீதிகளில் சேகரிக்கப்படுகின்ற பணத்தினை பயன்படுத்தி கடன் தவணை மற்றும் கடன் வட்டி செலுத்தும் அடிப்படையில் 2019 நவம்பர் 18 ஆந் திகதி இலங்கை வங்கியிலிருந்து ரூபா 4,312 மில்லியனும், 2019 ஒக்தோபர் 04 ஆந் திகதி மக்கள் வங்கியிடமிருந்து ரூபா 3,688 மில்லியனுமாக கூட்டுத்தொகை ரூபா 8000 மில்லியன் கடன் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 ஆந் திகதியாகையில் தொடர்ந்தும் செலுத்துவதற்குள்ள கடன் மீதிகள் முறையே ரூபா 2,084 மில்லியன் மற்றும் ரூபா 1,720.68 மில்லியனாகவும் காணப்பட்டது. அதன்

பிரகாரம், அதிவேக வீதியின் வருமானத்தில் செலுத்தப்பட்டுள்ள கடன் தவணை பெறுமதி ரூபா 4,195 மில்லியனாக காணப்பட்டதுடன், இந்த கடன் தொகைக்காக செலுத்தப்பட்டுள்ள வட்டி பெறுமானம் அண்ணளவாக ரூபா 3,000 மில்லியனாக காணப்பட்டது. மேலும், கடன் தொகை பயன்படுத்தி அபிவிருத்தி செய்யப்பட்ட அதிவேக வீதிகளின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது.

(ஈ) தேசிய வங்கி ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகைக்கு கடன் தவணை மற்றும் தவணையாக 2022 திசெம்பர் 31 இல் நிலுவையாக காணப்பட்ட தொகை தீர்க்கப்படுவதற்கு திறைச்சேரியினால் நிதியேற்பாடு பெற்றுக் கொடுப்பதற்கு முடியாதமையின் அடிப்படையில் 22.5 சதவீத வட்டி வீதத்தின் கீழ் ரூபா 36,671.62 மில்லியன் திறைச்சேரி உண்டியல்கள் (Treasury Bonds) வெளியிடப்பட்டிருந்தது. மேலும், தேசிய வங்கிகள் ஊடாக கடன் பெற்றுக் கொண்டு மேலதிகமாக 100,000 கி.மீட்டர் வீதிகள் வேசைத்திட்டத்திற்குரிய வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 36 ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்துவதற்குள்ள ரூபா 32,217.89 மில்லியனிற்காகவும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியாகையில் 22.5 சதவீத வட்டி வீதத்தின் கீழ் திறைச்சேரி உண்டியல்கள் வெளியிடப்பட்டிருந்தது. இவ்வாறு திறைச்சேரி உண்டியல்கள் வெளியிடப்பட்டமையின் காரணத்தினால் அரசிற்கு மேலதிகமான செலவீனமொன்று ஏற்பதற்கு நேரிடுகின்றதுடன் வருடாந்தம் அச் செலவினம் அண்ணளவாக ரூபா 15,155.69 மில்லியன் ஆகின்றமை அவதானிக்கப்பட்டது.

(உ) அதிகார சகைக்கு சொந்தமான வரையறுக்கப்பட்ட அதிவே வீதி (தனியார்) கம்பனி 2016 ஆம் ஆண்டு தொடக்கம் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமரப்பித்திருக்கவில்லை. அவ்வாறே மகநெகும நிர்மாணிப்பு மற்றும் இயந்திர உபகரண கம்பனியின் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அப்பிராயம் மறுக்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிற்கு பாதகமான கணக்காய்வு அபிப்பிராயம் முன்வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 133 ஆம் பரிவின் பிரகாரம், கம்பனியொன்றினால் ஒவ்வொரு ஆண்டிற்கு ஒரு தடவை பங்குதாரர்களின் வருடாந்த பொதுக் கூட்டம் நடத்தப்பட வேண்டிய போதிலும், அதிகார சபைக்கு சொந்தமான அதன் 04 துணைக் கம்பனிகள் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளிடையே மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவதற்கு பேணிச் செல்லப்படுகின்ற இடை கம்பனி கணக்குகளில் 02 ஆண்டுகளை கடந்த ரூபா 107.17 மில்லியன் மற்றும் 05 ஆண்டுகளை கடந்த ரூபா 314.58 மில்லியன் அதிகார சபைக்கு பெற வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த மீதிகள் தீர்க்கப்படுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2023 மார்ச் 20 திகதிய CP/23/0394/608/033 ஆம் இலக்கத்தின் பிரகாரம் அதிகார சபைக்கு சொந்தமான 04 துணைக் கம்பனிகள் கலைப்பதற்கு தீர்மானித்திருந்தமையின் காரணத்தினால் குறித்த கம்பனிகளின் தொடர்ச்சியான நிலைத்திருத்தன்மை நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது.

(ஐ) அதிகார சபையினால் 2022 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் நிலைப்போறான அபிவிருத்தி நோக்கங்கள் நிறைவேற்றக் கூடிய வேலைத் திட்டம் வெளிப்படுத்தப்படாததுடன் அதிகார சபையினால் இனங்காணப்பட்ட நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கங்கள் கீழ் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள செயற்திட்டங்கள் என்ன எனவும், அதற்குரிய நிலைப்பேறான அபிவிருத்தி குறிக்காட்டிகள் (SDG Indicators) மற்றும் ஆண்டினுள் அக் குறிக்காட்டிகளின் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் போன்ற அளவுக்கோள்கள் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2030 ஆம் ஆண்டு வரை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிலைப்பேறான நோக்கங்கள் உறுதியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிவே வீதிகளின் இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவுகளின் பதவியணிக்காக நிர்வாக பிரிவினால் ஒதுக்கப்பட்ட 81 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் காணப்பட்ட போதிலும், அத் திகதியில் அப் பிரிவுகளில் பணியாற்றிய உள்ளவாரான பதவிகளின் எண்ணிக்கை 136 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளை விஞ்சி 55 ஊழியர்கள் சேவையாற்றுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும், அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் அதிவேக வீதிகளின் இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவுகளின் காசாளர்கள் மற்றும் காப்பாளர்களாக நியமனம் பெற்ற எனினும் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் தற்காலிகமாக சேவையாற்றும் 24 நபர்கள் குறித்த நிரந்தர பதவிளுக்கு இணைக்கப்பட்டிருக்கவும் இல்லை.

(ஓ) அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட உள்ளக சுற்றறிக்கையின் ஊடாக நேரடி தொழிலாளர் அடிப்படையில் இணைக்கப்பட்ட ஊழியர்கள் அலுவலக நடவடிக்கைகளில் பணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டமென தெரிவிக்கப்பட்டிருப்பினும், அதற்கு முரணாக மாகாண அலுவலகங்களுக்கு நிரந்தர மற்றும் தற்காலிக அடிப்படையில் ணைக்கப்பட்ட நேரடி தொழிலாளர்கள் முறையே 106 மற்றும் 181 நபர்கள் வீதி பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக பணிக்கப்படாது அலுவலக பணிகளுக்காக பணிக்கப்பட்டிருந்தனர்.

(ஔ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 09 இன் 15 ஆம் பந்தியின் பிரகாரம், இருப்பு கிரயம் மற்றும் தேறிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், பயன்படுத்த முடியாத கிரயம் ரூபா 26.68 மில்லியனான வாகன உதிரிப் பாகங்கள் நியமத்தின் பிரகாரம் பெறுமதியிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டு தொடக்கம் நிதிக் கூற்றுக்களில் குறித்த பெறுமதிக்கு சமமான பெறுமதி மாற்றமடையாத இருப்பிற்கான ஒதுக்கமாக காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், அப்

இருப்பு கைதவிர்ப்பு செய்வதற்கு 2020 சனவரி 02 ஆந் திகதி குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும். குறித்த கைதவிர்ப்பு நடவடிக்கைகள் 2023 யூன் 15 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

டப்.பீ.சீ விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலை

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

பந்தி இல	கணக்காய்வு பந்தி	எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலை
(அ)	இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 02 இன் 25 ஆம் பந்தியின் பிரகாரம், பதவியணிக்காக பெற்றுக் கொடுக்கப்படுகின்ற கடன் முதலீட்டு செயற்பாட்டின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக பெற்றுக் கொடுக்கப்பட்ட மற்றும் அறவிடப்பட்ட கடன் தொகைகளின் தேறிய விளைவாகிய ரூபா 13.06 மில்லியன் காரணி மூலதன மாற்றங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.	இ.பொ.க. நியமம் 02 இன் 25 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனமொன்று எதிர்காலத்தில் சேவையாற்றும் பங்களிப்பின் எதிர்பார்ப்பில் வளங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற காசுப் பாய்ச்சல் முதலீட்டு செயற்பாடு ஆகும். அதன் பிரகாரம் அதிகார சபையின் ஊழியர் கடன் பெற்றுக் கொடுத்தல்/ அறவிடல் நிறுவனத்தின் எதிர்கால சேவை நிறைவற்றுவதற்குரிய வளங்களுக்கான முதலீடொன்று அல்ல. அது முதலீடுகளிலிருந்து வேறுபட்ட செயற்பாட்டுச் சுழற்சியில் மேற்கொள்ளப்படுவதனால் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. எனவே, ஊழியர் கடன் மாறுபடல், பணி மூலதனத்தின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது.
(ஆ)	அதிகாரச் சபைக்கு சொந்தமான கிரயம் ரூபா 503.5 மில்லியனான 134 வாகனங்கள், கிரயம் 50.4 மில்லியனான 94 கட்டிடங்கள் மற்றும் கிரயம் 111.5 மில்லியனான பெரி படகுகள் மற்றும் கன்டேனர்கள் 2021 சனவரி 01 ஆம் திகதியாகையில் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டிருந்தது. எவ்வறெனிலும், அச் சொத்துக்கள் தொடர்ந்தும் அதிகார சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும் பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் அச் சொத்துக்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிராததுடன் பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் அச் சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் தொடர்பான மதிப்பிடப்பட்ட குறைப்பாடு சீர் செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	**<u>ரூபா 503.50 மில்லியனான 134 வாகனங்கள்</u>** முழுமையாக தேய்வு செய்யப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பாக அதன் மதிப்பீட்டு பெறுமதி பட்டயப் பொறியியளாளர்களின் குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் அதற்கான குறித்த இணக்கம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த ஆண்டுகளில் கணக்காய்வு பிரிவினால் மேற்கொண்ட அறிவிப்பொன்றின் பிரகாரம் வாகனங்களுக்கான பயன்படு ஆயுட்காலம் 10 ஆண்டிலிருந்து 05 ஆண்டுகள் வரை மாற்றப்பட்டதுடன் அதன் பிரகாரம் நீங்கள் கூறும் மதிப்பிடப்பட்ட பிழை இல்லை. **<u>ரூபா 50.40 மில்லியனான 94 கட்டிடங்கள்</u>** முழுமையாக தேய்வுக்குட்பட்டுள்ள கட்டிடங்கள் எண்ணிக்கை 95 ஆகும். தற்போது இந்த கட்டிட வகுப்பு முழுதும் விலைமதிப்பு திணைக்களம் ஊடாக மதிப்பிடப்பட்டு வருகின்றது. இந்த 95 கட்டிடங்களில் 31 கட்டிடங்களின் மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் விலைமதிப்பு திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டு பெறுமதிகள் கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
(இ)	இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 42 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துக்களாக இனங்காணப்பட்ட பின்னர் ஆதனம் பொறி உபகரண உறுப்படியொன்றின் நியாயமான பெறுமதி நம்பகத்தன்மையுடன் அளவிடக்கூடிய போது நியாயமான பெறுமதிக்கு கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபையின் பயன்பாட்டில் காணப்பட்ட 271 மோட்டார் வாகனங்களன் பெறுமதி நிதக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது சிராக்கல் நடவடிக்கைகள் ஊடாக 271 வாகனங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் குறித்த சிராக்கல்கள் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.
(ஈ)	இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 43 ஆம் மற்றும் 51 ஆம் பந்திகளின் பிரகாரம், சொத்துக்களின் நியாயமான பெறுமதி சாதாரணமாக சந்தை அடிப்படையிலான சான்றுகளின் அடிப்படையில் மதிப்பிடப்பட வேண்டியதுடன் முழு சொத்துக்கள் வகுப்பே மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும், அதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் தொடர்புடைய	வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக காப்புறுதி பெற்றுக் கொள்ளும் போது அவ் வாகனங்கள் தொடர்பாக முறையான மதிப்பீட்டு பெறுமதி தீர்மாணிக்கப்பட்டு காப்புறுதி பெற்றுக் கொள்ளப்படும். இந்த தொழில்சார் மதிப்பீடு பட்டய பொறியியளாளர்களினால் ஆன அதிகார சபையின் குழுவொன்றின் ஊடாக மேறகொள்ளப்படும்.

translation is correct.
Name : T.L. Elanga
Date : 29/01/2024
Signature : Offaya

	தொழில்சார் தகைமைகளை உடைய மதிப்பீட்டாளரொருவரினால் நடைமுறை சந்தை விலை மதிப்பிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இன்றி, அதிகார சபைக்கு சொந்தமான 1,689 வாகனங்களின் பெறுமதி, கிரயத்திற்கு மற்றும் காப்புறுதி நிறுவனத்தினால் காப்புறுதி செய்யப்பட்ட மதிப்பினை அடிப்படையாகக் கொண்டு ரூபா 7,108.9 மில்லியனாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.	
(உ)	இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 58 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பிரதான பகுதிகளின் பயன்படு ஆயுட் காலம் ஒன்றுக்கொன்று வேறுப்படுகின்ற போது அப் பகுதிகள் ஒன்றுக்கொன்று வேறுப்படுகின்ற தேய்மான வீதத்தின் அடிப்படையில் தேய்மானம் செய்யப்படல் வேண்டும். எவ்வாறெனிலும் அதிகார சபையின் மொத்த சொத்துக்களில் 63 சதவீதத்தின் பிரநிதித்துவப்படுத்தும் ஒன்றுக்கொன்று வேறுப்பட்ட பயன்படு ஆயுட் காலத்தினை உடைய வீதிகளின் கால்வாய்கள், வீதி எல்லைகள், வீதி மேற்பரப்பு, வீதி சமிஞ்சைகள் உட்பட வெவ்வேறு பகுதிகளுக்காக தொழில்சார் மதிப்பீட்டின் அடிப்படையில் தேய்மான வீதத்தினை தீர்மானிப்பதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் ஒரே தேய்மான வீதத்தின் கீழ் தேய்மானம் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அச் சொத்துக்களின் உண்மையான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.	இலங்கை வீதி சொத்து முகாமைத்துவ அமைப்பு (Sri Lanka Road Assets Management System (SLRAMS) ஊடாக முறையான அணுகுமுறைக்கான (Systematic approach) சொத்துக்கள் மதிப்பீட்டு அமைப்பு தொகுதி (Assets Valuation System Module) அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, TCAM செயற்திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் முன்னோடி செயற்திட்டத்தின் மதியுரை சேவையின் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்தின் ஊடாக அதிகார சபையின் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றனர். 2024 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த அமைப்பின் ஊடாக சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
(ஊ)	இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்படும் போது சொத்துக்கள் வகுப்பே மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக அதிகார சபைக்கு சொந்தமான 632 கட்டிடங்களில் 262 கட்டிடங்கள் மட்டும் 2022 ஆம் ஆண்டு இறுதியில் மீள் மதிப்பீடு செய்ய்பட்டு கணக்கிடப்பட்டிருந்தது.	அதிகார சபைக்கு சொந்தமான கட்டிடங்கள் வகுப்பே விலைமதிப்பு திணைக்களத்தின் ஊடாக மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அக் கட்டிடங்களில் 347 கட்டிடங்களுக்கான மதிப்பீட்டு பெறுமதிகள் தற்போது பெறப்பட்டுள்ளது. எஞ்சிய கட்டிடங்களுக்கான மதிப்பீட்டு பெறுமதிகள் பெற்றுக் கொடுப்பதும் நடைப்பெற்று வருகின்றது. எனினும் இந்த சொத்துக்களுக்கான மதிப்பீட்டு பெறுமதி விலைமதிப்பு திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் திகதியினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. விலைமதிப்பு திணைக்களம் இந்த அனைத்து கட்டிடங்களுக்காகவும் ஒரே திகதியில் மதிப்பீட்டு பெறுமதிகளை பெற்றுக் கொடுக்குமெனில் அக் கட்டிடங்கள் வகுப்பே ஒரே திகதியில் கணக்கிடப்பட முடிந்த போதிலும் பிரயோக ரீதியில் இந்த செயன்முறைக்கு தற்போது 03 ஆண்டுகள் கடந்துள்ளது. எவ்வாறெனினும், மதிப்பீட்டு பெறுமதி பெறப்பட்டவுடனே கணக்கிடப்படுவதன் ஊடாக மதிப்பீட்டு பணி நிறைவடைந்து குறித்த சொத்துக்கள் வகுப்பே முறையாக மீள்மதிப்பிடக் கூடும்.
(எ)	இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 13 இன் 09 ஆம் பந்தியின் பிரகாரம், முதலீட்டுச் சொத்துக்களாக இனங்காணப்பட வேண்டிய ரூபா 40 மில்லியன் பெறுமதியான பொரல்ல சுரங்க பாதையினுள் அமைந்துள்ள 20 கடைகள் மற்றும் துணைக் கம்பனிகள் 02 இற்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்த காணிகளின் பெறுமதி முதலீட்டு சொத்துக்களாக நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பொரல்ல சுரங்க பாதையினுள் அமைந்துள்ள கடைகள் முதலீட்டு சொத்தாக காண்பித்தல் தொடர்பில் உடன்பாடு எதிர்காலத்தில் எடுக்கப்படும். வரையறுக்கப்பட்ட மகநெகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ தனியார் கம்பனியினால் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட காணிகளுக்காக 2023 மே மாதம் வரையில் குத்தகை கட்டணம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்பட்டுள்ளது. அதிகார சபை மற்றும் குறித்த கம்பனி இடையே ஒப்பந்தமொன்றில் உடன்படுவதற்கு வரைவொன்று தாயரித்திருந்த போதிலும் அக் கம்பனியை கலைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளமையினால் ஒப்பந்தமொன்றிற்கு உடன்பட முடியவில்லை.

		வரையறுக்கப்பட்ட மகநெகும இமல்ஷின் தனியார் கம்பனிக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக் கொடுக்கப்பட்ட காணிகள் தொடர்பில் அறவிடப்பட வேண்டிய வாடகை கட்டணம் அறவிடப்படுவதற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ஏற்றுக் கொள்ள இயலாதென அக் கம்பனியின் தலைவர் மற்றும் முகாமைத்துவ பணப்பாளரின் MNE/GM/064/202 ஆம் இலக்க மற்றும் 2022.12.01 திகதிய கடிதத்தின் ஊடாக தெரிவிக்கபட்டுள்ளது. அக் கம்பனியினால் விலைமதிப்பு அறிக்கை ஏற்றுக் கொள்ளப்படாமையினால் மற்றும் அக் கம்பனியும் கலைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளமையினால் ஒப்பந்தமொன்றிற்கு எழுவதற்கு முடியவில்லை.
(ஏ)	இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 14 இன் 16 ஆம் பந்தியின் பிரகாரம், தொடர்புடைய தரப்பினர்கள் தொடர்பாக விபரங்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 14 இன் 16 ஆம் பந்தியின் பிரகாரம் தொர்புடைய தரப்பினரை வெளிப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.
(ஐ)	இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 16 இன் 30 ஆம் பந்தியின் பிரகாரம், பணி நிறைவு நிலையின் அடிப்படையில் (Stage of Completion) வாடிக்கையாளர் ஒப்பந்த வருமானம் இனங்காணப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக அதிகார சபையினால் மீளாய்வாண்டில் ரூபா 107.28 மில்லியன் முழுமையாக நிறைவு செய்யப்பட்டதன் அடிப்படையின் கீழ் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது.	வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வாடிக்கையாளர் பணிகளுக்காக எழுகின்ற ஒப்பந்தத்திற்கு இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 16 இன் 33 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கிடப்படுவதுடன் கருதப்படும் காலப்பகுதிக்காக வாடிக்கையாளர் பணிகளை நிறைவு செய்யும் அளவின் அடிப்படையில் வருமானத்தினை அடையாளப்படுத்தப்படும். பணிகள் நிறைவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்களின் பணிகளின் சேமிப்பு, அதாவது பணிகள் நிறைவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்கள் வைப்புக்களின் இருப்புத் தொகை வருமானத்திற்கு பதிவழிக்கப்படும் முறைமை அதிகார சபையினால் வருடாந்தம் செயற்படுத்தப்படுகின்றதுடன் அது இறுதி கணக்கு அறிக்கையில் பொது குறிப்பு 5 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
(ஒ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 141 (ங) பந்தியின் பிரகாரம், ஊழியர் நலன்கள் கணக்கிடும் போது அறிக்கையிடும் திகதியில் பயன்படுத்தப்பட்ட பிரதான ஆயுட்கால அனுமானத்தின் அடிப்படையில் கழிவு வீதம், கழிவு வீதம் தீர்மானிக்கப்பட்டது எந்த அடிப்படையில், மற்றும் எதிர்பார்க்கப்பட்ட சம்பள அதிகரிப்புக்கள் உட்பட பயன்படுத்தப்பட்ட ஏனைய பொருண்மையான அனுமானங்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், நிதிக் கூற்றுக்களிலுள் அவ்வாறான எந்தவொரு வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்களில் ஊழியர் நலனை கணிக்கும் போது பயன்படுத்தப்படுகின்ற அனுமானங்கள் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
(ஓ)	நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பெறுமதி ரூபா 242.2 மில்லியான அக்ரோ உறுப்படி (Acroew Item) மீதி உறுதி செய்துக் கொள்வதற்கு உரிய விரிவான அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமையின் காரணத்தினால் குறித்த பெறுமதிகள் சரியானவை என கணக்காய்வின் போது உறுதி செய்ய முடியவில்லை.	ரூபா 242,286,928.00 பொறுமதியான அக்ரோ உறுப்படிகளின் (Acroew Item) தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அவ் உறுப்படிகளின் பெறுமதிகள் தனித் தனியே அதிகார சபைக்கு பெற்று கொடுக்கப்படவில்லை. குறித்த பெறுமதிகள் தொடர்பான தகவல்கள் தொடர்புடைய செயற்திட்டத்திலிருந்து கோரப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும்.
(ஔ)	வீதி அபிவிருத்தி அதிகார சபைன் நிரந்தர விடய பரப்பிற்கு மாறாக தேசிய வங்கிகள் ஊடாக நிதியளிக்கப்பட்ட கிராமிய வீதி செயற்திட்ட பிரிவின் ஊடாக தேசிய, பிரதேச மற்றும் கிராமமாக 100,000 கிலோ மீட்டர் மாற்று வீதிகள் மறுசீரமைக்கும் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் 31 இல் உள்ளவாறு பகுதிளயவில் நிறைவு செய்யப்பட்டிருந்த தேசிய பெருந் தெருக்களுக்கு சொந்தமற்ற	100000 கிலோ மீட்டர் மாற்று வீதியினை மறுசீரமைக்கும் செற்திட்டத்திற்கு உரிய கணக்கீட்டு செயன்முறை கணக்கீட்டு கொள்கையின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வருமானம் மற்றும் செலவீனம் குறித்த காலப்பகுதிக்குரியதாக சீராக்கப்படும். சொத்துக்களின் உரித்தினை உடைய நிறுவனங்களுக்கு குறித்த சொத்தினை கையளிக்கும் போது வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ஏற்கப்பட்ட மூலதன

	வீதிகளுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 125,586 நடைமுறையிலுள்ள வேலையாக (WIP) இனங்காணப்பட்டிருந்தது. இந்த கட்டுமானம் பூரணமாக நிறைவு செய்யப்பட்ட பின்னர் செலவாக பதிவழிக்கப்படுமென மற்றும் இந்த செலவீனம் காரணமாக அதிகார சபையின் அதிகரிப்பிற்கு அல்லது பற்றாக்குறைக்கு ஏற்படும் பாதிப்பு செயற்திட்டத்திற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் மீண்டும் செலுத்துவதற்கு பொது திறைச்சேரியிலிருந்து கொடை பெறப்பட்ட பின்னர் ஈடு செய்யப்படுமெனவும் நிதிக் கூற்றுக்களுடனான குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் இரண்டு காலக்கட்டத்தினுள் வருமானம் இனங்காணல் மற்றும் செலவீனமாக பதிவழித்தல் இரண்டு காலப்பகுதியினுள் இனங்காணப்படல் இணக்க கோட்பாட்டிற்கு முரணானது என அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த மூலதன செலவீனம் சொத்துக்களின் உரித்தினை உடைய நிறுவனங்களுக்கு மாற்றப்படாமையினால் அரச கணக்குகளில் மூலதன சொத்துக்களாக காண்பிக்கப்பட்ட போதிலும், அதிகார சபையினால் மீண்டெழும் செலவீனமாக பதிவழிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.	செயவீனம் அந் நிறுவனங்களுக்கு எதிர்காலத்தில் தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
(க)	அதிகார சபைக்கு சொந்தமான A மற்றும் B தரங்களுக்குரிய பெருந் தெருக்களின் மொத்த தூரம் 12,225 கிலோ மீட்டர் என்றாலும் தேசிய பெருந் தெருக்கள் மூலதனமாக்கப்படல் ஆரம்பிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 285 வீதிகளுக்கு சொந்தமான 3,267 கிலோ மீட்டர் மட்டும் மூலதனமாக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான A மற்றும் B தரங்களுக்குரிய 8958 கிலோ மீட்டர் தூரத்திற்கான பெறுமதி நிதி நிலைமைக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிராததுடன், இது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த வீதி அமைப்பின் தூர அளவில் 73 சதவீதமாகும்.	வீதிகளை மூலதனமாக்குவதற்கு முன்மொழியப்பட்ட செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் போக்குவரத்து தொடர்பு மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் (TCAMP) கீழ் பின்வரும் பணி உறுப்படிகள் தற்போதுள்ள மற்றும் முன்மொழியப்பட்டுள்ள செயன்முறைகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. (1) சொத்துக்கள் விலைமதிப்பு கைப்புத்தகத்திற்காக தொழிநுட்ப குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. குறித்த உத்தியோகத்தர் குழுவிற்காக ஒரு நான் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது. மதியுரை சேவையினால் முன்னோடி செயற்திட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. (2) A, B, AB தரங்களிலான மற்றும் அதிவே வீதிகளின் குறித்த வீதிகளின் உதிரிப்பாகங்களின் பட்டியல் SLRAMS இல் உள்ளிடப்பட்டு நிறைவடைந்துள்ளது. (3) சிறுபாலம்/ பக்க வடிகால்கள்/ இதர கட்டமைப்புக்களின் தகவல்கள் சேகரிப்பதற்கான தொலைப்பேசி ஆப் தயாரிக்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளது. (4) SLRAMS இல் சொத்துக்கள் விலைமதிப்பு மொடியூல் நிர்மாணித்தலானது வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. (5) நில ஊடுருவல் ரேடார் (GPR) இயந்திரம் பெறுகைக்கு தொழிநுட்ப விவரக்குறிப்பு குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. TCAMP செயற்திட்ட காலப்பகுதியினுள் பெறுகை நடவடிக்கைகள் நிறைவு செய்துக் கொள்வதற்கு இயலாமையினால் உலக வங்கி நிதியுதவியின் கீழ் தற்போது செயற்படுத்தப்படும் ICDP (Inclusive Connectivity and Development Project) செயற்திட்டத்தின் கீழ் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு உலக வங்கியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ளது. உலக வங்கி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் ICDP செயற்திட்டத்தின் கீழ் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. வீதி சொத்துக்களின் விலைமதிப்பிற்கு தேவைப்படுகின்ற மற்றும் TCAMP செயற்திட்ட காலப்பகுதியினுள் முன்மொழியப்பட்டிருந்த எனினும் பூர்த்தி செய்யப்பட

		முடியாத ஏனைய பணிகள் (6 மாகாணங்களுக்கான சிறுபாலம்/ பக்க கால்வாய்கள்/ இதர கட்டமைப்புக்களின் தகவல்களைதிரட்டல், மொபைல் ஆப் பயன்பாட்டில் மற்றும் வீதி எல்லை உரித்து தொடர்பான தகவல்கள் திரட்டல்) வேறு செயற்திட்டமொன்றின் ஊடாக நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.
(ங)	2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 284 கிலோ மீட்டர் அதிவேக வீதிகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன், திறைசேரியின் ஊடாக வரிசை அமைச்சிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட வெளிநாட்டு நிதியின் ஊடாக செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் ஊடாக அக் கட்டுமானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் மொத்த கட்டுமான பெறுமதியில் அதிவேக வீதியாக ரூபா 767,630 மில்லியன் அதிகார சபையின் சொத்துக்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டு அரச கொடை கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனிலும், இந்த கணக்கு வைத்தலுக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பொது திறைச்சேரியிலிருந்து பெற்றுக் கொடுக்கும் எழுத்துமூல இணக்கம்/ அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	இது தொடர்பாக பொது வியாபார திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட PED/I/RDA/3/II (i) ஆம் இலக்க மற்றும் 2022.07.25 திகதிய கடிதத்தின் ஆலோசனையின் பிரகாரம் வெளிநாட்டு கடன்களால் நிதியளிக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட அதிவேக வீதிகள் மற்றும் ஏனைய செயற்திட்டங்கள் நிறைவடைந்த பின்னர் குறித்த வரிசை அமைச்சினால் அச் சொத்துக்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சட்ட ரீதியாக கையளிக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது..
(ச)	அதிகார சபையினால் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது இடம்பெயர்ந்தவர்களை மீண்டும் குடியமர்த்தப்படுவதற்கு கொள்வனவு செய்யப்பட்ட 07 ஹேக்கர் காணி, வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்ட கணினி தகவல் அமைப்பொன்று, 25 சைக்கில்கள் மற்றும் 22 வாகனங்கள் நிலையான சொத்துக்களாக கணக்கிடப்படாமையின் காரணத்தினால் அதிகார சபையின் சொத்துக்கள் ரூபா 263.35 மில்லியன் குறைவாக கணிக்கப்பட்டிருந்தது.	காணிகள் தொடர்பாக பெறப்பட்ட தகவல்கள் பரிசோதிக்கப்பட்டு வருவதுடன் குறித்த கணக்குகளின் சீராக்கல் நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். ரூபா 100.15 மில்லியன் ஆன குறித்த கணினி அமைப்பு தொடர்பாக விடயங்கள் உறுதி செய்யப்பட்டு வருகின்றது. அதன் பின்னர் குறித்த சீராக்கல் மேற்கொள்ளப்படும். செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் அதிகார சபைக்கு கையளிக்கும் போது அவ் வாகனங்கள் தொடர்பாக செயற்திட்டம் கணக்கு வைக்கும் இறுதி கட்டம் தொடக்கம் அதிகார சபையின் புத்தகங்களுக்கு எடுக்காது. பெரும்பாலும் அவ் வாகனங்கள் அதிகார சபைக்கு கையளிக்கும் போது தேய்விற்கு/ பகுதியொன்று தேய்விற்கு உட்பட்டுள்ளதுடன் அவற்றின் கிரயத்தினை அடிப்படையாகக் கொண்டு அதிகார சபையின் கணக்கு வைத்தல்கள் மேற்கொள்ளப்படாது. எவ்வாறெனினும் அதிகார சபைக்கு கையளித்த பின்னர் அதற்காக காப்புறுதி பெற்றுக் கொள்வதற்கு முன்னர் முறையான விலைமதிப்பு பெறுமதியொன்று பெற்றுக் கொடுக்கப்படும். (பட்டய பொறியியலாளர்களினால் ஆன குழுவொன்றின் ஊடாக) அப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு அதிகார சபையின் புத்தகங்களில் கணக்கு வைக்கப்படும். எவ்வாறாயினும் ரூபா 135.10 மில்லியன் ஆன 22 வாகனங்கள் மற்றும் 25 சைக்கில்களுக்கு உரிய தகவல்கள் சேகரித்து சீராக்குவதற்கு திட்டமிடமிடப்பட்டுள்ளது. கணக்காய்வு பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி ரூபா 263.35 மில்லியன் அல்ல ரூபா 269.25 மில்லியன் என கருதப்பட்டு பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.
(ஞ)	வெளிநாட்டு நிதியுதவியின் கீழான 08 செயற்திட்டங்களின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி அதிகார சபைக்கு கொடுக்கப்பட்டிருந்த கிரயம் ரூபா 34,044.46 மில்லியானான நிலையான சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்து அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிராமையின் காரணத்தினால் நிலையான சொத்துக்கள் பெறுமதி குறைவாக கணிக்கப்பட்டிருந்தது.	செயற்திட்டத்திற்கு சொந்தமான சொத்துக்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கும் போது அனைத்து சொத்திற்காகவும் ரூபா பெறுமதி பெற்றுக் கொடுக்கப்பட்டு கணக்கிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. EXIM வங்கி நிதியுதவி ஹ'னான் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2023.12.31 திகதியுடன் நிறைவடைவதுடன் அமைச்சின் செயலாளரின் செயற்திட்டம் நிறைவு செய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் பிரகாரம் அனைத்து சொத்துக்களும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு

		பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும், 2023.12.31 இல் உள்ளவாறு இறுதி கணக்கு தயாரிக்கும் போது செயற்திட்டத்தின் ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி அதிகார சபையின் கணக்குகளுக்கு உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். புதிய களனி பாலத்திலிருந்து அதுரிகிரிய வரையிலான அதிவேக வீதி செயற்திட்டம் கலைக்கும் போது செயற்திட்டத்திற்கு சொந்தமான நிலையான சொத்துக்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊடாக சொத்து முகாமைத்துவத்திற்கு உரியதாக வெளியடப்பட்டுள்ள வழிக்காட்டிகளின் பிரகாரம், அதிகார சபைக்கு முறையான செயன்முறையின் கீழ் கையளிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் RDA/EHP/NKBA/ACC/W.Up/03 ஆம் இலக்க மற்றும் 2023.03.23 திகதிய கடிதத்தின் ஊடாக அதிகார சபைக்கு நிலையான சொத்துக்கள் கையளித்தல் தேறிய புத்தக பெறுமதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மண்சரிவு அணர்த்த தடுப்பு செயற்திட்டத்தின் அலுவலக உபகரணங்கள் RDA/LDPP/E/7(PMU) ஆம் இலக்க கடிதத்தின் ஊடாக கண்டி பல்நோக்கு போக்குவரத்து முணைய செயற்திட்டத்திற்கு முறையே கையளிக்கப்பட்டுள்ளது. ஏனைய செயற்திட்டங்களில் தொடர்புடைய மூலதமாக்கப்படல் தொடர்பான தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு குறித்த மூலதனமாக்கப்படலானது விரைவில் மேற்கொள்ளப்படும். மண்சரிவு அணர்த்த தடுப்பு செயற்திட்டத்தின் வீதிகளுக்கு தொடர்புடைய பெறுமதி 2023 ஆகஸ்ட் மாதம் வீதிகளின் கீழ் மூலதனமாக்கப்பட்டுள்ளது.
(ட)	மீளாய்வாண்டின் இறுதி திகதி சமர்ப்பிக்கபபட்டிருந்த நிதிக் கூற்றுக்கள் ஊடாக காண்பிக்கப்பட்டிருந்த கட்டிடங்கள், இயந்திர உபகரணங்கள் உட்பட ரூபா 961.71 மில்லியன் ஆன சொத்துக்களுக்கு உரியதாக கணக்காய்விற்கு சமர்ப்பித்த சொத்துக்கள் அட்டவணையில் பெறுமதி ரூபா 815.74 மில்லியன் ஆகியமையினால் குறித்த பெறுமதிகள் இடையே ரூபா 145.96 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.	இதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் பதிவேடு மற்றும் நிதிக் கூற்றுக்களின் சொத்துகள் பதிவேடுகளின் மீதிகளில் உள்ள முரண்பாடுகள் பரிசோதிக்கப்பட்டு தேவையான சீர்திருத்தம் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.
(ண)	அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களினுள் மகநெகும இமல்ஷன் கம்பனியின் 99 சதவீத நேரடி கட்டுப்பாட்டு உரித்தொன்று அதிகார சபைக்கு உரியதென வெளிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அதற்கான பங்குச் சான்றிதழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் கம்பனியின் பணிப்பாளர் சபையினுள்ளும் அச் சதவீதத்திற்கு சமமான பிரதிநிதித்துவமொன்று இல்லாமை அவதானிக்கப்பட்டது. மேலும், 2004 ஆம் ஆண்டில் குறித்த கம்பனியில் ரூபா 01 மில்லியன் முதலீடொன்று மேற்கொள்ளப்பட்டதென அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் குறித்த கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் அது கடன் தொகையாக கணக்கிடப்பட்டிருந்தது.	மகநெகும இமல்ஷன் கம்பனியின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களை நியமிப்பது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பார் சபையின் ஊடாகவே ஆகும். மகநெகும இமல்ஷன் கம்பனியின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்களை போன்று வெளி தரப்பினரையும் கொண்டுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பங்குச் சான்றிதழ் பல தடவைகள் கோரப்பட்டிருந்த போதிலும் இதுவரையில் அச் சான்றிதழ் அதிகார சபைக்கு பெறப்படவில்லை. அவ்வாறெனினும், அதிகார சபையினால் முதலிடப்பட்ட தொகை உரிமையாண்மை முதலீடாக அதிகார சபையின் புத்தகங்களில் காண்பிக்கப்பட்டுள்ளது.
(த)	வரிசை அமைச்சில் குறித்த செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு தேவையான பிரகாரம் பொது திறைச்சேரியிலிருந்து கிடைக்கப்பெறாமையின் காரணத்தினால் 2022 செப்தெம்பர் 30 ஆந் திகதியளவில் வரிசை அமைச்சின் செயலாளரின் கோரிக்கை பிரகாரம் அதிகார சபையினால் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு 2021 மற்றும் மீளாயவாண்டுகளில் முறையே ரூபா 494.2 மில்லியன் மற்றும் 1,470 மில்லியனாக	வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் முகாமைத்துவ பிரிவுகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட தொகை கணக்கிடப்பட வேண்டிய விதம் வரிசை அமைச்சிடம் கேட்ட பின்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பிரதியுடன் அமைச்சின் செயலாளரினால் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளருக்கு MOH/HWY/Acc18/2022/14 ஆம் இலக்க மற்றும் 2023.02.17 திகதிய கடிதம் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பிரதான நிதி உத்தியோகத்தரினால் பொது

	கூட்டுத்தொகை ரூபா 1,964.2 மில்லியன் ஆன தொகை கடன் அடிப்படையில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் குறித்த தொகை, பொது திறைச்சேரியிடமிருந்து பெற வேண்டிய தொகையாக அதிகார சபையின் கணக்குகளில் காண்பிக்குமாறு வரிசை அமைச்சின் செயலாளரினால் 2022 ஆகஸ்ட் 05 ஆந்ந் திகதி ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதிகார சபையினால் குறித்த தொகை திறைச்சேரியிடமிருந்து பெற வேண்டிய தொகையாக கணக்கிடப்பட்டிருந்தது.	வியாபார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு MOH/HWY/Acc18/2022/14 ஆம் இலக்க மற்றும் 2023.04.26 திகதிய கடிதத்தின் ஊடாக ஆலோசனை கோரப்பட்டுள்ளதுடன் அதற்கு இது வரையில் பதில் கிடைக்கப்பெறவில்லை. 2023.10.30 இல் உள்ளவாறு பெற வேண்டிய கடன் தொகையாவது ரூபா 1,690.20 மில்லியன் ஆவதுடன் இந்த தொகையை தீர்க்குமாறு வரிசை அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ந)	வீதியினை விரிவாக்கல் மற்றும் மேம்படுத்தலின் போது சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு உரியதாக 38(அ) வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்ட திகதி தொடக்கம் இழப்பீட்டிற்குரிய முதல் இழப்பீடு செலுத்தும் திகதி வரையில் 07 சதவீத வருடாந்த வட்டி குறித்த இழப்பீட்டு உரிமையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய மொத்த சட்ட ரீதியான இழப்பீடு மற்றும் அதற்குரிய வட்டித் தொகை அதிகார சபையினால் இனங்காணப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.	காணிகள் சுவீகரிப்பு செயன்முறையின் போது 38 (அ) பிரிவின் கீழ் வர்த்தமானி பத்திரிக்கை வெளியிடப்பட்டு இழப்பீடு மற்றும் வட்டி செலுத்தும் செயன்முறை சில நிறுவனங்கள் தொடர்புடையதாக மேற்கொள்ளப்பட வேண்டிய செயன்முறையாகும். அதாவது நில அளவை திணைக்களம், பிரதேச செயலாளர் அலுவலகங்கள், விலைமதிப்பு திணைக்களம், காணி அமைச்சு, அரசாங்க அச்சு திணைக்களம், லேக்ஹவுஸ் நிறுவனம் போன்ற நிறுவனங்களும் கிராம உத்தியோகத்தர்களும், அதற்கு மேலதிகமாக தொடர்புகொள்ளும் ஏனைய நிறுவனங்களையும் குறிப்பிடப்படக் கூடும். காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரகாரம் சுவீகரிப்பு செயன்முறை பூர்த்தி செய்யப்பட்டு குறித்த இழப்பீடு மற்றும் வட்டித் தொகை செலுத்துவதற்கு அவ்வவ் பிரதேச செயலாளர் அலுவலகங்கள் ஊடாக நிதியேற்பாடு கோரப்பட்ட துண்டுகளுக்குரியதாக மட்டும் காணி பிரிவில் வவுசர்கள் தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டு கணக்கிடப்படும். அவ்வாறு கோரப்படாத துண்டுகளுக்காக கணிப்பு செய்யப்பட்டு வவுசர்கள் தயாரிக்கப்பட்டு கணக்கிடப்பட முடியாது.
(ப)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையின் மற்றும் அதன் துணைக் கம்பனிகள் இடையே காணப்பட்ட நடைமுறை கணக்குகளுக்குரிய சீராக்கல்கள் உரிய வண்ணம் மேற்கொள்ளாமையின் காரணத்தினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மற்றும் வரையறுக்கப்பட்ட மகநெகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ (தனி) கம்பனியின் மீதிகள் இடையே ரூபா 10.87 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.	வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மற்றும் வரையறுக்கப்பட்ட மகநெகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ தனியார் கம்பனியின் நடைமுறை கணக்கு இடையே இணக்கம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே அவ் இணக்க கூற்று குறித்த கம்பனிக்கு முன்வைக்கப்பட்டு அம் மீதிகள் இணங்காமைக்கான காரணங்கள் கோரப்பட்டதுடன் அதற்கு இதுவரையில் குறித்த கம்பனியிடமிருந்து பதில் பெறப்படவில்லை. பெறப்பட வேண்டிய கட்டிட வாடகைக்காக குறிப்பிடப்பட்டுள்ள வேறுப்பாட்டிற்கு காரணமாவது மகநெகும மதியுரை கம்பனியானது 2022 செப்தெம்பர் மாததம் தொடக்கம் திசெம்பர் வரை (04 மாதங்கள்) காலப்பகுதிக்கு வாடகை மற்றும் திருத்தப்பட்ட வாடகை கணக்கிடப்பட்டிராமை ஆகும். அதற்காக சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவினால் 24 ஆம் மற்றும் 25 ஆம் இலக்கங்களையுடைய இன்வொயிஸ்கள் 2023.05.16 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் குறித்த தொகை 2023 மே மாதம் தீர்க்கப்பட்டுள்ளது. 2022.12.31 இல் உள்ளவாறு நிர்மாணிப்பு பிரிவிற்கு உரியதாக மகநெகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ தனியார் கம்பனியின் மீதியில் ரூபா 5.9 மில்லியன் ஆன நிறுத்தி வைக்கப்பட்ட தொகை பதிவழிக்கப்பட்டுள்ளது. 2022.12.31 இல் உள்ளவாறு 100,000 கிலோ மீட்டர் செயற்திட்டத்தின் Coldmix வழங்கியமைக்காக வரையறுக்கப்பட்ட மகநெகும மதியுரை மற்றும் செயற்திட்ட தனியார் கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை, 2023 ஏப்ரல் மாதத்தினுள் செலுத்தப்பட்டுள்ளது. மத்திய மாகாணம் - ரூபா. 3,941,677.25 ஊவா மாகாணம் - ரூபா. 9,562,666.32 2022.12.31 இல் உள்ளவாறு ஏனைய Coldmix வழங்கியமைக்காக குறித்த கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை, 2023 மே ஆகையில் செலுத்தி தீர்க்கப்பட்டுள்ளது.

(ம)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆகையில் வெவ்வேறு செற்திட்டங்கள் ஊடாக அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்த கிரயம் ரூபா 33,770 மில்லியன் ஆன 2,099.41 ஹெக்டேயார் காணி, சொத்தாக இனங்காணப்பட்டு நடைமுறை அல்லாச் சொத்துக்கள் கீழ் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.	இது தொடர்பான விடயங்கள் நிதிக் கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கைகள் குறிப்பு இல 2.3 (iii) இல் இந்த காணி பெறுமதி தனியே காண்பிக்கப்பட்டுள்ளதுடன் தேய்வு செய்யப்படாது எனவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
(ய)	அதிகார சபையினால் நேரடியே காணி சுவீகரித்தலுக்கு பதிலாக கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட 105 வவுசர்கள் இரட்டிப்பாக கணிக்கப்பட்டதன் காரணத்தினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிலவிய இழப்பீடு மற்றும் வட்டி பெறுமதி ரூபா 34.42 மில்லியனினால் மிகையாக கணிக்கப்பட்டிருந்தது.	2022.12.31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய இழப்பீடு மற்றும் வட்டி பெறுமதி கணிக்கும் போது கணினி கோளாரொன்றின் காரணமாக 105 வவுசர்கள் இரண்டு தடவைகள் கணக்கிடப்பட்டுள்ளன. இந்த பிழையானது 2023 சனவரி மாதம் சீர் செய்யப்பட்டுள்ளது.
(ர)	2020 – 2021 ஆண்டில் 100,000 கி.மீ கிராம வீதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் கிராம வீதிகள் நிர்மாணிப்பிற்கு, உலக வங்கி நிதியுதவியின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற "Inclusive Connectivity and Development" செயற்திட்டத்தின் ஊடாக மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 2,112.11 மில்லியன் கிராமிய வீதிகள் நிர்மாணிப்பிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், அப் பெறுமதி அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு அல்லது அது தொடர்பில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உலக வங்கி நிதியுதவியின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற உள்ளடக்கிய இணைப்பு அபிவிருத்தி செயற்திட்டம் ஊடாக கடன் ஒப்பந்தம் பிரகாரம் மீள்நிதியிடல் வசதியின் கீழ் மீளாய்வாண்டினுள் ரூபா 2,712.11 மில்லியன் தொகை மீள்நிரப்பு செய்யப்பட்டுள்ளது. இதற்காக நிதி ஒப்பந்தம் பிரகாரம் 100,00 மிலோ மீட்டர் வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஊடாக மீள்நிதியிடல் காலப்பகுதியினுள் அதாவது 2020.10.31-2021.11.02 வரை கிராம வீதி நிர்மாணிப்பிற்காக செலுத்தப்பட்ட விலைப்பட்டியல் கருத்திற் எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் இந்த மீள் நிரப்பலினுள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு நேரடியே அல்லது மறைமுகமாக காசுப் பாய்ச்சல் உருவாகாததுடன் அனைத்து காசுப் பாய்ச்சல்களும் பிரதி திறைச்சேரி செயலாளரின் பெயரில் மத்திய வங்கியில் பராமரிக்கப்படும் பெயரிடப்பட்ட கணக்கொன்றிற்கு நேரடியே மாற்றப்பட்டுள்ளது. இந்த தொகை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மீள் நிரப்பு செய்யப்படாததுடன் அக் கொடுக்கல்வாங்கல் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு உரியதாகும்.
(ல)	2022 திசெம்பர் 31 திகதியாகையில் ருவன்புர அதிவேக வீதி செயற்திட்டத்தின் கீழ் அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 1,630.68 மில்லியன் ஆன காணி சுவிகரிக்கும் செலவினம் மூலதனமாக்கப்படாமையின் காரணத்தினால் காணி சொத்து அப் பெறுமதியினால் குறைவாக கணிக்கப்பட்டிருந்தது.	ருவன்புர அதிவேக வீதி செயற்திட்டத்தின் காணி சுவீகரிப்பு செலவீனம் மூலதனமாக்கப்படுவதற்கு 2023.03.31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட கலைப்பு கணக்கு பிரகாரம் காணி சுவீகரிப்பிற்கு தொடர்புடைய செலவீனம் உள்ளடங்கலாக அனைத்து செலவீனங்களும் நடைமுறையிலுள்ள வேலையின் கீழ் 2023 யூலை மாதம் மூலதனமாக்கப்பட்டது.
(வ)	2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் அதிவேக வீதிகளின் கீழ் மூலதனமாக்கப்பட்ட காணிகள் சுவீகரிக்கும் செலவினம் ரூபா 33,815.28 மில்லியன் ஆனதுடன் காணி பிரிவினால் பேணிச் செல்லப்படுகின்ற தகவல்கள் பிரகாரம் அதிவேக வீதிக்கான காணி சுவீகரிப்பு செலவீனம் ரூபா 17,169.51 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம், நிதிக் கூற்றுக்கள் மற்றும் காணி பிரிவினால் பேணிச் செல்லப்படுகின்ற செயற்திட்டங்களுக்கான காணி சுவீகரிப்பு தொடர்பான தகவல்கள் இடையே ரூபா 16,645.78 மில்லியன் வித்தியாசம் காணப்பட்டது.	இணக்கம் செய்வதற்கு பயன்படுத்தப்பட முடியாத இரு அறிக்கைகள் இணக்கம் செய்தமையினால் இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மூலதனமாக்கப்பட்ட அதிவேக வீதிகளின் காணிகளின் பெறுமதி, நிறைவு செய்யப்பட்ட செயற்திட்டங்களின் நிதிக் கூற்றுக்களிலிருந்து பெற்றுக கொள்ளப்பட்ட காணிகளின் பெறுமதியாவதுடன் காணி பிரிவின் ஊடாக கணக்காய்விற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட காணி சுவீகரிப்புக்களின் பெறுமதி, காணி பிரிவின் ஊடாக கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட காணி சுவீகரிப்பு பெறுமதியாகும். வீதி அபிவிருத்தி அதிகார சபை சுவீகரித்த காணிகளுக்கான இழப்பீடு மற்றும் வட்டி செலுத்தல் ஆரம்பிக்கப்பட்டது 2019 செப்தெம்பர் மாதம் தொடக்கம் என்பதுடன் அதற்கு முன்னர் வரிசை அமைச்சினால் அல்லது தொடர்புடைய செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டது. வரிசை அமைச்சினால் கொடுப்பனவு செய்யப்பட்ட தகவல்கள் அதிகார சபையின் தரவு அறிக்கைகளில் சரியாக குறிப்பிடப்பட்டில்லை. எனவே மூலதனமாக்கப்பட்ட அதிவே வீதிகளின் பெறுமதி குறித்த செயற்திட்ட கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள காணி சுவீகரிப்பு பெறுமதி மற்றும் சரியான

		மூலதனமாக்கப்பட்டுள்ளமையினால் அப் பெறுமதிகள் சரியானதாகும். <u>தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயற்திட்டம்</u> கொடுப்பனவு தொடர்பாக தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டது தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயற்திட்டத்திலிருந்து பெற்றுக் கொடுக்கப்பட்ட தரவு களஞ்சியத்திலாகும். அதில் உள்ளடக்கப்பட்டிருப்பது காணி சுவீகரிப்பிற்குரிய இழப்பீடு, வட்டி மற்றும் லாக் தொகை மட்டுமாகும். அதற்கு மேலதிகமாக மேலதிகசுவீகரிப்பிற்கு உரிய இழப்பீட்டு தொகை இந்த பெறுமதியில் உள்ளடக்கப்படவில்லை. <u>கொழும்பு கட்டுநாயக்க அதிவே வீதி</u> <u>கொழும்பு வெளிவட்ட வீதி செயற்திட்ட கட்டம் I, II, III</u> மேற்படி செயற்திட்டங்களுக்கு உரிய நிதிக் கூற்றுக்களில் மற்றும்காணி பிரிவிலிருந்து பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பெறுமதிகள் இடையே வேறுபாட்டிற்கு காரணம் அச் செயற்திட்டங்கள் காணி பிரிவிற்கு கையளிக்கும் போது பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள தரவு கோப்பினுள் காணப்பட்ட பெறுமதியும், அச் செயற்திட்டம் காணி பிரிவிற்கு கையளித்த பின்னர் காணி பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகையும் ஆகும். தெற்கு அதிவேக நீடிப்பு I,II,III,IV ஆகிய அதிவேக வீதி செயற்திட்டங்களில் காணி சுவீகரிப்பிற்காக செலுத்தப்பட்ட இழப்பீடு மற்றும் வட்டி அளவு காணி பிரிவினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள அதிவேக வீதிக்காக ஏற்கப்பட்ட கிரயமாக கணிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 17.169 மில்லியனுள் உள்ளடக்கப்படவில்லை. அதன் பெறுமதி ரூபா 9.2 மில்லியன் ஆகும்.
(ழ)	மீளாய்வாண்டில் பெறப்பட்ட நிலையான வைப்பு மற்றும் திறைச்சேரி உண்டியல் வட்டி வருமானம் ரூபா 1334.75 மில்லியனாக காணப்பட்ட போதிலும் அது ரூபா 1,400.34 மில்லியன் ஆக முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளமையினால் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் ரூபா 65.59 மில்லியன் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது.	பணமாக பெறப்பட்ட நிலையான வைப்புக்கள் மற்றும் திறைச்சேரி உண்டியல் வட்டி வருமானத்திற்கு பதிலாக கடந்த ஆண்டில் மற்றும் நடப்பு ஆண்டில் பெற வேண்டிய வட்டி வருமானம் பணி மூலதன மாற்றங்களின் கீழ் சீராக்கப்பட்டிருந்தமையினால் இந்த வேறுபாடு உருவாகியிருந்தது. 2023 ஆம் ஆண்டு தொடக்கம் இணக்கப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.
(ள)	அதிகார சபை, அதன் துணைக் கம்பனிகளான வரையறுக்கப்பட்ட மகநெகும இமல்ஷன் உற்பத்தி தனியார் கம்பனி, வரையறுக்கப்பட்ட மகநெகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகள் தனியார் கம்பனி, வரையறுக்கப்பட்ட மகநெகும நிர்மாணிப்பு மற்றும் இயந்திர உபகரண தனியார் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட அதிவே வீதி போக்குவரத்து தனியார் கம்பனி ஆகிய கம்பனிகளின் நிதிக் கூற்றுக்கள் ஒருங்கிணைக்கப்பட்டு குழுமத்தின் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	துணைக் கம்பனிகளின் நிதிக் கூற்றுக்கள் ஒருங்கிணைக்கப்பட்ட குழுவிற்குரிய ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிராமை தொடர்பில் விடயங்கள் கணக்கீட்டு கொள்கைகளில் குறிப்பு 2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.
(ற)	வெளிநாட்டு கடன் மற்றும் தேசிய வணிக வங்கி கடன் அடிப்படையில் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களின் தேவைப்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்படுகின்ற மற்றும் செயற்திட்டங்கள் இடையே பரிமாற்றப்படுகின்ற இருப்பிற்கு எடுக்கப்பட வேண்டிய சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படுகின்ற மற்றும் பரிமாற்றப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது அதிகார சபையின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் நாளதுவரையாக்கப்பட்டு குறிக்கப்படும் முறைமையொன்று தயாரிக்கப்பட்டிராமையின் காரணத்தினால் 8,329	வெளிநாட்டு கடன் உள்நாட்டு வணிக வங்கி கடன் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களுக்கு சொந்தமான சொத்துக்கள் அந்தந்த செயற்திட்டங்கள் இடையே மாற்றப்படுவதனை தவிர்த்து வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் அவ்வப்போது சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்த போதிலும் அச் சுற்றறிக்கைகளுக்கு முரணாக செயற்திட்டங்களுக்கு இடையே சொத்துக்கள் பரிமாற்றத்தினால் அதிகார சபையின் பதிவேடுகளில் உள்ளடக்கப்படாது செயற்திட்டங்களுக்கே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது முறையான முறைமையொன்றின் ஊடாக கட்டுப்படுத்தப்பட வேண்டியதுடன் மேற்படி சுற்றறிக்கை முறையாக

	சொத்து அலகுகளின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	பின்பற்றல் மற்றும் 2018 ஆம் ஆண்டில் செயற்திட்டங்கள் நிறைவு செய்யும் போது செயற்திட்டங்கள் அதிகார சபைக்கு கையளிக்கும் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய பதிவேடுகள் முறையாக நாளதுவரையாக்கப்படுமெனில் மேற்படி சிக்கல்கள் தீர்க்கப்படும்.
(ன)	மீளாய்வாண்டு இறுதியில் நிலவிய தேறிய பிற்போடப்பட்ட சொத்துக்கள் (Net deferred assets) பெறுமதி ரூபா 65.61 மில்லியன் கடன்பட்டோர் பெறுமதியின் கீழ் காண்பிக்கப்பட்டமையின் காரணத்தினால் கடன்பட்டோர் பெறுமதி அப் பெறுமதியினால் மிகையாக மதிப்பிடப்பட்டு நடைமுறை அல்லாச் சொத்துக்கள் பெறுமதி குறைவாக மதிப்பிடப்பட்டிருந்தது.	2018 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரையில் பிற்போடப்பட்ட சொத்துக்கள் (Deferred Assets) பெறுமதியின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்படுகின்றதுடன் நடைமுறை அல்லாச் சொத்துக்கள் கீழ் காண்பிப்பதற்கு 2023 ஆம் ஆண்டு தொடக்கம் நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும், வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க அதிகாரசபையின் அங்கத்தவர்கள் எவருக்கும் அதிகாரசபை சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றதென.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது அதிகாரசபையின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகவில்லை.

சட்டங்கள்/ பணிப்புரைக்கான தொடர்பு		விபரம்	பதில்
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாண கோவை		
i.	104 -108 ஆம் பிரமாணம்	• இழப்பொன்று ஏற்படும் போது, இழப்பின் அளவு மற்றும் காரணம் தீர்மானிக்கப்படவும் அதற்கு பொறுப்பானவர்கள் இனங்காணப்படவும் புலனாய்வொன்று ஆரம்பிக்கப்படவும் வேண்டும். அவ்வாறாயினும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டினுள் ஏற்பட்ட 121 வாகன விபத்துக்கள் தொடர்பாக அதிகார சபைக்கு ஏற்பட்ட நட்டம் மற்றும் அதற்கு பொறுப்பு கூற வேண்டிய தரப்பினர்கள் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 02 ஆரம்பகட்ட புலனாய்வுகள் மட்டும் நடத்தப்பட்டிருந்தது.	தொடர்புடைய பிரிவுகள் ஊடாக அனைத்து வாகன விபத்துக்கள் தொடர்பான ஆரம்பகட்ட அறிக்கையுடன் இயந்திர பிரிவு மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு அறியப்படுத்தி குறித்த பொலிஸ் அறிக்கையினை பெற்றுக் கொண்டு காப்புறுதி உரித்திற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. வாகன விபத்து நேரும் போது தெளிவாகவே வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஓட்டுனரின் தவறு அல்ல என தேன்றும் பல சந்தர்ப்பங்களில் அடிப்படை புலனாய்வு மேற்கொள்ளப்படாததுடன் மற்றைய சந்தர்ப்பங்களில் மட்டும் அடிப்படை புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பழுதுபார்த்தலுக்காக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 250,000.00 ஐ விஞ்சும் 07 விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதுடன் அதில் அடிப்படை புலனாய்வு ஊடாக ஓட்டுனர் தவறிழைத்தவர் அல்ல என நிரூபிக்கப்பட்ட விபத்துக்கள் 05 ஆகும். மேற்படி 07 விபத்துக்களில் ஓட்டுனர் தவறிழைத்தவர் என நிரூபிக்கப்பட்ட 02 விபத்துக்களுக்காக முறையான மேலதிக புலனாய்வு மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. வருங்காலத்தில் ஏற்படும் வாகன விபத்துக்களுக்கான அடிப்படை புலனாய்வு மேற்கொள்வதற்கு தொடர்புடைய பிரிவிற்கு தெரியப்படுத்தி சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. தற்போது விபத்துக்களை அறிக்கையிடல், தொடர்புடைய அடிப்படை புலனாய்வு அறிக்கைகளை முன்வைத்தல் போன்றன சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
		• வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மகநெகும வீதி நிர்மாணிப்பு மற்றும் இயந்திர உபகரண கம்பனிக்கு பெற்றுக்	2022 மே 09 ஆந் திகதி நடந்த வன்முறை சம்பவங்கள் காரணமாக முழுமையாக பாதிப்பிற்கு உட்பட்டிருந்த அவ் இரு வாகனங்கள் தொடர்பாக பொலிஸ் ஊடாக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்

		கொடுக்கப்பட்டிருந்த 02 கப் வாகனங்கள் 2022 மே 09 ஆம் திகதி நடந்த வன்முறை சம்பவங்கள் காரணமாக முழுமையாக பாதிப்பிற்கு உட்பட்டிருந்ததுடன் அதற்காக மதிப்பிடப்பட்ட காப்புறுதி இழப்பீட்டு பணம் ரூபா 27.5 மில்லியன் ஆகிய போதிலும் குறித்த இழப்பீட்டு தொகை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் கிடைக்கப்பெறவில்லை. மேலும், நிதி பிரமாணம் பிரகாரம் நட்டத்தின் அளவு மற்றும் காரணங்கள் தீர்மானிக்கப்படவும் பொறுப்பு கூறப்பட வேண்டியவர்கள் இனங்கண்டு புலனாய்வொன்று ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	செய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸ் புலனாய்வு நடவடிக்கைகள் தாமதித்தமையினால் சேத மீள்நிரப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு தாமதமாகியதுடன் அவ் வழக்கு நடவடிக்கைக்காக தொடர்ந்தும் விபத்திற்கு உட்பட்ட வாகனங்கள் வழக்கு பொருட்களாக தேவைப்படாது என எழுத்துமூல அறிக்கையொன்று பொலீஸிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. பின்னர் முழுமையான சேதத்திற்கு உரித்தினை பெற்றுக் கொள்வதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சபை அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டது. காப்புறுதி கம்பனி இரண்டு வாகனங்களினதும் பதிவினை இரத்து செய்ததன் பின்னர் காப்புறுதி இழப்பீட்டினை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதனால் பதிவினை இரத்து செய்வதற்கான தொடர்புடைய ஆவணங்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு சமர்ப்பித்த பின்னர் பதிவினை இரத்து செய்ததுடன் அவ் ஆவணங்கள் உரித்தினை கொடுப்பனவு செய்யும் நடவடிக்கைக்காக காப்புறுதி கம்பனிக்கு சமர்ப்பித்துள்ளது.
ii.	135(4) ஆம் நிதி பிரமாணம்	• நிதி அதிகாரமளிக்கும் ஆவணம் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை மீள்திருத்தப்பட வேண்டிய போதிலும், அதிகார சபையினால் அவ் ஆவணம் 2020 ஆம் ஆண்டின் பின்னர் நாளதுவரையாக்கப்பட்டிருக்க - வில்லை.	நிதி அதிகாரமளிக்கும் ஆவணங்களுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் 2024.01.01 ஆந் திகதியிலிருந்து அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
(ஆ)	தாபன விதிக் கோவையின் VIII ஆம் அதிகாரத்தின் 10 ஆம் பிரிவு	அரச விடுமுறை நாளன்று வேலை செய்வதற்கு விடுமுறை தின கொடுப்பனவு செலுத்தல் தொடர்பாக தாபன விதிக் கோவையில் இல்லாத விடயங்கள் தாபன பணிப்பளர் நாயகத்திடம் கேட்டறிய வேண்டிய போதிலும், அவ்வாறு இன்றி அலுவலக சேவைக்காக இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும் சேவை தேவையின் அடிப்படையில் அலுவலக நேரத்தின் பின்னர் சேவையில் ஈடுபட்ட மணித்தியாலத்தின் கூட்டுத்தொகை கணித்து 08 மணித்தியாலத்திற்கு ஒரு விடுமுறை நாள் என கருதப்பட்டு விடுமுறை தின கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அதிவேக வீதி இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவிற்கு இணைக்கப்பட்டு சேவையாற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு 2022 சனவரி தொடக்கம் திசெம்பர் வரை காலப்பகுதிக்காக ரூபா 6.84 மில்லியன் விடுமுறை தினக் கொடுப்பனவானது நிலவிய நிதியேற்பாடுகளுக்கு முரணாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	தாபன விதிக் கோவையின் VIII ஆம் அதிகாரத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் தொடர்ச்சியான நாளாந்த வேலைத்திட்டம் தொடர்பில் உருவாகும் கடமைகளின் போது மேலதிக நேரக் கொடுப்பனவு பெற்றுக் கொள்ளாத உத்தியோகத்தர்களுக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு மாதாந்த சம்பளத்தில் 1/20 இற்கு சமமான தொகையொன்று பெற்றுக் கொள்வதற்கு முடிகின்றது. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மற்றைய அனைத்து பிரிவுகளுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது அதிவேக வீதி இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் கடமை நடவடிக்கைகள் 24 மணித்தியாலங்களும் தொடர்ச்சியாக காணப்படுவதனால் அக் கடமைகளில் ஈடுபடும் தொழிநுட்ப வல்லுனர்கள், இயக்கம் மற்றும் பொறியியலாளர்களுக்கும் அதற்கு இணையாக அலுவலகங்களில் அதற்குரிய ஆவணங்களை தாயரிக்கும் உத்தியோகத்தர்களுக்கும் சாதாரண கடமை நேரத்திற்கு மேற்பட்டு கடமைகளில் ஈடுப்படுத்துவதற்கு நேரிடுகின்றது. மேலும் அதிவேக வீதிகளில் நேரிடுகின்ற அவசர விபத்துக்களின் போது விபத்துக்கள் தொடர்பாக நட்ட சேத மதிப்பீடுகள் விரைவில் தயாரித்தல், தொடர்ச்சியாக வருகின்ற பயணிகள் புகார்கள் மற்றும் ஊழியர் சிக்கல்கள் தீரத்தல் போன்ற கடமைகள் காரணமாக கடமை நேரத்தினை 08 மணித்தியாலங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தாது கடமையில் ஈடுபடுவதற்கு நேரிடுகின்றது. நாளாந்தம் மேலதிக காலமொன்று அக் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள்/ ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்துவதற்காக 2012.02.01 ஆந் திகதிய 01 ஆம் இலக்க நிர்வாக கட்டளை ஊடாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பதில் கடமையாற்றிய பிப்பாளர் நாயகத்தினால் ஒரு முறைவேலைப்பணி 08 மணித்தியாலத்தினை விஞ்சி பணியாற்றும் மணித்தியாலத்தினை ஒன்றுகூட்டி 08 மணித்தியாலத்திற்கு ஒரு விடுமுறை தினக் கொடுப்பனவு என்று கணித்து மாதத்திற்கு உயர்நதபட்சம் 15

			நாட்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.
(இ)	1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் 20 ஆம் பிரிவு	• வாழ்க்கை படி கொடுப்பனவிற்கு மேலதிகமாக, அதிகார சபைக்கென்றே விசேடமான, வெவ்வேறு நோக்கங்களுடன் கொடுப்பனவு செய்யப்படுகின்ற வீதி அபிவிருத்தி அதிகார சபை கொடுப்பனவு, மேலதிக வேலை கொடுப்பனவு, சீராக்கல் கொடுப்பனவு மற்றும் பொறியியற் கொடுப்பனவு உள்ளடங்கலாக 12 கொடுப்பனவுகள் கருத்திற் கொண்டு பணிக்கொடை கணிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்குரியதாக பணிக்கொடை ஒதுக்கம் ரூபா 1,232.83 மில்லியனினால் மிகையாக கணிக்கப்பட்டிருந்தது. மேலும், அங்கீகரிக்கப்படாத கொடுப்பனவுகள் உட்பட பணிக்கொடை கொடுப்பனவு செய்தமையின் காரணத்தினால் மீளாய்வாண்டினுள் ரூபா 40.92 மில்லியன் அதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பணிக்கொடை கொடுப்பனவு செய்யும் போது ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பினை கணிப்பதற்கு பின்வரும் கொடுப்பனவுகள் மட்டும் கருத்திற் கொள்ளப்படுவதுடன் இதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுனள்ளது. • அடிப்படை சம்பளம் • வாழ்க்கை படிக் கொடுப்பனவு • வீதி அபிவிருத்தி அதிகார சபை கொடுப்பனவு • 24% சீராக்கல் கொடுப்பனவு • மேலதிக வேலைக் கொடுப்பனவு • பொறியியல் கொடுப்பனவு பணிக்கொடைக்காக கருதப்படும் கொடுப்பனவுகள் காரணமாக மிகை கணித்தலொன்று நிகழ்ந்துள்ளமை என்ற அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக பணிக்கொடை செலுத்தலுக்கு கருதக்கூடிய சம்பளம் தொடர்பாக தொழில் ஆணையாளர் நாயகத்தின் IR/16/ஆயதன/2018 ஆம் இலக்க கடிதத்தின் ஊடாகவும் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.
(ஈ)	2018 சனவரி 24 திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை :		
i.	1 ஆம் பிரிவு	• அதிகார சபையினால் மனித வள அபிவிருத்தி செய்யும் முறைமையொன்றினை அறிமுகப்படுத்தி கொடுத்திராததுடன் பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு அல்லது செயலாற்றலினை மீளாய்வு செய்யும் முறைமையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	<u>மனிதவளஅபிவிருத்தி முறைமை</u> அதிகார சபையினால் மனிதவள அபிவிருத்திக்காக பின்பற்றப்படும் முறைமை பின்வருமாறு 1. ஆண்டு இறுதியில் வரும் ஆண்டிற்காக ஒட்டுமொத்த பதவியணியும் உள்ளடங்கும் வகையில் அனைத்து பிரிவினதும் பதவியணியினது பயிற்சி தேவைக்கான தகவல்களை கோரல். 2. பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தரவுகள் மற்றும் காணப்படும் நிதியேற்பாடு மற்றும் வகதியின் எல்லை பகுபாய்வு செய்யப்பட்டு வரும் ஆண்டிற்கான மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றினை தயாரித்தல். 3. அவ்வாறு தயாரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் ஆண்டு முழுதும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். <u>பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் ஒப்பந்தம் கைச்சாத்திடல் அல்லது செயலாற்றல் மதிப்பாய்வு முறைமை</u> கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. தற்போது ஆட்சேர்ப்பு நடைமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கான அங்கீகாரம் பெறப்படும் வரையில் செயலாற்றல் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு அல்லது செயலாற்றல் மதிப்பாய்வு முறைமை அறிமுகப்படுத்துவதற்கு இயலாதுள்ளது. அவ் ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் செயலாற்றல் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு மற்றும் செயலாற்றல் மதிப்பாய்வு முறையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்ட பின்னர் 02 ஆண்டுகளுக்குள் மேற்படி பணிகள் மேற்கெள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ii.	5 ஆம் பிரிவு	• மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2022 ஆம் ஆண்டில் நாட்டினுள் காணப்பட்ட தீமையான சூழ்நிலை (கொவிட் 19 மற்றும் எரிபொருள் நெருக்கடி) காரணமாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஊழியர்களை ஒன்று திரட்டல மற்றும் வளவாளர்களை அழைத்தலில் சிக்கல்கள் காணப்பட்டமையினால், முறையான மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரித்தல், அதன் பிரகாரம் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடல் மற்றும் அதற்கு தொடர்புடைய ஏனைய நடவடிக்கைகள் பல மட்டுப்படுத்துவதற்கு நேர்ந்தது. எனினும் அந்த நிலையிலும், நிறுவனத்தின் இயக்கத்தினை பேணிச் செல்வதற்கு தேவைப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பயிற்சி பிரிவின் ஊடாக நிகழ்நிலை முறையின் ஊடாக செயற்படுத்தப்பட்டது. கடந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பதவியணியின் பயிற்சி தேவைப்பாடுகள் தொடர்பான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வீதி அபிவித்தி அதிகார சபையின் ஒட்டுமொத்த பதவியணியினரையும் உள்ளடக்கும் வகையில் 2023 ஆம் ஆண்டிற்காகவும் மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
(உ)	முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை		
i.	2006 செப்தெம்பர் 22 திகதிய 30 ஆம் இலக்க சுற்றறிக்கையின் II ஆம் பின்னிணைப்பின் 04 ஆம் பந்தி	• முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் விதிகளுக்கு மற்றும் வழிக்காட்டிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவிஉயர்வு நடைமுறைகளுக்கு உட்பட்டு திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பதவியணி மீள் கட்டமைப்பு பரிந்துரை செயற்படுத்தாது அதிகார சபையினால் 14 பதவிகளுக்குரியதாக 259 ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்திருந்தது. இந்த உத்தியோகத்தர்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த சம்பள அளவுதிட்டங்களில் ஆரம்ப சம்பளத்தினை விட அதிகமான சம்பள அளவுத் திட்டங்களில் வைக்கப்பட்டு சம்பளங்கள் செலுத்தப்பட்டமையின் காரணத்தினால் மீளாய்வாண்டில் ரூபா 56.78 மில்லியன் சம்பளமாக அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஊடாக ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக பகுதியான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் அனைத்து பிரிவிற்குமான அங்கீகாரம் பெறப்பட்டவுடன் இந்த பிழை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே குறித்த நபர்களுக்கு அநீதி ஏற்படாத வண்ணம் அவர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் பதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
ii.	2006 ஆகஸ்ட் 01 திகதிய 28 (II) ஆம் இலக்க சுற்றறிக்கை	• முகாமைத்துவ சேவைக் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படாத 12 பதவிகளுக்காக 51 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டு மீளாய்வாண்டினுள் ரூபா 23.6 மில்லியன் சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	கணக்காய்வு திகதிக்கு சிரேஷ்ட தனியார் செயலாளர், சிரேஷ்ட கணினி இயக்குனர், செய்தி உத்தியோகத்தர், காணொளிப்பதிவாளர், ஒளிப்பதிவாளர் மற்றும் பாதுகாப்பு கட்டுப்பாட்டாளர் போன்ற பதவிகளுக்குரிய ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவ சேவைகள் திணைக்களதினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த பதவிகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற சம்பள அளவீடுகள் மட்டும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் சிரேஷ்ட கணக்கு உத்தியோகத்தர், சிரேஷ்ட கணக்காய்வு உத்தியோகத்தர், உதவி களஞ்சிய பொறுப்பாளர், ஒளிப்பதிவு உதவியாளர், லி.ப்ட் இணக்குபவர் மற்றும் குழாய்ப்பணியார் போன்ற பதவிகள், சம்பள அளவுத்திட்டங்கள் மற்றும் கணக்காய்வு திகதியில் உள்ளவாறு ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அப்போது இந்த அதிகார சபைக்கு பணிக்கப்பட்டிருந்த பணிப்பொறுப்புக்கள் கருத்திற் கொள்ளப்பட்டு சேவை

			தேவைப்பாட்டின் அடிப்படையில் இந்த பதவிகள் உருவாக்கப்பட்டன. எவ்வாறெனினும் மெற்படி 06 பதவிகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளமையினால், 12 பதவிகளுக்காக 51 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு சம்பளங்கள் கொடுக்கப்பட்டுள்ளதெனவும் மற்றும் அதற்குரியதாக கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி சரியானது அல்ல. முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் ஆட்சேர்ப்பு நமுறைக்கான அங்கீகாரம் பெற்றுக் கொடுத்த பின்னர் இந்த சிக்கல் தீர்க்கப்படும்.
(ஊ)	2021 நவம்பர் 16 திகதிய அரச தொழில் முயற்சிகளுக்கான் வழிக்காட்டி கோவை		
	3.2 ஆம் பிரிவு	• ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைக்காக (Scheme of Recruitment) பணிப்பாளர் சபையின் மற்றும் வரிசை அமைச்சின் பரிந்துரையுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதிகார சபையின் ஆட்சேர்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைக்காக அவ்வாறான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த நிலை 2005 ஆம் ஆண்டு தொடக்கம் நிலவி வருகின்றமை அவதானிக்கப்பட்டது.	பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட 2005 இன் ஆட்சேர்ப்பு நடைமுறை பிரயோக ரீதியில் பயன்படுத்தல் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் நன்கு அறிந்துள்ளது. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சேவை தேவைப்பாடு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட வழிக்காட்டல்களையும் அடிப்படையாகக் கொண்டு தொழில்சார் சங்கங்கள் மற்றும் ஆலோசகர்களின் அனைத்து கருத்துக்களையும் ஒருங்கிணைத்த பின்னர் புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றினை தயாரிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் முயற்சியொன்று எடுக்கப்பட்டது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று இல்லாத நிலையில் புதிய ஆட்சேர்பு நடைமுறையொன்று தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளும் வரை பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 2005 இன் ஆட்சேர்ப்பு நடைமுறை அமுலாக்கும் சட்டரீதியான அதிகாரம் வீதி அபிவிருத்த அதிகார சபையின் முகாமைத்துவத்திற்கு உரியமையினால் 2005 இன் ஆட்சேர்பு நடைமுறை சட்டரீதியான ஆவணமாக செயற்படுத்தப்படும். வீதி அபிவிருத்தி அதிகார சபையானது, அரச கூட்டுத்தாபனம் சட்டரீதியான சபை மற்றும் முழுமையாக அரசிற்கு சொந்தமான கம்பனிகளின் கீழ் வரும் நிறுவனமொன்றாவதுடன் பணிப்பாளர் சைப அங்கீகாரத்தின் அடிப்படையில் இவ்வாறு செற்படுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் ஊடாக அதிகாரம் பெறப்பட்டுள்ளது. 1981 இன்73 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி சட்டத்தின் 13 (1) (அ) (ஆ) (இ) மற்றும் (ஈ) பிரிவுகளின் பிரகாரம் இணைத்தல் பதவியுயர்வு சம்பளம் தீர்மாணித்தல் போன்றவற்றிற்கான அதிகாரம் பணிப்பாளர் சபைக்குரியதாகும். தேவையான சந்தர்ப்பங்களின் போது நிறுவன நடவடிக்கைகள் சீராக பேணிச் செல்வதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்படி பணிகளை நிறைவேற்ற முடிகின்றது. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட கழுவொன்றின் ஊடாக மதிப்பாய்வு செய்யப்பட்டு அமைச்சின் பரிந்துரையுடன் 2022.09.09ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் முறையே, பணிப்பாளர் நாயகம், மேலதிக பணிப்பாளர் நாயகம், பிரதி பணிப்பாளர் நாயகம் (முன்னர் பணிப்பாளர் பதவி) மற்றும் MM 1-3 சேவை பிரிவிற்கு/ சம்பள அளவுத்திட்டத்திற்குரிய பதவிகளுக்காக மட்டும் அத் திணைக்களத்தினால்அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இதில் 06 மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவிக்காக உத்தியோகத்தர்கள் 2023.11.09 ஆந் திகதி நியமிக்கப்பட்டுள்ளனர்.

	3.3 ஆம் பிரிவு	• அதிகாரசபையினால் தயாரிக்கப்படுகின்ற மூலோபாய திட்டத்தில் நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவுகளின் (Divisions of the SOE) ஊழியர் தேவை, மனித வள திட்டமொன்றாக (Human Resource Plan) காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான பிரிவுகளுக்கான ஊழியர் தேவை இனங்காணப்பட்டிருக்கவில்லை.	வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கான புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவுகள்/ அலுவலகங்களுக்குரிய பொறுப்புக்கள், செயற்பாடுகள், பணிகள் தொடர்பாக அடையாளப்படுத்திக் கொண்டு அப் பிரிவுகளை பேணிச் செல்வதற்கு தேவைப்படுகின்ற கொள்கைகள், நடைமுறைகள், சட்ட ரீதியான ஒழுங்குகள், சுற்றறிக்கைகள், மனிதவள மதிப்பீடு, ஊழியர் வகைப்படுத்தல், வீதி அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் ஒவ்வொரு பிரிவுகள்/ அலுவலகங்களுக்குரிய ஊழியர் தேவைப்பாடு போன்றன தீர்மானித்தல், ஒழுங்குப்படுத்தல் மற்றும் மீள்கட்டமைத்தல் போன்றவற்றுடன் தொடர்புடையதாகும். எனவே மேற்படி விடயங்களின் அடிப்படையில் ஒட்டுமொத்த நிறுவனத்திற்காகவும் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள இயக்கம் மற்றும் நிர்வாக வழிக்காட்டி கோவை (Administration & Operation Manual) மேற்படி ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரித்துக்கொள்வதற்கு மற்றும் இந்த அதிகார சபை நிறுவன கட்டமைப்பு மீள்கட்டமைப்புடன் இணையான வருங்காலத்தில் மேற்கொள்ளப்படுவதுடன் அங்கு குறித்த கணக்காய்வு பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள தொடர்பாகவும் கருத்திற் கொள்ளப்படும்.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து அதிகாரசபையின் அதிகாரங்கள், கடமைகள், மற்றும் செயற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.

	அதிகாரங்கள், கடமைகள், செயற்பாடுகள்	அவதானிப்பு	எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்கால நிலைமை
(அ)	2008 இன் 40 ஆம் இலக்க தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின் 13 மற்றும் 14 ஆம் பிரிவுகள் மற்றும் 2011 நவம்பர் 18 திகதிய 1732/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிக்கையின் 07 ஆம் பந்தி	அதிவேக வீதி கட்டணமாக சேர்க்கப்படுகின்ற பணத்தொகை அதிகார சபையின் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியதுடன், கட்டணங்கள் சேர்க்கப்படுகின்ற தேசிய நெடுஞ்சாலைகள் அபிவிருத்திக்கு மற்றும் பராமரிப்பிற்கு அந் நிதி பயன்படுத்தப்படல் வேண்டும். எனினும் அவ் விடயங்களுக்கு முரணாக அவ்வாறு சேர்க்கப்பட்ட நிதியில் ரூபா 1,000 மில்லியன் மீளாய்வாண்டில் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது.	நெடுஞ்சாலைகள் அமைச்சின் கோரிக்கையின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் ரூபா 1000 மில்லியன் தொகை மீண்டும் பெற்றுக் கொள்ளும் அடிப்படையில் (CEP250/2263/2021 ஆம் இலக்க மற்றும் 2022/02 -01) அதிவேக வீதி நிர்மாணிப்பிற்கு மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் I மற்றும் ருவன்புர அதிவே வீதி செயற்திட்டத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட தொகையில் ரூபா 250 மில்லியன் 2022 ஆம் ஆண்டிற்காக பொது திறைச்சேரிக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய வரிக்காக 2023 ஆம் ஆண்டில் ஈடு செய்யப்பட்டுள்ளது
(ஆ) 2008 இன் 40 ஆம் இலக்க நெடுஞ்சாலைகள் சட்டம்			
i.	4(3) ஆம் பிரிவு	வீதி அபிவிருத்தி அதிகார சபை, குறித்த உள்ளூராட்சி நிறுவனம் மற்றும் வேறு முகவர் நிறுவனங்களினால் ஏற்கப்பட்டுள்ள மாவட்டத்தின் வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் குறிப்பாக காண்பிக்கப்படுகின்ற "ஒருங்கிணைந்த வீதி அமைப்பு அபிவிருத்தி மற்றும் பராமரிப்பிற்கான செயல்	இது தொடர்பில் மதிப்பிற்குரிய அமைச்சருக்கு தெரிவித்ததன் பின்னர் 2008 இன் 40 ஆம் இலக்க தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின் பிரகாரம் குறித்த குழுவினை நியிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் குழுவினால் பெற்றுக் கொடுக்கப்படும் ஆலோசனை பிரகாரம் இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எனினும் புதிய செயற்திட்டங்கள் இல்லாமையினால் அக் குழு இது வரையில் ஒன்று கூடவில்லை.

		நடவடிக்கைத் திட்டம்" தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	
(இ)	2005 நவம்பர் 03 திகதிய ஆம் அமப/05/1711/016/ 110 ஆம் இலக்க அமைச்சரவை தீரமானம்	மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அமைச்சரவை தீர்மானித்துள்ள வீதி பராமரிப்பு பொறுப்பு நிதியமொன்று தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வரிசை அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இந்த அமைச்சரவை தீர்மானத்தினை செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து அதிகாரசபையின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக கால எல்லைக்குள் உரிய சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது என.

பந்தி இல	கணக்காய்வு பந்தி	எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை
(அ)	வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான இயந்திர உபகரணங்கள் வாடகைக்கு வழங்கல், கடைகள் வாடகைக்கு வழங்கல், பாதுகாப்பான வீதிகளை பயன்படுத்தல் மற்றும் சாலை இருப்புக்களில் விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 28 நிறுவனங்களிடமிருந்து மற்றும் 05 நபர்களிடமிருந்து மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை வருமானம் ரூபா 50.07 மில்லியன் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அதிகார சபையின் இரண்டு தனியார் துணை கம்பனிகளுக்கு 2021 ஆம் ஆண்டில் இயந்திர உபகரணங்கள் வாடகைக்கு பெற்றுக் கொடுத்தமைக்காக பெற வேண்டிய ரூபா 5.26 மில்லியன் தொகையில் தற்போது ரூபா 3,533,600.00 ஆன தொகை Sunbeam construction நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. பொரல்லை சுரங்க பாதையினுள் அமைந்துள்ள கடைகள் வாடகைக்கு கொடுத்ததில் 05 நபர்களிடமிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நிலுவை வாடகை ரூபா 4.81 மில்லியன் தொகையில் ரூபா 383,033.29 தற்போது கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் எஞ்சியவை வருடாந்தம் கடை வாடகை கொடுப்பனவு செய்யாத 03 கடைகளுக்கு தொடர்புடையதாகும். அவ் மூன்று கடைகளில் கடை இல 01, திரு. கபில விஜேசிரிவர்தன, இல 8/73, ஸ்ரீ சித்தார்த வீதி, கொழும்பு 06 என்பவரிடம் 2022.01.01 ஆந் திகதியிலிருந்து 2022.12.31 ஆந் திகதி வரை ரூபா 838,217.23 ஆன தொகை அறவிடப்படுவதற்குள்ளது. 2023.09.12 ஆந் திகதி கொழும்பு நிறைவேற்று பொறியியலாளரினால் வெறுமையாக்கி கையேற்கப்பட்டுள்ளது. அறவிடப்படுவதற்குள்ள தொகை தொடர்பில் சட்ட பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்படும். அக் கடைகளில், கடை இல 02 என குறிப்பிடப்பட்டுள்ள திரு உபுல் பீரிஸ், இல 45/2, சரபால ஹிமி வீதி, கொழும்பு 08என்ற முகவரியையுடைய நபரிடமிருந்து 2008.05.01 ஆந் திகதி தொடக்கம் 2022.12.31 ஆந் திகதி வரையில் ரூபா 2,995,598.06 அறவிடப்படுவதற்குள்ளது. அவருக்கும் எதிரே 17343/05/19 ஆம் வழக்கு இலக்கத்தின் ஊடாக பேணி வரும் வழக்கு நடவடிக்கை இன்னும் நிறைவு செய்யவில்லை. அதில் கடை இல 07 என குறிப்பிடப்பட்டுள்ள, திரு பீ.எல். பத்மசிறி, இல. 144/3, மஹபத்கமுவ, முல்லேரியாவ என்பவரிடமிருந்து 2019.12.15 ஆந் திகதி தொடக்கம் 2022.12.31 ஆந் திகதி வரை ரூபா 597,825.05 அறவிடப்படுவதற்குள்ளது. அவர் பகுதியாக அந் நிலுவை தொகையை செலுத்துவதற்கு எழுத்துமூலமாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் தற்போதுபகுதியாக அத் தொகை செலுத்தப்பட்டு வருகின்றது. 2023.10.31 இல் உள்ளவாறு ரூபா 275,000.00 அந் நிலுவை தொகையில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. அத் தவணை கொடுப்பனவு தொகை அதிகரித்து விவைில் செலுத்துமாறு தொடர்புடைய நபருக்கு தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டிற்காக வீதி இருப்புக்கள் பயன்படுத்தியமைக்காக கொவியாபான விடுதியிடமிருந்து

		(Goviyapana Gimanhala) வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பெற வேண்டிய தொகை ரூபா 05 மில்லியன் ஆகும். அவ் விடுதிக்காக வாடகை கட்டம் அறவிடுவதற்கு தொடர்புடைய அங்கீகாரம் கோரி சமர்ப்பிக்கப்பட்ட 2432/2023 RDA/CH/BM/05/2023 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரிக்கைக்கு ஆம் இலக்கம் மற்றும் 2023.05.31 திகதியுடன் அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2023 யூன் மாதம் தொடக்கம் வருடாந்த வட்டி கட்டணம் அறவிடப்படுவதற்கு RDA/PM&R/RP/CGHW/5 ஆம் இலக்க மற்றும் 2023.06.08 திகதிய கடிதத்தின் ஊடாக அதன் வாடகைக்கார் ஆன விஜேசிறி குலதுங்க என்பவருக்கு கொடுப்பனவு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் மீண்டும் ஒரு தடைவ சொத்துக்கள் முகாமைத்துவம் மற்றும் வருமானம் பிரிவின் RDA/PMR/IG-II ஆம் இலக்க மற்றும் 2023.08.25 திகதிய கடிதத்தின் ஊடாக நினைவூட்டல் அனுப்பப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான எல்லையினுள் வியாபார விளம்பரப்படுத்தல் மேற்கொண்டமைக்கு 23 நிறுவனங்களிடமிருந்து 2022 திசெம்பர் 31 வரையில் பெறவேண்டிய தொகை ரூபா 35 மில்லியன் ஆகும். இத் தொகையில் தற்போது ரூபா 18.37 மில்லியன் தீர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை செலுத்துமாறு தொடர்புடைய தரப்பினருக்கு மீள் நினைவூட்டல் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
(ஆ)	வீதி அபிவிருத்தி அதகிார சபையின் பதவியணியின் 290 உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டினுள் 18 செயற்திட்ட அலுவலகங்களில் சேவையில் இணைக்கப்பட்டிருந்ததுடன், குறித்த பதவியணிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ரூபா 65.1 மில்லியன் சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறெனினும், குறித்த சம்பளத்தினை மீள்நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், பெற வேண்டிய இந்த 18 செயற்திட்டங்களில் 07 செயற்திட்டங்களின் பணிகள் மீளாய்வாண்டு இறுதியில் நிறைவு செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது.	வீதி அபிவிருத்தி அதகிார சபையின் யெற்திட்டங்களில் தற்போது ரூபா 46.8 மில்லியன் தொகை தொடர்ந்தும் அறவிடப்படுள்ளதுடன் எஞ்சிய தொகை தீர்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தொடர்புடைய செயற்திட்டங்களிடமிருந்து கோரப்பட்டுள்ளது.
(இ)	அதிகாரசபையினால் 2019 தொடக்கம் 2021 வரையான ஒவ்வொரு ஆண்டிற்கும் நிதிக் கூற்றுக்கள் மீள் சீராக்கம் செய்யப்பட்டிருந்ததுடன் (Re-State) இதன் காரணத்தினால் செலுத்தப்பட வேண்டிய வருமான வரி ரூபா 209.5 மில்லியனினால் குறைந்திருந்தது. அதன் பிரகாரம், மேலதிகமாக செலுத்தப்பட்ட வருமான வரி குறைத்துக் கொள்ள வேண்டிய போதிலும், இந்த மேலதிக கொடுப்பனவு ஆண்டினுள் செலுத்தப்பட வேண்டிய வருமான வரிக்கு ஈடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	திருத்தப்பட்ட 2003 இன் 04 ஆம் இலக்க இறைவரி சட்டத்தின் 151(1) பிரிவின் பிரகாரம் தற்போது வரை பெற வேண்டிய வருமான வரி தொகையில் 60% ஆன பெறுமதியான ரூபா 123,478,433.00 ஆன தொகை 2023/2024 மதிப்பீட்டு ஆண்டின் முதல் காலாண்டிற்காக ஈடு செய்யப்பட்டுள்ளதுடன் 2019/ 2020 ஆண்டிற்காக வரி கணக்காய்வு இன்னும் நிறைவடையாதமையினால் குறித்த பெற வேண்டிய வரி ஈடு செய்தலானது வருங்காலத்தில் மேற்கொள்ளப்படும்.
(ஈ)	2022 திசெம்பர் 31 இல் அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களினுள் உள்ளடக்கப்பட்ட பிற்போடப்பட்ட வெளியீட்டு வரி (Differd output tax) ரூபா 79.58 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், இந்த மீதியினுள் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலவி வரும் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 35 மில்லியனாக காணப்பட்ட போதிலும் ஆண்டு இறுதி வரையிலும் குறித்த மீதிகள் தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பிற்போடப்பட்ட வெளியீட்டு வரி (Differd output tax) ரூபா 79.58 மில்லியனில் ரூபா 20.73 மில்லியன் தீர்க்கப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் நிலவி வரும் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 35 மில்லியனில் ரூபா 6.76 மில்லியன் தீர்க்கப்பட்டுள்ளது. செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்காக கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளத்திற்கு உரியதாக பிற்போடப்பட்ட வெளியீட்டு வரிகளில் உள்ளடக்கப்பட்ட ஆண்டொன்றுக்கு குறைவான மீதிகளின் கூட்டுத்தொகையில் ரூபா 1,909,100.02 ஆன தொகை மற்றும் 01 ஆண்டு மீதிகளில் ரூபா 332,453.04 தொகையும் தற்போது தீர்க்கப்பட்டுள்ளது.

		பொரல்லை சுரங்க பாதையினுள் அமைந்துள்ள கடை இல 02 காக அறவிடுவதற்குள்ள தொகை தொடர்பாக நடத்தப்படுகின்ற வழக்கு இன்னும் முடிவடையவில்லை. தெற்கு அதிவேக வீதி இயககம் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவிற்கு குறித்த பெறுமதி/ தெற்கு அதிவேக வீதி இயக்கம் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் வீதி விபத்துக்களில் 2022.12.31 இல் உள்ளவாறு பெற வேண்டிய வருமானம் தொகைக்குரிய பிற்போடப்பட்ட வெளியீட்டு வரித் தொகை ஆகும். வாகன விபத்துக்களில் பெற வேண்டிய வருமானம் லெஜர் கணக்கில் இணக்கப்பட்டு வருகின்றதுடன் வழக்கின் மூலம் தீர்வொன்றிற்கு அல்லது தீர்விற்கு உட்படுகின்ற விபத்துக்களுக்கு உரிய வருமானம் அக் கணக்கிற்கு நேரடியாக கணக்கிடப்பட்டு அதை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. கொழும்பு கட்டுநாயக்க அதிவே வீதிக்கு தொடர்புடைய பிற்போடப்பட்ட வெளியீட்டு வரித் தொகை 2022.12.31 இல் உள்ளவாறு ரூபா 1,460.010.15 ஆவதுடன் அதில் ரூபா 787,038.99 ஆன தொகை 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டு நிலவி வருகின்றது. அப் பிற்போடப்பட்ட வெளியீட்டு வரி தொகை தொடர்புப்படுவது 2017.08.07 ஆந் திகதி கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதி எம்.ஏ.என். லக்சிறி என்ற நபரினால் நேர்ந்த வாகன விபத்து தொடர்பாக பெற வேண்டிய ரூபா 6,033,965.59 இற்குரிய பிற்போடப்பட்ட வெளியீட்டு வரி தொகையாகும். இந்த தொகை அறவிடப்படுவதற்காக வீதி அிவிருத்தி அதிகார சபையின் சட்ட பிரிவின் ஊடாக விபத்தினை மேற்கொண்ட நபருக்கு எதிராக நீதிமன்றத்தில் நட்டஈடு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் தற்போது 07 வழக்கு தடவைகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும் அடுத்த வழக்கு 2024-02-16 ஆந் திகதி நடத்தப்படவுள்ளது. தீர்க்கப்படாத பிற்போடப்பட்ட வெளியீட்டு வரி அறவிடப்படுவதற்காக மீண்டும் மீண்டும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
(உ)	கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதியின் இலத்திரனியல் கட்டணம் அறவிடுவதற்கு 2014 திசெம்பர் 18 ஆந் திகதி வீதி அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை வங்கியுடன் உடன்பட்ட ஒப்பந்தத்தின் ஒப்பந்த காலம் 2020 யூன் 08 ஆந் திகதி நிறைவடைந்து 02 ஆண்டுகள் கடந்திருப்பினும் புதிய ஒப்பந்தமொன்றிற்கு உடன்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. செல்லுப்படியாகும் ஒப்பந்தமொன்று இன்றி 2020 தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரை 03 ஆண்டிற்காக கொடுக்கல்வாங்கல் கிரயமாக (Transaction Cost) கூட்டுத்தொகை ரூபா 19.7 மில்லியன் இலங்கை வங்கிக்கு செலுத்தியிருந்தது.	இலத்திரனியல் கட்டணம் சேகரிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை வங்கி இடையே 2014 திசெம்பர் மாதம் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் ETC அமைப்பினை செயற்படுத்திய காலம் தொடக்கம் 05 வருட காலப்பகுதி வரை செல்லுப்படியாகும். அதாவது 2015 யூன் 09 ஆந் திகதி தொடக்கம் 2020 யூன் 08 ஆந் திகதியில் முடிவடைந்தது. வாடிக்கையாளர்கள் 10000 வரையில் கொடுக்கல்வாங்கள் ஒன்றிற்கு ரூபா 7.50 உம் அதன் பின்னர் ஒரு கொடுக்கல் வாங்கலுக்காக ரூபா 6.00 என கொடுக்கல் வாங்கல் கிரயமாக இலங்கை வங்கிக்கு கொடுப்பனவு செய்வதற்கு ஒப்பந்தம் ஊடாக உடன்பட்டிருந்தது. புதிய ஒப்பந்தமொன்றினை தயாரிப்பதற்குகு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் மீயாள்வு குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அக்குழு மற்றும் இலங்கை வங்கி இடையே 2021.04.22 மற்றும் 2021.07.28 திகதிகளில் நடத்தப்பட்ட கூட்டங்களின் போது வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக கொடுக்கல்வாங்கல் கிரயம் ரூபா 6.00 தொடக்கம் ரூபா 2.50 வரை குறைக்குமாறு வேண்டப்பட்டதுடன் அதற்கு தரப்பினரிடையே உடன்பாடு ஏற்படாததுடன் கட்டணததினை ரூபா 4.00 வரையில் குறைப்பதற்கு உடன்பாடு ஏற்பட்டது. இந்த இடைநிலை காலப்பகுதியில் இலங்கை வங்கி ஊடாக வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்ந்தும் பெற்றுக் கொடுப்பதனால் மற்றும் அச் சேவை இன்றி ETC அமைப்பினை செயற்படுத்த முடியாமையினால் புதிய ஒப்பந்தம் கைச்சாத்திட்டு நிறைவடையும் வரையில் 2014 திசெம்பர் மாதம் உடன்பட்ட கிரயமான ரூபா 6/- ஆக தொடந்தும் பேணிச் செல்லப்படுகின்றது. அதிகார சபை மற்றும் இலங்கை வங்கி இடையே ஒப்பந்தத்தினை கைச்சாத்திடலுக்காக நடவடிக்கை எடுப்பதற்கு அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு 2473/2023 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரிக்கை ஊடாக சமர்ப்பிக்கப்பட்டது.

		ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு திகதியினை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை வங்கிக்கு அனுப்பப்பட்ட போதும் அவர்கள் மீண்டும் ஒப்பந்தத்தில் காணப்படும் சட்ட ரீதியான சில அறவித்தல்களை மாற்றி ஒப்பந்த ஆவணத்தினை மீண்டும் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் அவ் ஆவணத்தினை சட்ட பிரிவு மேலதிகமாக மீளாய்வு செய்து அதில் திருத்தப்பட வேண்டிய நிபந்தனைகளை குறிப்பிட்டு பரிந்துரைகள் அதிவேக இயக்கம் மற்றும் பராமரிப்பு முகாமைத்துவ பிரிவிற்கு 2023.10.30 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் இலங்கை வங்கிக்கு அனுப்பப்பட்டது.
(ஊ)	அதிகார சபையின் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதியின் இலத்திரனியல் கட்டணம் செலுத்தும் முறை பயன்படுத்துவோரை உற்சாகப்படுத்துவதற்கு இலத்திரனியல் கட்டணம் செலுத்தும் முறைக்கு மாறுகின்ற ஆரம்ப 06 மாதங்களினுள் குறித்த கட்டணத்தில் 10 சதவீத கழிவொன்று அவ் வீதிகளை பயன்படுத்துவோருக்கு பெற்றுக் கொடுப்பதற்கு தீமானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அங்கீகாரமின்றி அக் காலப்பகுதியின் பின்னரும் அக் கழிவு முறை செயற்படுத்தப்பட்டமையினால் 2022 ஆம் ஆண்டிற்குரியதாக ரூபா 33 மில்லியன் உட்பட, 2020 தொடக்கம் 2022 வரை 03 ஆண்டுகளுக்கு கூட்டுத்தொகை ரூபா 89 மில்லியன் வருமானம் அதிகார சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.	1624/2015 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரிக்கையின் பிரகாரம் 06 மாதக் காலம் ETC பயனாளர்களுக்கு 10% சலுகை பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதன் பின்னர் 1755/2016 ஆம் இக்க பணிப்பாளர் சபை பத்திரம் ஊடாக அந்த 10% கழிவு 20% வரையில் அதிகரிப்பதறகும் அங்கீகாரம் பற்றுக் கொடுத்திருப்பது ETC வாடிக்கையாளர் ஈர்ப்பினை அதிகரிப்பதற்காகவும். எவ்வாறெனினும் ஏற்படக் கூடிய நட்டத்தினை குறைத்துக் கொள்வதற்கு 10% கழிவினை தொடர்ந்தும் பேணிச் செல்லப்பட்டது. இந்தக் கழிவினை அறிமுகப்படுத்தும் அடிப்படை நோக்கம் ஜாஎல மற்றும் பேலியகொடை கொடுப்பனவு கவுன்டர்களில் காணப்பட்ட கடுமையான நெரிசலினை குறைத்துக் கொள்வதற்கு வழியினை ETC பயன்படுத்துவோரின் அளவினை அதிகரிப்பதாகும். இவ்வாறு கழிவினை தொடர்ந்தும் பேணிச் செல்வதனால் ETC பயன்படுத்துவோரின் அதிகரிப்பொன்றை காணக்கூடியதாக இருந்ததுடன், அதனூடாக காணப்பட்ட வாகன நெரிசலினை குறைத்துக் கொள்ள முடியும். மேலும், ETC பயன்படுத்துவது ஊடாக எரிபொருள் பயன்பாட்டினை குறைத்துக் கொள்ள முடிதல், சுற்றாடல் மாசடைவதனை குறைத்துக் கொள்ள முடிதல், கொடுப்பனவு கவுன்டர்களில் நிறுத்தப்படுவது தேவைப்படாததுடன் பயணத்திற்கு செலவழியும் காலம் குறைதல் போன்ற பல பயன்கள் கிடைக்கப் பெறுகின்றமையினால் ETC அமைப்பு பயன்பாடு தொடர்ந்தும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இந்த 10% கழிவினை இரத்து செய்வதற்கு 2023 ஒக்தோபர் 20 ஆந் திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் அக் கழிவினை இரத்து செய்வதற்கு பணிப்பாளர் சபை உடன்படவில்லை.
(எ)	அதிகார சபைக்கு சொந்தமாக கிரயம் ரூபா 228.6 மில்லியனான 19 வாகனங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கும், ரூபா 83.5 மில்லியன் கிரமயான 11 வாகனங்கள் மகநெகும இயந்திர உபகரணங்கள் கம்பனிக்கும் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் அதிவே வீதிகளில் கடமைகளுக்காக மீளாய்வாண்டில் ரூபா 281.35 மில்லியன் செலவு செய்து வெளி நிறுவனங்களிடமிருந்து வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன.	அமைச்சின் செயலாளரின் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மட்டும் வாகனங்கள் வெளி நிவுனங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ளன. அதிவே வீதி பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக தேவைப்படுகின்ற விசேஷித்த வாகனங்கள் பல வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமானதல்ல என்பதுடன் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டவை ஆகும். செயற்பாடு நடவடிக்கைகளுக்காக தேவைப்படுகின்ற பல வாகனங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ளது. தெற்கு அதிவேக வீதி, தெற்கு அதிவே வீதி நீடிப்பு, கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதி, வெளிசுற்று அதிவேக வீதி மற்றும் மத்திய அதிவேக வீதி அமைப்பின் இயக்க நடவடிக்கைகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் பேணிச் செல்வதற்கு இந்த வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் தற்போது வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்படும் வாகனங்கள் குறைக்கப்பட்டுள்ளது.
(ஏ)	2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பதவியணி 10,801 ஆக காணப்பட்டதுடன், அப் பதவியணிக்காக 2022 ஆம் ஆண்டில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 8,315.03 மில்லியனும், நிர்வாக செலவீனம்	வீதி அபிவிருத்தி அதிகார சபைக்காக பொது திறைச்சேரியினால் அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாடு ரூபா 109,296.9 மில்லியனாக காணப்பட்டதுடன் ரூபா 104,021.9 ஆன நிதியேற்பாடு 2022 ஆம் ஆண்டினுள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டினுள் செலவீனம் ரூபா 105,583 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் மீண்டெழும்

	ரூபா 842.4 மில்லியனும், தேசிய வங்கி கடன் வட்டி மற்றும் கடன் தவணைகளாக ரூபா 52,621.53 மில்லியனுமாக ஒட்டுமொத்தம் மீண்டெழும் செலவீனமாக ரூபா 61,778.97 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தனிநபர் வருடாந்த சாதாரண சம்பளம் மற்றும் கொடுப்பனவு செலவினம் ரூபா 0.77 மில்லியனாக காணப்பட்டது. மேலும், 2022 மூலதன செலவீனம் ஏற்பதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 140,294.27 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு கொடுத்திருந்த போதிலும், பெறப்பட்ட நிதியேற்பாடு ரூபா 96,008.46 மில்லியனாகும். அவ் அளவிலும் ரூபா 21,231.7 மில்லியன் 2021 ஆம் ஆண்டில் ஏற்படுத்திக் கொண்ட கடப்பாடுகள் தீர்ப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டில் ஏற்கப்பட்டுள்ள மூலதன செலவினம் ரூபா 98,225.92 மில்லியனாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதியில் தீர்க்கப்படாத செலவீன பெறுமதி ரூபா 23,449.15 மில்லியன் ஆகும். ஒட்டுமொத்த செலவீனமான ரூபா 160,004.89 மில்லியனில் 39 சதவீதம் மட்டும் மீண்டெழும் செலவீனத்திற்காக செலவிடுவதற்கு நேர்ந்தமையினால் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நோக்கம் மற்றும் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றலானது கீழ் மட்டத்தில் காணப்பட்டதுடன், இது தொடர்பாக நீண்ட ஆய்வொன்று மேற்கொண்டு அவை நிறைவேற்றுவதற்குரிய பயனுறுதிமிக்க கூட்டிணைந்த திட்டமொன்று மற்றும் செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிப்பதனை குறித்து விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	செலவீனத்திற்காக ரூபா 48,378.8 மில்லியன் ஏற்கப்பட்டிருந்ததுடன் தேசிய வங்கி கடன் வட்டி மற்றும் தவணைக்காக ரூபா 38,804.0 மில்லியன் ஏற்கப்பட்டிருந்தது. அனைத்து ஆண்டுகளிலும் பெறப்பட்ட நிதியேற்பாட்டில் தேசிய வங்கி கடன் தவணை கட்டணம் செலுத்துவதற்கு பணம் ஒதுக்கப்பட வேண்டியதுடன் தேசிய வங்கி ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட பணத்தொகை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருத்தல் அடிப்படை காரணமாகும். வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 2024-2028 மூலோபாய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 2024 செயல்நடவடிக்கைத் திட்டம் மிகவும் பயனுள்ள செயற்பாட்டினுள் உள்ளடங்கும் வகையில் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எதிர்கால கூட்டிணைவுத் திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுகக்கப்படும்.
(ஐ)	2022 திசெம்பர் 31 இல் அதிகார சபையினால் குறுகிய கால நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,226.43 மில்லியன் வரிசை அமைச்சின் கோரிக்கையின் அடிப்படையில் அமைச்சிற்கு பெற்றுக் கொடுத்திருந்த காரணத்தினால் அதிகார சபை இழந்திருந்த வட்டி வருமானம் ரூபா 410.69 மில்லியன் ஆகும். அவ்வாறே பொது திறைச்சேரியின் இணக்கம் இன்றி வரிசை அமைச்சிற்கு செலவின விடயங்களுக்கு பணம் பெற்றுக் கொடுத்தல் கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாகியது.	நாட்டினுள் காணப்பட்ட நெருக்கடி நிலையினுள் வரிசை அமைச்சிற்கு பணம் கிடைக்க பெறவில்லை. வீதி அபிவிருத்திக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட காணிகளுக்காக இழப்பீடு தொகை பெறப்படாமையினால் பொது மக்களினால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களினால் இந்த கன்தொகையை கொடுப்பனவு செய்வதற்கு நேரிட்டது. அவ்வாறே நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரினால் அனுப்பபடப்ட HWY/ACC/02/Commit/2021 ஆம் இலக்க மற்றும் 2022.08.05 ஆந் திகதிய கடிதத்திற்கு அமைவாக வீதி செயற்திட்டம் செயற்படுத்தும் (implementing agency) நிறுவனமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இந்த பணத்தொகை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.
(ஒ)	2011 தொடக்கம் 2020 ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ரூபா 16.5 மில்லியனிற்குரிய பொருட்கள் மற்றும் சேவை வழங்கலுக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த பண வைப்புக்கள் மற்றும் முற்பணம் தீர்க்கப்படுவதற்கு அல்லது பணம் மீள பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த மீதியினுள் 2011 ஆம் ஆண்டில் தெற்கு அதிவேக வீதி திறப்பு விழாவினை ஒழுங்கமைப்பதற்கு ஏற்கப்பட்ட செலவில் 50 சதவீமான ரூபா 5 மில்லியனும் உள்ளடக்கப்பட்டிருந்தது.	தற்போது இந்த முற்பணம் இந்த முற்பணத்தில் ரூபா 113,904.00 ஆன தொகை தீர்க்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய தொகை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தொடர்புடைய பிரிவு தலைவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ஓ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 21 (1) பிரிவின் பிரகாரம், பிரதேச சபை நிர்வாக	வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான ரண்மாவத் செயற்திட்ட வேலைத்திட்டம், வீதி விரிவாக்கல் மற்றும் மேம்படுத்தலின் கீழ் வீதிக்காக மட்டும் செலவீனம்

	எல்லையினுள் காணப்படுகின்ற நெடுஞ்சாலைகள் மற்றும் வீதிகளின் உரித்து அவ் உள்ளூர் ஆட்சி சபைக்களுக்குரியதாகும். இதன் பிரகாரம், அதிகார சபையினால் அவ் வீதிகள் பழுதுபார்த்தல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஏற்கப்பட்ட செலவீனம் அந் நிறுவனங்களுக்கு மூலதனமாக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மூலதனமாக்கப்படாது செலவீனமாக பதிவழித்தல் கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாகியது. மீளாய்வாண்டில் அவ்வாறு அதிகார சபைக்கு சொந்தமாகாத வீதிகளுக்காக (Non-RDA) ஏற்கப்பட்ட ரூபா 9,218 மில்லியன் செலவீனம் பதிவழிக்கப்பட்டிருந்தது.	மூலதனமாக்கப்படல் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 100,000 கிலோ மீட்டர் செயற்திட்டத்தின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமற்ற (Non RDA) வீதிகளுக்காக 2022.12.31 இல் உள்ளவாறு செலவு செய்த தொகை (அனைத்து வேலை ஆரம்ப முற்பணமும் அறவிடப்பட்ட பின்னர்) மூலதனமாக்கப்படாது அபிவிருத்தி செலவீனத்தின் கீழ் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. அதற்காக 2022 ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமற்ற 225 வீதிகளுக்குரிய ரூபா 9,706.84 மில்லியன் பெறுமதி செலவீனமாக தள்ளுபடி செய்யப்பட்டது. நிறைவு செய்யப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வீதியிகை மூலதனமாக்கல் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமற்ற வீதிகளை மீண்டெழும் செலவீனமாக பதிவழித்தல் போன்ற கொடுக்கல் வாங்கல்கள், அதாவது வருமானம் தொடர்புடைய செலவீன காலப்பகுதிக்கே உரியதாக சீராக்கல் தொடர்ந்தும் அதே வண்ணம் மேற்கொள்ளப்படுவதுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமற்ற வீதிகளின் செலவீனம் குறித்த நிறுவனத்திற்கு மேல் நடவடிக்கைகளுக்காக பெற்றுக் கொடுக்கப்படும்.
(ஒள)	மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் அதிவேக வீதிகள் நிர்மாணிப்பதற்கு காணி சுவீகரித்தலுக்காக ஏற்கப்பட்ட கிரயம் ரூபா 33,815.28 மில்லியனாக காணப்பட்ட போதிலும் அதற்குரிய பதிவேடொன்று அதிகார சபையின் காணி பிரிவினால் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.	தரவு தளத்தினை தயாரிப்பதற்காக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
(க)	2020, 2021 ஆண்டுகளுக்குரியதாக 100,000 கிலோ மீட்டர் வீதிகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பெறுகை மற்றும் தொழில்நுட்ப மீளாய்வு அங்கத்தவர்களுக்கு 2006 பெறுகை வழிக்காட்டி கோவையின் ஏற்பாடுகளை மிகைத்து செலுத்தப்பட்டிருந்த 6.19 மில்லியன் தொகை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், குறித்த மீதியினுள் அதிகார சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்ற உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3.03 மில்லியனும் உள்ளடக்கப்பட்டிருந்தது.	தற்போது 4 உத்தியோகத்தர்களிடமிருந்து மட்டும் மிகை கொடுப்பனவு அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய உத்தியோகத்தர்களும் பகுதியாக அக் கொடுப்பனவினை தீர்த்து வருகின்றனர். தற்போது ரூபா 4.6 மில்லியனான பெறுமதி காசாக அறவிடப்பட்டுள்ளதுடன் ஓய்வுப் பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 1.5 மில்லியன் தொகையும் அதில் உள்ளடங்கும்.
(ங)	பலவீனமான பாலங்கள் மறுசீரமைப்பு நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நடைமுறையிலுள்ள வேலை பெறுமதி ரூபா 692.48 மில்லியன் ஆகும். அதனுள் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 50.29 மில்லியன் ஊவா மாகாணத்திற்கு சொந்தமான 13/6 ஆம் இலக்க தெமோதர-ஸ்பிரின் மணல் பாலம் மறுசீரமைக்கும் ஒப்பந்தம் 2019 யூன் 05 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2020 மார்ச் 31 ஆந் திகதி நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தக்காரருக்கு பணி முற்பணம் செலுத்தலானது 2020 மே 29 ஆந் திகதி மற்றும் 2020 செப்தெம்பர் 07 ஆந் திகதி வரை தாமதமாகியதன் காரணத்தினால் ஒப்பந்தக்காரரினால் குறித்த பணி நிறைவு செய்யப்பட்டிராததுடன் மீளாய்வாண்டு இறுதியில் அதன் பௌதீக செயன் முன்னேற்றம் 90 சதவீதமாக காணப்பட்டது.	தெமோதர ஸ்பிரிங் மணல் பாலத்தின் ஒப்பந்தத்தின் பணிகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் பூரண பணி நிறைவு சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளது.
(ச)	2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 100,000 கிலோ மீட்டர் வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 2020 – 2022	100,000 கிலோ மீட்டர் வீதி செயற்திட்டத்திற்குரிய அனைத்து வீதிகளினதும் விபரங்கள் உள்ளடக்கப்பட்டு தரவு களஞ்சியமொன்று (PMS) பேணிச் செல்லப்படுகின்றதுடன்,

	காலத்தினுள் அதிகார சபைக்கு சொந்தமற்ற வீதிகளின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக ஏற்கப்பட்ட கிரயமாக நடைமுறையிலுள்ள வேலையின் (WIP – Non RDA) கீழ் காண்பிக்கப்படுகின்ற பெறுமதி ரூபா 125,586.76 மில்லியன் ஆகும். எனினும் இந்த நடைமுறையிலுள்ள வேலைகளுக்குரிய ஒப்பந்தக்காரரின் பெயர், ஒப்பந்தக் காலம், பெறுமதி மற்றும் ஒப்பந்தக் காலம் நீடித்தல் போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	இதன் அடிப்படை நோக்கமாவது செயற்திட்டத்தின் சென்முன்னேற்றத்தினை மேற்பார்வை மற்றும் மீளாய்வு செய்வதாகும். அதனால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நான்கு விடயங்களுக்கு மேலதிகமாக பாரியளவு தரவுகள் களஞ்சியத்தினுள் காணப்படுகின்றதுடன் தேவைப்படுகின்ற எந்த சந்தர்ப்பத்திலும் இந்த தரவுகள் பெற்றுக் கொள்ள முடிகின்றது. எனினும் ஒன்பது மாகாணங்களிலும் இந்த தரவு பாரியளவில் காணப்படுகின்றமையினால் கணக்காய்வின் போது குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஒரு அறிக்கையொன்றாக கோப்பிடலுக்காக தரவுகள் பகுப்பாய்வு செய்வதற்கு போதுமான காலம் கடக்கக் கூடும். மேலும் கணக்காய்வு பிரிவினால் முன்னர் கோரப்பட்டிருந்த தகவல்கள் அனைத்தும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், தரவு களஞ்சியத்திற்குரிய (PMS) இணையத்தள லின்க் உம், மென்பொருள் பிரதியும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், அரச கணக்காய்வு பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட RAH/B/LBFE/2023/A/ INF/08/08 தகவல் கோரலின் கீழ் இங்கு காண்பிக்கப்பட்டுள்ள தகவல்களும் உள்ளடக்கப்பட்ட அறிக்கையொன்று 2023.10.27 ஆந் திகதி மின்னஞ்சல் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.
(ஞ)	100,000 கிலோ மீட்டர் வீதிகள் செயற்தட்ம் தவிர அதிகார சபை செயற்படுத்தப்படுகின்ற ஒப்பந்தங்களுக்குரியதாக 2022 திசெம்பர் 31 இல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தொகை ரூபா 1,089.73 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், அம் மீதியினுள் 03 ஆண்டுகளை மிகைத்த பெறுமதி ரூபா 503.66 மில்லியன் ஆகும். ஒப்பந்தக்காரர்களினால் ஒப்பந்த நடவடிக்கைகள் உரிய காலத்தில் நிறைவு செய்யப்படாமை மற்றும் பிழைகள் சீர்செய்யப்படாமையினால் நிறுத்தி வைக்கப்பட்ட பணம் உரிய காலத்தில் விடுவிக்க முடியாதிருந்தது.	நிர்மாணிப்பு பிரிவிற்கு உரியதாக 2022.12.31 இல் உள்ளவாறு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தொகையான ரூபா 1089.73 மில்லியனில் ரூபா 458.868 மில்லியன் நிர்மாணிப்பு பிரிவிற்கு உரியதாகும். வீதி விரிவாக்கல் மற்றும் மேம்படுத்தல் - ரூ.மி 435.406 தயட கிருல - ரூ.மி. 22.878 கல் இடப்பட்டு தார் இடுதல் - ரூ.மி. 0.590 458.868 ரூபா 435.406 மில்லியன் ஆனநிலவிய நிறுத்தி வைக்கப்பட்ட தொகையில் 2023.09.30 ஆந் திகதி ஆகையில் ரூபா 98.61 மில்லியன் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டு தற்போது ரூபா 336.68 மில்லியன் கொடுப்பனவு செய்வதற்குள்ளது. 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வீதி விரிவாக்கல் மற்றும் மேம்படுத்தல் நிறுத்தி வைக்கப்பட்ட தொகை 2023.09.30 ஆந் திகதியாகையில் ரூபா 32.45 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டு மீதியாக ரூபா 48.46 மில்லியன் காணப்படுகின்றது. 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட தொகை 2023.09.30 ஆந் திகதியாகையில் ரூபா 38.60 மில்லியன் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டு ரூபா 133.28 மில்லியன் தொகை மீதியாக காணப்படுகின்றது. தெயட கிருல நிறுத்தி வைத்தற் தொகை 2023.09.30 ஆந் திகதியாகையில் ரூபா 10.46 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் மீதியாக ரூபா 12.42 மில்லியன் பணத்தொகை எஞ்சியுள்ளது. கற்கள் இடப்பட்டு தார் போடும் ஒப்பந்தக்கார்களின் நிறுத்திற் வைத்தல் தொகை 2023.09.30 ஆந் திகதியாகையிலும் ரூபா 0.59 மில்லியனாக அவ்வண்ணமே காணப்படுகின்றது. கொடுப்பணவு பிரிவிற்கு உரிய நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ரூபா 89.60 மில்லியனில் ரூபா 7,704,583.16 மில்லியன் தொகை 2023 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்டுள்ளது. மற்றைய ஒப்பந்தக்காரர்களிமிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட தொகை தொடர்பில் தொடர்புடைய மாகாணங்களுக்குரிய பணிப்பாளர்கள் மற்றும் பணிப்பாளர்கள் ஊடாக அத் தொகை விடுவிப்பதற்கு, வருமானத்திற்கு எடுப்பதற்கு அல்லது பதிவழிப்பதற்கு தேவையான பரிந்துரைகள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும் RDA/MMC/BD/PG/05 ஆம் இலக்க ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட தொகையில் ரூபா 826,000 ஆன தொகை விடுவிக்க வேண்டாமென குழு பரிந்துரை பெறப்பட்டுள்ளது. அவ் ஒப்பந்தத்திலேயே உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 368,828.90 ஆன தொகை மற்றும் ரூபா 298,732.35 ஆன தொகை விடுவிப்பதற்கு வவுசர் கொடுப்பனவு பிரிவிற்கு பெறப்பட்டுள்ளது.

		கிராமிய பாலம் நிர்மாணிப்பு பிரிவிற்கு தொடர்புடைய 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிராமிய பாலம் நிர்மாணிப்பு பிரிவிற்கு தொடர்புடைய 05 ஆண்டுகளை மேற்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட தொகை ரூபா 3,130.557.79 மில்லியன் மற்றும் 3-5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குட்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தொகை ரூபா 4,343,552.29 மில்லியன் ஆகும். இது தொடர்பில் பரீட்சித்து விடுவிப்பதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாகாண அலுவலகங்களில் நீண்ட கால நிறுத்தி வைத்தல்கள் தொடர்ந்தும் நிறுத்தி வைப்பதற்கு, விடுவிப்பதற்கு அல்லது வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு தேவையான உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக் கொள்வதற்கு மாகாணங்களுக்கு பொறுப்பான பணிப்பாளர்கள், பிரதான பொறியியலாளர்கள் மற்றும் சிரேஷ்ட பொறியியலாளர்களுக்கு தெரிவித்து RDA/DDF1/15/E ஆம் இலக்க மற்றும் 2023.06.17 திகதிய கடிதம் வெளியிடப்பட்டுள்ளது. மேல் மாகாணத்திற்கு தொடர்புடையதாக 2023 ஆம் ஆண்டினுள் நிறுத்தி வைத்தற் தொகை விடுவித்தல் தொடர்பாக முறைமை மாற்றப்பட்டதுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையினுள் நீண்ட காலமாக சேகரிக்கப்பட்டிருந்த நிறுத்தி வைத்தற் தொகை நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது. அம் முறைமையை நிறைவடைந்த பின்னர் தற்போது வரையில் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்கு மற்றும் ஒப்பந்தக்காரர்களினால் விண்ணப்பிக்கப்பட்ட நிறுத்தி வைத்தற் தொகை விடுவிக்கப்பட்டது. அவ்வாறே ஆண்டினுள் 22/RM 52 இற்கு தொடர்புடைய ரூபா 3.43 பில்லியன் கோரியது கிடைக்கப்பெறாமையினால் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. நீண்ட கால நிறுத்தி வைத்தற் மீதி தொடர்ந்தும் நிறுத்தி வைக்கப்படல் அல்லது வருமானத்திற்கு எடுத்தல் தொடர்பாக பரிந்துரை பெற்றுக் கொடுக்குமாறு குறித்த பிரதான பொறியியலாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்டகாலமாக தீர்க்கப்படாத கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய நிறுத்தி வைத்தல்கள் புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு 2023.07.04 ஆந் திகதி தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் 2023.10.30 ஆந் திகதி மீண்டும் நினைவூட்டல் அனுப்பப்பட்டது. சபகரமுவ மாகாணத்திற்காக ரூபா 109 மில்லியன் ஒவ்வொரு விடயத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 39.3 மில்லியன் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டங்கள் உரிய காலத்தில் நிறைவு செய்யப்படாமை மற்றும் குறைப்பாடுகள் உரிய நிலைக்கு கொண்டு வரப்படாத நிறுத்தி வைத்தல்கள் விரைவில் விடுவிக்கப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும் இந்த தொகை தற்போது நெடுஞ்சாலைகள் அமைச்சின் பொது வைப்பு கணக்கில் வைப்பு செய்யப்பட்டுள்ளதுடன் மாகாண அலுவலகங்களில் ரூபா 20.06 மில்லியனிற்குரிய நிறுத்தி வைத்தற் தொகை குறித்த ஒப்பந்தக்காரர்களுக்கு விடுவிப்பதற்கு கோரப்பட்டுள்ளதுடன் அத் தொகை வரிசை அமைச்சிடமிருந்து கோரப்பட்டு தீர்க்கப்பட்டுள்ளது.
(ட)	2022 திசெம்பர் 31 இல் செலுத்தப்பட வேண்டிய நிறுத்தி வைக்கப்பட்ட தொகையில் ரூபா 175.60 மில்லியன் ஒப்பந்தக்காரரினால் கோரப்படாமையினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், இதில் குறைப்பாடு உத்தரவாதக் காலம் கடந்துள்ள மற்றும் பணி நிறைவு செய்யப்பட்டிராத தெயட கிருல செயற்திட்டத்தின் கீழ் நிறுத்தி வைக்கப்பட்ட	நிர்மாணிப்பு பிரிவிற்கு உரியதாக நிறுத்தி வைக்கப்பட்ட தொகை ரூபா 53.74 மில்லியனில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வவுசர்களுக்காக ரூபா 42.85 மில்லியன் கொடுப்பனவிற்காக தற்போது வவுசர்கள் பெறப்பட்டுள்ளது. கட்டுநிதி பெறப்பட்ட பின்னர் அவற்றை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எஞ்சிய செயற்திட்டத்திற்காக ஒப்பந்தம் மீள மீளாய்வு செய்யப்பட்டு மீதியினை தீர்ப்பனவு செய்வதற்கு

	ரூபா 22.88 மில்லியனில் ரூபா 12.42 மில்லியன் தொகை மீளாய்வாண்டு இறுதியில் பழிவழிப்பதற்கு பரிந்துரைக்கப்படிருந்தது. மேலும், தெற்கு மாகாண பிரதேச அலுலவகம் மேற்கொண்ட 45 செயற்திட்டங்களின் குறைப்பாடு உத்தரவாதக் காலம் 2017 – 2021 ஆண்டுகளில் நிறைவடைந்துள்ள போதிலும், பணி நிறைவுச் சான்றிதழ் வழங்கப்படாமையின் காரணத்தினால் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய நிறுத்தி வைதத்தற் தொகை ரூபா 5.72 மில்லியனாக காணப்பட்டதுடன், 08 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 8.51 மில்லின் நிறுத்தி வைத்தற் தொகை கொடுப்பனவிற்கு நிதி இன்றி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	தொடர்புடைய ஆவணங்கள் பிரதான பொறியியலாளர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பிரதான பொறியியலாளரின் பரிந்துரையின் அடிப்படையில் அத் தொகை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிராமியபாலம் நிர்மாணிப்பு பிரிவிற்கு தொடர்புடையதாக ஒப்பந்தக்காரர்கள் கோராமையினால் நிறுத்தி வைக்கப்பட்ட சரியான தொகை ரூபா 14,750.394.96 ஆகும். இது தொடர்பாக குறித்த செயற்திட்டத்திற்கு பாறுப்பான பொறியியலாளர் மற்றும் ஒப்பந்தக்காரர்களுக்கு அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் கொடுப்பனவு செய்வதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பத்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாகாண அலுவலகங்கள் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள நிறுத்தி வைக்கப்பட்ட தொகையில், 2021 ஆம் ஆண்டினுள் செயற்படுத்தப்பட்ட கிராமிய வீதிகள் மற்றும் கிராமிய பாலங்கள் நிகழ்ச்சித்திட்டங்களும் உள்ளடக்கப்படுகின்றன. எவ்வாறெனினும் இது தொடர்பில் குறித்த ஒப்பந்தக்காரர்களுக்கு அறிவூட்டப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்ட தொகையை விடுவிப்பதற்கு அல்லது வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு குறித்த நடவடிக்கை எடுக்குமாறு மாகாணத்திற்கு பொறுப்பான பணிப்பாளர்கள் மற்றும் அதற்கு தொடர்புடைய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அறிவூட்டப்பட்டு RDA/DDF1/15/E ஆம் இலக்க மற்றும் 2023.06.17 திகதிய கடிதம் வெளியிடப்பட்டுள்ளது. தெயட கிருல செயற்திட்டத்திற்குரிய ரூபா 12.42 மில்லியன் தொகைக்குரிய செயற்திட்டங்களின் மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையினால் பதிவழிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. 2022.12.31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய நிறுத்தி வைத்தற் தொகையில் எட்டு ஒப்பந்தங்களுக்கு தொடர்புடைய ரூபா 8.51 மில்லியன் முதலீட்டு சபையிலிருந்து பெற வேண்டிய மிரிஜ்ஜவெல உள்ளக வீதி செயற்திட்டத்திற்குரிய நிறுத்தி வைத்தற் தொகையாவதுடன் அதற்காக குறித்த தொகை கோரப்பட்டிருப்பினும் இது வரையில் பணத்தொகை பெறப்படாமையினால் அம் மீதி தொடர்ந்தும் கணக்குகளில் காண்பிக்கப்படுகின்றது. நீண்ட கால நிறுத்தி வைத்தல் மீதிகள் தொடர்ந்தும் நிறுத்தி வைக்கப்படுதல் அல்லது வருமானத்திற்கு எடுத்தல் தொடர்பாக பரிந்துரை பெற்றுக் கொடுக்குமாறு தொடர்புடைய பிரதான பொறியியலாளர்களுக்கு அறிவூட்டப்பட்டது. வீதி அபிவிருத்தி அதிகார சபையினுள் நீண்ட காலமாக சேகரிக்கப்பட்டிருந்த தொகை நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இது வரையில் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்கு மற்றும் ஒப்பந்தக்காரர்களினால் கோரப்பட்ட நிறுத்தி வைத்தற் தொகை விடுவிக்கப்பட்டது.
(ண)	மீளாய்வாண்டு இறுதியில் ஒப்பந்த நடவடிக்கைகள் நிறைவேற்றுவதற்கு வாடிக்கையாளர்களிடம் பெற்றுக் கொண்ட வைப்பு மீதி (Client Deposit) ரூபா 2,959.35 மில்லியன் ஆகும். அதில் 05 ஆண்டு கடந்திருந்த போதிலும், நிறைவேற்றப்படாத 150 ஒப்பந்தங்கள் காணப்பட்டதுடன், அதற்குரிய மீதி ரூபா 614.94 மில்லியன் ஆகும். மேலும், 3-5 ஆண்டுகளுக்கு இடைப்பட்டு நிறைவேற்றப்படாத ஒப்பந்தங்கள் 449 ஆக காணப்பட்டதுடன், அதற்குரிய மீதி ரூபா 1,015.75 மில்லியன் ஆகும். மாகாண அலுவலகங்களுடன் ஒப்பந்தங்கள் தொடர்பான தகவல் பரிமாற்றம் தாமதமாகல் மற்றும் பின்னூட்டல் நடவடிக்கைகளில்	வாடிக்கையாளர்களிடம் பெற்றுக் கொண்ட வைப்பு மீதி (Client Deposit) ரூபா 2,959.35 மில்லியன் ஆவதுடன் அதில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 523.07 மில்லியன் ஆவதுடன் 3-5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட மீதி ரூபா 1,102.74 ஆக இந்த கணக்காய்வு பந்தி மாற்றப்பட வேண்டும். 5 ஆண்டுகளுக்கு மேற்ப்பட்ட மீதியில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் வாடிக்கயாளர் வைப்பு மீதியாக அதிகளவு காணப்படுவது கண்டி கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டத்திற்கு மற்றும் விசல் மாத்தளை நீர் செயற்திட்டத்திற்குரிய வைப்பாகும். இந்த செயற்திட்டங்களின் பணிகள் தற்போது வரையில் நிறைவு செய்யப்பட்டிராமையினால் இந்த வைப்புக்கள் இது வரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

	காணப்படுகின்ற பலவீனமும் இந்த பணம் தீர்க்கப்படாமைக்கு காரணமாகியுள்ளதென அவதானிக்கப்பட்டது.	அவ்வாறே இந்த தொகையில் ரூபா 67 மில்லியன் பெறுமதியுள்ள பணிகள் 2023 மார்ச்-யூன் மாதம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் தற்போது வரையில் நிறைவு செய்யப்பட்டுள்ள செயற்திட்டங்களில் ஏதும் சேமிப்புக்கள் காணப்படுமெனில் அவற்றை வருமானத்திற்கு செலவு வைக்குமாறு நிறைவு செய்யப்படாத பணிகள் முடிந்த வரையில் விரைவாக நிறைவு செய்யுமாறும் தெரிவிக்கப்பட்டு நிதி பணிப்பாளரின் RDA/FD/DDF1/54/Client ஆம் இலக்க மற்றும் 2023.06.15 திகதிய கடிதத்தின் ஊடாக அனைத்து மாகாண பணிப்பாளர்களுக்கும் அறிவூட்டுவதற்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.
	மேலும், இந்த வாடிக்கையாளர் வைப்பு மீதியினுள் இலங்கை மகாவலி அதிகாரசபையினால் அதிகமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 42.96 மில்லியன் 2022 நவம்பர் 16 ஆம் திகதி கோரப்பட்டிருந்த போதிலும் அதிகார சபையினால் அதன் துல்லியம் உறுதி செய்யப்பட்ட கணக்காய்வு திகதியான 2023 யூன் 10 ஆந் திகதி வரையிலும் அப் பெறுமதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	இலங்கை மகாவலி அதிகாரசபையினால் வெலிஓய-கஜபாபுர நாதுண்கனரி வீதிக்காக நிதியேற்பாடு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் அரசாங்க அபிவிருத்தி நிர்மாணிப்பு கூட்டுத்தாபனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. அதன் செயன்முன்னேற்றம் 33% ஆவதுடன் 2022 ஆம் ஆண்டில் நிலவிய எரிபொருள் தட்டுப்பாடு, பொருட்கள் தட்டுப்பாடு மற்றும் பொருட்கள் விலைகள் பாரியளவில் அதிகரித்தமையினால் இந்த செயற்திட்டத்தின் நிர்மாணிப்பு மேற்கொள்ளப்படாமை தெரிவிக்கப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஊடாக செயற்திட்டத்தினை இடைநிறுத்துவதற்கு ஒப்பந்தக்காரர்கள் கோரியுள்ளனர். அதன் பிரகாரம் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது. மேலும், இந்த செயற்திட்டத்திற்கு கொடுக்கப்பட்ட முற்பணம் மீண்டும் அறவிடப்படுவதற்கு முற்பணம் பிணை தொகையாக தருமாறு 2023 யூலை 06 ஆந் திகதி வங்கி வங்கியின் மொரட்டுவ கிளைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்தின் நிர்மாணபிபு நிறுத்தப்பட்டுள்ளதுடன் எஞ்சிய தொகை மீண்டும் மகாவலி அதிகார சபைக்கு கொடுப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றமையை மகாவலி அதிகார சபைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.
(த)	அதிகார சபையினால் 10 நிர்மாணிப்பு செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தக்காரர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த முற்பணங்களின் பெறுமதி ரூபா 45,811.79 மில்லியனாக காணப்பட்டதுடன், அப் பெறுமதியில் 05 செயற்திட்டங்களுக்குரியதாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 15.53 மில்லியன் முற்பணம் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதி வரையிலும் குறித்த மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மத்திய அதிவே வீதி செயற்திட்டம் கட்டம் I, மத்திய அதிவே வீதி செயற்திட்டம் கட்டம் II மற்றும் ருவன்புர அதிவே வீதி செயற்திட்டத்திற்காக கூட்டுத்தொகை ரூபா 39,976.2 மில்லியன் முற்பணமாக செலுத்தப்பட்டிருந்ததுடன், குறித்த 03 செயற்திட்டங்களின் பணிகள் இடை நடுவே நிறுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பணிகள் ஆரம்பிப்பதற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ரூபா 45,811.79 மில்லியன் முற்பணம் தீர்ப்பதற்கு முடியாதிருந்தது.	மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் கட்டம் I, மத்திய அதிவே வீதி செயற்திட்டம் கட்டம் III ஆன செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் எஞ்சிய பில்கள் தீர்க்கப்படும் போது அதற்குரிய முற்பணம் தீர்க்கப்படும். ருவன்புர அதிவே வீதியின் திரவ வைப்பு தற்போது அதிகார சபைக்கு பெறப்படடுள்ளதுடன் குறித்த வைப்பு சீராக்கல் 2023 யூலை மாதம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் எஞ்சிய தொகையில் ரூபா 27.95 மில்லியன் தீரக்கப்பட்டுள்ளது. நிர்மாணிப்பு பிரிவின் 2022.12.31 இல் அறவிடப்படுவதற்கிருந்த முற்பணம் ரூபா 43.09 மில்லியனாக காணப்பட்டதுடன் 2023.09.30 ஆந் திகதியாகையில் ரூபா 24.09 மில்லியன் அறவிடப்பட்டுள்ளது. கிராமிய பாலம் நிர்மாணிப்பு பிரிவின் தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணம் ஆன ரூபா 1.41 மில்லியன் சட்டரீதியான நடவடிக்கை ஊடாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. கொடுப்பனவு பிரிவிற்குரிய ரூபா 3,862,451.25 ஆன தொகை நிர்மாணிப்பு பிரிவிற்கு சார்பாக CECB நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்த விலைப்பட்டியலொன்றில் 2023 மே மாதம் தீர்க்கப்பட்டுள்ளது. மத்திய மாகாணத்திற்கு தொடர்புடைய செல்டெக் குரூப் நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதியில் ரூபா 2.21 மில்லியன் தற்போது தீர்க்கப்பட்டுள்ளதுடன் ரூபா 5.59 மில்லியன்தொகை பணிப்பாளர் நிர்மாணிப்பு இடம் காணப்படுகின்ற விலைப்பட்டியல்களில் தீர்க்கப்படுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே ஒப்பந்தக்காரர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிணைகளில் அதிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தொகை தீர்க்கப்படுமாறு

		தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் 2023.11.15 ஆந் திகதி மீண்டும் நினைவூட்டப்பட்டுள்ளது. கவிது பில்டசரினால் தீர்க்கப்பட வேண்டிய மீதியில் ரூபா 3.32 மில்லியன் தீர்க்கப்பட்டுள்ளதுடன் இன்னும் ரூபா 840,240.00 ஆன தொகை தீர்க்கப்படுவதற்காக விலைப்பட்டியல் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறே எஞ்சிய தொகை அறவிடப்படுவதற்கு நீதிமன்ற நடவடிக்கை எடுப்பதற்காக 2023.10.30 ஆந் திகதி சட்டபிரிவிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.
		தயாரிக்கப்பட்டுள்ளதுடன் வருங்காலத்தில் பெறப்படுகின்ற நிதியேற்பாடு அடிப்படையில் அவ் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். (iii) **P74-6 போகஹவத்த -2 , P74-7 ஜிகியன் வீதி , P74-8 போகஹவத்த -1, P74-9 உடுவில விகாரை வீதி , P74-10 சம்பத் உயன** கொங்கிரீட் இடப்பட்டு அபிவிருத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்ட வீதியில் ABC இடப்பட்டு உரிய தரத்திற்கு வீதி அடித்தளம் அமைக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் நாட்டினுள் நிலவிய பெருளாதார நெருக்கடியுடன் இந்த வீதியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஒப்பந்தக்காரரினால் இடைநிறுத்தப்பட்டது. அதன் பிரகாரம் தற்போது வீதியில் இடப்பட்டிருந்த ABC மழை நீருக்கு கழுவி செல்லப்படல் மற்றும் வாகன போக்குவரத்து காரணத்தினால் கற்கள் தளர்த்தப்பட்டு பரவப்பட்டிருந்தமையினால் மனிதர்களுக்கு மற்றும் வாகன போக்குவரத்திற்கு சிரமம் ஏற்பட்டுள்ளதென தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த வாகன போக்குவரத்திற்கு பொருத்தமான வண்ணம் (Motorable condition) குறைந்த கிரயத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவு செய்வதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் வருங்காலத்தில் பெறப்படுகின்ற நிதியேற்பாடு அடிப்படையில் அவ் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவீதிகளுக்கான முன்மொழிவுகள் எங்கள் பொறியியலாளர்களினால் தொடர்புடைய உள்ளூராட்சி நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுடன் அவதானிக்கப்பட்டதுடன் அதன் போது கற்கள் பிடிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த வீதிகள் சிதைவடைந்து வெவ்வேறு இடங்களில் சரிவு ஏற்பட்டிருந்தமை அடையளப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எங்கள் பொறியியலபளல்களின் பரந்துரைகளின் பிரகாரம் இந்த வீதிகளுக்கு ABC இடப்பட்டு கொங்கிரீட் இடப்படுவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. (ஆ) இந்த செயற்திட்டத்தில் காபட் இடப்பட்டு அபிவிருத்தி செய்வதற்கு பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் வீதிகள் பகுதிகளாக ABC இடப்பட்டு தார் பூசப்பட்டு காபட் இடப்படுவதற்கு உரிய தரத்துடன் அமைக்கப்பட்டு விலைப்பட்டியல்களும் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்கின்றேன். எனினும் அதன் பின்னர் மேற்படி 06 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களினால் செயற்திட்டத்தின் பணிகள் இடைநடுவே நிறுத்துவதற்கு நேரிட்டது. இந்த பிரதேசத்திற்கு தொடர்ந்தும் பெய்யப்படுகின்ற மழை மற்றும் வெள்ளப்பெருக்கின் காரணத்தினால் பகுதிகாளக நிறைவு செய்யப்பட்டிருந்த இந்த வீதிகளின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படாமையின் காரணத்தினால் ABC தளர்த்தப்பட்டு போக்குவரத்திற்கு பயன்படுத்துவதற்கு முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்குரிய சிறுபாலங்கள் நிர்மாணிக்கும் பணிகள், கால்வாய்கள் நிர்மாணித்தல் போன்றன நிறைவு செய்யப்பட்டிருந்தமையினால் மற்றும் உரிய தரத்துடன் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக மட்டும் ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இந்த வீதியும் எதிர்காலத்தில் நிதியேற்பாடு பெறப்படும் வகையில் நேரடி உழைப்பின் ஊடாக போக்குவரத்திற்கு இலகுவான வகையில் (Motorable) பணிகள் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதனால் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் இதற்காக ஏற்கப்பட்டுள்ள செலவீனம் விளைவற்ற செலவல்ல என தெரிவித்துக் கொள்கின்றேன்.

(i) ஹவ்தொல்ல அண்மையிலிருந்து வக்முல்ல ஊடாக மாரகொட வத்த வரையான வீதி

1806 மீட்டர் நீளத்தை கொண்ட இந்த வீதியின் சில இடங்களில் கொங்கிரீட் இடப்பட்ட 385 மீட்டரும் (0+042–0+140 , 1+449–1+522 , 1+546–1+666 සහ 1+712–1+806) , கற்கள் பதிக்கப்பட்டு 170 மீட்டரும் (0+000–0+042 மற்றும் 0+140–0+268) மண் உடன் கூடிய பகுதி 1251 மீட்டரும் (0+268–1+449 , 1+522–1+546 සහ 1+666–1+712) என ஒரே மாதிரியற்ற வண்ணம் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த குறுகிய வீதியொன்றாகும் (2.4 மீட்டர்).

இங்கு வீதியானது, பாதுகாப்பாக வாகன போக்குவரத்திற்காக 3 மீட்டர் ஆக விரிவாக்கப்பட்டு அபிவிருத்தி செய்யும் போது நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட நிர்மாணிப்பு இயந்திரங்கள் மற்றும் பாரிய வாகனங்கள் கொங்கிரீட் மற்றும் கற்கள் இடப்பட்டிருந்த வீதி பகுதியின் மீது பயணிக்கும் போது அப் பகுதிகளுக்கு ஏற்படக் கூடிய சேதமும் கருத்திற் கொள்ளப்பட்டு பொறியியல் பரிந்துரைகள் மற்றும் அளவீடுகள் பிரகாரம் ஒரேமாதிரியான அபிவிருத்தியாக முழு வீதியும் எஸ்பொல்ட் இடப்பட்டு அபிவிருத்தி செய்வதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் வீதியில் சிறுபாலம் நிர்மாணித்தல் மற்றும் கொங்கிரீட் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, ABC இடப்பட்டு தார் பூசப்பட்டு (Prime Coat) பின்னர் Asphalt இடப்படுவதற்கு ஆயத்தப்படுத்தப்பட்டிருந்த போதிலும் நாட்டினுள் நிலவிய பொருளாதார நெருக்கடியின் காரணத்தினால் ஏற்பட்ட சிரமம் மற்றும் விலைப்பட்டியல்கள் கொடுப்பனவு செய்வதில் தாமதம் ஆகியமையினால் ஒப்பந்த கம்பனி இதன் நிர்மாணிப்பு நடவடிக்கைகளை நிறுத்தியது என தெரிவித்துக் கொள்கின்றேன்.

சரிவுடைய பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த வீதியின் ABC மேற்பரப்பில் வாகனங்கள் நாளாந்தம் பயணித்தல் மற்றும் பிரதேசத்திற்கு அவ்வப்போது பெய்யப்படுகின்ற அதிக மழை காரணத்தினால் ABC மேற்பரப்பு சேதமடைந்து போக்குவரத்திற்கு கடினமாகியுள்ளது.

வாகன போக்குவரத்திற்கு பொருந்தும் வகையில் (Motorable condition) குறைந்த கிரயத்தின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவு செய்வதற்கு மதிப்பீடுகள் தயாரித்துள்ளதுடன் எதிர்காலத்தில் பெறப்படுகின்ற நிதியேற்பாட்டின் அடிப்படையில் வீதிகள் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ABC இடப்பட்டு Prime செய்யப்பட்டிருந்த இந்த வீதியின் வயல்கள் அமைந்துள்ள இரு பக்கங்களும் விரிவாக்கப்படுவதற்கு இலகுவான மண்ணுடனான பகுதிகளின் (Soft Ground) அடித்தளத்தினை வலுப்படுத்துவதற்கு உரிய தரத்தில் 6" x 9" கற்கள் இடப்பட்டு அக் கல் துவாரங்களுக்கு ABC இடப்பட்டு (Key Aggregate) ஒத்திசைக்கப்பட்டிருந்தது. இந்த வீதியின் நிர்மாணிப்புகள் பெய்யப்பட்ட அதிக மழையின் காரணத்தினால் 6" x 9" கல் துவாரங்கள் மூடப்படுவதற்கு ABC இடப்பட்டிருந்த கழுவப்பட்டு சென்றமையினால் அப்பகுதிகள் சேதமடைந்துள்ளது. அது அவதானிப்பின் பலவீனத்தினால் அல்லவென தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ii) மலிதுவ வத்த வீதி

இந்த வீதியின் தூரம் 1158 மீட்டர் ஆவதுடன் கொங்கிரீட் இடப்பட்டுள்ள வீதியாக குறிப்பிடப்பட்ட போதிலும் அது இவ்வண்ணமாக மாற்றப்பட வேண்டும். இந்த வீதியில் கொங்கிரீட் இடப்பட்டிருந்த பகுதியின் நீளம் 496 மீட்டரும், (0+000–0+348 , 0+929–1+000 மற்றும 1+081–1+158 கற்கள் இடப்பட்டு 81 மீட்டரும் (1+000–1+081) மற்

மணலுடன் கூடிய பகுதி 581 மீட்டரும் (0+348–0+929) என ஒரே மாதரியான அன்று அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த வீதியாகும்.

இந்த வீதியின் அனைத்து சிறு கால்வாய்களும் நிர்மாணிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டு ABC இடப்பட்டு Prime செய்யப்பட்ட பின்னர் Asphalt இடப்படுவதற்கு ஆயத்தப்படுத்தப்பட்டிருப்பினும் நாட்டினுள் நிலவிய பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்ட சிரமம் மற்றும் விலைப்பட்டியல் கொடுப்பனவு செய்வதில் தாமதமாகியதில் ஒப்பந்த நிறுவனம் இதன் நிர்மாணிப்பு நடவடிக்கைகளை நிறுத்தியது என தெரிவித்துக் கொள்கின்றேன்.

பள்ளமான பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த வீதியின் ABC மேற்பரப்பில் வாகனங்கள் நாளாந்தம் பயணித்தல் மற்றும் பிரதேசத்திற்கு அவ்வப்போது பெய்யப்படுகின்ற அதிக மழையினால் ABC மேற்பரப்பு சேதமடைந்து பயணத்திற்கு சிரமாகியுள்ளது.

வாகன போக்குவரத்திற்கு பொருந்தும் வகையில் (Motorable condition) குறைந்த கிரயத்துடன் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவு செய்வதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் பெறப்படுகின்ற நிதியேற்பாட்டின் அடிப்படையில் அவ் வீதிகளை அபிவிருத்த செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) P 139 (QA) தெரன்கல மலை 1 வீதி

முன்னர் குறிப்பிடப்பட்ட பிரகாரம் நாட்டினுள் நிலவிய பொருளாதார நெருக்கடியினால் ஒப்பந்த கம்பனிக்கு ஏற்பட்ட சிரமத்தினால் மற்றும் விலைப்பட்டியல் கொடுப்பனவு செய்வதில் தாமதித்திருந்தமையின் காரணத்தினால் ஒப்பந்தக்காரர்கள் நிர்மாணிப்பு நடவடிக்கைகளை இடைநிறுத்தினர்.

அதன் போது இவ் வீதியின் அபிவிருத்திக்காக தேவைப்படுகின்ற விரிவாக்கல் (Edge Widening) மேற்கொள்ளப்பட்டு அதற்காக ABC இடப்பட்டதுடன் வீதியில் சிறுபாலம் நிர்மாணித்தல், பக்க தூண்கள் நிர்மாணித்தல் உரிய தரத்துடன் மேற்கொள்ளப்பட்டமையினால் அப் பகுதிகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதென தெரிவித்துக் கொள்கின்றேன்.

எதிர்காலத்தில் நிதியேற்பாடு பெறப்படும் வகையில் நேரடி உழைப்பின் கீழ் வீதியினை போக்குவரத்திற்கு பொருந்தும் வண்ணம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதனால் மேற்கொண்ட கொடுப்பனவு விளைவற்றதல்ல என தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த வீதியானது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான பலவத்த – தினியாவல – மொரவக B- 363 வீதியுடன் தொடர்புக் கொள்ளும் வீதியாகின்றமை மற்றும் நெலுவ பிரதேசத்திற்கு செல்லும் மக்களுக்கு வசதியான வீதியாகின்றமையினால் முன்னாள் ஜனாதிபதியின் தலைமைத்துவத்தில் தெரங்கல தேசிய பாடசாலையில் நடத்தப்பட்ட "கம சமக பிலிசதர" நிகழ்ச்சி திட்டத்தின் போது பிரதேச மக்கள் மேற்கொண்ட கோரிக்கையின் பிரகாரம் இந்த வீதி வாகனங்கள் போக்குவரத்திற்கு பொருந்தும் வகையில் விரிவாக்கப்பட்டு அமைக்குமாறு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டது.

அதன் பிரகாரம் எங்கள் பொறியியலாளர்கள் தொடர்புடைய உள்ளூராட்சி நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுடன் இந்த வீதியினை அவதானித்து பொறியியலாளர்களின் பரிந்துரைகளின் பிரகாரம் குறுகிய வீதியாக காணப்பட்ட வீதி (2.4 மீட்டர்) பாதுகாப்பாக வாகனங்கள் செலுத்துவதற்கு குறைந்தபட்சம் அகலம் 3 மீட்டர் ஆன வண்ணம் விரிவாக்கப்பட்டு அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டது என தெரிவித்துக் கொள்கின்றேன். இதன்

		போது வீதியினை விரிவாக்கி அபிவிருத்தி செய்யும் போது நிர்மாணிப்பு இயந்திரங்கள் மற்றும் பாரமுடைய வாகனங்கள் இந்த கொங்கிரீட் பகுதியின் மீது பயணிக்கும் போது நேரக்கூடிய சேதங்களும் கருத்திற் கொண்டு மற்றும் ஏற்கனவே இருந்த கொங்கிரீட் வீதி பகுதிகளும் சேதத்திற்கு உள்ளாகியிருந்தமையினால் முழு வீதியுமே Asphalt இடப்பட்டு அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டது என தெரிவித்துக் கொள்கின்றேன். வாகன போக்குவரத்திற்கு பொருந்தும் வகையில் அபிவிருத்தி செய்வதற்கு மதிப்பீடு தயாரித்து வருவதுடன் எதிர்காலத்தில் பெறப்படுகின்ற நிதியேற்பாட்டின் அடிப்படையில் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். **(ஈ) ஒப்பந்த தொகுப்பு இல P76 (QA) – திஹகொட-படவெல்ல-உடுகம வீதி வரையான வீதி** ஒப்பந்தக்காரரினால் இந்த வீதியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் உரிய தரத்துடன் ABC இடப்பட்டு அமைக்கப்பட்டது. கடந்த காலப்பகுதியில் நாட்டினுள் எழுந்த நெருக்கடியான நிலையில் இந்த செயற்திட்டமும் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நேரிட்டது. ABC மேற்பரப்பில் வாகனங்கள் பயணிப்பதனால் ABC தளர்த்தப்படுகின்றமையினால் போக்குவரத்திற்கு சிரமம் ஏற்பட்டுள்ளதென தெரிவித்துக் கொள்கின்றேன். இங்கு கால்வாய்களில் படிந்துள்ள ABC இனால் தடைப்பட்டுள்ள இடங்கள் சீரமைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பராமரிப்பு பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த வீதிக்காக எதிர்காலத்தில் பெறப்படும் நிதியேற்பாட்டின் அடிப்படையில் நேரடி உழைப்பினை பயன்படுத்தி பொது மக்களுக்கு அசௌகரியமின்றி பயன்படுத்துவதற்கு (Motorable Condition) முடியுமான வகையில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையை தெரிவித்துக் கொள்கின்றேன். நேரடி உழைப்பின் கீழ் காபட் இடப்பட்டு பணிகள் நிறைவு செய்யப்பட்டது.
(ஜ)	2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட அலுவலகங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் பிரகாரம், 14 செயற்திட்டங்களுக்காக கையேற்கப்பட்ட ஒட்டுமொத்த காணித் துண்டுகள் 48,427 ஆக காணப்பட்டதுடன் காணி சுவீகரித்தல் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் மீளாய்வாண்டு இறுதியில் அதிகார சபைக்கு உரித்து கையேற்கப்பட்ட காணித் துண்டுகள் 4,543 ஆக அதாவது 09 சதவீதமாக மட்டும் காணப்பட்டது.	அரசாங்கத்திற்கு சுவீகரிக்கப்பட்ட பின்னர் அதற்குரிய இழப்பீட்டு தொகை கொடுப்பனவு செய்த பின்னர் 44 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்படுகின்றமையினால் எஞ்சிய காணி துண்டுகளுக்காக இழப்பீடு செலுத்தப்பட்ட பின்னர் 44 ஆம் பிரிவின் பிரகாரம் பதிவு செய்யப்படும்.

2.3 ஏனைய விடயங்கள்

பந்தி இல	கணக்காய்வு பந்தி	பந்தி
(அ)	கணக்காய்விற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியாகையில் தேசிய வங்கி ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட கடனில் மீள் செலுத்துவதற்குள்ள அளவு ரூபா 356,059.32 மில்லியன் ஆவதுடன், கடன் பெற்றுக் கொண்டமையின் காரணத்தினால் 05 ஆண்டுகள் காலத்தினுள் தேசிய வணிக வங்கிக்கு செலுத்துவதற்குள்ள வட்டி பெறுமானம் ரூபா 108,970.36 மில்லியனாக காணப்பட்டது. மேலும்,	இந்த பந்தியின் பிரகாரம் "05 ஆண்டு காலப்பகுதியினுள் நிதிக் கூற்றினுள் நிதி செலவீனமாக காண்பிக்கப்பட்டுள்ள செலவீனம் ரூபா 108,970.36 மில்லியன் ஆகும்" என திருத்தப்பட வேண்டியதுடன் அதன் பெறுமதி ஒவ்வொரு ஆண்டிற்கும் பின்வருமாறு ஆகும். 2018 16,304,277,521.00 2019 15,866,202,677.00 2020 13,551,363,730.00 2021 14,276,855,572.00 2022 48,971,664,891.00 108,970,364,391.00

	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூபா 37,668.7 மில்லியனாகவும் செலுத்த வேண்டிய கடன் தவணை பெறுமதி ரூபா 2,502.3 மில்லியனாகவும் காணப்பட்டது.	உள்நாட்டு வங்கி கடன் பெற்றுக் கொள்ளும் போது அதற்குரிய வட்டி சதவீதங்கள் தொடர்புடைய வங்கியினால் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துடன் கலந்துரையாடி தீர்மானிக்கப்படும். அவ்வாறே இந்த கடன் AWPLR அடிப்படையில் நிலைவான வைப்பு வட்டி விகிதத்திற்கு அன்று நிலையற்ற கடன் வட்டி விகிதத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 2022 ஏப்ரல் மாதம் தொடக்கம் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியினால் வட்டி விகிதங்கள் பாரியளவில் அதிகரித்தமையினால் 2022 ஆம் ஆண்டின் கடன் வட்டி தொகை அசாதாரணமாக அதிகரித்துள்ளது. இது AWPLR அதிகரித்தமையினால் ஏற்பட்ட நிலையாவதுடன் முன் நிலைக்கு வந்தவுடன் செலவீனம் பொருண்மையயாக குறைவடையும். வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தொடர்புடைய வங்கியுடன் உடன்படும் போது வட்டி மற்றும் கடன் தவணை கொடுப்பனவு செய்வதற்கு தேவைப்படுகின்ற கட்டுநிதி செலவின தலைப்பொன்றின் ஊடாக உரிய திகதியில் விடுவிக்கும் பொறுப்பிற்கு திறைச்சேரி உடன்பட்டுள்ளது. ஒவ்வொரு மாத இறுதியிலும் அடுத்த மாதத்திற்கு தேவைப்படுகின்ற கட்டுநிதி மற்றும் அவை பெற வேண்டிய திகதிகள் உரிய மாதிரியின் ஊடாக அமைச்சின் ஊடாக திறைச்சேரிக்கு அனுப்பப்படும். அதற்க மேலதிகமாக ஒவ்வொரு வங்கிக்கும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பணத்தொகை தொடர்பாக தெரியப்படுத்தும் கடிதமும் தொடர்புடைய வட்டி சரியாக பரீட்சித்து கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய உரிய திகதிக்கு முன்னர் அமைச்சிற்கு அனுப்பப்படும். அதன் பிரகாரம் அமைச்சினால் உரிய திகதியில் பணத்தொகை விடுவிக்கப்படும். இந்த முறை 10 ஆண்டுகளாக தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டதொன்றாகும். எனினும் இம்முறை திறைச்சேரியினால் அவை தீர்ப்பதற்கு தாமதமாகியுள்ளது. எனவே தண்டனை வட்டி கொடுப்பனவு செய்தல் தொடர்பான பொறுப்பு அதிகார சபையின் பொறுப்பல்ல.
(ஆ)	அதிகார சபையினால் 2 ½ ஆண்டுகள் மற்றும் 4 ½ ஆண்டுகள் இடையே சலுகை காலத்தின் அடிப்படையில் 10 ஆண்டுகள் மற்றும் 18 ஆண்டுகள் இடையே காலத்தினுள் செலுத்தி முடிக்கும் அடிப்படையில் 07 தேசிய வங்கிகளில் 34 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 408,541.01 மில்லியனில் 2022 திசெம்பர் 31 இல் தொடர்ந்தும் செலுத்த வேண்டியுள்ள ரூபா 356,059.31 மில்லியன் பெறுமதியான கடன், தவணை கொடுப்பனவு காலம் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டு 2020 மார்ச் 13 திகதிய MFE/ERD/14/CM/2020/065 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரிக்கை சமர்ப்பித்து கடன் மீள் கட்டமைக்கப்பட்டிருந்தது. மீள் கட்டமைப்பிற்குரிய மதியுரை பெற்றுக் கொள்வதற்கு மக்கள் வங்கிக்கு ரூபா 10.80 மில்லியன் மதியுரைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் கடன் மீள் கட்டமைக்கப்பட்டமையினால் வருடாந்தம் அதிகரிக்கப்பட்ட வட்டி விகிதத்தின் அடிப்படையில் ரூபா 400.74 மில்லியன் மேலதிக வட்டித் தொகை செலுத்துவதற்கு அதிகார சபைக்கு நேரிட்டிருந்தது.	கடன் மீள்கட்டமைக்கும் செயன்முறைக்கு கொடுக்கல் வாங்கல் ஆலோசகர் நியமிக்கப்படல் அத்தியாவசியமாகும். இது கெபினட் பத்திரிக்கையூடாகவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி ஒருங்கிணைந்து கொடுக்கல்வாங்கல் ஆலோசனைக்காக நியமிக்கப்பட்ட போதிலும் இலங்கை வங்கிக்காக எந்தவொரு கட்டணமும் செலுத்தப்படாததுடன் மக்கள் வங்கியினால் ரூபா 20.0 மில்லியன் விலைப்பட்டியல் முன்வைக்கப்பட்டது. திறைச்சேரியினால் அம் மதியுரை சேவைக்கான பணத்தொகை கொடுப்பனவு செய்வதற்கு உரிய பணத்தொகை கலந்துரையாடப்பட்டு ரூபா 10.0 மில்லியனிற்கு உடன்பட்டதுடன் அத் தொகை அதிகார சபையினால் மக்கள் வங்கிக்கு கொடுப்பனவு செய்யப்பட்டது. கடன் மீள்கட்டமைப்பு காலத்திற்கு முன்னர் ரூபா 15.0 பில்லியன் கடன் தவணை கொடுப்பனவு செய்வதற்கு பொது திறைச்சேரியினால் வரிசை அமைச்சின் ஊடாக கட்டுநிதி விடுவிக்கப்பட்டது. பொது திறைச்சேரியின் கீழ் கடன் மீள்கட்டமைப்பின் ஊடாக இந்த கடன் தவணை கொடுப்பனவு 10-15 ஆண்டுகள் வரை தாமதிக்கப்பட்டது. அக் காலத்தினுள் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய கடன் வட்டி (அடிப்படை வட்டி) 0.75% கொடுப்பனவு செய்வதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் அது 0.5% ஆன வட்டி விகிதத்திற்கு கடன் முகாமைத்துவத்தின் ஊடாக குறைக்கப்பட்டது. அதன் ஊடாகவும் 0.25% சேமிப்பின் நலனும் பெற்றுக் கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியினால் AWPLR அதிகரித்தமையினால் இந்த நிலை உருவாகிய போதிலும் நாடு மீளும் போது உரிய பொருளாதார நலன் பெறப்படும். ஆண்டுதோறும் அதிகரித்த வட்டி விகிதத்தின் அடிப்படையில் ரூபா 400.74 மில்லியன் மேலதிக வட்டித்தொகை கொடுப்பனவு செய்தல் போன்ற விடயம் நேரடி கியரமாக மதிப்பிடப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் நாட்டில்

		நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியின் போது எடுக்கப்பட்ட இந்த தீர்மானங்களில் தவிர்த்து கொள்ளப்பட்ட மறைமுக கிரயம்/ நட்டம் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்தது.
(இ)	2019 செப்தெம்பர் 25 திகதிய அமப/19/2547/119/068-1 ஆம் இலக்க மற்றும் 2019 ஆகஸ்ட் 07 திகதிய அமப/19/1983/119/068 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மீரிகம தொடக்கம் குருநாகலை வரை மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டம் அபிவிருத்தி செய்தல், நிலுவை விலைப்பட்டியல் கொடுப்பனவு செய்தல், அவ் வீதியின் I, II மற்றும் III ஆம் பகுதிகளின் காணிகள் சுவீகரித்துக் கொள்வதற்கான இழப்பீட்டு தொகை செலுத்துவதற்கு தேசிய வங்கியினால் கடன் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அங்கு மீண்டும் செலுத்தும் திறனின் அடிப்படையில் அதிவேக வீதிகளில் சேகரிக்கப்படுகின்ற பணத்தினை பயன்படுத்தி கடன் தவணை மற்றும் கடன் வட்டி செலுத்தும் அடிப்படையில் 2019 நவம்பர் 18 ஆந் திகதி இலங்கை வங்கியிலிருந்து ரூபா 4,312 மில்லியனும், 2019 ஒக்தோபர் 04 ஆந் திகதி மக்கள் வங்கியிடமிருந்து ரூபா 3,688 மில்லியனுமாக கூட்டுத்தொகை ரூபா 8000 மில்லியன் கடன் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 ஆந் திகதியாகையில் தொடர்ந்தும் செலுத்துவதற்குள்ள கடன் மீதிகள் முறையே ரூபா 2,084 மில்லியன் மற்றும் ரூபா 1,720.68 மில்லியனாகவும் காணப்பட்டது. அதன் பிரகாரம், அதிவேக வீதியின் வருமானத்தில் செலுத்தப்பட்டுள்ள கடன் தவணை பெறுமதி ரூபா 4,195 மில்லியனாக காணப்பட்டதுடன், இந்த கடன் தொகைக்காக செலுத்தப்பட்டுள்ள வட்டி பெறுமானம் அண்ணளவாக ரூபா 3,000 மில்லியனாக காணப்பட்டது. மேலும், கடன் தொகை பயன்படுத்தி அபிவிருத்தி செய்யப்பட்ட அதிவேக வீதிகளின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது.	மத்திய அதிவே வீதி - II செயற்திட்டத்திற்காக உள்நாட்டு வங்கி கடன், திறைச்சேரி பிணைமுறி அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த 08 பில்லியன் ஆன உள்நாட்டு கடன் பெற்றுக் கொள்ளும் போது பொது திறைச்சேரி பிணைமுறி விடுவிப்பதற்கு இயலாமையும் அனைத்து உள்நாட்டு கடன்களுக்காக திறைச்சேரியினால் ஏற்கப்பட்டமையினால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முடிந்தவரையில் அதிவே வீதிகளில் சேகரிக்கப்படும் வருமானம் பயன்படுத்தப்பட்டு உள்நாட்டு வங்கி கடன் பெற்றுக் கொள்வதற்கு முன்வந்த முன்மொழிவின் பிரகாரம் செயற்படுத்தப்பட்டது. அச் சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்ட உரிய காலத்திற்குரிய மற்றும் சாதாரண முன்மொழிவாக அனைவரினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் அது செயற்படுத்தப்பட்டது. இலங்கை வங்கியில் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 4,312 மில்லியன் மற்றும் மக்கள் வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 3,688 மில்லியன் கடன் தொகை மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் - II இற்காக மட்டும் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்ட அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டு அவ் வீதி 2022.01.15 ஆந் திகதி தொடக்கம் பொது மக்களுக்கு திறக்கப்பட்டதுடன் நுழைவுக் கட்டணம் அறவிடப்பட்டு பயன்படுத்தப்படும்.
(ஈ)	தேசிய வங்கி ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகைக்கு கடன் தவணை மற்றும் தவணையாக 2022 திசெம்பர் 31 இல் நிலுவையாக காணப்பட்ட தொகை தீர்க்கப்படுவதற்கு திறைச்சேரியினால் நிதியேற்பாடு பெற்றுக் கொடுப்பதற்கு முடியாதமையின் அடிப்படையில் 22.5 சதவீத வட்டி வீதத்தின் கீழ் ரூபா 36,671.62 மில்லியன் திறைச்சேரி உண்டியல்கள் (Treasury Bonds) வெளியிடப்பட்டிருந்தது. மேலும், தேசிய வங்கிகள் ஊடாக கடன் பெற்றுக் கொண்டு மேலதிகமாக 100,000 கி.மீட்டர் வீதிகள் வேசைத்திட்டத்திற்குரிய வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 36 ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்துவதற்குள்ள ரூபா 32,217.89 மில்லியனிற்காகவும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியாகையில் 22.5 சதவீத வட்டி வீதத்தின் கீழ் திறைச்சேரி உண்டியல்கள் வெளியிடப்பட்டிருந்தது. இவ்வாறு திறைச்சேரி உண்டியல்கள் வெளியிடப்பட்டமையின் காரணத்தினால்	திறைச்சேரி விலைப்பட்டியல் விடுவித்தலினால் அரசாங்கத்திற்கு ஏற்பதற்கு நேரிட்ட செலவீனமாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள செலவீனத்தின் பெறுமதி கணிக்கப்பட்ட முறை பிரச்சினைக்குரியதாகும். நாட்டினுள் நிலவிய நெருக்கடியான சூழ்நிலையின் முன்னாள் தேசிய பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பினை பெற்றுக் கொடுத்த நிர்மாணிப்பு துறை வீழ்ச்சிக்கு உட்பட்டிருந்தது. அச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய செலுத்தப்படாத விலைப்பட்டியல் ரூபா 80.0 பில்லியன் காணப்பட்டதுடன் அதற்காக கட்டுநிதி பொது திறைச்சேரி ஊடாக அதிகார சபைக்கு கிடைக்கப்பெறவில்லை. அதற்கு மாற்று தீர்வாக இந்த திறைச்சேரி பிணைமுறி பெற்றுக் கொடுக்கும் முன்மொழிவு முன்வந்தது. அது நடக்காவிடின் நிர்மாணிப்பு துறை முழுமையாக வீழ்ச்சியடைந்திருக்கும் என்பதனால் திறைச்சேரி பிணைமுறி பெற்றுக் கொள்ளுதலானது எதிர்கால நோக்கத்துடன் எடுக்கப்பட்ட பயனுள்ள தீர்மானமாகும். இங்கு விளைவாக நாட்டினுள் பணப்புழக்கம் ஏற்பட்டு சிறியளவிலான நிர்மாணிப்பு ஒப்பந்தக்காரர்களின் பணிகள் தொடர்பாக மீண்டும் எழுச்சி பெற்றது. திறைச்சேரி பிணைமுறி விடுவிக்கப்பட்ட காரணத்தினால் தற்போது கொடுப்பனவு செய்யப்படாத

	அரசிற்கு மேலதிகமான செலவீனமொன்று ஏற்படுவதற்கு நேரிடுகின்றதுடன் வருடாந்தம் அச் செலவினம் அண்ணளவாக ரூபா 15,155.69 மில்லியன் ஆகின்றமை அவதானிக்கப்பட்டது.	விலைப்பட்டியல் ரூபா 10.0 பில்லியன் வரை குறைக்கப்பட்டுள்ளது.
(உ)	அதிகார சபைக்கு சொந்தமான வரையறுக்கப்பட்ட அதிவே வீதி (தனியார்) கம்பனி 2016 ஆம் ஆண்டு தொடக்கம் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமரப்பித்திருக்கவில்லை. அவ்வாறே மகநெகும நிர்மாணிப்பு மற்றும் இயந்திர உபகரண கம்பனியின் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அப்பிராயம் மறுக்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிற்கு பாதகமான கணக்காய்வு அபிப்பிராயம் முன்வைக்கப்பட்டிருந்தது.	வரையறுக்கப்பட்ட அதிவேக வீதி போக்குவரத்து (தனியார்) கம்பனியின் 2016 தொடக்கம் 2019 வரை நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்காக குறித்த கால வறையரைக்குள் தயாரித்து தற்போது 2016 தொடக்கம் 2018 வரை நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ள போதிலும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். மகநெகும நிர்மாணிப்பு மற்றும் இயந்திர உபகரண கம்பனியின் 2018 தொடக்கம் 2021 வரை நிதிக் கூற்றுக்கள் திருத்தங்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மகநெகும நிர்மாணிப்பு மற்றும் இயந்திர உபகரண கம்பனியின் 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றது.
(ஊ)	2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 133 ஆம் பரிவின் பிரகாரம், கம்பனியொன்றினால் ஒவ்வொரு ஆண்டிற்கு ஒரு தடவை பங்குதாரர்களின் வருடாந்த பொதுக் கூட்டம் நடத்தப்பட வேண்டிய போதிலும், அதிகார சபைக்கு சொந்தமான அதன் 04 துணைக் கம்பனிகள் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	துணை கம்பனிகளில் சில நிறுவனங்கள் தாபிக்கும் போது பங்குரிமை தொடர்பாக ஏற்பட்ட சட்ட ரீதியான சிக்கல்களினால் அந் நிறுவனங்கள் வருடாந்த பொதுக்கூட்டம் நடத்தப்படாதிருக்க தீர்மானிக்கப்பட்டது. மேலும் நிறுவனங்கள் உரிய நேரத்தில் கணக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாதமையினால் வருடாந்த பொதுக் கூட்டம் நடத்தப்படவில்லை. அவ்வாறெனினும் தற்போது கைதவறப்பட்ட கணக்குகள் தயாரித்து நாளதுவரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
(எ)	வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளிடையே மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவதற்கு பேணிச் செல்லப்படுகின்ற இடை கம்பனி கணக்குகளில் 02 ஆண்டுகளை கடந்த ரூபா 107.17 மில்லியன் மற்றும் 05 ஆண்டுகளை கடந்த ரூபா 314.58 மில்லியன் அதிகார சபைக்கு பெற வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த மீதிகள் தீர்க்கப்படுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வரையறுக்கப்பட்ட அதிவே வீதி போக்குவரத்து (தனியார்) கம்பனி 2018 ஆம் ஆண்டு வரையில் நிதி அறிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள போதிலும் பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டும். வரையறுக்கப்பட்ட மகநெகும இமல்ஷன் உற்பத்தி (தனியார்) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட மகநெகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ (தனியார்) ஆகிய கம்பனிகளில் இமல்ஷன் வழங்கலுக்கு மற்றும் Cold mix வழங்கலுக்குரியதாக 2023.09.30 வரை இணக்கம் மேற்கொண்டு அக் கம்பனிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாணிப்பு மற்றும் இயந்திர உபகரண (தனியார்) கம்பனி மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை இடையேயான மீதிகளிடையே இணக்கமின்மை தீர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்ந்தும் எடுக்கப்பட்டு வருகின்றது.
(ஏ)	2023 மார்ச் 20 திகதிய CP/23/0394/608/033 ஆம் இலக்கத்தின் பிரகாரம் அதிகார சபைக்கு சொந்தமான 04 துணைக் கம்பனிகள் கலைப்பதற்கு தீர்மானித்திருந்தமையின் காரணத்தினால் குறித்த கம்பனிகளின் தொடர்ச்சியான நிலைத்திருத்தன்மை நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது.	வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களை கொண்ட விசேட குழுவொன்றின் ஊடாக துணைக் கம்பனிகள் கலைத்தல் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இங்கு சொத்துக்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமானதினால் கலைத்தல் செயன்முறை கடினமானதல்ல.
(ஐ)	அதிகார சபையினால் 2022 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் நிலைப்போறான அபிவிருத்தி நோக்கங்கள் நிறைவேற்றக் கூடிய வேலைத் திட்டம் வெளிப்படுத்தப்படாததுடன் அதிகார சபையினால் இனங்காணப்பட்ட நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கங்கள் கீழ் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள செயற்திட்டங்கள் என்ன எனவும், அதற்குரிய நிலைப்பேறான அபிவிருத்தி குறிக்காட்டிகள் (SDG	வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரியதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கங்கள் கீழ் 2030 ஆம் ஆண்டு வரை எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் இனங்காணப்பட்டு அதன் பிரகாரம் திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் குறித்த நிலைப்பேறான அபிவிருத்தி குறிக்காட்டிகள் மற்றும் அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் உள்ளடக்கப்படும் வகையில் எதிர்வரும் செயல்நடவடிக்கை திட்டம் தயாரிப்பதற்கு நடவக்கை எடுக்கப்படும். 2024-2028 மூலோபாய திட்டத்தில் 2028 வரை நிறைவேற்றப்பட எதிர்பார்க்கப்பட்ட நிலைப்பேறான நோக்கங்கள் உரிய வண்ணம் இனங்காண்பதற்கு

	Indicators) மற்றும் ஆண்டினுள் அக் குறிக்காட்டிகளின் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் போன்ற அளவுக்கோள்கள் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2030 ஆம் ஆண்டு வரை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிலைப்பேறான நோக்கங்கள் உறுதியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.	நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் வருடாந்த செயலாற்றல் உள்ளடங்கும் வகையில் 2024 செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
(ஒ)	2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிவே வீதிகளின் இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவுகளின் பதவியணிக்காக நிர்வாக பிரிவினால் ஒதுக்கப்பட்ட 81 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் காணப்பட்ட போதிலும், அத் திகதியில் அப் பிரிவுகளில் பணியாற்றிய உள்ளவாரான பதவிகளின் எண்ணிக்கை 136 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளை விஞ்சி 55 ஊழியர்கள் சேவையாற்றுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும், அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் அதிவேக வீதிகளின் இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவுகளின் காசாளர்கள் மற்றும் காப்பாளர்களாக நியமனம் பெற்ற எனினும் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் தற்காலிகமாக சேவையாற்றும் 24 நபர்கள் குறித்த நிரந்தர பதவிளுக்கு இணைக்கப்பட்டிருக்கவும் இல்லை.	<u>அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சி முகாமைத்துவ உதவியாளர்கள் பணியாற்றல்</u> வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வருடாந்த இடமாற்றல் கொள்கை தொடர்பாக 2.2.4.1 (ற) ஊடாக குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் இதற்கு பொருந்தும். அதன் பிரகாரம் அதிவே வீதி இயக்க பராமரிப்ப மற்றும் முகாமைத்துவ பிரிவிற்கு சொந்தமான பண்டாரகம பிரதான அலுவலகத்தினை போன்று உள்ளக இடமாற்று அலுவலகங்களில் சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் சேவையில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளவர்களின் நிர்வாக பிரிவினால் ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சி சேவையில் ஈடுப்படும் முகாமைத்துவ உதவியாள்கள் உள்ளமை உடன் இணங்கப்படுகின்றது. கடந்த ஆண்டுகளில் வருடாந்த இடமாற்றல் மேற்கொள்வதற்கு இயலாமையின் காரணத்தினால் சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் இவ்வாறு நீண்ட காலம் அவ் அலுவவகங்களில் பணியாற்றும் முகாமைத்துவ உதவியாளர்கள் காணப்படுகின்றனர். எவ்வாறெனினும் 2024 ஆம் ஆண்டிற்குரியதாக எதிர்காலத்தில் வருடாந்த இடமாற்றலுக்காக விண்ணப்பங்கள் அழைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இங்கு இடமாற்றத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கு முன்னுரிமை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் முகாமைத்துவ உதவியாளர்கள்/ எழுத்தாளர்கள் என்ற பதவிகளுக்குரியதாக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை விஞ்சியுள்ள ஏனைய மேலதிக ஊழியர்களுக்கு அலுவலகங்களில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக 2024 வருடாந்த இடமாற்றல் கட்டளையின் அடிப்படையில் இடமாற்றப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் அதிவேக வீதிகள் மீள்கட்டமைப்பு வேலைத்திட்டம் காரணமாக 2024 வருடாந்த இடமாற்றல் கொள்கை அதிவக வீதி இயக்க பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவினை தொடர்பு கொள்ளாதிருக்க முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டது. <u>முகாமைத்து உதவியாளர் அல்லாத பதவிகளில் உள்ள உத்தியோகத்தர்களினால் முகாமைத்துவ தவியாளர் பதவிகளில் கடமை பணிகள் நிறைவேற்றல்</u> முகாமைத்துவ உதவியாளர் அல்லாத பதவிகளில் உள்ள உத்தியோகத்தர்களினால் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் கடமை புரிவது என்பதுடன் இணங்கப்படுகின்றது. அதிவே வீதி இயக்க பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவில் இயக்க கடமைகள் தொடர்ச்சியாக 24 மணித்திலாயம் மேற்கொள்ளப்படுவதுடன் அக் காலம் உள்ளடங்கும் வகையில் சேவை சுழற்சி முறையில் உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் கடமையில் பணிக்கப்படுவர். அதன் போது காசாளர் பதவிகளுக்கு இணையாக கணினி துறையின் கடமைகள் தொடர்ச்சியாக 24 மணித்தியாலங்களும் செயற்படுத்தப்பட வேண்டியதுடன் கடமைகளின் தன்மையின் பிரகாரம் பல்வேறுப்பட்டது என்ற போதிலும் அதிவேக வீதியின் இயக்க பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ செயன்முறையின் போது அவை ஒன்றோடு ஒன்று இணைந்துள்ளது. அதிவேக வீதி இயக்க பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கை 81 ஆக காணப்பட்ட போதிலும் இந்த பிரிவின் கடமைகளுக்கு இந்த முகாமைத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கை

		போதுமானதல்ல என்பதனால் இந்த எண்ணிக்கையை அதிகரித்து தருமாறு கோரப்பட்டுள்ளது. எனினும் அதற்காக இதுவரையில் அங்கீகாரம் பெறப்படவில்லை. எனவே செயற்பாட்டு நடவடிக்கைகள் தடையின்றி நடத்திச் செல்வதற்கு போதுமான பதவியணி கணினி துறையில் போன்று நிர்வாகத் துறையிலும் இல்லாமையினால் குறித்த தகைமைகள் பூர்த்தி செய்துள்ள காசாளர்கள் மற்றும் சூழற்சி காப்பாளர்கள் சிலர் இந்த பிரிவின் பணிகளை தொடர்ச்சியாக பேச் செல்வதற்கு தற்காலிகமாக முகாமைத்துவ உதவியாளர்கள் பதவிகளின் கடமைகளில் ஈடுப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதிவே வீதி அமைப்பு 2011 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டு தற்போது 11 ஆண்டுகள் கடந்திருப்பதுடன் தற்போது அவ் வீதி அமைப்பு விரிவாக்கப்பட்டமையுடன் அதற்கு இணையாக அதிவேக வீதி இயக்கம் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவிற்கு பணிக்கப்பட்டுள்ள பணிப் பொறுப்புக்களும் விரிவாக்கப்பட்டுள்ளது. எனவே இந்த பணிகள் நிறைவேற்றப்படுவதற்கு போதுமான பதவியணி தேவைப்படுகின்றது. அதன் பிரகாரம் பணிக்கப்பட்டுள்ள பணிப்பொறுப்பிற்கு பொருந்தும் வகையில் தேவையான முகாமைத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கை அங்கீகரிக்கப்படாமையின் காரணத்தினால் இவ் வண்ணம் வேறு பதவிகளை வகிப்பவர்களை தற்காலிகமாக முகாமைத்துவ உதவியாளர்கள் பதவிகளில் கடமைக்கு ஈடுப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு முகாமைத்துவ உதவியாளர்கள் பதவியில் கடமைகளில் ஈடுப்படுத்தப்பட்டுள்ள காசாளர்களை போன்று நிரந்தர முகாமைத்துவ உதவியாளர்களின் சம்பள அளவீடு மற்றும் ஆட்சேர்ப்பு தகைமைகள் பொருந்தியமையினால் அவர்கள் முகாமைத்துவ உதவியாளர்கள் பதவிகளில் ஈடுப்படுத்துவது பிரச்சினைக்குரிய விடயமன்று. எனவே முகாமைத்துவ உதவியாளர்கள் பதவிகளில் ஈடுப்படுத்தப்பட்டுள்ள காசாளர்களுக்கு மட்டும் தனிப்பட்ட விதத்தில் அவர்கள் முகாமைத்துவ உதவியாளர்கள் பதவிகளில் ஈடுப்படுத்தப்படுவதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்குமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது.
(ஒ)	அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட உள்ளக சுற்றறிக்கையின் ஊடாக நேரடி தொழிலாளர் அடிப்படையில் இணைக்கப்பட்ட ஊழியர்கள் அலுவலக நடவடிக்கைகளில் பணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டமென தெரிவிக்கப்பட்டிருப்பினும், அதற்கு முரணாக மாகாண அலுவலகங்களுக்கு நிரந்தர மற்றும் தற்காலிக அடிப்படையில் ணைக்கப்பட்ட நேரடி தொழிலாளர்கள் முறையே 106 மற்றும் 181 நபர்கள் வீதி பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக பணிக்கப்படாது அலுவலக பணிகளுக்காக பணிக்கப்பட்டிருந்தனர்.	நேரடி தொழிலாளர் உழைப்பினை அடிப்படையாகக் கொண்டு ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஊழியர்கள் அலுவலக பணிகளில் ஈடுப்படுத்தப்பட வேண்டாமென ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் நிரந்தர மற்றும் தற்காலிக தொழிலாளர்கள் குறைந்தளவு அலுவலக பிகளுக்காக ஈடுப்படுத்தப்பட்டிருந்தமை ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இந்த அதிகார சபைக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள ஊழியர் எண்ணிக்கை அதிகார சபையின் அப்போதிருந்த பணியின் அளவு கருத்திற் கொள்ளப்பட்டு 2009 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் இது வரையில் கடக்கப்பட்ட காலப்பகுதியினுள் அதிகார சபையினால் நிறைவேற்றப்பட்ட நிர்மாணிப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் விரிவாக்கப்பட்டமையினால் உயர் முகாமைத்துவத்தினால் பணிக்கப்பட்ட பணிகள் நறைவேற்றப்படும் போது அப் பணிகள் உரிய முறையில் நிறைவேற்றிக் கொள்வதற்கு முதன்மை மட்டத்தில் மற்றும் ஏனைய பதவிகளுக்கு உரிய வண்ணம் போதுமான குறைந்தபட்ச பதவியணி காணப்படவில்லை. அவ்வாறே 2022 ஆம் ஆண்டில் அரசாங்க செலவீன கட்டுப்பாடு தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள 3/2022 ஆம் இலக்க தேசிய பாதீடு சுற்றறிக்கை பிரகாரம் வெளி ஆட்சேர்ப்புக்களும் மேற்கொள்ளப்பட முடியாது. எனவே பல அலுவலகங்களில் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் மற்றும் ஓட்டுநர், காப்பாளர் மற்றும் அலுவலக தொழிலாளர் போன்ற முதன்மை மட்ட பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அப் பதவிகளுக்கு உரிய கடமைகளை மேற்கொள்வதற்கு போதுமான ஊழியர் எண்ணிக்கை காணப்படாமையினால் அந் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில்

		நிறைவேற்றப்படல் பிரயோக ரீதியில் மிகவும் கடினமான பணியாகும். இந் நிலையின் காரணத்தினால் முதன்மை மட்டத்தின் பதவிகள் சிலவற்றில் நிலவும் வெற்றிடங்களுக்காக சில அலுவலகங்களுக்கு சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் அவ்வவ் பதவிகளுக்குரிய அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்துள்ள தேவைப்படுகின்ற குறைந்தபட்ச நேரடி தொழிலாளர்களை தற்காலிகமாக பணியில் ஈடுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே தற்போது நேரடி தொழிலாளர்களை ஈடுப்படுத்தி சேவைகளை பெற்றுக் கொள்ளும் நிரந்தர பதவிகளுக்காகவும் போதுமான ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு குறித்த அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்ட பின்னர் நேரடி தொழிலாளர்களை அலுவலக பணிகளிலிருந்து அகற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
(ஙை)	இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 15 ஆம் பந்தியின் பிரகாரம், இருப்பு கிரயம் மற்றும் தேறிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியில் காண்பிக்கப்பட வேண்டிய பாதிலும், பயன்படுத்த முடியாத கிரயம் ரூபா 26.68 மில்லியனான வாகன உதிரிப் பாகங்கள் நியமத்தின் பிரகாரம் பெறுமதியிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டு தொடக்கம் நிதிக் கூற்றுக்களில் குறித்த பெறுமதிக்கு சமமான பெறுமதி மாற்றமடையாத இருப்பிற்கான ஒதுக்கமாக காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், அப் இருப்பு கைதவிர்ப்பு செய்வதற்கு 2020 சனவரி 02 ஆந் திகதி குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த கைதவிர்ப்பு நடவடிக்கைகள் 2023 யூன் 15 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.	2020 ஆம் ஆண்டின் பின்னர் நாட்டினுள் நிலவிய நெருக்கடியினுள் இந்த மாற்றப்படாத இருப்பு தொடர்பில் கைதவிர்ப்பு செய்வதற்குரிய பரிந்துரை பெற்றுக் கொள்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் நடவடிக்கைகள் தொடர்ச்சியான மேற்கொள்ளப்படவில்லை. எவ்வாறெனினும் எதிர்காலத்தில் புதியகுழுவொன்று நியமிக்கப்பட்டு குறித்த நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

தலைவர்
வீதி அபிவிருத்தி அதிகார சபை

வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆண்டறிக்கை – 2022

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்றுகை

வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆனது 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிறைவேற்றுகை மற்றும் வெளிநாட்டு நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள் மீதான அனைத்து விபரத் தகவல்களும் மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கையில் வழங்கப்பட்டிருந்தது. கீழ்வருவன வி.அ.அ. சபையின் நடவடிக்கையினது முக்கியமாக பரப்புக்களின் நிறைவேற்றுகைக்கான சுருக்கமாகும்.

1. **வீதிப் பராமரிப்பு அமுலாக்கம்:**

   2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில், A & B வகுப்புச் வீதிகள்,(பாலங்கள் மற்றும் பிற கட்டமைப்புகள் உட்பட) கடுகதிப்பாதை மற்றும் பாலங்கள் அடங்கிய ஒட்டுமொத்த தேசிய வலையமைப்பும் பொதுப் பாதுகாப்புடன் பராமரிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, உள்ளூர் நிதிகளை பயன்படுத்தி 196.2 கி.மீ. நீளமான வீதிகளுக்கு மணல் போட்டு மூடல் அஸ்போல்ட் பரப்பல் மேற்கொள்ளப்பட்டது. 2022 ஆம் ஆண்டிற்கான வீதிப் பராமரிப்பு செலவு ரூ. 2504.00 மில்லியன் ஆகும்.

2. **நெடுஞ்சாலை அபிவிருத்தி:**

   வீதிகளின் புனருத்தாபனம் மற்றும் முன்னேற்றமானது. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. 15.2 கிமீ நீளம் நிறைவடைந்தது மற்றும் 56.5 கிமீ நீளம் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளூர் நிதியில் விரிவாக்கம் மற்றும் மேம்படுத்தும் திட்டங்களின் கீழ் நடைபெற்று வருகிறது.

   பிரதான வீதிகள் மற்றும் அதிவேக வீதிகளை அணுகுவதற்கு 100,000 கிலோமீற்றர் மாற்று வீதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் 6,300 கிலோமீற்றர்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், 2022 வருட இறுதியில் 11,550 கிலோமீற்றர்கள் தொடர்கின்றன. இந்த ஆண்டில், நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக பெரும்பாலான வீதி புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளின் முன்னேற்றம் தடைபட்டது.

3. **பாலங்கள் நிர்மாணம்:**

   2022 ஆம் ஆண்டில் பலவீனமான பாலம் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் உள்ளூர் நிதியில் மேற்கொள்ளப்பட்ட விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 3 பாலங்கள் முடிக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு நிதியுதவி திட்டங்களின் கீழ் மேலும் 2 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுஇ 44 பாலங்களின் கட்டுமானப் பணிகள் ஆண்டு இறுதியில் நடைபெற்று வருகின்றன.

4. **வீதி மற்றும் பால வேலைகளின் தரக் கட்டுப்பாடு:**

   2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 9 மாகாணங்களின் கள பரிசோதனைக் கூட்டம் ஊடாக வீதியின் பராமரிப்பு மற்றும் கட்டுமானங்களின் பொது வேலைகளின் தரக் கட்டுப்பாட்டிற்கு உதவுதல் மற்றும் ஆலோசனைகளை வீ.அ.அ.ச. யின் அபிவிருத்தி தொடர்ச்சியாக வழங்கியது. RDA திட்டங்களுக்காக சுமார் ரூ.3.4 மில்லியன் மதிப்பிலான பணிகளை மேற்கொள்வதன் மூலம் ஆண்டு முழுவதும் தனியார் நிறுவனங்கள் மூலம் பெறப்பட்ட மாதிரிகளின் தரை ஆய்வுகள் மற்றும் ஆய்வக சோதனைகள் மூலம் சுமார் ரூ.11.9 மில்லியன் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

5. **சொத்து முகாமைத்துவம் மற்றும் வருமான திரட்டு:**

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வீதியோரங்களில் சாதனங்கள் / கருவிகளில் ஏனைய விளம்பரங்கள் மற்றும் பேருந்து கூடாரங்கள், சிறு விளம்பரக் கொடிகள் / கண்டிலிவர்கள் / கேன்டிரி / பாதை குறுக்கே விளம்பரங்களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கியது. 2022 ஆம் ஆண்டில் RDA இன் சொத்துக்களை நிர்வகிப்பதன் மூலம் பல்வேறு மூலங்களில் இருந்து PM&R பிரிவு ஈட்டிய மொத்த வருவாய் ரூ.501.92 மில்லியன் ஆகும்.

6. **சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதுகாப்பு அளவீட்டு அமுலாக்கல் :** EIA/ IEE அறிக்கைகளை தயாரித்தல் உள்ளடங்களாக பலதரப்பட்ட வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களிற்கான சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதுகாப்பு அளவீடு அமுல்படுத்தலிற்கு வீ.அ.அ.ச. யின் சுற்றுச்சூழல் மற்றும் பிரிவு அதன் தொடர்ச்சியான அனுசரயினை வழங்கியது.

2022 ஆம் ஆண்டில், EIA அறிக்கை தயாரித்தல் மற்றும் ருவன்புர விரைவுச்சாலை II மற்றும் IIIக்கான மீள்குடியேற்றத் திட்டம், உத்தேச இரத்தினபுரி புறவழிச்சாலைக்கு EIA தயாரித்தல். RAP தயாரித்தல், சாலை குறிப்பிட்ட சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை திட்டம் (ESMP) தயாரித்தல் மற்றும் உலக வங்கியின் கீழ் ICDP க்கான சுற்றுச்சூழல் மற்றும் சமூக அறிக்கைகளை மதிப்பாய்வு செய்தல்/திருத்துதல். கண்டி பல் மாதிரி போக்குவரத்து அபிவிருத்தி திட்டத்திற்கான சமூக மற்றும் சுற்றாடல் அறிக்கை தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டது.

7. **கடுகதிப்பாதை அபிவிருத்தி :**

மத்திய அதிவேக நெடுஞ்சாலையானது கடவத்தையில் இருந்து தம்புள்ளை வரை குருநாகல் ஊடாக பொத்துஹெரவிலிருந்து கலகெதரவை இணைக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அதிவேக நெடுஞ்சாலையின் கட்டுமானப் பணிகள் நான்கு பிரிவுகளின் கீழ் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் கடவத்தை முதல் மீரிகம வரையிலான பிரிவு 1 மற்றும் பொத்துஹர முதல் ரம்புக்கன வரையிலான பிரிவு 1 இன் கட்டம் 1 க்கான சிவில் வேலைகள் நடந்து கொண்டிருந்தன. மீரிகம-குருணாகல் (யக்கபிட்டிய) இலிருந்து மத்திய அதிவேக நெடுஞ்சாலைப் பகுதி 2 2022 ஜனவரி 15 ஆம் திகதி பொதுமக்களுக்காக திறந்து வைக்கப்பட்டது. குருநாகலில் இருந்து தம்புள்ளை வரையிலான பகுதிக்கு கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன

8. **கடுகதிப்பாதை இயக்கங்கள்**

2022 ஆம் ஆண்டு தெற்கு அதிவேக நெடுஞ்சாலை (E01-கொட்டாவ முதல் மத்தள), கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை (E03), வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலை (E02-கொட்டாவ முதல் கெரவலப்பிட்டிய), அந்தரவெவ - அம்பாந்தோட்டை அதிவேக பாதை (E06) மற்றும் மத்திய அதிவேக நெடுஞ்சாலை (E04) மீரிகம - குருநாகல் (Yagga) ஆகிய பிரிவுகள் செயல்பாட்டில் உள்ளது. 2022 ஆம் ஆண்டு அதிவேக நெடுஞ்சாலை வலைப்பின்னல் பயணிக்கும் மொத்த போக்குவரத்து அளவு 32,279,060 வாகனங்கள். இந்த ஆண்டில் ரூ.8,960,73 மில்லியன் கட்டணம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது

9. **மொத்த நிதி நிறைவேற்றுகை:**

2022 ஆம் ஆண்டினது வீ.அ.அ. யின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி அடங்கலாக மொத்த நிதியிடல் ஒதுக்கீடுகள் ரூபா 247.8 பில்லியனாக இருந்ததோடு வருடாந்த செலவு ரூபா. 195.4 பில்லியனிலிருந்தது. 2022 இல் மொத்த நிதியில் பங்களிப்பு செய்யப்பட்ட வெளிநாட்டு நிதிகள் 49% க்கு அதிகமானதாகும்.

செயல்திறன்	ஒதுக்கீடுகள் (ரூபா.மில்.)	செலவு (ரூ.மில்.)
கடுகதிப்பாதை அபிவிருத்தி	70,958.38	34,397.09
நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி	155,541.68	144,968.99
அகலமாக்கல் மற்றும் முன்னேற்ற வீதிகள்	3,600.00	1,362.28
மேம்பாலங்கள் மற்றும் பாலங்கள் நிர்மாணம்	9,552.20	6,622.83
தேசிய அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட வீதிகள் புனருத்தாபனம்	109.85	34.83
நிறுவன ஆதரவு	8,034.60	8,013.51
மொத்தம்	247,796.70	195,399.53

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்றிறனை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட இடைநிலை தவணை அளவீடுகள்

1. 2022 ஆம் ஆண்டில் ஆளணி ஆட்சேர்ப்பின் தேவைப்பாடுகள் தொடர்பான புதிய அமைப்பானது வீ.அ.அ. யினால் தயாரிக்கப்பட்டு வீ.அ.அ. இன் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் அமைச்சின் ஊடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டது.

2. வீ.அ.அ. ஆனது சாத்தியக் கற்கைகள், வீதிகள் மற்றும் பாலங்களுக்கான விபரண பொறியியல் வடிவமைப்பு மற்றும் சபைக்கு தேவையான ஒப்பந்த ஆவணங்களை தயார்படுத்தல் ஆகிய வேலைகளை தொடர்ந்தும் செய்தது. இவ்வகையான மேம்பாட்டி-னூடாக வினைத்திறன், செலவினைக் குறைத்தல் மற்றும் செயற்றிட்ட நடைமுறைப்-படுத்தலில் ஏற்படும் தாமதங்களை இழிவாக்குதல் ஆகியன களத்தில் புது தொழில்நுட்ப அறிவுடன் கூடிய ஊழியர்கள் வேலை செய்வதனால் முடியுமாக இருந்தது.

3. வீ.அ.அ. ஊழியர்களின் கொள்ளளவு சக்தியினை அதிகரிப்பதற்காக தொடர்ச்சியாக உள்நாட்டு, வெளிநாட்டு மற்றும் நேரலை பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. கொள்ளளவினை முன்னேற்றும் நோக்குடன் வீ.அ.அ. இன் 11 அலுவலர்களுக்கு நீண்ட கால கற்கை நெறிகளை உள்நாட்டு பல்கலைக்கழகங்களிலும்/ நிறுவனங்களிலும் தொடர்-வதற்கான அனுசரனை வழங்கப்பட்டதுடன், 615 வீ.அ.அ. ஊழியர்கள்/ அலுவலர்கள் நேரலை பட்டறை/ பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டனர். மேலும் இவ்வாண்டில் 38 ஊழியர்கள் வெளி நிறுவனங்களுக்கு பயிற்சி நெறிகள், பயிற்சி பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகளுக்கு பரிந்துரைக்கப்பட்டனர்.

4. 2022 ஆம் ஆண்டில் ஆளணி ஆட்சேர்ப்பின் தேவைப்பாடுகள் தொடர்பான புதிய அமைப்பானது வீ.அ.அ. இனால் தயாரிக்கப்பட்டு வீ.அ.அ. இன் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் அமைச்சின் ஊடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டன.

5. 2018 – 2027 ஆண்டுகளுக்கான தேசிய வீதிகள் பெருந்திட்ட வரைவுத் திட்டத்தினை (NRMP) 2021 – 2030 ஆண்டுகளுக்கான தேசிய வீதிகள் பெருந்திட்ட வரைவுத் திட்டமாக மேம்படுத்தும் வேலை பூரணப்படுத்தப்பட்டுள்ளது. 2021 – 2030 ஆண்டுகளுக்கான NRMP ஆனது வீ.அ.அ. இன் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு நெடுஞ்சாலைகள் அமைச்சிடம் கையளிக்கப்பட்டது.

6. வீ.அ.அ. இன் வீதிச் சொத்து முகாமைத்துவத்தின் கொள்ளளவினை பலப்படுத்துவதற்கான மற்றும் இலங்கையின் வீதிச் சொத்து முகாமைத்துவ முறைமையின் (SLRAMS) அனைத்து மாதிரிகளையும் இயக்குவதற்கும், வீ.அ.அ. ஆனது உலக வங்கியின் உதவியுடன் போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்றிட்டத்தினை (TCAMP) தொடர்ந்து நிதி உதவிகளை பெற்றுக் கொள்ளவும் வேலைகள் செய்யப்பட்டன. கடந்த காலத்தில் இலங்கை அரசாங்கமானது நாட்டின் வீதி வலையமைப்பினை அபிவிருத்தி செய்வதற்காக உரிய அமைச்சின் ஊடாக வீ.அ.அ. க்கு கணிசமான நிதித் தொகையினை ஒதுக்கியது. எவ்வாறாயினும் இவ் உட்கட்டமைப்பின் பெறுமதியானது மதிப்பிடப்படவில்லை. சொத்துக்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்வதனூடாக வீதிச் சொத்தின் முக்கியத்துவம் மற்றும் முதலீகள் ஆகியவற்றை அச்சொத்தின் நிதியியல் நிபந்தனைகளின் ஊடாக முதலீட்டு திட்டமிடலில் விபரிக்கலாம்.

வீ.அ.அ. இடம் வீதிக் கட்டமைப்பினை மதிப்பீடு செய்வதற்கு தேவையான போதிய அறிவு இல்லாமையின் காரணமாக TCAMP இன் ஊடாக வீதிச் சொத்து பெறுமதி மதிப்பீட்டிற்கான முன்னோடி செயற்றிட்டத்திற்கான ஆலோசனைச் சேவையானது பெறப்பட்டது. TCAMP இன் கீழ் பல்வேறு ஆலோசனை மற்றும் சேவைகள் ஒப்பந்தங்கள் திட்டமிடப்பட்டு மற்றும் நடைமுறைப்-படுத்தப்பட்டு வருவதோடு SLRAMS இன் வீதிச் சொத்து மதிப்பீட்டில் இப்புது மாதிரி உள்ளடக்கப்படும். TCAMP இன் முடிவோடு 2023 செப்டெம்பர் இறுதியில் வீ.அ.அ. ஆனது விரிவான தெளிவான வீதி தகவல் முறைமை ஒன்றினை தனது வீதிக் கட்டமைப்பின் முறைமை முகாமைத்துவத்திற்காக உரிமை கொள்ளும்.